வெளிப்பட்டது

R.SUNDARAM.

அறியாமை தளைகளிலிருந்தும், சகல பற்றுகளிலிருந்தும் உங்களை முற்றிலும் விடுவிக்க முயல்கிறது இந்நூல்.

சமர்ப்பணம்.

கோவை - ஈஷாயோகா பிரம்மச்சாரிணி ; எனக்கு தீட்சை அளித்த குரு, வதசலா அவர்களின் பாத கமலங்களில் இந்நூலை சமர்ப்பிக்கிறேன்.

மதத்திற்குஎதிரானகோட்பாடுஎன்றுமுதலில்குற்றம் சாட்டப்பட்டு, முடிவில் மூட நம்பிக்கை என்று தள்ளப்படுவது, புதிய மெய்ப்பாடுகளுக்கு ஏற்படும் வழக்கமான தலைவிதி!

- தாமஸ் ஹென்றி ஹக்ஸ்லி (Thomas Henry Huxley)

என்றென்றும் நிலையான பேரானந்தம்.

இன் நூலை படிக்கும் அனைத்து அன்பர்களுக்கும் முதற்கண் வணக்கம்

நண்பர் திரு சுந்தரம் எழுதியுள்ள “வெளிப்பட்டது” எனும் பூரண அனுபவ படைப்பு முதன் முறை படிப்பவர்களுக்கு ஒரு பிரமிப்பை ஏற்படுத்தும். ஏனெனில், சத்தியம் எங்கு வெளிப்படுகிறதோ அங்கு ஒரு ஸ்தம்பன நிலை உருவாகவேண்டும் என்பது பிரபஞ்ச நியதி.

ஆம், முதல் பக்கம் தொட்டு இறுதி பக்கம் வரை ஒவ்வொறு சொல்லும், அவர் எழுதியதாக நான் கருதவில்லை, அவர் படிப்படியாக அனுபவித்த வெவ்வேறு நிலைகளுக்கு ஒரு சிற்பிபோல் அவர் வடிவம் கொடுத்ததாகவே தெரிகிறது. அனுபவம் உணர்வு பூர்வமானது. அதிலும்,தன்னை தான் அறிதல் என்பது ஒரு வேள்வி, சாட்சி உரு கொண்டது. அது புலன், மனம், எண்ணம,காலம்,அறிவு என எல்லாம் கடந்த நிலையில் நிகழும் பொழுது வருணிக்கமுடியாத பேரானந்தம்.

முடிவிலா பிறப்புகள் கடந்து இந்த மானிட பிறவியை எடுத்துள்ள நாம் யாவரும் பல நேரங்களில் ஏதோ ஒரு தவிப்பு, தனிமையில் விடப்பட்டது போன்ற ஒரு உணர்ச்சியை எதிர் கொள்கிறோம். நான் யார், இப்பிறவியின் நோக்கம் என்ன, இப்பிரபஞ்சத்தின் ரகசியம் என்ன,படைத்தவன் யார், பிறவா பெருவழி பெறுவது எப்படி போன்ற பல விடை காண விழையும் வினாக்கள் நம்மை துளைக்கின்றன. இதற்கு விடை தேட தொடங்கும் அன்பர் பலர். ஆனால் மாயை எனும் மதி மயக்கும் மந்திரவாதியின் வலையும், பந்தம், பாசம் எனும் பிணைப்பும் மனிதனை திசை திருப்பி அவன் தேடத்துடங்கிய மிக முக்கியமான செயலை வலுவிழக்கச்செய்துவிடுகிறது.
இதிலிருது அவன் மீண்டு வருவதற்குள் பல பிறவிகளும் சென்று, அதை சார்ந்த கர்ம வினைகளும் அவனை ஒட்டிகொள்கின்றது. இதிலிருந்தேல்லாம் விடுபட என்னதான் வழி? விடா முயற்சி, அறிவு சார்ந்த கவனம் மற்றும் இப்பாதையில் நம் முன் சென்று விடை கண்டவர்களின் அனுபவத்தை கிரகித்துக்கொள்ளுதல்தான்.

அதன்மூலம் நம் தியானப் பயிற்சிகளை அமைத்து நாமும் விடை கண்டு கிடைக்கற்கரிய ஆன்ம ஞானத்தை, ஜோதியை தரிசித்து பிறவிப்பெருங்கடலில இருந்து விடுதலை அடைவதுதான்.இதன் பிறகு தொடர்ந்து கிடைப்பதெல்லாம் நித்ய ஜோதியின் பூரண ஆசிர்வதமே என்கிறார் ஆசிரியர்.

பிரபஞ்ச பேராற்றலின் கருணையும், விடா முயற்சியும் உள்ளவர்கள் கையில் இப்புத்தகம் இப்பொழுது நிச்சயமாக் இருக்கும்.

திரு சுந்தரம் இந்நூலில் அப்படி என்னதான் சொல்லிருகிறார்? ஆன்ம ஞானத்தை பற்றி எல்லாவற்றையும் ஒளிவு மறைவின்றி சப்தமாக சொல்லியிருக்கிறார். அதற்கு மேல் அதை முறையாக அடையும் வழி வகைகளை பற்றியும், தன் சகல அனுபவங்களையும் மிக விளக்கமாக எடுத்துரைத்துள்ளார்.

நாம் எத்துறையிலும் மேற்கலை படிவம் வரை பட்டம் பெறவேண்டுமெனில் அறிச்சுவடியிலிருந்து தானே தொடங்க வேண்டும்? அதுபோல் ஆசிரியர் நமது உடற் கூறுகள், வெளிப் புலன்கள், உட்புலன்கள், அறிவு, மனம், உணர்வு, போன்றவற்றின் இயல்பு, சுபாவம், ஆட்சி மற்றும் இவைகைளுடன் தொடர்புகொண்ட பிரபஞ்சம், அதன் ஆற்றல, அறிவு, முறை, ஒழுங்கு என்று ஒரு மனிதனுடன் பின்னப்பட்ட இயற்கையின் தகவமைப்பு பற்றியும் பொது ரீதியாகவும், பௌதீக ரீதியாகவும் வேகு சிறப்பாக விளக்கியுள்ளர். அதேபோல் தியானம், அதன் பயன், நிலைகள், செய்யும் முறை என்று அனைத்து அங்கங்களையும் சாமானியனும் படித்து நன்மை பெறும் வகையில் அருமையாக புரியவைத்துள்ளார்.

அன்பர்களே, அலைபாயும் மனதை வெல்வதோ, அடக்குவதோ எளிதல்ல. இதையே திருமூலரும் “ஐந்தும் அடக்கென்பார் அறிவிலார்” என உரைத்துள்ளார். மனதை தியானத்தின் மூலம்தான் வெல்ல முடியும் என்பதை ஆசிரியர் அழுத்தமாக விளக்கியுள்ளார். உண்மையையும், சத்தியத்தையும் உணரும் வரை மனமானது அசுத்தத்தில்தான் வசிக்கிறது. ஆனால், சாதகரின் வைராக்கியத்தாலும், தியானத்தின் பயனாலும், அறிவும் உணர்வும் சேர்ந்து செயல்படுவதாலும், ‘இக்கண’த்தில் வேரூன்றிய கவனத்தினாலும், மனம் ஆன்மஒளியில பட்டு செம்மையடைந்து சுத்தமாகிறது, கர்மங்களும் கரைந்தொழிகிறது என்னும் உண்மையை திரு சுந்தரம் தீர்க்கமாக விளக்கியுள்ளார்.

ஒரு செல் பரிணாமத்திலிருந்த உயிரி,கோடானகோடி பிறவிகளும், காலமும் கடந்து இன்று பல ட்ரில்லியன் உயிரி பரிணாமத்தில் எவ்வாறு செயல் படுகிறது,அதன் தன்மை தகவமைப்பு என்ன என பல நுணுக்கமான தகவல்களை தகுந்த ஆதாரத்துடன் அருமையாக விளக்கியுள்ளார்.

திரு சுந்தரம் இந்நூலை ஆக்கியதின் நோக்கம் என்னவாக இருக்கும் என எண்ணினேன். கிடைத்த பதில் “பேரின்ப நிதி நான் பெற்ற நெடும்பேற்றை இவ்வையகமும் பெருகவென” என்ற வள்ளல குணம் கொண்டு இதனை படைத்திருக்கிறார். “ஒரு விளக்கு பல விளக்கை ஏற்றுவதுபோல்” சக ஜீவன்கள் விடுதலை பெற்று பேரானந்தம் பெறும் பொருட்டு இந்நூலை இயற்றிய திரு சுந்தரத்தின் தொண்டு சிறக்க வேண்டுகிறேன்.

இதில் படிப்போர் பங்கு என்ன? “குதிரையை ஆற்றங்கரை வரைக்கும்தான் கூட்டுச்செல்லமுடியும். அதன் பிறகு தண்ணீரை குதிரை தானகத்தான் குடிக்கவேண்டும்” என்று ஒரு ஆங்கில பழமொழி உள்ளது.அதுபோல, ஆன்ம ஞானம் அடையும் வழியை காட்டும் நூலினை ஆசிரியர் தங்களிடம் சேர்த்துள்ளார். அதனை படித்து, உணர்ந்து,அனுபவித்து,தியானித்து பயன் அடைய நீங்கள் இந்நூலில் கூறியபடி உங்கள் அறிவு சார்ந்த உணர்வையும், இக்கணத்தில் ஆழ்ந்து ‘நிலை பிசகா’த கவனத்தையும் வடிவமைக்க வேண்டும்.

ஆனால் எதிலும் நிதானமும் தன்னொழுங்கும் தேவை. எப்பொருள் யாரார் வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு என்று உரைத்தார் வள்ளுவப்பெருமானார். இந்நூலே மெய்ப்பொருள் பற்றியதுதான். தீர்க்கமாக படியுங்கள். “நான்” “எனது” போன்ற தேவையற்ற வெளிப்பாடுகளை உதறி

விலக்கி,தியானத்தில் ஊன்றி,திளைத்து இக்கணத்தில் உயிர்கொண்டு ,பரிணாம வளர்ச்சியில் மென்மேலும் வளர்ந்து, திகழ்ந்து முற்றறிவும், முற்றுணர்வும் பெருவீறாகுக.

மற்றவர் அனுபவும் என்றுமே நம் அனுபாவமாகாது. நாமே முயன்றுதான் அனுபவத்தை பெற வேண்டும்.எதையுமே கேட்டுப்பெறுவதை விட, உணர்ந்து அனுபவிப்பதே இன்பத்தை தரும், நிலைக்கும்.

அளற்பரிய அறிவும், ஞானமும்,சக்தியும் கொண்ட 'அண்டசராசர பிரபஞ்ச சத்தியத்தின் உறைவிடமான அந்த ஆதிமூல நித்ய சத்ய ஜோதி பிரமத்தின் அன்பும், கருணையும், பெறப்பட்டாலின்றி, இந்நூல ஒருவர் கையில் படிக்கக் கிடைக்காது' என நான் நம்புகிறேன்.

அப்படி கிடைகப்பெற்றவர் இதனை நன்கு படித்துணர்ந்து, பயனடைந்து பெருவாழ்வு வாழும் வரை முடிவற்ற பேரானந்த நிலையான அநுபூதி நிலையை பெருவிராகுக! இறுதியில் மீண்டும் பிறவா வரம் பெற்று போகுவீராகுக!.

அன்புடன்
பார்த்தசாரதி , சிங்கப்பூர் .

ஓம் தத் சத்.

முன்னுரை.

ஆரம்பத்தில் ஒருசெல் உயிரியாக, ஒருசெல் ஒரு உடலியாக (சரீரமாக) துவங்கிய நமது பயணம் தொடர்ந்து பல்வேறு நிலைகளில் சரீர பரிணாமமடைந்து, சரீர பரிணாமமடைந்து பலகோடி அனுபவம் பெற்று இன்று சுமார் எழுபத்தைந்து டிரில்லியன் (Trillion: 1,000,000,000,000) உயிரிகளின் – செல்களின் – தொகுப்பாக, ஒரே சரீரமாக (உடலியாக) மனிதன் எனும் பெயர் கொண்டு செயல்பாட்டு வருகிறோம். இரு வேறு மனித உயிர்களிடமும் உள்ள அடிப்படை பண்பு இதுதான். அனைத்துயிரிலும் இதேப்போன்ற நிலைமைதான்.எதை நோக்கி இந்த பயணம் நடக்கிறது? இந்த பயணத்தின் வழி ஏற்பட்ட பரிணாம 'அனுபவங்கள்' இந்த நோக்கத்திற்கு துணையாக வருமா? அனுபவங்கள் இந்த நோக்கத்திற்கு தடை ஏற்படுத்துமா?
நமக்கு வழிகாட்டி யார்? அனுபவமா? நோக்கமா? இந்த அனுபவங்கள் எல்லாம் நமது அடையாளம் ஆகுமா?
உலகில் அனைத்துயிரினங்களின் பாதுகாப்பும், நலனும் மனித இனத்தின் கையிலேயே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.
அனைத்துயிரினங்களையுமே மனிதர்களின் இந்த அடையாளங்கள் தான்வழிநடத்துகின்றன!
நடை முறை வாழ்வில் சக உயிரினங்களின் துயர நிலைமைகளை கவனித்துக்கொண்டுதான்வாழ்ந்து வருகிறோம். ஏன் சக மனிதனின் துயர நிலைமைகளும்கூட கலையப்படாமல்தான் இருக்கின்றன!
மனிதன் எப்படி வாழவேண்டும் என அடையாளப்படுத்தியவர்கள், மற்றும் அதை நிறுவனப்படுத்தியவர்கள் , மற்றும் கண்ணை மூடிக்கொண்டு அந்த அடையாளங்களை பின்பற்றுபவர்கள், மற்றும் 'தான் காணாமல்' போய்விடுவேனோ எனும் அச்சத்தால் க்ஷணம் தவறாது அடையாளப்படுத்துபவர்கள் என, இந்த விதவிதமான அடையாளங்கள் தான் தங்களுக்குள் போட்டி போட்டுக்கொண்டு உலகை ஆள்கிறது. இந்த அடையாளம் தான் இப்போது நாம் வசிக்கும் இடம் என்றாகிவிட்டது.
இந்த நூல் இன்னொரு அடையாளத்தை மனித குலத்துக்கு தரப்போவதில்லை. நமது தேடல் பயணத்தை தேக்கி நிறுத்தியிருக்கும் 'அடையாளங்களை' நமக்கு அடையாளம் காட்டுகிறது அவ்வளவே!
அந்த மூலாதார முழு உண்மை க்ஷணம் தவறாது தன்னை வெளிப்படுத்திக்கொண்டேதான் இருக்கிறது. அதை நாம் தான் கவனிப்பதில்லை. இந்த நூலிலுள்ள விபரங்களும் அப்படி 'அதுவாக' வெளிப்பட்டதுதான். இதை கவனிக்க தவறியவர்கள் மத்தியில் இந்த நூலை எழுதியவர் நல்ல உயர்ந்த ஞானம் உடையவர் என்றும். இன்னும் கொஞ்சம் அறியாமையிலிருப்பவர் இதை எழுதியவர் ஒரு தீர்க்க தரிசி எனவும் எண்ணக்கூடும். இதெல்லாம் அவரவர் அறியாமையில் நிகழும் கருத்து. மீண்டும் கூறுகிறேன் இது வெளிப்பட்டது, உங்களைச்சுற்றி எப்பொழுதும் வெளிப்பட்டுக்கொண்டேயிருப்பது. சாதகனின் பக்குவத்துக்கு ஏற்றாற்போல் அவனுக்கு உண்மை அறிய வருகிறது. மற்றபடி 'கருவில்திரு' வெல்லாம் இல்லை. இப்பிரபஞ்சத்தில் உள்ள அனைத்து
உயிரணுக்களுமே கருவில்திரு அமைந்தது தான். உங்கள் தேடலுக்கு ஏற்றவாறே உங்களுக்கு உண்மை வெளிப்படுகிறது. அதேப்போல் ஒவ்வொரு நிலைகளையும் கடந்து தேட வேண்டியதாக இருக்கிறது. அப்படி கடக்கும்பொழுது ஏற்கனவே

சொல்லப்பட்டது மாறி,இப்போது உண்மையில் ஒரு புதிய வெளிச்சம் தெரிகிறது. ஒரு 'படிநிலை'களில் தான் உண்மையை கண்டடைய முடியும்போல் இருக்கிறது. அதனாலேயே ஒவ்வொரு கட்டுரைக்கும் அது எழுதப்பட்ட தேதியையும் கொடுத்திருக்கிறேன்.
இந்த 75 டிரில்லியன் செல்கள் ஒரே உடல் எனும் மானிட உடல் - உங்கள் மனித பிறவி - அற்புதத்திலும் அற்புதம். அந்த முதல் அணுவிலிருந்து துவங்கிய பயணம் இந்த மனித உருவை அடைய சுமார் 350 கோடி ஆண்டுகள் தொடர்ந்து பரிணாமமுற்று வந்துள்ளது.

இதை நாம் சரியாக உபயோகப்படுத்துவோமா?

R . சுந்தரம்
Gangavalli.   **Mobile no : 9994852986**

<u>மிக அடிப்படையான ஒரு விஷயம்.</u> 22.6.10

ஆன்மீக உலகில் உள்ள அனைவருக்கும் வணக்கம். மனித குல சீரழிவை தடுத்து நிறுத்த, அவசியம் நாம் ஒரு 'மிக அடிப்படையான' ஒரு விஷயத்தைப்ப ற்றி இப்போது பார்ப்போம். அதாவது ஞான நிலை என்பது, இந்த மனித உயிருக் கு எல்லா கால கட்டத்திலும், எல்லா கலாசாரத்திலும், எல்லா மொழிகளிலும் , எல்லாவித பழக்க, வழக்கம் உள்ளவர்களிடையேயும் ஒரே விதமாகவே நிக ழ்ந்திருக்கிறது. புத்தரிடம் நிகழ்ந்த ஞான நிகழ்வுக்கும், யேசுவிடம் நிகழ்ந்த ஞான நிகழ்வுக்கும், முகமது நபியிடம் நிகழ்ந்த ஞான நிகழ்வுக்கும், இந்து மத முனிவர்களிடம் நிகழ்ந்த ஞான நிகழ்வுக்கும், மகா வீரரிடம் நிகழ்ந்த ஞான நி கழ்வுக்கும் ஒரு இம்மியளவு கூட வித்தியாசம் இருக்க வாய்ப்பில்லை. இது சரி யாக ஆன்மீகத்தில் உள்ள அனைவரும் எந்த மறுப்புமின்றி ஒப்புக்கொள்ளும் உண்மை. ஒரு இயற்பியலுக்கு 'நிரூபணம்' உலகிலுள்ள அனைத்துநாடுகளிலும்,அனைத்து மொழிகளிலும், எல்லா கலாசாரத்திலும் ஒன்றே தான்.ஒரு வேதியியலுக்கு 'நிரூபணம்' உலகிலுள்ள அனைத்து நாடுக ளிலும், அனைத்து மொழிகளிலும் ஒன்றே தான். ஒரு கணிதவியலுக்கு 'நிரூப ணம்' உலகிலுள்ள அனைத்துநாடுகளிலும், அனைத்து மொழிகளிலும், எல்லா கலாசாரத்திலும்ஒன்றே தான். ஒரு தாவரயியலுக்கு 'நிரூபணம்' உலகிலுள்ள அனைத்துநாடுகளிலும், அனைத்து மொழிகளிலும், எல்லா கலாசாரத்திலும் ஒன்றே தான்.

ஏன்?

உயிரியலுக்கே கூட 'நிரூபணம்' உலகிலுள்ள அனைத்துநாடுகளிலும், அனைத் து மொழிகளிலும் , எல்லா கலாசாரத்திலும் ஒன்றே தான்.

ஆனால்? இந்த ஆன்மீக இயலுக்கு மட்டும் ஏன் இத்தனை வித மதங்கள்? ஏன் இத்தனை வித பேதங்கள்?ஏன் இத்தனை விதகொள்கைகள்? இத்தனை வித கடவுள்கள்?, இத்தனை வித நிறுவனங்கள், இத்தனைவித குருமார்கள், இத்த னை விதமான போதனைகள்,இத்தனை விதமான வழிகாட்டல்கள்?.

இத்தனை வித அனுஷ்டானங்கள் ? ஆன்மீக நிலைக்கு ஒரு உண்மைதான் இருக்க முடியும் . ஒரு விஷயத்தில் அடிப்படையில் ஒன்றுக்கு மேல் உண்மை இருக்க முடியுமா? ஒன்றுக்கு மேல் இருந்தால் அது உண்மை அல்ல! தவிரவும் உண்மையை தனி உணர்வு கருத்துக்களால் அல்ல, அறிவியல் மூலமாகவே உறுதிப்படுத்த முடியும். உணர்வும் கருத்தும் மனிதனுக்கு மனிதன் வேறுபட்டது.

இந்த ஆன்மீகஇயலுக்கும் ஒரு அறிவியல் விளக்கம் அவசியம் தேவை. சொல் லவேண்டிய விஷயங்களை நேரிடையாக சொல்லக்கூடிய அறிவியல் விளக்

கம். அது எல்லா நாட்டினருக்கும், எல்லா இனத்தவருக்கும், எல்லா மொழியினருக்கும் பொருந்துவதாக இருக்க வேண்டும் .அந்த முயற்சியில் தான் இந்த கட்டுரைகள் எழுதப்படுகின்றன.

ஆம், அறிவியலான ஆன்மீக நிரூபணதுக்காக!.

நமது மூலம். 27.1.10

சகோதர, சகோதரிகளே வணக்கம்.இந்த வாழ்க்கைக்கு 'விளக்கம்' என்ன?
இந்த வாழ்க்கையை வாழ்வது யார்?நாம்தான் வாழ்கிறோம்.சரி!
நாம் யார்? நமது மூலம் என்ன?நாம், நம் தாய், தந்தை வழியே -இணையப்பெற்று வந்துள்ளோம். தாயின் கருவில் உள்ள கரு முட்டையில் 46 குரோமோசோம்களும், தந்தையின் விந்தணுவில் உள்ள 46 குரோமோசோம்களும் இணைந்து தாயின் மரபணுவில் உள்ள 23 குரோமோசோம்கள் மட்டும்,தந்தையின் மரபணுவில் வந்த 23 குரோமோசோம்கள் மட்டும் இணைந்து ஒரு செல் உருவாகி, தாயின் கருவில் வளர்ந்து இந்த பூமிக்கு நாம் வந்துள்ளோம். சரி!தாய்,தந்தையரின் மூலம் என்ன? நம் தாய் உருவாக இரண்டு பேர் காரணம். அவளது தாய் மற்றும் தந்தை. நம் தந்தை உருவாக இரண்டு பேர் காரணம். அவனது தாய் மற்றும் தந்தை. ஆக! நான்கு பேர். அந்த நான்கு பேர் உருவாக, அந்த நான்கு பேரின் தாய் தந்தையென எட்டு பேர். இப்படி,2 – 4 – 8 – 16 – 32 – 64 – 128 – 256 – 512 - 1024 .

1024	**Ki**	**kibi**	**K**	**kilo**
1024	**Mi**	**mebi**	**M**	**mega**
1024	**Gi**	**gibi**	**G**	**giga**
1024	**Ti**	**tebi**		
1024	**Pi**	**pebi**		
1024	**Ei**	**exbi**		
1024	**Zi**	**zebi**		
1024	**Yi**	**yobi**		

(இந்த ‘1024’ என்பது நம்ம CD மெமரி மாதிரி தெரிகிறதல்லவா? 1024 பைட்ஸ்(BITS)- ஒரு கிலோ பைட்ஸ்(K B) – 1024 கிலோ பைட்ஸ் - ஒரு மெகா பைட்ஸ் (MB)-1024 மெகா பைட்ஸ் - ஒரு ஜிகா பைட்ஸ்(GB) இந்த 1024 என்பது ஒரு'தனி'முழு சுழற்சி போல தோன்றுகிறது.)
இந்த பெருகி விரியும் முன்னோர் சந்ததி இப்படி இரு வேறு புறத்திலும் விரிவடைகிறது.

ஆக! நாம் என்னவோ முப்பாட்டன், பாட்டன், அப்பன், பிறகு நான், எனக்கு அடுத்தது என் மகன்என, இந்த மரபுஒரே வழியாக , நேரிடையாக வரும் மரபு என நினைத்துக்கொண்டிருக்கிறோம். அது தவறு. அது நேரிடையான மரபு இல்லை.
உன் முன்னோர்கள் என சொன்னால் அது ‘ஒரு நதி’யின் நீரோட்டமல்ல!
அந்த நதி தாய், தந்தை என இரண்டு கிளை பிரிகிறது. இன்னும் கொஞ்சம் முன்னே பார்த்தால், அந்த இரண்டுக்கும் நான்கு கிளைகள் இப்படி 1024 கிளைகள் வரையும் போகிறது.
இரு வேறு விரிவு அடுக்குகளிலிருந்து வரும் 'உயிர் பண்புக்கூறு நிழல் விசைகள்' ஒன்றை ஒன்றுசந்திக்குமிடத்து - பதிவாகி உருவாகும் உயிர் 'நாம்'.

நமது மூலம்ஒரு வழிப்பாதை அல்ல!இரு 'வேறு' வழிப்பாதை!.
நம் இடப்புற பாதையிலும் , வலப்புற பாதையிலும்
இருவேறு உலகங்கள் அகண்டு ,விரிந்து, பரவுகிறது.

வலியும் - சுகமும்.19.3.10

நான் என்பது வலி உணர்ச்சி. உங்களுடைய 'நான்' எனும் தன் முனைப்பை தூண்டி விடுவது உங்களுடைய வலிஉணர்ச்சியாகும். மனிதன் வலியை உணரும் பொழுது தான் நான் என்கிற தன்முனைப்பால் அதை தடுத்து நிறுத்தப்பார்க்கிறான். **'நான்' என்பதை நாம் உணரும் விதம் இதுதான்.(அது குறை உணர்ச்சி)அது உடல் எனும் எல்லைக்கு உட்பட்டு உணரப்படுவது. அந்த முழுநிலை** (நிறைநிலை)**என்பது சுக உணர்ச்சி. இது எல்லையற்ற தன்மையில் உணரப்படுவது.**
அந்த சுக உணர்வை உணர்வது 'நான்' அல்ல! எம்முள் இருக்கும் அந்த முழுநிலையே அச்சுகத்தை அறிவது.
(அதாவது அந்தஎல்லையற்ற முழுநிலைசக்தி நான்எனும் உடல் எல்லையையும் உள் அடக்கிய முழுமை. அந்த எல்லையற்ற முழுநிலை விகசிப்பை உடல் எனும் 'எல்லைக்குள்' அடக்கி வைத்திருப்பது தான் தவிப்பு,- அதில் உணரும் உணர்வுகளே வலி.)
எந்த உணர்வானாலும் உடல் எல்லைக்குள் உணரப்படும்போது அது வலியை சார்ந்தே உணரப்படும்.-அது குறை உணர்வே!
எந்த உணர்வானாலும் அந்த எல்லையற்ற விகசிப்பில் உணரப்படும்போது அது சுக உணர்வாகவே உணரப்படும்.
ஆக! வலி 'நான்', சுகம் 'முழுநிலை'.
வலிக்கு உடலே எல்லை. சுகத்துக்கு எல்லையே இல்லை.
-(அந்த எல்லையற்ற முழுநிலை விகசிப்பை உடல் எனும் எல்லைக்குள் அடக்கி வைத்திருப்பது தான் தவிப்பு,பதற்றம். -அதில் உணரும் உணர்வுகளே வலி)
-உடல் எல்லைக்குள் அடக்கி வைத்திருக்கும் அந்த விகசிப்பை கட்டவிழ்த்து விட்டாலே போதும்-
அது எல்லையற்ற நிலையில் தன் சுய சுபாவத்துக்கு வந்து விடும்.
நமக்கு தவிப்பும் இல்லை, வலியும் இல்லை,திருப்தி, திருப்தி, திருப்தி, ஒரே பரம சுகம் மட்டுமே!

4, நிறைவான பூரண நிலை 11/6/11

இப்பிரபஞ்சத்தில் உள்ள எல்லா பொருட்களையும் போல நீங்களும் ஒரு பொருள்தான். (இப்பிரபஞ்சத்தினுடைய பொருள்.)**உங்களின் 'வாழவேண்டும்' எனும் விருப்பமே மனமாக விருத்தியாகி செயல்படுகிறது என்பதை நாம் உணர வேண்டும். இந்த மனம் உருவான வரலாறு - தன் உயிருக்கு**

ஆபத்தை உண்டாக்குவது எது? தனக்கு பாதுகாப்பாக இருப்பது எது? என்பதைப்பற்றிய தகவல் தொகுப்பே 'மனம்' .(memory) மனம் இதன் அடிப்படையிலேயே செயல்படுகிறது. உங்கள் மனதில் எழும் எல்லா சிந்தனைகளும் , நினைவுகளும் உங்களின் 'பாதுகாப்பின்' அடிப்படையிலேயே நிகழ்கிறது. - என்பதை நாம் அறிய வேண்டும். (வாழ வேண்டும் எனும் ஆசை மறைந்து விடும்போது) உங்கள் மனம் ஓய்வெடுக்க விரும்புகிறதை அறிவீர்கள். வாழும் ஆசை இருக்கும்வரை மனதின் ஓட்டத்தை நிறுத்துவது மிகவும் கஷ்டம். நம் வாழும் ஆசையே மனமாக செயல்படுகிறது.

நான் யார்? நான் என்பது இந்த உடலை, உயிரை பாதுகாப்புடன் வளர்த்திக்கொள்ளும் ஒரு தன்முனைப்பு மன இயக்கம்.(இந்த நான், மனிதர்களுக்கு மட்டுமல்ல விலங்குகளுக்கு, பறவைகளுக்கு, புழு, பூச்சிகளுக்கு,மரம், செடி, கொடிகளுக்கும் , நுண்ணுயிரிகளுக்கும் உள்ளது) சரி இந்த உடல், உயிர் இன்னும் சுமார் பத்து வருடத்திற்கு தாங்கும் என வைத்துக்கொள்வோம் அதுவரைக்கு உண்டான பாதுகாப்புக்கு தேவையான பொருளாதார நிலை, குடும்ப நிலை, சமூக நிலை எல்லாம் சரி செய்தாகிவிட்டது.பாதுகாப்பு சூழல் நிறைவாகிவிட்டது. இனி 'இவன்' இங்கு வந்த நோக்கத்தை கவனிக்க வேண்டும். இவன் இங்கு வந்தது இவன் விரும்பி அல்ல! (இங்கு இவனாக செயல்படுவது பிரபஞ்ச சக்தியே).இந்த இயற்கையோ நிறைவை நோக்கியே செயல்படுகிறது. சரி, நான் அடுத்து செய்ய வேண்டியது என்ன? மூன்று நிலைகளான 1, பிரபஞ்ச நிலை 2,நமது மன நிலை 3,மன நிலையை கடந்த 'நிறைவான' பூரண நிலை. இவற்றில் நாம் நம் தியானத்தின் மூலம் நிறைவான பூரண நிலையில் நின்று நிறைவான பூரணத்தில் (complete)லயிப்போம்.

5, மனதிடம் மாட்டிக்கொண்ட மனிதர்கள். 17.6.10

நேற்று நள்ளிரவில் இது நடந்தது. எப்போதோஆங்கில சினிமாவில் பார்த்த ஒரு இடம் மாதிரி இருக்கிறது. பெரிய மலைத்தொடர். ஒரு மரம் செடிக்கூட இல்லை, பெரும், பெரும் செந்நிறபாறைகளால் ஆன உயர்ந்தமலை.செம்பு உலோகத்தால் உருவாகிய மாதிரி . முகடுகள் வானத்தை தொட்டு, மேலே கவிழ்ந்து நிற்கிறது. மலையின் அடிவாரத்தில் (மலையின் மடியில்)அமர்ந்து இருக்கிறேன். சுற்றும் சூழ மலைகள்.இன்னும் சிலகாட்சிகளில் குளறுபடிகள் 'லாஜிக்'கே இல்லை.(அனால் ஒரு அடிப்படையில் 'லாஜிக்' இருக்கிறமாதிரி தான் தோன்றுகிறது) (ஏன்? 'லாஜிக்' இல்லாத மாதிரியும் இருக்கிறது?'லாஜிக்' இருக்கிற மாதிரியும் இருக்கிறது?) எனது இடது பாதியில் மட்டும் உணர்கிறேன். வலது பாதி புலனாகவில்லை. ஒரு கருப்பு நிற 'ரிச்'சான(rich) கம்யூட்டர். அதன் கீ போர்ட் பட்டன்கள் உருண்டை, உருண்டையாக வெண்ணிற முத்துபோல

மின்னுகிறது. எதோ ஒரு டவுன் லோடு கொடுக்கிறேன். கம்ப்யூட்டர் ஸ்பீடாக இயங்குகிறது. ஆனால் டவுன்லோடு நிறைவு ஆகவில்லை. அதற்கான காரண காரியம் புரியவில்லை. ஏன்?, ஏன்?, மீண்டும் மனம் தேடுகிறது.
தேடி, தேடி ஓடினால் கொஞ்ச தூரம் போனால் பாதை அடைப்பட்டிருக்கிறது. எல்லா பாதைகளுமே சற்று, சற்று தூரத்தில் அடைப்பட்டு கிடைக்கிறதாக தகவல் வருகிறது. தேடல், தேடல், தேடல். ஒரே அவஸ்தையாக இருக்கிறது. வலி உணர்வில் எத்தனை வித பேதங்கள் இருக்கின்றனவோ,அத்தனை வித பேதமான வலிகள் தேகமெங்கும் அலைகின்றன! மூச்சு திணறுகிறது, இந்த மாதிரியான அவஸ்தையை இதுவரை பட்டதில்லை. மனசு வலிக்கிறது. இனி உயிர் வாழவே முடியாது. சே இந்த வாழ்க்கையை வாழ்வதை விட நிம்மதியாக செத்துப்போகலாம் .
என் மனசை எதோ உருவம் இல்லாத பலமான மாயக்கரம் பிசைகிறது. மனிதன் இந்த தொந்தரவோடு வாழ்வதைவிட இறந்து போவது நிம்மதி.(இப்படி எவ்வளவு நேரம் நடந்தது என்பது பற்றி ஞாபகம் இல்லை.) - இறந்து விட்டால் நிம்மதி எந்த பிரச்னையும் இருக்காது. எனக்கு எந்த வித உணர்ச்சியும் இனி வேண்டாம் நான் இறந்தே விடுகிறேன் . சாவுக்கு என்னை ஒப்புக்கொடுத்து விட எத்தனிக்கிறேன் .
'திடுக்'கென தூக்கத்திலிருந்து எழுந்தேன். இறந்திருந்தால் நிம்மதியாக இருந்திருக்கும் . கண் விழித்துப்பார்த்தேன்.கடிகாரத்தில் மணி இரண்டு. நல்லவேளை இது வெறும் கனவுதான், இது பச்சைப்பொய். வேறு கனவால் ஏற்ப்பட்ட நிகழ்வுகள் . அப்பாடா பிழைத்தேன் . இருந்தாலும் சந்தேகப்பட்டு வீட்டிலிருந்த கம்ப்யூட்டரையும் பார்த்தேன்.அது மூடி வைத்திருந்த படிதான் இருந்தது. நூற்றுக்கு நூறு இது கனவுதான். சிறுநீர் கழித்துவிட்டு வந்து,மீண்டும் படுத்து 'சரி நிம்மதியாக இனி தூங்குவோம்' என, கண்களை மூடி தூங்கப்போனால் , மீண்டும் அதே கம்ப்யூட்டர் காட்சிக்கு வருகிறது. மனசில் லேசாக வலி துவங்குகிறது. சற்றும் சூழ பாறையால் ஆன மலைகள். சே! வெறும் மனசால் வந்த கோளாறு.இந்த மனதிலே என்னக்கன்றாவி அப்படி இருக்கிறது ? மனசு எதோ டிரைவர் இல்லாத ரயில் போல தன்னிச்சையில் ஓடிக்கொண்டிருக்கிறது. அதுவும் என்னையும் சேர்த்து இழுத்துக்கொண்டு. பெட்டிக்குள்ளே நீ எதுவேண்டுமானாலும் செய்து கொள்ளலாம் , ஆனால் ரயில் தன்னிச்சையாகவே ஓடிக்கொண்டிருக்கும் . எழுந்து அமர்ந்து கொண்டேன். இனி கண்ணை மூடி தூங்கப்போவதில்லை. ஏன் இந்த மனசு என்னை இப்படி வதைக்கிறது? ஏன்? இந்த மனம் என் கட்டுப்பாட்டிற்கு வர மறுக்கிறது? எனக்கும் மனசுக்கும் இடையே இவ்வளவு பெரிய இடைவெளி எப்படி ஏற்ப்பட்டது? இந்த மனசுக்கு சர்வ சுதந்திரத்தையும் கொடுத்து என்னையும் அதனிடமே முழுசாக

ஒப்புக்கொடுத்து வைத்திருப்பது அப்போது அறிய வருகிறது. என் வசம் எந்த அதிகாரமும் இல்லை. சர்வ அதிகாரமும் தன் கையில் வைத்திருக்கிற சர்வாதிகாரியே இந்த மனம்தான். என் முழு உரிமையையும் அதனிடமே அடிமை சாசனம் போட்டு கொடுத்திருக்கிறேன்.தப்பிக்க முடியுமா? ஏதாவது வழி இருந்தா சொல்லுங்க?

6, நம் வள்ளலுக்கு ஒய்வு கொடுப்போம். 21.6.10

உங்கள் மனம் உங்களுக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து, உங்களுக்காக இடையாறாது, இரவு பகலாக உழைத்து வந்திருக்கிறது. அல்லது அதன் மீது நீங்கள், சற்றும் ஈவு இரக்கமின்றி, கொஞ்சமும் தாட்சண்யமின்றி அதனிடம் - உங்கள் சுயநலத்திற்காக - இடையாறாது (கொஞ்ச நேரமும் ஒய்வு இன்றி) வேலை வாங்கியிருக்கிறீர்கள். உங்கள் மனமோ தன் சக்தியையும் மீறி உங்களுக்காக உழைத்துக்கொண்டு இருக்கிறது 'இன்னும்' ஒரு அடிமைப்போல . அதனிடம் 'தன்னையே தியாகம் பண்ணும் வள்ளல் தன்மையும்' உள்ளது. நீங்களோ ஒரு சொகுசான பேர்வழி. அனால் உங்கள் மனம் அப்படியல்ல! உங்களை முழுதுமாக உங்கள் மனதிடமே ஒப்படைத்துவிட்ட சோம்பேறி நீங்கள். நீங்கள் ஒரு மாபெரும் சோம்பேறி.உங்களுக்காக உங்கள் மனம் எடுத்துக்கொண்ட முயற்சிகள் ஏராளம், ஏராளம். அது பட்ட கஷ்டமும் கொஞ்சமல்ல! உங்களுடைய அனைத்து தேவைகளையும் அது நிறைவேற்றியிருக்கிறது. உங்களுடைய துர் இச்சைகளையும் கூட அது நிறைவேற்றி கொடுத்துள்ளது. உங்களுக்கு அரணாக, பாதுகாவலாக, உங்களை ரட்சிக்கும் ரட்சகனே உங்கள் மனம தான். அப்படிப்பட்ட உங்கள் மனதுக்கு கைமாறாக நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள் ? குறைந்தபட்சம் உங்கள் மனதுக்கு கொஞ்சம் ஓய்வாவது கொடுக்கலாம். இன்றிலிருந்து அதற்கு கொஞ்ச, கொஞ்ச நேரம் ஒய்வு கொடுக்க ஏற்பாடு செயுங்கள் உண்மையாகவே நீங்கள் நன்றியுள்ளவராக இருந்தால்! நீங்கள் உங்கள் மனதுக்கு சற்று ஒய்வு கொடுக்க விரும்புபவராக இருந்தால் இந்த உதவிக்குறிப்பை கவனித்து படியுங்கள்.

* குறிப்பு : உங்கள் மனம் என்பது உங்களை காப்பாற்றிவரும் , உங்கள் தன்முனைப்பு அமைப்பு. அது தன்னிகரற்ற சக்தி. அது செயல்படும் விதமானது உங்களை மையப்படுத்தியே செயல்படும். உங்களைச்சுற்றி நடக்கும் நிகழ்வுகளில் , உங்களுக்கு இடையூறு உண்டாக்கும் செயல் ஏதாவது (அல்லது அதற்கான காரணங்கள் ஏதாவது) நடக்கிறதா? என்பதிலேயே கவனமாக இருக்கும். உங்களை சுற்றி நடக்கும் செயல்களில் மட்டுமல்ல , உங்களுக்குள் எழும் எண்ணங்களை கூட அவ்வண்ணமே கவனிக்கும் தன்மையுடையது. அவ்வளவு துல்லியமான கவனம் கொள்ளும் உங்கள் மனதுக்கு ஒய்வு கொடுப்பது என்பது , அதனுடைய துல்லிய தன்மைக்கு குறையாத கவனத்துடன் விழிப்புணர்வோடு இந்த மனதிற்கு சற்று ஒய்வு அளிக்கவேண்டும். நீங்கள் ஒரு தூய விழிப்புணர்வோடு ஏகாந்த தன்மையில் கவனம் பிசகாமல் நடந்து வந்தால் -(இப்போது மனம் சற்று சும்மா இருக்காது. அவ்வப்போது இயங்க தொடங்கும். பாவம் அதன் பழக்க தோஷம் அது) - இப்போது மனதோடு வாஞ்சையாக பேசி அதை ஓய்வெடுக்க செய்ய வேண்டும். உங்கள் மனதுக்கு அவ்வப்போது ஒய்வு கொடுப்பதுதான் நீங்கள் அதற்கு செய்யும் கைம்மாறு. இவ்வளவு நாள் அது உங்களை காப்பாற்றி வந்ததுபோல, நீங்களும் அதை காப்பாற்ற வேண்டும். இதுவரை ஒரு தீவிர

விழிப்புணர்வு உங்கள் மனதிடம் செயல்பட்டது போல , இனி அதேயளவு தீவிர விழிப்புணர்வை உங்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ளுங்கள் அவ்வளவே.

7, இணைப்பு 23.6.10

நீங்கள், நான், இந்த பூச்சி, அந்த குதிரை, அந்த நாய், இதோ இந்த மரம், பூத்து குலுங்கும் இந்த கொடி,ஒரு எறும்பு, எதுவுமே தனி, தனி செயல்பாடு உடையதாகவே இருக்கிறது. இந்த பூமி, அந்த நிலா, புதன், சுக்கிரன், வியாழன், சனி என கிரகங்களும் தனி, தனி செயல்பாடுகள் உள்ளதுதான். நம்மோட சூரியன், மற்றும் நட்சத்திரங்களும் தனி,தனி செயல்பாடுகள் உள்ளவைதான். உங்களோட பால்வீதி மண்டலம் ,அதேப்போன்ற கோடிக்கணக்கான மண்டலங்கள் அனைத்துமே தனி,தனி செயல்பாடுகள் கொண்டவைதாம். ஏன்? ஒவ்வொரு அணுக்களுமே தனி, தனி செயல்பாடுகள் கொண்டவைதான். நம் தியானத்தில் , தியானத்தின் அமைதியில் , அமைதியின் ஆழத்தில், வெளியுலக தொடர்பை தாண்டி, எண்ணம்,அக காட்சிகளையும், மனதின் செயல்பாடுகளையும் தாண்டி, மனமற்ற வெளியில் , உடல் இருப்புணர்வையும் கடந்து, ஆழ்ந்த மோனத்தில்,- நான், நீ, அது என்ற விகல்பம் இன்றி, அனைத்து பொருட்களின் அடிப்படை இணைப்பாக , விகல்பமற்ற ஓர் ஒர்மையுணர்வு துலங்குகிறது. இது ஒவ்வொரு பொருளின் அடிப்படை தன்மையே . ஒவ்வொரு அணுவின் அடிப்படைத்தன்மையும் இதுவே. இதன் உணர்வுதன்மை மின் தன்மையதாக இருக்கிறது. அனைத்து பொருட்களுமே அடிப்படையில் மின் தன்மையதாகவேயுள்ளது.இந்த பிரபஞ்சம் தொடங்குமுன் இருந்ததும் வெறும் மின் மட்டுமே! இந்த சமநிலை மின்தன்மை, நிலைமின், நேர் மின், எதிர்மின், என விகல்பமானதாலேயே இப்பிரபஞ்சம் தோன்றியிருக்கிறது. (இந்த பிரபஞ்சத்தின் அடிப்படை 'அலகே' அணுதான். (நமது அடிப்படை 'அலகு'ம் அணுதான்.) அந்த அணுவும் மூன்றுவித மின் துகள்களாலானது . 1,நேர்மின் துகள், 2, எதிர்மின் துகள், 3, நிலை மின் துகள். ஒரு அணுவின் உருவத்தில் நூறு ட்ரில்லியனில் (100,000,000) ஒரு பகுதிதான் கெட்டியான உட்பகுதி (கருமையம்) இந்த பகுதியில் நேர்மின் துகளும், நிலைமின் துகளும் அடர்ந்து பிணைந்துள்ளது. அணுவின் வெளிவட்டத்தில் எதிர்மின் துகள்கள் சுற்றிவருகிறது. இடையில் இருக்கும் மீதியெல்லாம் வெற்றிடம்தான். பெரிதாக இருக்கும் இவ்வுலகம் நீங்கள், உங்கள் நாற்காலி, இந்த கம்ப்யூட்டர், ஆகிய யாவும் பெரும்பாலும் வெற்றிடத்தால் ஆனதுதான். இருப்பினும் நமது உடலும், பொருட்களும் கெட்டியாக இருப்பதற்கு காரணம் 'அணுவின் கருவைச்சுற்றி மேகம்போல் சூழ்ந்திருக்கும் மிக விரைவாக சுற்றிவரும் எதிர்மின் துகள்களால்தான்'.) இந்த அகிலமே வெறும் மின்னோட்டமட்டும் உடையதுதான்.அந்த சம நிலை மின் தன்மையே நமது தியானத்தில் உணரப்படுகிறது.
இந்த ஒர்மையுணர்வே அனைத்தையும் இணைக்கிறது.நமது ஆழ்ந்த அடிப்படை உணர்வான இந்த மின்தன்மை நம்மையும் தன்னோடு இணைக்கிறது.

8, மின் காந்த அலைகள் . 24.6.10

மின் புலத்தை அசைக்கும்போது அங்கே காந்த அலையும், ஒரு காந்த புலத்தை அசைக்கும் போது அங்கே மின் அலையும் தோன்றுகின்றன. - மின் புலமும், காந்த புலமும் அடுத்தடுத்து மாறி மாறிப் பரவுவதாக ஜேம்ஸ் மேக்ஸ்வெல் என்பவர் ஒரு

சமன்பாட்டை உருவாக்கினார். அதை நாம் மின்காந்த அலை என்கிறோம். 'ஒளி என்பதுவும் அதுவே'. சூரிய ஒளி, விளக்கொளி, ரேடியோ அலை, நெருப்பிலிருந்து வரும் அனல், புற ஊதாக்கதிர், x-கதிர், காம்மா கதிர், ஆகிய அனைத்தும் பல்வேறுவகை ஒளிகளே. அனைத்தும் மின் காந்த அலைகள் குடும்பத்தின் அங்கத்தினர்களே.
நன்றி :: அணு, உயிர், அண்டம். ...கலைக்கதிர் அச்சகம். கோவை.

9, குவாண்ட உலகம் 24.6.10

ஒரு குவாண்ட ஆற்றலானது (எதிர் மின் துகளான) எலெக்ட்ரானை பொறுத்தவரையில் மிக மிக முக்கியமானதாக இருக்கிறது. இரண்டும் ஒன்றோடு ஒன்று உறவாடும் போது எலக்ட்ரானுக்கு பெருத்த விளைவு ஏற்படுகிறது. ஒரு பொருளின் அளவை 10^ -27 cm என்று எண்ணிக்கொள்ளுங்கள். அப்பொருளை பக்கம் பக்கமாக அடுக்கி 1cm நீளம் வரை வைக்க முயலுங்கள். எத்தனை பொருள் வைத்தால் 1cm நீளம் கிடைக்கும் என பார்த்தால் அது 10^27 என்பதை வெறும் கணக்கின் உதவியால் சொல்லிவிடலாம். இனி 10^27 என்றால் எத்தனை என்று பார்ப்போம். சர்க்கரை பருக்கை ஒன்று 1mm இருக்கலாம் 10^27 சர்க்கரை பருக்கைகளை பக்கம் பக்கமாக அடுக்கினால் அது ஒரு பில்லியன் ஒளியாண்டுகள் தொலைவு தூரம் செல்லும். இந்த பிரபஞ்சத்தை காட்டிலும் சர்க்கரை துகள் எந்த அளவுக்கு சிறியதோ அந்த அளவுக்கு குவாண்ட உலகம் சர்க்கரை துகளைவிட சிறியது. நமக்கு பிரபஞ்சத்தின் விசுவரூபம் ஒரு பக்கமும் , அணுவின் நுட்பத்திற்கும் நுட்பமான அளவு இன்னொரு பக்கமும் இருக்கிறது. நாம் நடுவில் இருக்கிறோம்.
நன்றி :: அணு, உயிர், அண்டம். ...கலைக்கதிர் அச்சகம். கோவை.

10, அறி உணர் நுட்ப மட்டங்கள். 24.6.10

இந்த பிரபஞ்சம் எப்படி இருக்கிறதோ - ஒரே முழுப்பிரபஞ்சமாக, பால்வீதி மண்டலமாக, நட்சத்திரங்களாக, பூமியாக, கல்லாக, மண்ணாக, நீராக, செடி,கொடிகளாக, பொருளாக, உயிராக,மூலக்கூறாக,உயிர்செல்லாக, அணுவாக, அணுவினுள் அமைந்த மின் துகள்களாக, துகள்களை உருவாக்கும் மின் காந்த அலைகளாக, மிக நுட்பமான குவாண்ட ஆற்றலாக - ஒய்வு நிலையில் இருக்கும் சமநிலை மின்காந்த அலைகளாக - இப்படி பல்வேறு மட்டங்களில் இப்பிரபஞ்சத்தை நாம் அறியமுடியும்.
நாம் எங்கிருந்து அளவிடுகிறோமோ அந்த தளத்தை 'ஆதாரத்தளம்' (frame of reference) என்று அழைக்கலாம். குவாண்ட ஆற்றலில் துவங்கி , மின் காந்த அலை,அணுத்துகள், அணு, மூலகம், கல், மண், பூமி,நட்சத்திரம் ,பால்வீதி, பிரபஞ்சம் இப்படி விகசிக்கிறது. அதுவே அடிப்படை நுட்பமாக நோக்கினால், பிரபஞ்சம்,பால்வீதி, நட்சத்திரம், பூமி, உயிர் , மூலகம், அணு, மின் காந்த அலைகள், குவாண்ட ஆற்றல் என நுணுகிக்கொண்டு போகிறது.
இதில் மனிதன் இருக்கும்(frame of reference) 'ஆதாரத்தளம்'எதுவென அறிவீர்களாக!

நம்மை விட அகண்ட,விரிவான பூமி, நடசத்திரம் , பால்வீதி, பிரபஞ்சம் - இந்த 'ஆதாரத்தளங்களை' அறிந்துணர நாம் நமக்கு வெளியே பயணம் மேற்கொள்ள வேண்டும்.அல்லது தொலை நோக்கியால் பிரவேசிக்கவேண்டும் வெளி நோக்கி.

மனிதனின் கிடை மட்டத்தில் உள்ள செடிகொடி,பொருள்,காடு, மலை, நதி மற்றும் நீங்கள் எப்படி எதுவெல்லாம் உண்மை என நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிறீர்களோ அவைகள் அனைத்தும். (தோற்ற பிரபஞ்சம்) இப்போது துலங்கும் நம்முடைய ஐந்து

புலன்களாலேயே அறிந்துணர முடியும்.இதுவே நமது 'ஐம்புலன்ஆதாரத்தளம்'. மனிதனை விட சுருக்கமான மூலக்கூறு, அணு,மின்காந்த அலை, குவாண்டம் ஆற்றல். போன்ற மிக நுட்பமான அறியுணர்வை,('ஆதாரத்தளங்களை') - பொருட்களால் கட்டப்பட்ட இந்த உடலை முழு ஓய்வில் இருத்தி நாம் 'நம்முள்ளே'(inner travel) பிரவேசிப்பதன் மூலமே - உடலை அசைவின்றி ஓய்வில் இருத்தினால் மனம் தானே ஓய்வில் ஒடுங்கும்- மனம் கடந்து, நமது அடிப்படை இருப்புணர்வில் (தியானத்தில்) நம் அறியுணர்வை நிறுத்தினால் அணுத்தளம்,மின்காந்த அலைத்தளம், குவாண்ட ஆற்றல்தளம் ஆகிய இந்த 'ஆதாரத்தளங்களில்' சஞ்சரிக்க முடியும்.

நாம் கண்களை மூடி ஆழ்ந்த தியானத்தில் இருக்கும்போது நாம் இருக்கும் (மனித மட்டத்தாலான 'ஆதாரத்தள')உணர்வேயில்லாது இருக்கிற நிலையே அணுத்தளம்.('அணு ஆதாரத்தளம்'). நம் புருவ மத்தியில் தோன்றி பிரகாசிக்கும் ஒளியே மின்காந்த அலைத்தளம்.('மின்காந்தஆதாரத்தளம்').
எங்கும் நீக்கமற நிறைந்து நிற்கும் பூரண தன்மையே குவாண்ட ஆற்றல் தளம்.('குவாண்ட நிலை ஆதாரத்தளம்').

1, பிரபஞ்ச நிலை ஆதாரத்தளம்
2, உடுமண்டல நிலை ஆதாரத்தளம்
3, நட்சத்திர நிலை ஆதாரத்தளம்
4, கிரகநிலை ஆதாரத்தளம்
5, உயிர்நிலை ஆதாரத்தளம் (மூளை, மனம்)
6, மூலகம் ஆதாரத்தளம்
7, அணு நிலை ஆதாரத்தளம்
8, மின்காந்த அலை ஆதாரத்தளம்
9, குவாண்ட நிலை ஆதாரத்தளம்

உணர்வு தகவமைப்பு. 26.6.10

நமது காலை நேர ஆழ்ந்ததியான நிலையில் நமது புருவ மத்தியில் ஒளிப்பிரவாகம் தோன்றும். அந்த ஒளிப்பிரவாகம் நம் உடல் முழுவதும் சுடர்வதாகவும், நம் ஒவ்வொரு அங்கமும் சுடர்வதாக, நம்முடைய ஒவ்வொரு திசுவும் சுடர்வதாக, நம்முடைய ஒவ்வொரு அணுவுமே சுடர்வதாக, ஏன் அந்த அணுக்களிலுள்ள நேர்மின் துகள்கள், எதிர்மின் துகள்கள், நிலைமின் துகள்களும் சுடர்வதாக பாவித்து வர அந்த ஒளிச்சுடர் உணர்வு தண்டுவடத்தில் சுடர்ந்து , அந்த ஒளித்தண்டுவடம் பிளந்து (ஒளி துலங்கி 'நான்' எனும் 'நிழலான கவனம்' மறைந்து தொலைய) இப்போது ஏக ஒளிப்பிரவாகம் தோன்றும். எப்போதும், எங்கும், எதிலும் ஒளியே . இந்த ஒளித்தன்மையே மின்காந்த அலைத்தளம். இந்த ஒளிநிலையில் நீங்கள் எவ்வளவு நேரம் நீடிக்க முடியுமோ அந்த அளவுக்கு உங்கள் அறிவு தெள்ளத் தெளிவாகும். (இது நூற்றுக்கு நூறு சத்தியம்) இது அறிவில் இப்படி மாற்றத்தை செய்வதோடல்லாமல், உங்கள் உள்ளே நிகழும் உணர்வு தகவமைப்பையும் சீர் படுத்துகிறது. (இந்த உணர்வு தகவமைப்பே சர்வமும்) ஆகையினாலேயே புத்தர்பிரான் இந்த உடலுக்கு வெளியே நிகழும் பிரபஞ்சத்தைப்பற்றியோ, மக்களால் நம்பப்பட்டுக்கொண்டிருந்த, இந்த அண்ட புவனங்களை ஆக்கி, காத்துக்கொண்டிருப்பதான 'கடவுள்' பற்றியோ அவர் எதுவும் மக்களுக்கு தெரிவிக்கவில்லை. என்பது இங்கு கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. இது

இப்படியிருக்க, இந்த தியான நிகழ்வை நீங்கள் தினமும் ஒரு குறிப்பிட்ட நேரத்திலேயே செய்துவரல் வேண்டும். இது மிக முக்கியம். இதை நீங்கள் ஒரு குறிப்பிட்ட நேரத்திலேயே செய்து வருவது , உங்கள் உணர்வுதன்மையில் ஒரு நல்ல மாற்றத்தை ஏற்படுத்தும் ஒரு தலைசிறந்த உத்தி.

சுவாசமும், மின் மற்றும் காந்த புலன்களும். 29.6.10

காலை தியானத்தின்போது ஓம் சாண்டிங் பயிற்சி முடித்து 'நாடிசுத்தி' எனும் சுவாசப்பயிற்சியின்போது வலது நாசியை மூடி , இடது நாசி வழியாக உள்ளிருக்கும் காற்றை சீராக , மிக சீராக, காற்றை மெதுவாக நடத்தி , மெதுவாக, மிக மெதுவாக நடத்தி வெளி விடல் வேண்டும். முழுக்காற்றையும் வெளி விட்டபின் , அப்படியே அதே நாசியில் சுவாசக்காற்றை உள்ளிழுக்க வேண்டும்.முடிந்த மட்டும் நிறைவாக காற்றை இழுத்து, சுவாசப்பையை நிறைத்து , பின் இடது நாசியை மூடி, வலது நாசி வழியாக உள்ளிருக்கும் காற்றை சீராக , மிக சீராக, காற்றை மெதுவாக நடத்தி , மெதுவாக, மிக மெதுவாக நடத்தி வெளி விடல் வேண்டும். இப்படி மெதுவாக, மிக மெதுவாக என்பது ஒரு நடையாக அல்லாமல் ஒரு ஆமையின் நகர்வாக நகர்தல் நலம்.எவ்வளவு உங்களால் முடியுமோ அவ்வளவு தாமதமாக , (இது நீண்ட காலமாக தியானம் செய்து வருபவர்களால் மட்டுமே முடியும்) இந்த நகர்தல் சற்று நின்றாலும் , அந்த 'அசைவற்றகணம்' உன் நுகர்வு தளம் முழுமைக்கும் ஒளிபிரவேசிக்கும். அக்கணம் நீ ஒளித்தன்மையையடைவாய்.இப்படி ஆழ்ந்து நீடித்த சுவாசப்பயிற்சி செய்வோர் இந்நிலையை அறிந்துணர முடியும். இந்த மூச்சுக்காற்றின் அடிப்படை (இயற்பியல் சூத்திரம்) என்னவென்றால், நாம் வலது நாசி வழியாக உள் இழுக்கும் காற்று நமது உணர்வு மண்டலத்திற்கு காந்தப்புலத்தை வலிமையடைய செய்வதாகவும், நமது இடது நாசி வழியாக உள் இழுக்கும் காற்று நமது உணர்வு மண்டலத்திற்கு மின் புலத்தை வலிமையடைய செய்வதாகவும் இருக்கிறது.இந்த இரண்டு (காந்த மற்றும் மின்) புலன்களும் வலிமையானவுடன் வினைபுரிய துவங்கி அது எண்ணங்களாக விகசிக்கிறது கண்கூடு. நமது தியான நிலையில் நாம், நமது எண்ணங்களை களைந்து (கடந்து) பிரவேசிக்க வேண்டியிருப்பதால், இந்த சுவாச ரகசியத்தை அறிந்துகொள்ள வேண்டியதாக இருக்கிறது. 25நமது 'தியானித்தல்' சரியான நிலைமைக்கு வரும்போது , நமது மூச்சுக்காற்று வலது நாசியிலும் அல்லாமல், இடது நாசியிலும் அல்லாமல் நம் புருவ மத்தியிலுள்ள சுழுமுனை எனும் இடத்தில் , இட வல சிற்றசைவாக துடித்து (அந்த குறு இட நிலையில், மின் புலமும், காந்த புலமும் வினை புரிய அந்த வினை ஒளியாக துலங்க) அந்த ஒளியே உன் நுகர்வுக்கு கிடைக்கிறது. நமது நுகர்வுக்கு அப்போது ஒளிமட்டுமே நுகர்வாகும். இந்த ஒளி நிலையே 'மின் காந்த அலை தளம்' .

அன்னை 1.7.10

அன்னை கூறுகிறார்: முனிவருடைய ஒளி வெளிரிய நீல நிறமானது. தேவலோக ஒளி நீலம்.சைத்திய ஒளி (பிங்க்) ரோஸ் நிறமானது. உணர்வின் ஒளி வயலட். உடலின் ஒளி சிவப்பு. மனதின் ஒளி மஞ்சள். சத்திய ஜீவிய ஒளி போன்னொளியாகும்.

ஒளி- காலம்- தியானம். 1.7.10

1, இந்த பிரபஞ்சத்தில் உள்ள அனைத்து பொருட்களும் , ஏன் அனைத்து அண்டங்களுமேக்கூட ஒன்றை ஒன்று சார்ந்தே இருக்கிறது. ஒவ்வொரு அணுக்களுமே ஒன்றை ஒன்று சார்ந்தே செயல்படுகிறது. இந்த பிரபஞ்சத்தில் ஒரு தனித்த 'தனிமுதல்' உண்டு என்றால் அது ஒளியே ஆகும். ஒளி ஒரு சார்பற்ற தனி

முதல். 2, காலம் : காலம் என்பது பொருட்களால் ஆன உலகுக்குதான் முப்பரிமாணமாக தோன்றுகிறது. அதுவும் கூட மனதின் தோற்றமே. எதிர்காலம், இறந்த காலம் என்ற ஒன்று கருத்து ரீதியானது தான். அப்படி இரண்டு காலங்கள் இல்லவே இல்லை. பொருள் மட்ட 'ஆதாரத்தள'த்தில் மட்டுமே இந்த கருத்துரு தோன்றுகிறது. ஒரு பொருள் சார்பியல் வேகத்தில் (ஒளியின் வேகம்) பயணிக்கும்போது , காலம் மட்டும் அல்லாமல் இடமும் தம் அளவுகளில் மாறுபடுகிறது. சரி ஒளியின் வேகத்திற்கே ஒரு விண்கலம் ஓடக்கூடியதாக இருந்தால் , அங்கு கடிகாரமும் ஓடாமல் காலமே ஸ்தம்பித்துவிடும். எவ்வளவு தான் நாம் சார்பியல் தத்துவத்தை புரிந்து கொண்டாலும், நம்மை அறியாமல் நம் ஆழ்மனதில் ஒரு சார்பற்ற தனிமுதல் காலம் ஒன்று இருக்க முடியும் என்ற எண்ணம் தோன்றுகிறது. உண்மையில் அப்படியொரு சார்பற்ற காலம் இல்லவே இல்லை.

இந்த பிரபஞ்சம் என்றோ ஒரு காலத்தில் தோன்றியதாக எண்ணுகிறோம். அக்காலத்திற்கு முன்பு இப்பிரபஞ்சம் என்னவாக இருந்தது? என்ற கேள்வி உடனே எழுகிறது. நினைவில் வைத்துக்கொள்ளுங்கள் . காலமும் இடமும் இந்த பிரபஞ்சத்திற்குள் தான் இருக்கிறது .

ஆனால் பிரபஞ்சம் காலத்திற்குள் இல்லை.

அதேபோல பிரபஞ்சத்திற்கு வெளியே என்று ஒரு இடமும் இல்லை, பிரபஞ்சத்திற்கு முன்போ , அல்லது மறைவுக்கு பின்னாலோ காலமும் இல்லை. இடமும் இல்லை. பிரபஞ்சம் தோன்றிய பிறகே காலமும் இடமும் தோன்றியன.

இந்த பிரபஞ்சம் விரிந்துகொண்டிருக்கிறது என்று நினைக்கும்பொழுது எதில் விரிந்துகொண்டிருக்கிறது என்று கேள்வி எழுகிறது. பதில் பிரபஞ்சத்திற்கு வெளியே இடம் எதுவும் கிடையாது.

* குறிப்பு

1,ஒளி ஒரு சார்பற்ற தனி முதல்

2, ஒளி வேகத்தில் ஒரு பொருள் பயணித்தால் அந்த பொருளே மறைந்துவிடும்.

3, பிரபஞ்சத்திற்கு முன்போ , அல்லது மறைவுக்கு பின்னாலோ காலமும் இல்லை. இடமும் இல்லை.

4,நமது தியானத்தின் போது நாம் அந்த ஒளி நிலையில் லயிக்கும்பொழுது காலம் பற்றிய உணர்வு இருப்பதில்லை. ஏன்? ஒளி ஒரு சார்பற்ற தனி முதல்.இது பொருள் கடந்த நிலை,இதுவே காரணம்.

'காலம்' என்பது பொருட்களால் ஆன உலகுக்குதான். ஒரு உதாரணம். நமக்கு காலை, மதியம், மாலை, இரவு என நான்கு வேளைகள் உண்டு. நமக்கு அடுத்துள்ள ஒரு நட்சத்திர வாசிக்கு (கற்பனைதான்) இந்த வேளைகள் கிடையாது. அவர்களுக்கு ஒரே வேளைதான்.ஏனெனில் அங்கு எப்போதுமே ஒளி வீசிக்கொண்டுதான் இருக்கிறது. இதுபோலதான் காலத்தின் நிலையும்.

நன்றி: அணு, உயிர், அண்டம். கலைக்கதிர், கோவை.

அநுபூதி நிலையை அடைந்த ஒருவருக்கு எந்த கேள்வியும் மனதில் எழுவது கிடையாது. அவருக்கு மனமே செயல்படுவது கிடையாது. அவர் அனைத்து கேள்விகளையும் கடந்து விட்டவர். அவர் நிறைவானவர், பூர்த்தியானவர்.அங்கு அவரே கிடையாது. அது எந்த சலனமும் அற்ற வெளி. அங்கு எதுவும் சூல் கொள்வதில்லை. தனது தேக உணர்வையே கடந்து வாழ்ந்தவர்களையும்

கேள்விப்பட்டு இருக்கிறோம். மனம் நிலவுகிற இடத்தில தான் சந்தேகங்களும்,கேள்விகளும்.

கவனிக்கவும்: பிரபஞ்சம் தோன்றிய பிறகே காலமும் இடமும் தோன்றியன.

யாவுயிரும் இன்பமுற! 4,7,10

இந்த சுந்தரம் ஒரு தனி உயிர் அல்ல. தனக்குள் இருக்கும் கோடிக்கணக்கான உயிரிகளின்(செல்களின்) தொகுப்பு. சுந்தரம் தனக்குள் இருக்கும் இந்த கோடிக்கணக்கான உயிரிகளையும் மூடி காப்பாற்றும் ஒரு பாதுகாப்பு அமைப்பு. இந்த உள் உயிரிகளுக்கு உதவும் அனைத்து வித பொருட்களையும், இந்த உயிர்கள் ஏற்றுக்கொள்ளும். தீங்கு செய்யும் பொருட்களால் தான் மனிதனுக்கு வியாதி வருகிறது.(இந்த உயிரிகளே கண்ணாகவும், காதாகவும், மூக்காகவும், ரத்தமாகவும், எலும்பாகவும், தோலாகவும், இன்னபிற உறுப்புகளாகவும் இருக்கின்றன. அதன் ஒட்டுமொத்த பாதுகாப்பு உணர்வு தன்மையே இந்த உடல். மனம், அறிவு எல்லாம். நம்மோடு வாழும் மற்ற யாவுயிரையும் காப்பதே நம் கடமை. மனிதரைப்போலவே மரம் செடி கொடி, ஊர்வன, நகர்வன, பறப்பன, விலங்குகள் யாவுமே தனி உயிர் அல்ல. ஒவ்வொன்றுமே ஓர் உயிர்தொகுப்பு. தனக்குள் இருக்கும் உயிர் தொகுப்புகளை, எவ்விதம் இந்த மரம் செடி கொடி, ஊர்வன, நகர்வன, பறப்பன, விலங்குகள், மனிதர்கள் காப்பாற்றுகின்றனர் பாருங்கள், வேடிக்கைதான்.
இதுவே உயிர் பற்றிய அடிப்படை உண்மை. - தனக்கான இந்த உயிர் தொகுதியினை, மரம் செடி கொடி, ஊர்வன, நகர்வன, பறப்பன, விலங்குகள், மனிதர்கள்பெறும் விதமே, அவரவர் கர்மா. இந்த கர்மா மனிதருக்கு மட்டுமல்ல மரம் செடி கொடி, ஊர்வன, நகர்வன, பறப்பன, விலங்குகள் அனைத்துக்குமே உண்டு.
கர்மா என்பது ஒரு உயிர் தொகுதி உருவாகும் பொழுது, அது மரம் செடி கொடி, ஊர்வன, நகர்வன, பறப்பன, விலங்குகள், மனிதர்கள் எதுவாயினும் தனது மூலமான தன் தாய், தந்தையிடமிருந்து உயிரைப்பெறும்போழுதே இந்த பாதுகாப்பு உணர்வான் தன்மையையும் பெற்றுக்கொள்கின்றன. அதனதன் பெற்றோரும் அப்படியே!. இந்த பாதுகாப்பு உணர்வே கர்மா.
இது மனிதருக்கு அறிவால் தெளிவாகும்போது இந்த பாதுகாப்பு தன்மையைத்தான் இதுவரை 'நான்; என்றும் 'எனது' என்றும் கருதி வந்திருக்கிறேன் என்பதை அறிகின்றனர். ஆனால் அதி அற்புதமான உண்மை என்னவெனில் இந்த உயிரிகள் எல்லாம் எக்கணமும் இன்புற்றிருக்கவே வந்திருக்கின்றன.
உங்களுடைய 'நான்' எனும் தன்முனைப்பு எப்போதெல்லாம் கவனம் குறைகிறதோ அப்போதெல்லாம் இந்த உயிரிகள் குதூகலத்தில் இருந்திருக்கிறது. (மனிதன் அதிக அளவுக்கு செக்ஸ் ஆசைப்படுவது இதனால் தான். அவன் செக்ஸ் ஈடுபாட்டில் இருக்குபொழுது அவனது தன்முனைப்பு தன்னை மறந்து கிடக்கிறது.}
அதன் (செல்களின்) தொடர்ந்த குதூகலத்தை தடுத்து வருவது உங்களுடைய 'நான்' எனும் தன்முனைப்பே! நீங்கள் சற்று நேரம் தியானத்தில் உங்களுடைய ' நானை' (அதாவது உங்களுடைய 'நான்'என்பதான மனதின் செயல்பாட்டை) நிறுத்தி வைத்ததால் அப்போது விளங்கும் உண்மை.
ஆகவே நண்பர்களே, சகோதரிகளே நீங்கள் காலையில் தியானம் செய்ய அமரும் பொழுது இவ்வுண்மையை கருத்தில் கொண்டு உடலிலுள்ள அனைத்து

உறுப்புகளுக்கும் யோகாவும், உங்கள் உடலில் மூளை முடுக்கிலுள்ள, பிராணனே சரியாக செல்லாத இருளில் கிடக்கிற உயிரிகளுக்கும் போய்
சேருமளவுக்கு ஆழ்ந்த சுவாச பயிற்சியும் செய்து உங்கள் உள்ளிருக்கும் உயிரிகளுக்கு நன்மை செய்வீர்களாக! உங்களைப்போலவே வெளியில் உள்ள மற்ற உயிர் தொகுப்புகளுக்கும் நன்மை செய்வீராக!.

நன்றாக கவனியுங்கள் இந்த அடிப்படையிலேயே, ரமண மகரிஷியால் அவரது ஆசிரமத்தில் இருந்த பசு, மற்றும் சில உயிர்களுக்கு அவரால் மோட்சம் அளிக்கப்பட்டது.

இயல்பு சமநிலை. 6,7,10

இப்பிரபஞ்சத்திலுள்ள அனைத்து பொருட்களுமே சமநிலையுறவே தவிக்கிறது. அதுவே இப்பிரபஞ்ச பொதுவியல்பாகவும் இருக்கிறது.இச்சமனிலையை அடைவதே ஒவ்வொரு பொருளின் முடிவானநோக்கு. ஏனெனில் அது அங்கிருந்தே துவங்கியுள்ளது இந்த பயணத்தை. அதுவே அதன் மூல இருப்பு. சமநிலையான அவ்வியல்பை நோக்கி 'கலை'வதே அப்பொருளின் மூல நிலைக்கு ஆனந்தமாகவும், இயல்பாகவும், இன்பமாகவும் உள்ளது.
இப்பிரபஞ்சமே ஆனந்தமாகவும், இயல்பாகவும், இன்பமாகவுமே இருக்கிறது. பொருள் நிலை என்பது எல்லைக்குட்பட்ட 'தனி'த்தன்மை வாய்ந்தது. சமநிலை என்பது எல்லையில்லா தன்மையது. ஒவ்வொரு பொருளுக்கும் தன் மூல இருப்பை நோக்கி கலைந்து நகர்தலே ஆனந்தமானது.
இக்காரணத்தினாலேயே நாம் உருவாக்கி வைத்த பழங்கால கட்டிடங்கள், பழங்கால கோவில்கள் எல்லாம் சிதைந்து வருகிறது. (இதுவே பொருட்கள் தன் மூல இருப்பு நிலையை நோக்கி கலைந்து நகர்தல் என்பது) பொருள் என்கிற நிலை கலைந்து தன் மூல நிலைக்கு திரும்புதல் எனலாம். ஆக ஒரு பொருள் தன் மூல நிலை நோக்கி திரும்புதல் இன்பமானது, ஆனந்தமானது.
நமது உடல்களிலுள்ள பல கோடி உயிரிகளுமே ஒவ்வொரு தனித்தனி பொருட்கள் தான். உயிர் அற்ற பொருளுக்கும், உயிர் உள்ள பொருளுக்கும் உள்ள வேறுபாடு என்னவெனில் உயிர் அற்ற பொருள், இயற்பியல், வேதியியல் விளைவுகளின் விதிப்படி அவை நடந்து கொள்கின்றன. தமக்கென்று எந்த இச்சையும் இல்லாது கிடக்கின்றன. எந்த தடையுமின்றி தன் மூலநிலையை நோக்கி (தனது மூல இருப்பை நோக்கி) இயல்பாகவே கலைந்து நகர்ந்து விடும்.
ஆனால் ஒரு உயிருள்ள பொருள் அப்படி தன் மூல நிலையை நோக்கி, திரும்ப நகர்ந்து விடுவதில்லை. அப்படி அப்பொருள் தனது மூல நிலையை நோக்கி நகர்தலை தடுத்து நிறுத்தும் செயலுக்கே உயிர் எனப் 'பொருள்'படும் . ஒரு பொருள் தன் மூல நிலையை நோக்கி நகர்வதே தீவிர முடிவாக இருக்கும், அதுவே அதன் இயல்பும் கூட.
நமது உடலிலுள்ள பலகோடி உயிர் பொருட்களும் இதற்கு விதி விலக்கல்ல! - அப்படி தன் மூல நிலைக்கு அப்பொருள் நகர்வதை தடுக்கும் உயிர் அப்பொருளை மேலும் ஓர் உயர்நிலை பரிமாணத்திற்கு இட்டு செல்கிறது. அந்த பொருளில் உயிர் என செயல்படுவதே அறிவுதான்.நாம் உயிர் என்று சொல்வது அறிவைத்தான்.அந்த அறிவு பல காலம் பரிணாமமடைந்து இப்போது மனித உயிரியாக
பரிமாணப்பட்டிருக்கிறது.- அறிவு தன்னை அறியும் தேற்றமே பரிணாம முதிர்வு. அந்த அறிவின் உச்சநிலையே இதுதான். இனி இந்த மனித உயிரிகளுக்கு(செல்களுக்கு

) சுதந்திரம் வழங்க வேண்டும். இந்த உயிரான 'அறிவு' தன் பொருளின் தன்மையான தன் மூல நிலையை நோக்கி, தன்மூல இருப்பை நோக்கி, நகர்தலை துவங்க வேண்டும். அல்லது பொருளின் இயல்புக்கு(அனுமதிக்க வேண்டும்) ஆக அந்த மூல இருப்புக்குள் பிரவேசிக்க வேண்டும். இதுவே உயிரின் முடிவான நோக்கு.இதுவே ஜடப் பொருளுக்குள் அறிவு புகுந்ததின் நோக்கம்.

சும்மா இருப்பது. 9.7.10

மனித குரோமோசோம் ஒன்றை மட்டும் பிரித்து அதன் D N A - வை நீட்டி விரித்தால் அது 5 சென்டி மீட்டர் நீளமிருக்கும். 46 குரோமோசோம்களையும்(நமது உடலிலுள்ள ஒரு ஜீனுக்குள் உள்ள கருவில் உள்ள மூலப்பொருள்) சேர்த்து பிரித்து இணைத்தால் 2 மீட்டர் நீளமிருக்கும்.(ஒரு ஜீனுக்குள் இருக்கும் 'கரு'வான மூலப்பொருள் D N A - வின் நீளம் 2 மீட்டர்) மனித உடலிலுள்ள எல்லா செல்களிளிருந்தும் D N A - வையும் பிரித்து நீட்டினால் 31இங்கிருந்து சூரியனுக்கு 500 முறை போய் வரலாம். இயற்கை எத்தனை அற்புதமாக சிக்கனமாக அடுக்கி வைத்திருக்கிறது பாருங்கள் . அப்போ உங்கள் உடலில் உள்ள
ஜீன்களின் எண்ணிக்கை எவ்வளவு இருக்கும் நீங்களே யூகித்துக்கொள்ளுங்கள். ஒவ்வொரு ஜீனுமே தனித்தனி உயிரிதான். அவைகளுக்கு தனி உயிரும் தனி பண்பும், தனி எண்ணமும் உண்டு.

தினம் நீங்கள் காலையில் யோகா, தியானம் துவங்கும்பொழுது நீங்கள் பத்மாசனத்தில் அமரும்பொழுது , உங்களைப்போலவே உங்களுள் இருக்கும் கோடானு கோடி உயிரிகளையும் ஒரு ஒழுங்குக்கு கொண்டு வந்து அவைகளுக்கு பயிற்சி கொடுக்கும் விதமாக உங்கள் பயிற்சியை செய்து வாருங்கள். நீங்கள் அமர்ந்திருக்கிற மாதிரியே அவைகளையும் அமர சொல்லுங்கள். நீங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் அவைகளும் பின் பற்றி செய்யச்சொல்லுங்கள். நீங்கள் தினமும் தியானப்பயிற்சி செய்வது உங்களுக்காக அல்ல! உங்களுள் இருக்கும் உங்களின் கோடானு கோடி உயிரிகளையும் ஒரு ஒழுங்குக்கு கொண்டுவருவதற்காகவே.
இதை நீங்கள் நன்கு அறிந்து கொள்ளுங்கள். அவைகள் தனித்தனி எண்ணம் கொண்டவையாக இருக்கின்றன . அவைகளை ஒரே வித தன்மைக்கு நீங்கள் எடுத்து வர வேண்டியுள்ளது. (இதற்காகவே யோகா, தியானம்) அவைகள் வெவ்வேறு எண்ணம் கொண்டவைகளாக இருப்பதால்தான் உங்களுக்கு அவ்வப்போது பல்வேறு எண்ணங்கள் தோன்றியவண்ணம் உள்ளது.
அவைகள் அனைத்தையுமே ஒரே நோக்கத்துக்கு திருப்ப வேண்டியுள்ளது. அவைகள் அனைத்துக்கும் பொதுவான ஒரு விஷயம் 'சும்மா' இருத்தலே!.நாமாக ஒரே 'எண்ணத்துக்குள்' கொண்டுவர முயற்சித்தால் சிறிது நேரத்தில் அவையவைகளும் தன போக்கிற்கு தனித்தனியாக எண்ண துவங்கிவிடுகிறது. (அவைகளின் சுபாவம் அது. ஏனெனில் அவைகள் நீண்ட காலமாக அவைகள் அப்படிதான் - தனியாக - யோசித்து வந்திருக்கிறது.)
இப்போது நீங்கள் ஒரு ராணுவ அதிகாரியைப்போல நடந்து கொள்ள வேண்டியிருக்கிறது. அவையனைத்தையும் ஒரே குணமுள்ளதாக மாற்ற வேண்டியுள்ளது. அவைகளுக்கு இரண்டு தான் பழக்கமாக உள்ளது. ஒன்று ஏதாவது

யோசிப்பது. மற்றொன்று முடிந்தவரை சும்மா இருப்பது. அவகளுக்கு பழக்கமான ஒன்றான சும்மா இருப்பதையே அவை அனைத்தையும் ஒரே நடை முறைக்கு கொண்டுவர நாம் உபயோகிக்க வேண்டியுள்ளது.
நீங்கள் அவைகளுக்கு பயிற்சியளிக்குபொழுது ஒரே லயமாகாமல் - உங்களுக்கு இடை இடையே ஏதாவது எண்ணம் தோன்றினால், சில ஜீன்கள் இன்னும் உங்கள் கட்டுப்பாட்டுக்கு வரவில்லை என அர்த்தம். அவ்வளவே.
அப்படியில்லாமல் ஒரே லயமானால் - அனைத்துயிரும் சும்மா இருந்தால் - அப்போது நீங்கள் (உங்கள் மனம்) காணாது போயிருக்கும். ஏனெனில் அவையனைத்தும் ஒரே லயமாகி அறிய துவங்கிவிடும்.அங்கு ஒரு பூரணம் திகழும். முரண்பட்ட வேறுபாடுகள், பேதங்கள் விலகும்.

தன்னுணர்வு தகவமைப்பு (அக உறுதி) 13.7.10

காலையில் தியானம் செய்கையில் புருவ மத்தியில் ஒளி துலங்குகிறது. அக்கணம் உடலும் உணர்வும் ஒரே ஏக உணர்வாக இருக்கிறது. எங்கும் ஒளி, ஒளி மட்டுமே! அவ்வொளி உணர்வை தன்னுணர்வு தகவமைப்பாக உறுதி செய்தல் வேண்டும். இவ்வளவு காலம் இந்த உணர்வு நமக்கு பரிச்சயமில்லாது இருந்தது. இப்போது பரிச்சயப்பட்டிருக்கிறது.இத்தன்னுணர்வு தகவமைப்பை நாம் பழக்கப்படுத்திக்கொள்ளும் வண்ணம் மதியம் , மாலை நேரங்களில் அத்தன்னுனர்வு தகவமைப்பை ஞாபகப்படுத்தி பழகி வரல் வேண்டும். இத்தன்னுணர்வு தகவமைப்பு நமக்கு பழக்கப்பட வேண்டும்.இவ்வாறு அக உறுதி செய்து கொள்ளல் வேண்டும்.

அனுபவத்தாலறிவது. 14.7.10

நாம் அடிப்படையில் மூன்று வித தன்மையில் இருக்கிறோம்.1, ஜடம், 2, அறிவு, 3, இரண்டும் கலந்த (உடல், உயிர்).அறிவும் ஜடமும் இணைந்து உணர்வாகிறது. நாம் பெரும்பாலும் இந்த இரண்டும் கலந்த உயிர் தன்மையிலேயே 'உணர்ந்து' வாழ்ந்து வருகிறோம்.நம்மிடம்அறிவானது இந்த உயிர் தன்மையின் உணர்வு சார்ந்தே இது நாளும் செயல்பட்டு வருகிறது. இவ்வுணர்வையொட்டியே 'மனம்' எழுகிறது. அந்த மனமே வழிகாட்டியாகிறது. மனதின் கட்டமைப்பை உருவாக்கியதும், பராமரிப்பதும் உணர்வுதான். அறிவு இதனூடாக செயல்படுகிறது. அறிவு தனி நிலையது.
ஜடம் இப்பிரபஞ்சத்தில் உள்ள அனைத்து பொருட்களையும் மாதிரி தன்மூல சமநிலை நோக்கி 'கலைகிறது'.அறிவோ இந்த உயிரை செயல்படுத்தி தனது மூல சுத்த சுயத்தை அறிய தவிக்கிறது. இதனாலேயே பருவம் மற்றும் மூப்பு வருகிறது. இந்த தனி நிலையறிவை கவனித்தால் உரையிலிருந்து உருவிய வாளைப்போல (உடலை, உயிரையும் விட்டு தனித்தும் காணப்படுகிறது).
அப்போது உயிர் தனித்து வெறும் அறிவற்ற உணர்வு செயலாக மட்டும் இருக்கிறது. இந்த உணர்வு செயலில் எந்த எண்ணமும் கலப்பில்லை. காலில் தைத்த முள்ளை வெளியில் எடுத்தது போல தினவு நீங்கி சுகதன்மையை உணர்கிறது உயிர்.

மனிதகுலத்தின் அடிப்படை உண்மை : கௌதம புத்தர் 22,7,10

உடலை உண்டாக்கும் பஞ்ச பூதங்களை கலைத்தால்தான் பிறவி அறும். இல்லையேல் பிறவி தொடர்ந்து வந்து துக்கத்தை அளித்துக்கொண்டே இருக்கும். பஞ்ச பூதங்களை சேர்த்து வைக்கும் சக்தி, மனிதன் 'தனித்து' வாழ வேண்டும் என்று விரும்பும் ஆசையே.

ஆகவே ஆசையை அழித்து விட்டால் பஞ்சபூதங்கள் கலைந்துவிடும். மறுபிறவி ஏற்படாது .
நன்றி:- தினமணி, ஆன்மீக சிந்தனை,22-07-2010

நமது பாதுகாப்புணர்வு. 22.7.10

நாம் காரண , காரிய பிரபஞ்சத்தில் வாழ்கிறோம். ஒரு சிறு துரும்பு கூட காரணமின்றி அசைவதில்லை. அனைத்து நடப்புக்குமே அடிப்படையில் காரணம் இருக்கிறது. இங்கு பூமியில் நீங்கள் விரலை சொடுக்கினால் கூட அதன் பாதிப்பு சூரியனில் நிகழ்கிறது என்கிறது அறிவியல். ஒவ்வொரு 'இம்மி'யளவு அசைவுமே காரணத்துடனே நடக்கிறது. ஏதோ தன்னிச்சையான பிரபஞ்சமாக இருக்க முடியுமா இது? இந்த பிரபஞ்சத்துக்குள் உங்கள் வருகையும் இப்படியே. உங்களுக்குள் உங்கள் மனதின் வருகையும் இப்படியே. இந்த மனதுக்கு காரணம் என பின்னோக்கிப்பார்த்தால் ஒருசெல்(முதல்) உயிரிலிருந்து , ஏன்? இந்த பூமியில் முதன்முதலில் உயிர் துவங்கிய பொழுதே உங்கள் துவக்கமும், உங்கள் மனதின் துவக்கமும் சூல் கொண்டுவிட்டது. இன்று இருக்கும் உங்கள் மனதின் தகவமைப்பு , பல பிறவிகளாக பரிணாமமடைந்து,பரிணாமமடைந்து வந்திருக்கிறது. அது ஒரு செல் உயிரிலிருந்து இன்று எழுபது லட்சம் கோடி உயிரிகளாக (உயிரிகளின் தொகுப்பாக) பரிணாமமடைந்து வளர்ந்திருக்கிறது.
இவ்வளவு பிறவிகளில் அது (மனம்) கண்ட அனுபவம் தனித்து நின்று உயிர் வாழ முடியாது என்பதே. ஒரு குழுவாக இருந்தே தொடர்ந்து உயிர் காத்தல் அவசியம் என்பது அதன் அனுபவ சாரம். இதன் காரணமாகவே , ஒரு செல்லில் துவங்கிய 'உன்' துவக்கம் பல செல் உயிராக பல்கி பெருகி குழு, குழுவாக தொகுப்பு, தொகுப்பாக பரிணாமமடைந்து தொடந்து வந்திருக்கிறது.
அதனால்தான் மனிதன் தன்னை காத்துக்கொள்ள , குடும்பம், ஜாதி, இனம், மொழி, கட்சி, 34தேசியம் என குழுவாக சேர்த்துக்கொள்கிறான். அந்த குழுவில் தலைவனாகி விட்டால் தனக்கு உச்ச பட்ச பாதுகாப்பு கிடைக்குமென நினைக்கிறான். இந்த பாதுகாப்பு மனோபாவத்தால்தான் இவன் அடுத்தவனை அடக்கி ஆள துடிக்கறான். இந்த அடக்கி ஆளும் மனோபாவமே சமூகத்தில் இன்று மலிந்து கிடக்கிறது. மனிதன் குழு மனப்பான்மையிலேயே வளர்கிறான்,
இதன் விளைவே உலகை பலமுறை(அனைத்துயிரையும்) அழிக்கவல்ல அணு ஆயுதங்கள். பல நாடுகளில் அங்கங்கே தயார் நிலையில் நிறுத்தப்பட்டிருக்கின்றன.

சத்,சித், ஆனந்தம். 23,7,10

சத்,சித், ஆனந்தம். என்பன மூன்று பதங்கள். சத்தின் விளக்கம் (நான் இருக்கிறேன் என்ற உணர்ச்சி) எல்லோருக்கும் உண்டு .சித் விவேகிக்கு விளங்கும். ஆனந்தம் பூர்ண போதமுடையவனுக்குதான் விளங்கும். இம்மூன்றையும் உடையவனுக்கு அமிர்தமயமான ,அத்தியந்த , துக்க நிவர்த்தி என்று இதற்கு ஒரு மகான் பொருள் கூறினார்.
1,சத், என்பது நமது இருப்புணர்வு. மற்றும் அது மனவிவகாரமும் கூட. உலக மாந்தர் அனைவருமே இதை கையிலெடுத்துக்கொண்டு அலைகின்றனர். இதுவே கதி இதை விட்டால் வேறு மார்க்கம் கிடையாது என நினைக்கின்றனர். இதிலிருக்கும் உணர்ச்சியே வாழ்வு என கருதுகின்றனர். இதை

தாண்டி அவர்கள் பார்ப்பதே கிடையாது. இதனால் ஏற்பட்டதே இந்த சமூகம். உங்கள் சமூக வாழ்க்கை.
2,சித், என்பது-தியானத்தின்போது-நமக்குள் இருக்கும் எழுபது லட்சம் கோடி ஜீன்களின் விழிப்பு. உங்கள் உடலின் அனைத்து பாகங்களிலிருந்தும், அனைத்து இடங்களிலிருந்தும் எல்லா ஜீன்கள் விழிக்கின்றன. உடலின் முழு பாகமும் விழித்தவுடன் , மனம் உங்களை விட்டு விலகி விட்டதை அறிவீர்கள். 'சித்'தில் நீங்கள் முழு ஈடுபாட்டுடன் இருக்கும்பொழுது மனதை நீங்கள் தேடினாலும் கிடைக்காது, எழுபது லட்சம் கோடி ஜீன்களின் விழிப்பு (ஒளி) ஆரவாரத்தில், நிழலான மனம் கரைந்துபோயிருப்பதை காண்பீர்கள். சித் என்பது எழுபது லட்சம் கோடி ஜீன்களின் விழிப்பு.
3,ஆனந்தம் என்பது எழுபது லட்சம் கோடி ஜீன்களின் அடிப்படை உயிர் ஆதாரம் ஒன்றாக இணைவது. அது ஆனந்த தாண்டவம். இது மொழிகளின் அர்த்தங்களைஎல்லாம் தாண்டிய மாபெரும் அனுபவம்.

நியதி 29.7.10

இப்பிரபஞ்சம் காரண, காரியங்களால் இயங்குவது. ஒவ்வொரு செயலுக்கும் ஒரு காரணம் உண்டு. இதுவே இதன் நியதி. நமது மனமும் இப்படியே. இதுவும் காரண, காரியங்களால் இயங்குவது. ஒவ்வொரு செயலுக்கும் ஒரு காரணம் உண்டு. இதுவே இதன் நியதி. இவ்விரண்டுக்குமே நியதி ஒன்றுதான். இப்பிரபஞ்சத்தின் மூல ஆதார நிலையும்,இம்மனத்தின் மூல ஆதார நிலையும் ஒன்றுதான். அங்கு காரண, காரியங்களுக்கு இடமில்லை. அது கூறுபடாத ஓர்மை.

கையகல வாழ்க்கை. 19.8.10

நான் என்பது ஒரு கருத்துரு மட்டுமே. அது ஒரு அபிப்ராயம். அது ஒரு அறியாமை. அது மனதினில் நடக்கும் 'பாதுகாப்பை உறுதி செய்யும் ஒரு செயல்பாடு' மட்டுமே! மற்றும் நான் என்பது 'ஒரு' உயிர் மட்டுமே அல்ல! நமக்குள் எழுபது லட்சம் கோடி 'தனி' உயிர்கள் இருக்கிறது. அவைகளை ஜீன் என்று அழைக்கிறோம். நான் என்பது ஓர் உயிர் 37தொகுப்பு. மனம் என்பது எழுபது லட்சம் கோடி ஜீன்களின் ஒரு பொது அமைப்பு. அந்த எழுபது லட்சம் கோடி ஜீன்களும் அதுவது ஜீவிக்கும் இடத்தைப்பொறுத்து அதனதன் பிரச்னைகள் பலவாறு வேறு வேறாக இருக்கிறது. அதன் சிந்தனையும் தேவையும் வேறு வேறாக இருக்கிறது. இதனாலேயே உங்கள் மனம் சதா ஏதாவது ஒன்றில் சஞ்சரித்துக்கொண்டே இருக்கிறது. ஒவ்வொரு ஜீனின் தவிப்பையும், உணர்வையும் உங்கள் மூளை வாசித்துக்கொண்டே இருக்கிறது.

நமது மனம் எவ்விதம் செயல்படுகிறது என்பதை கவனிப்போம். மனம் மூளையை கருவியாகக்கொண்டு செயல் புரிகிறது. அந்த மூளையோ உடலிலுள்ள ஜீன்களோடு மட்டும் (ஜீன்களின் உணர்வுகளோடு) நேரிடையான தொடர்பு கொண்டிருக்கிறது. இந்த ஜீன்களின் உணர்வுகள்தான் உங்கள் ஒட்டுமொத்த வாழ்வின் சாரமும் ஆகும். உங்கள் புகழ், உங்கள் கௌரவம் , உங்கள் அந்தஸ்து இன்னபிறவும் இந்த வெறும் உணர்வுமட்டுமேயாகும்.உங்கள் வாழ்வுக்கு அர்த்தம் இவ்வளவு மட்டுமே! இதற்கு வெளியில் நடப்பதெல்லாம்(நீங்கள் எண்ணுவது) வெறும் பொய் மட்டுமே!

உங்கள் வாழ்க்கையோ கேவலம் இப்படி கையளவேயாகி சுருங்கி கிடக்கிறது. உங்கள் தேடலோ பல பிறவிகளாக அகண்டு விரிந்து எல்லைகளற்று கிடக்கிறது. எதை தேடி உங்கள் வாழ்வு பல பிறவிகளை தாண்டி வந்திருக்கிறது? இன்னும் திருப்தியுறாத ஒன்று என்ன? எது திருப்தியுராததால் பல பிறவிகள் கடந்து வந்தீர்கள்? இந்த கையகல உணர்வுதான்.
ஆமாம் இந்த கையகல உணர்வு திருப்தியுறாமல் தான் பல பிறவிகள் கடந்தீர்கள். இந்த பிறவி,மனித பிறவி 'இந்த அறிவை'அறியும் பிறவி.

குறைவான வாழ்வும் நிறைவான வாழ்வும். 22.8.10

பல பிறவிகள் தொடர்ந்தும் இன்னும் குறை தீரவில்லை நமக்கு. இப்போதும் நடைமுறை வாழ்விலும் தேடல் தொடர்கிறது. ஒரு உதாரணம். ஏன் நம்மை போன்ற சாமான்யரை கூட விடுங்கள். திருமதி சோனியா காந்தி போன்ற சர்வ அதிகாரம் கொண்ட நபர்களுக்கு கூட இன்னும் குறையை தீர்த்துக்கொள்ள முடியவில்லை. (விஷயம் என்னவென்றால், நம்முடைய குறையை நாம் தவறாக அவதானிக்கிறோம் என்பதே)
எவ்வளவு பொருளாதாரம், எவ்வளவு அதிகாரம் இருந்தாலும் குறை தீர்வதில்லை. இந்த வாழ்வு குறைவான வாழ்வுதான். நீங்கள் எவ்வளவு போராடினாலும் , எவ்வளவு 38உழைத்தாலும், ஏன் எவ்வளவுதான் பிறரை ஏமாற்றினாலும் இந்த குறை தீரப்போவதில்லை. இந்த வாழ்வு , நீங்கள் வாழ்வாங்கு வாழ்ந்தாலும் இன்னும் எதையோ தேடிக்கொண்டுதான் இருக்க வைக்கிறது. உங்களுக்கு தேவைகள் இருக்கும்வரை அது குறைவான வாழ்வுதான்.

பல பிறவிகளாக தொடர்ந்து வரும் (இன்னும் தீராத) குறை எது?

இதை நாம் அறிய முயற்சிப்பதில்லை. இதை அறிய முயற்சித்து அறிந்தவர்கள் அவர்களின் குறையை தீர்த்து நிறைவான வாழ்வை வாழ்கிறார்கள். இந்த வாழ்வை குறைவாகவே வாழ்வதா? நிறைவாக வாழ்வதா? நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்.

த்யானம் என்பது 25.8.10

ஏற்கனவே கூறியபடி 'ஜடத்துக்குள் அறிவு நுழைந்ததாலேயே உயிர் உருவானது' என பார்த்தோம். நம்மிடம் மூன்று வித தன்மையுய்ள்ளது.1,ஜடம், 2,(ஜடமும் அறிவும் இணைந்ததாலேயான) உயிர் இயக்கம், 3,தூய அறிவு நிலையான ' சாட்சித்தன்மை'. ஜடமும் அறிவும் இணைவதாலேயே உயிர் நடக்கிறது. உயிர் இயக்கத்திலிருந்தே 'மனம்' எழுகிறது. இந்த மூன்று தன்மையையும் பிரித்து பார்த்து , (பொருட்களான) ஜடத்தை, ஜட (அசைவற்ற) நிலையிலும், உயிரை (மனதை) ஒய்வு நிலையிலும், அறிவை வெறும் சாட்சித்தன்மையிலும், விடுவதே த்யானம் என்பது.

ஒரு கல்லைப்போல ஜடமான உடலை அசைவற்று நிறுத்தினால், உயிர் இயக்கம் ஒரு மேலான நிலையான அறிவு நிலைக்கு உயரும்.காரணம் நமது சாட்சித்தன்மைக்கு (கவனத்திற்கு) சிறிது உயிரோட்டம் தேவைப்படுகிறது. அந்த சிறு உயிரோட்டத்தில் மட்டும் நாம் நிற்கும்போது , இந்த பிரபஞ்சத்தின் மூல இருப்பு நிலையும், நமது இருப்பு நிலையும் ஒன்றாக இணைகிறது. இணைந்து லயமடைவதே த்யானம் என்பது.

த்யானத்தின் ஒரு அடிப்படையான விஷயம். 6.9.10

39தினசரி காலையில் தியானிப்பது யார்? த்யானிக்க அமரப்போவது வரை என்னவோ இந்த 'சுந்தரம்' தான். த்யானம் கூடிவருகையில் கவனித்தால் தான் தெரிகிறது த்யானிப்பது சுந்தரமல்ல! இந்த சுந்தரத்திற்க்குள் இருக்கும் எழுபது லட்சம் கோடி ஜீன்கள் என்பது. இந்த சுந்தரம் என்பது அந்த எழுபது லட்சம் கோடி ஜீன்களின் தொகுப்பான மன அமைப்பு. அந்த முதல்உயிரி அமீபாவிலிருந்து பயணித்து இன்றுவரை தொடர்ந்து சுய தேடலில் இருப்பது இந்த ஜீன்கள் தான்.

பல்லாயிரமான பிறவிகளும் இந்த ஜீன்களுக்குதான் இந்த சுந்தரத்துக்கல்ல!

இந்த பிறவியில் இந்த ஜீன்களின் தொகுப்பான இந்த மனதின் பெயரே சுந்தரம். நீங்கள் பல பிறவிகள் எடுத்து விட்டீர்கள் என்றால் அது உங்களுள் இருக்கும் ஜீன்களுக்கே பொருந்தும்.

த்யானத்திலும் த்யானிப்பது ஜீன்களாக இருந்தால்தான் அது த்யானம். அது சுந்தரமாக இருந்தால் த்யானமே கூடி வராது. ஏனெனில் சுந்தரம் ஒரு மன அமைப்பு. மனதை கடந்தால்தான் த்யானம் கூடும். மன அமைப்பை கடந்து பார்த்ததால் அங்கிருப்பது இந்த ஜீன்களே!.

இந்த ஜீன்களின் சுய தேடலே ' அசைவற்ற, சாட்சித்தன்மையான அந்த ஒளிப்பொருந்திய சுத்த அறிவேயாகும்'. அது எங்கும் நீக்கமற நிறைந்து பூரணமாக இருப்பது.

அதுவே பூர்ணம்.

உணர்வு பற்றிய அடிப்படையான விஷயம். 15.9.10

நமது உணர்வை நாம் ஒரு அசைவற்ற நிலையிலிருந்து அகண்டு விரித்து உணர முடியும். அசைவற்ற நிலைதான் நமது அடிப்படை நிலை. (இருக்கிறது என்கிற அளவேயான உணர்வு நிலை) அடுத்து இருக்கிறோம் எனும் விகல்ப நிலை. (உணர்வும், உணர்வோனும் எனும் விகல்ப நிலை) இது எப்படி சாத்தியப்படுகிறது எனில் - நமக்கு நேரிடை உணர்வு மட்டுமன்றி , நினைவு சக்தியும் இருக்கிறது. அந்த ஞாபக சக்தி மூலம் ஏற்கனவே நமக்கு கிடைத்த உணர்வை ஞாபகப்படுத்தி மீண்டும் உணர்ந்து பார்க்க முடிகிறது.
இது ஒரு பொய் தோற்றம்.
இதை நமது மனமே செய்வதால், -இந்த உணர்வு உண்மையா? பொய்யா? என்பதையும் தீர்மானிக்கும் சக்தியாக அந்த மனமே இருப்பதால் ,- இந்த (பொய்) உணர்வும் நமக்கு மெய்யெனவே தோன்றுகிறது.
அடுத்து நான் இருக்கிறேன் எனும் மன உணர்வு (இப்போது நேரிடை உணர்விலிருந்து சற்றே விலகி -மனமே முழு ஆளுமையையும் எடுத்துக்கொள்கிற நிலை) அடுத்து நான் இருக்கிறேன், இந்த உலகு இருக்கிறது எனும் , தன்னிலை, முன்னிலை, படர்க்கை என விரிகிறது இந்த உணர்வு நிலை.
இந்த படர்க்கை நிலையில் உணர்வை அனுசரிப்பவர்களால் தனக்கு வெளியே ஏதாவது தனக்கு ஒவ்வாத நிகழ்வு நடக்கும்போது, அதை ஏற்றுக்கொள்ள முடியாமல் உடனே எரிச்சலடைகின்றனர். இதையே கனவு, கற்பனை என இன்னும் விரிவாக அனுபவிக்கும் மகானுபவர்களும் உண்டு.

ஆனால் நமது அடிப்படை உணர்வான (அனைத்தின் அடிப்படையான உணர்வுமான) 'இருக்கிறது' என்கிற உணர்வே எப்போதும் இருந்தது, இப்போதும் இருக்கிறது, எப்போதும் இருக்கும். அது அசைவற்ற நிலை. அது முழு நிறைவானது. அனைத்தையும் உள்ளடக்கியது. பரிபூரணமானது. அதற்கு உள்ளும், அப்பாலும் எதுவுமில்லை. இருக்கிறது என்பதைத்தவிர வேறெதுவுமில்லை. இந்த உணர்வு எல்லா மனிதருக்கும் உள்ளதே! இதை அறிந்துணர்வதே ஆன்மிகம் என்பது.
இதில் எந்த மதமோ, எந்த கடவுளோ, எந்த புனிதமோ, எந்த அவதாரமோ, எந்த ரட்சகமோ இல்லை, இல்லை, இல்லை. (இவையெல்லாம் ஒரு வித்தியாசமான பொய். அவ்வளவே) எனவே மனித குலத்தோரே அறிவால் அறிந்து எல்லா பொய்களையும் கடந்து உண்மையை அறிந்து வாழ்வீராக!.

நமது சாராம்சம். 30.9.10

நமது வாழ்வின் ஒட்டுமொத்த சாராம்சமும் நாம் எவ்வளவு அறிந்திருக்கிறோம், நாம் எவ்வளவு உணர்ந்திருக்கிறோம் என்பது மட்டுமே! (அது எதற்காக உதவுகிறது ?) அறிவது , உணர்வது இந்த இரண்டுக்கு மேல் எந்தவித சாந்நித்தியமும் கிடையாது இந்த வாழ்க்கையில். உங்களுக்கு இயற்பியல் தெரியலாம், வேதியல் தெரியலாம், கணக்கியல் தெரியலாம், சமூகவியல் தெரியலாம், மரபியல் தெரியலாம், மானிடவியல் தெரியலாம் இவையாவும் நமது அறிவால் அறிவது.

அதேபோல உணர்வு விஷயத்திலும் நீங்கள் எந்தெந்த விதமான, பலவித உணர்வுகளை எல்லாம் உணர்ந்திருக்கலாம். எல்லா இயல் அறிவுகளுமே உங்களுடைய வாழ்க்கைக்காக நீங்கள் தேடி அறிந்தது.

தியானத்தில் சுத்தமான தன்னறிவில் முழு மனத்தையும் அசைவின்றி நிலை நிற்க வைத்தால், உங்களின் பலவித அறிவு ஏகமாகி முற்றறிவாக திகழும். இனி உங்களுக்கு தெரியாதது எதுவுமில்லைஇந்த உலகில். இனி, நீங்கள் புதிதாக அறிய எதுவுமில்லை.

அதேபோலத்தான் உணர்வு விஷயமும். தியானத்தில் அமர்ந்து உங்களின் உணர்வனைத்தையும் திரட்டி மேல்நோக்கி புருவ மத்தியை நோக்கி செலுத்தி அங்கேயே அசைவற்று நின்றால் , உங்களின் பல்வேறுவித முரணான உணர்வுகள் ஒன்றுகூடி ஒரே ஏகவுணர்வாக திகழும். அவ்வுணர்வு முற்றுணர்வாகும். அதுவே பரிபூரண நிலை. அங்கிங்கெனாதபடி எங்கும் ஒருணர்வான கைவல்யம் அதுவே!

இப்போது உங்களுக்கு எந்த பேதமுமில்லை. நீங்கள் வேறு பிரபஞ்சம் வேறில்லை.ஆதிசங்கரர் சொன்ன 'அத்வைத நிலை' இதுவே!

இதுவரை நம்மில் இந்த மின் சக்தி அறிவாகவும், காந்த சக்தி உணர்வாகவும் பிரிந்து செயல்பட்டு வந்ததை அறிவீர்கள். தியானத்தில் உங்களுக்கு கைவல்ய நிலை சித்திக்கும்போது எலக்ட்ரிக் வெல்டிங் செய்யும்போது கவனித்து பாருங்கள் எலக்ட்ரிக் 'லாடை' பற்றவைக்கும் இரும்பின் மீது வைக்கும்பொழுது 'பட்டென' ஒரு சப்தம் வந்து அந்த லாடும், பற்றவைக்கும் இரும்பும் ஒட்டிக்கொள்ளும்.

அதேபோல நம் தியானத்தின் போதும் புருவ மத்தியில் நமது மின் சக்தியும்,காந்த 43சக்தியும்(அறிவும், உணர்வும்)இதுவரை தனி, தனியாக இருந்துவந்தது இப்போது ஒன்றாக கலந்து 'பட்டென' தெறித்து விழும். இனி உங்கள் உணர்வும் அறிவும் பிரிந்து செயல்படாது, ஒன்றாகி செயல் படும்.

ஒரு மகானின் திருஷ்டிக்கும், நம்மைப்போன்ற சாதாரண மனிதரின் திருஷ்டிக்கும் உள்ள வேறுபாடு இதுதான். நமக்கு உலகமாக விரிந்து காணப்படும் இந்த 'பொருளான' உலகு , மகான்களுக்கு இந்த உலகின் அடிப்படை வஸ்துவான மின்காந்த தளமாகவே அறியப்படும்.

அறிவு, உணர்வு, சாட்சித்தன்மை. 6.10.10

மனிதன் எத்தகையவன் என நாம் ஆராய்ந்து பார்த்ததால், மனிதன் மூன்று வகை தன்மையுடையவனாக இருப்பது தெரிய வருகிறது. ஒன்று : மனம், இரண்டு : உணர்வு , மூன்று : சாட்சித்தன்மை. இப்போது மனம் செயல்படும் விதம் பற்றி பார்ப்போம். மனிதன் மனதைக்கொண்டு அனைத்து விஷயங்களையும் அறிந்து கொள்கிறான். அறிவாலே தனக்கு வெளியில், தன்னை சுற்றியும் நடக்கும் விஷயங்களையும் அறிந்து கொள்கிறான். தனக்குள் நடக்கும் விஷயங்களையும் அறிந்து கொள்கிறான். அறிவாலே புதிதாக யோசிக்கவும் செய்கிறான். அறிவாலே கற்பனை செய்யவும் செய்கிறான். மனதாலே நல்லது எது, கேட்டது எது எனவும் கண்டு கொள்கிறான்.முடிவும் எடுக்கிறான். கூர்ந்த மனதைக்கொண்டு மற்றவர்கள் அறியாத ஒன்றைக்கூட இவன் அறிந்த சொல்கிறான். தனது நுட்பமான மனதாலேஎல்லாவித கலைகளிலும் பரிணமிக்கிறான். நுண்ணறிவால் தொடர்ந்து ஒன்றையே ஆராய்ந்து விஞ்ஞானியாகிறான். மனம் தான் இவனுக்கு வாழ்க்கையை அமைத்து தருகிறது. இவன் எந்த வழியில் செல்லவேண்டுமென சொல்கிறது.இதனுடைய சிறப்புத்தன்மை என்னவெனில் இதன் நினைவகத்தன்மை. தன்னை பாதித்த விஷயங்களை தனது நினைவில் வைத்துக்கொள்கிறது. தனக்கு எது நல்லது அல்லது எது கேட்டது என அது ஆராயும்பொழுது அது தனது நினைவாக தொகுப்பிலிருந்தே விஷயங்களை எடுத்து அலசி ஆராய்கிறது. இது எப்போதும் எதையும் எதிர்கொள்ளும் தயார் நிலையிலேயே இருக்கிறது. இந்த உயிரைப்பாதுகாப்பதில் எப்போதுமே ஜாக்கிரதையாக இருக்கிறது. எதையுமே தன்னை சார்ந்தே நல்லதுகெட்டது என முடிவு எடுக்கிறது. (தன்னலத்தையே குறிக்கோளாக கொண்டு செயல் புரிகிறது.) இது அனைத்தையும் அறிந்து கொள்ளும் அறிவாகவே இருக்கிறது.

அடுத்து உணர்வைப்பற்றி கவனிப்போம் . உணர்வு எப்போதும் நம் உடலை சார்ந்தே இருப்பது அறியவருகிறது. தனது உடலுக்கு வெளியில் நடக்கும் விஷயங்களை அது உணர்வதாக 44தெரியவில்லை. தவிர அறிவைப்போல நினைவகத்தன்மையோ, வெவ்வேறான உணர்வுகளை சேமித்து வைத்தாலோ இதனிடம் இல்லை. இது இப்போது இக்கணத்தில் மட்டுமே உணரப்படுவது.

உணர்வுக்கு இறந்த காலம், நிகழ்காலம், வருங்காலம் என முக்காலம் கிடையாது .

உணர்வுக்கு இக்கணம், இக்கணம், இக்கணம் மட்டுமே. எந்த உணர்வாக இருந்தாலும் இதனால் ஒரு கண நேரம் மட்டுமே உணர முடியும். தவிர உணர்வுக்கு பேதம் தெரியாது. உணர்வில் பேதத்தை அறிவதெல்லாம் அறிவுதான். உனது உடலில் இப்போது நடக்கும் உணர்வை உனது மனதால் நீ அறியாமல் இருந்தால் - உன் உணர்வுக்கு அது 'எப்போதும் உணர்கிற மாதிரி இப்போதும் இது ஒரு உணர்வு' என்கிறதாகவே இருக்கும்.

உணர்வான 'தனக்கு' உணர்வு பேதமில்லை, என்பதையும் உணர்வு உணர்வதில்லை. இந்த உணர்வு தளத்தை தனது மேடையாக்கி எல்லாவித பிரசங்கமும் செய்து

கொள்வது உங்கள் மனமேதான். உங்கள் உணர்வு ஒரு அப்பிராணி. எல்லா கில்லாடிதனமும் உங்கள் மனதிடமே இருக்கிறது. சகோதர சகோதரிகளே இந்த நிலைமை உங்களுக்கு மட்டும்தான் என்றில்லை. அனைத்து உயிர்களின் நிலைமையும் இதுதான்.

மூன்றாவதான பேதமற்ற அந்த சாட்சித்தன்மையை பார்ப்போம். இந்த சாட்சித்தன்மைதான் இந்து மதம் சொன்ன பிரம்மம் , புத்தபிரான் சொன்ன சூன்யம், முகமது சொன்ன அல்லா,ஆதிசங்கரர் சொன்ன அத்வைதம்.

இனி,இவர்களைப்போல உங்கள் கண்டுபிடிப்பை நீங்கள் உலகுக்கு சொல்லுங்கள். இந்த சாட்சித்தன்மையே உங்களிலும் இருக்கிறது, அனைத்துயிரிலும் இருக்கிறது, எல்லாமுமாக இருப்பதுவும் இந்த சாட்சித்தன்மையே!

உங்களுடைய அறிவுக்கு அது சாட்சித்தன்மை. மற்றபடி அது 'பூரணம்'.

சரி இந்த மூவித தன்மை நமக்கு வாய்த்த காரணமென்ன? நுண்ணுணர்வால் ஆராய்ந்தோமானால் தெரியவரும். அணுவின் முக்குணம் நிலைமின் ஆற்றல், நேர்மின் ஆற்றல், எதிர் மின் ஆற்றல் என. நமது உயிரிலும், உடலிலும் இவைகள் செயல்படும் விதமே இந்த மூவித ஆற்றல்கல்தான்.

நிலைமின் ஆற்றல் நமது சாட்சித்தன்மை.

நேர்மின் ஆற்றல் நமது உணர்வு நிலை.

எதிர்மின் ஆற்றல் நமது அறிவு நிலை.

அணுக்கள் துகள்களால் ஆனது.

எலெக்ட்ரான் துகள் : எதிர் மின்னூட்டம் கொண்டவை.
புரோட்டான் துகள் : நேர் மின்னூட்டம் கொண்டவை.
நியூட்ரான் துகள் : மின் சுமை அற்றவை. (நிலை மின்)

மின் புலத்தாலும், காந்தப்புலத்தாலும் பாதிப்படையும் துகள்கள்,
எலெக்ட்ரான் துகள்கள்.(பீட்டா துகள்கள்-கதிர்)
புரோட்டான் துகள்கள்.(ஆல்பா துகள்-கதிர்)

மின் புலத்தாலும், காந்தப்புலத்தாலும் பாதிப்படையாத துகள்கள்(காமா துகள்கள்-கதிர்) நியூட்ரான் துகள்.

ஒரு அணுவின் 'தன்னுணர்வும்' இத்தகையதாகவே இருக்கும். நிலை மின்னை சார்ந்தே நேர்மின் இருக்கிறது. நேர் மின்னை தொடர்பு கொண்டே எதிர்மின் இயங்குகிறது. ஒரு அணுவின் அடிப்படை தன்மை எதுவோ அதுவே மனித உயிரின் தன்மையுமாகும்.

நமது அறிவு வெளியுலகையும் காண்கிறது தொடர்பு கொள்கிறது. ஆனால் அதேசமயம் நமது உணர்வை விட்டு விலகுவது கிடையாது. அறிவும் உணர்வும் இணைந்தே செயல்

புரிகிறது. உணர்வு சமநிலைக்காக அறிவு கனவு காண்கிறது. உணர்வு சாட்சித்தன்மையை சார்ந்தும் அதே சமயம் அறிவோடு தொடர்பு கொண்டும் இருக்கிறது. அறிவு காட்சித்தன்மையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கிறது. ஒளி, நிழல், இருள் எனும் தெளிவு, குழப்பம், மடமை இந்த 46மூன்றுக்குள் எல்லாவித காட்சிகளும் அடங்கிவிடுகிறது. உணர்வு சப்த தன்மையுடம் நெருங்கிய தொடர்புடன் இருக்கிறது. சாந்தம், பதற்றம், தவிப்பு என இது இருக்கிறது.

உணர்வுலகம். 6.10.10

ஆளரவமற்ற ஒரு இடத்தை தேர்ந்தெடுத்து அமர்ந்து கொள்ளுங்கள். எந்தவித இரைச்சலும் இல்லாத இடமாக இருக்கட்டும். ஒரு மணி நேரம் கண்களை மூடி உங்களுக்குள் நடக்கும் உணர்வோட்டத்தை மட்டும் கவனியுங்கள். நடுக்கடலில் அலைகள் எழுந்து, எழுந்து விழுவது போல உங்கள் உணர்வில் சிறு ஏற்ற, இறக்கம் மட்டுமே காண முடியும். பின்பு அதில் ஒரு லயம் ஏற்படும். உணர்வின் அடிப்படைத்தன்மையே இதுதான். தொடர்ந்து கவனித்து வாருங்கள். முக்கியமான ஒரு விஷயம், இதை அறிவால் அறியக்கூடாது. உங்கள் உணர்வாலேயே உணருங்கள். உங்களுணர்வு நகர்தலை உங்கள் உணர்வாலேயே உணருங்கள். இப்போது காண்பீர்கள் உங்கள் மனம் அமைதியடைதிருப்பதை. ஆச்சரியமாகத்தான் இருக்கும் இது.

இந்த உணர்வுலகு ஒரு இசைக்கருவி மாதிரி. இயல்பாக இதில் கேட்பது அதன் சுருதி லயம் மட்டுமே! உங்கள் மனம் அதை மீட்டுவதாலேயே அதில் பல் வேறு ராகங்களை ஏற்படுத்துகிறது. எந்த வித குற்றம் குறையும் இல்லாதது உங்கள்உணர்வுலகு. எவர் ஒருவரால் இதில் தொடர்ந்து சுருதி லயத்தை மட்டுமே கேட்க முடிகிறதோ (மீட்ட முடிகிறதோ) அவர் எளிதில் மனதை கடக்கும் உபாயத்தை அறிகிறார்.

தொகுப்புணர்வு. 8.10.10

நமது தியானத்தின் போது ஐம்புல உணர்வு,அறிவு ஓட்டத்தையும் , மனதின் அலைச்சலையும் படிப்படியாக குறைத்து அவைகளை முழுமையாக ஒடுங்க வைக்க ஒரு யோசனை.

அறிவு 'ஒளியால்' உண்டானது. மனம் ஒரு பூரண ஒளியை தரிசித்தால் தன் கிலேசம் மறந்து அது பூரண தெளிவை அடையும். அந்த பூரண ஒளி நமது புருவ மத்தியில் தோன்றுவதாகும். இந்த ஒளியை தோற்றுவிக்க நாம் நமது சுவாசத்தை சரியாக்க வேண்டும்.

நல்ல மூச்சு வாங்குகிற அளவுக்கு ஒரு உடல் பயிற்சிக்குப்பின் உடல் ஓய்வுக்காக ஒரு சீரான சுவாச ஓட்டம் அங்கு நிகழும். அப்போது செய்யப்படும் தியானத்தில் நமது கண்ணின் கரு 47விழிகளை அசையாமல் மேல் நோக்கி செருகி வைத்துக்கொள்ளல் வேண்டும்.

நம்மைப்பொருத்தவரை இப்போது அந்த கண்களில் எந்த வித ஸ்மரனையும் கிடையாது. ஒரு இறந்து போன மனிதனின் சவத்தில் உள்ள கண்ணைப்போல அது செயலற்று கிடக்க வேண்டும். இந்த கண்கள் இரண்டையும் இப்படி வைக்க காரணம், நமது ஐம்புலன்களின் செயல்களையும் செயல்படாது நிறுத்தி வைக்கும் சக்தி அதனிடம் உண்டு.

கருவிழிகளின் ஒரு சிறு அசைவுக்கூட மனத்தை எழுப்பி ஓட விட்டுவிடும்.

இப்போது மூச்சு சீராகி, சீராகி உங்கள் சுவாசத்தை உங்கள் வலது நாசியும், உங்களது இடது நாசியும் சந்திக்கும் இடத்தில் (புருவ மத்தியில்) இடது நாசிக்காற்றும், வலது நாசிக்கற்றும் சந்திக்கும் அதே இடத்தில் சலனமற்று மிகச்சிறு அசைவாக மட்டும் நிறுத்தினால் அங்கு நிலவும் பிராணன் ஒளியாக பிரகாசிக்கும். இதுவே பூரண ஒளி.

அந்த ஒளியை உங்கள் அறிவால் அல்ல, உங்கள் உணர்வால் மட்டும் அதை உணர முற்படுங்கள்.

உங்கள் உணர்வு என்பதே உங்கள் உடலிலுள்ள அனைத்து ஜீன்கள் உணரும் உணர்ச்சியாகும்.
உணர்வை அவைகளே உணருகின்றன. உங்கள் உடலிலுள்ள ஜீன்களின் மொத்த எண்ணிக்கை தெரியுமா? எத்தனை வித செல்கள் இருக்கின்றன தெரியுமா?

(1, How many cells are in the human body?
Sources give figures that vary from 50 to 75 trillion cells.
2, How many different types of cells are there in human body?
There are about 210 types of human cells.)

(மேற்கத்திய எண்முறையில் டிரில்லியன் என்பது ஓராயிரம் பில்லியனைக் (1000 X 1000 X 1000 X 1000)குறிக்கும். ஒரு டிரில்லியன், 1,000,000,000,000 என எழுதப்படுகிறது. ஒன்றின் பின் 12 சுழிகள்)

(உங்களை ஒரு தனியனாக அறிவது உங்கள் மனம், ஆனால் நீங்கள் தொகுப்பாக இருப்பதே உண்மை)

உங்கள் உணர்வையே நீங்கள் ஒரு தனியனாக உணர்ந்தால் அங்கு மனமே அதை அறிகிறது என்பதை தெரிந்து கொள்ளுங்கள் .

உங்கள் உணர்வை நீங்கள் தொகுப்பாக உணர்வதே உண்மையுணர்வு.

அனைத்து ஜீன்களையும் தட்டி எழுப்பி புருவ மத்தியை நோக்கி (மேல்நோக்கி) அந்த புருவ மத்தியில் சுடரும் ஜோதியை உணருங்கள்.

உங்கள் உணர்வு தொகுப்பால் (ஒரு உணர்வு அல்ல) 'ஏக உணர்வாக' அந்த பூரண ஒளியை உணர உங்கள் ஜீன்கள் அனைத்தும் சூரியனைக்கண்ட சூரிய காந்தி மலர்களைப்போல மலர்ந்து அந்த சூரியனோடு இணைப்பை ஏற்படுத்திக்கொள்ளும்.

நீங்கள் ஒரு தனி மலரல்ல! மலர் தோட்டம். அங்கு உங்கள் மலர்களுக்கும் அந்த சூரியனுக்கும் இடையில் வேறு எதுவுமேயில்லை.

ஒரு தனியனை பொதுவாக பிரிப்பதே ஆன்மீக சாதனை என்பதையும் அறியுங்கள்.

தனியனாக அறிவது மனம். ஏகமாக,முற்றுணர்வாக உணர்வது தொகுப்புணர்வு.

தன்னையறிதல் 7.1.11

தன்னையறிதல் என்பது - தன்னை- இது என்ன? இது எப்படி செயல்படுகிறது? இந்த 'நான்' என்பது யார்? என்னை 'நான்' என்று எவ்விதம் அறிந்திருக்கிறேன்? இதன் வாழ்வுக்கு என்ன அர்த்தம்? இந்த 'நான்' எப்போது துவங்கியது? இது மாதிரி இன்னபிற கேள்விகளும் உங்களுக்கு உதித்தால்! - இந்த தன்னையறிதலைப்பற்றி கொஞ்சம் கவனிக்கலாம்.

நமது வாழ்வு அகப்பரிமாணம், புறப்பரிமாணம் என நமது கவனக்குறைவால் இருவித பரிணாமமுடையதாக பிரிந்து கிடக்கிறது. வாழ்வும் இப்போது அக வாழ்வு, புறவாழ்வு என இரண்டாக பிரிந்து கிடக்கிறது. நமது புற வாழ்வை நமது மனம் பராமரித்து வருகிறது. நமது அக வாழ்வை நமது உணர்வு பராமரித்து வருகிறது. புறவாழ்வை மனம் பராமரித்து வந்தாலும், அதன் சாராம்சத்தை நமது உணர்வே எடுத்துக்கொண்டு வாழ்கிறது. ஆக! புறவாழ்வின் பயனும் நமது அகவாழ்விலேயே உணரப்பட்டு, வாழ்வின் மகத்துவமே அகவாழ்விலேதான் அடங்கிக்கிடக்கிறது என்பது கண்கூடு.

ஆக! ஒரு மனிதன் தன்னையறிய விரும்பினால் தனது உணர்வுகளை அறிதல் வேண்டும். உடம்பு எனும் ஸ்தூல செயல்பாட்டினை நிறுத்தி, ஐம்புலன்களின் செயல்பாடுகளை நிறுத்தி, மனதின் காட்சி பிம்பங்கள், மனதின் மொழி பிம்பங்களையும் , { மனதையே) நிறுத்தி- படர்ந்து விரிந்து முரண்பட்டு அலையும் உணர்வையும் ஒரு பூஜ்யத்துக்கு கொண்டுவந்து,

உணர்வை ஒரு புள்ளியில் நிறுத்த (எல்லா விருத்திகளும் அடங்கி) உணர்வு ஒரே ஏக உணர்வாக மலரும். அந்த ஏக உணர்வு பூரணமானதாக இருக்கும். எங்கும் நீக்கமற நிறைந்த பூர்ணம் அது.- 'தான்' -என்பதுவும் அதுவே! தன்னையரிதலும் இப்படியே!

இந்த வாழ்க்கையை நுகர்வோன் யார்? 7.1.11

நாம் எல்லோரும் வாழ்கிறோம். இந்த வாழ்க்கையை நுகர்வோன் யார்? சற்றும் தயங்காமல் " நான்தான் ' என்று சொல்லுகிறோம். உங்கள் வாழ்க்கையை நுகர்வது நீங்கள்தான். இன்னும் சற்று கூர்ந்து கவனமாக பாருங்கள். நுகர்வது உங்கள் மனமா?, உங்கள் உணர்வா? - உங்கள் எண்ணங்களா? உங்கள் உணர்வா?

இந்த வாழ்வை, வாழ்வின் விபரங்களை மனதால் அறியத்தான் முடியுமே தவிர நுகர முடியாது. (அறிதல் என்பது நுகர்தல் ஆகாது) ஆக! உணர்வுதான் இந்த வாழ்க்கையை நுகர்கிறது. அதில் யாருக்கும் எந்தவித ஐயப்பாடும் இருக்காது.

இந்த உணர்வு சுயத்தன்மையுடையதா? அல்லது மனம் சுயத்தன்மையுடையதா?

மனம்தான் சுயத்தன்மையுடையது என்பது நமக்கு தெரியும். அது சுயமானதாக இருப்பதால்தான், நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக எண்ணுகிறோம்,மனதில் எழும் 50எண்ணம்தான் நமது நடத்தையை மாற்றுகிறது. ஒவ்வொரு விதமாக செயல்படுகிறோம். இது நமது சுயத்தை திருத்தி செய்ய.

ஆக! மனம் சுயமுடையது. இதைத்தான் 'நான்' என்று கூறுகிறோம். நான் என்பது மனதின் செயற்பாடு.
உணர்வுக்கு சுயத்தன்மை கிடையாது. ஏனெனில் அதற்கு நினைவுத்தன்மை (மெமரி) கிடையாது. நினைவுத்தன்மையற்ற ஒன்று சுயமாக இருக்க முடியுமா?

உணர்வுஎன்பது அவ்வப்போது (கணத்துக்கு கணம்) உணர்ந்து விடுதல் அவ்வளவே!

ஆமாம் இந்த உணர்வு இடத்தில்தான் உங்கள் வாழ்வே நுகரப்படுகிறது. இப்போது சொல்லுங்கள் இந்த வாழ்க்கையை நுகர்வது யார்? சுயமுள்ள மனமா? சுயமற்ற உணர்வா?

46

பெற வேண்டியது எதுவுமில்லை. விட வேண்டியது அறியாமை மட்டுமே!. **20.1.11**

நாம் மூன்று வித தன்மையில் இருக்கிறோம். ஒன்று :எண்ணங்களாகிய மனம். . இரண்டு: அனுபவித்தலான உணர்வு. மூன்று : அனைத்தையும் உள்ளடக்கிய(முற்றுணர்வு,முற்றறிவான) பூரண நிலை.
இம்மூன்றும் ஒன்றாக இப்போது சேர்ந்து இயங்குகிறது. சராசரியாக இப்படித்தான் அனைவரும் இருக்கிறோம். இந்த மூன்றையும் பகுத்து அறிய, உணர நம்மால் முடிந்தால் நாம் நம்மை அறிந்தவராவோம்.

இந்த மூன்றும் கூட ஒரு அணுவைபபோன்று முத்தன்மை வாய்ந்ததாக இருக்கிறது.

அணுவில் உள்ள எலெக்ட்ரான், புரோட்டான், நியூட்ரான் மூன்றும் தனிதனித்தன்மையதாக இருக்க காண்கிறோம்.
எதிர்மின்-எலெக்ட்ரான், நேர்மின்-புரோட்டான், நிலைமின்-நியூட்ரான்.மின்னோட்டத்தின் மூன்று வித தன்மைகளாக இவைகள் இருக்கின்றது.

இவைகளும் முறையே நம்மில் எதிர்மின்-எலெக்ட்ரான்(வெளிநோக்கிய) மனமாகவும்,, நேர்மின்-புரோட்டான்(தன்னையே நோக்கிய- தன்) உணர்வாகவும், நிலைமின்-நியூட்ரான் (ஏக அறிவாகவும், ஏக உணர்வாகவும் ஒருங்கிணைந்து - முழுமையானதாக, பூரணமானதாக -) பரிபூர்ண நிலையாக இருக்க காண்கிறோம்.

இதில் இரண்டு நிலைகள் அறியாமையை கொண்டுள்ளன. ஒன்று:மனம், மற்ற ஒன்று உணர்வு, (அறியாமையான இரண்டும் ,ஓர் 'முழுமை'யாக(complete) இல்லாது முழுமையின் 'பகுதிகளாக' இருப்பதால் தான் அறியாமையில் இருக்கின்றது.முழுமையடையாதது அறியாமை. முழுமையானது அறிவு.)

(குறைகுடம் கூத்தாடும், நிறைகுடம் தளும்பாது.)

இவைகளே முறையாக 'நான்'எனும் மனம், தான் எனும் உணர்வு. இவை இரண்டுமே!

இந்த மனம் எனும் அறியாமையும், உணர்வு எனும் அறியாமையும் நம்மை விட்டு நீங்கினால்!(நான், எனது எனும் அறியாமையை விட்டு நீங்கினால்)நாம் அந்த பரிபூர்ண நிலையை காண்போம்.

ஒரு அணுவினில் என்ன நிகழ்கிறதோ ! அதுவேதான் நம்மிலும் நிகழ்கிறது.

ஆக! நாம் தியானத்தின் மூலம், யோகாவின் மூலம் , அல்லது குருவின் மூலம் - வெளியிலிருந்து - நாம் 'பெற'வேண்டியது எதுவுமில்லை. நாம்- நம்மிடமிருந்து - 'விட' வேண்டியது, நம் அறியாமையை மட்டுமே. அறியாமையை விட்டாலே! பரிபூர்ண

நிலை வாய்க்கும்.
நமக்கு வெளியிலிருந்து பெறவேண்டியது எதுவுமில்லை, விடவேண்டியது மட்டுமே நம்மிடம் இருக்கிறது.

ஓம் பூர்ணமத; பூர்ணமிதம் பூர்ணாத் பூர்ணமுதச்யதே
பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவாவ சிஷ்யதே.
ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி.

மனமல்ல! உணர்வுதான் நீங்கள். 22.1.11

மனம் உங்கள் உடலிலுள்ள ஒரு பகுதியான மூளையில் இருந்து மட்டுமே செயல்புரிகிறது. ஆனால், உணர்வோ உங்கள் உடல் முழுவதும் நின்று செயல்புரிகிறது.

மனம் உங்களின் ஒரு பகுதி. ஆனால் உணர்வோ உங்களின் முழுமை.

மனம் உங்கள் உடல் முழுவதிலுமுள்ள உணர்வோடு தொடர்பு வைத்திருக்கிறது.
உங்கள் உணர்வை மனத்தால்(எப்படி வேண்டுமானாலும்) நிர்வகிக்க முடியும்.

மனம் அதன் கட்டுப்பாட்டில், உங்கள் உணர்வை வைத்திருக்கிறது .

ஆனால் மனமோ நான் எனும் ஒரு 'மாயை'யில் சிக்கி இருக்கிறது. அதற்கு இந்த 'நான்' எனும் 'மாய சொரூபம்'ஏற்பட்டிருக்கிறது.

மனம் 'சுயமாக' தன கற்பனையில் ஒரு செயலை நிகழ்த்தி பார்த்தால், அந்த செயலுக்குண்டான உணர்வு மாற்றங்கள் உங்கள் உடலில் நிகழ்வதை உங்களால் காண முடியும்.
உங்கள் உணர்வு ஒரு அப்பிராணி. அதற்கு சுயமில்லை. அதற்கு எதுவும் தெரியாது. அது எடுப்பார் கைப்பிள்ளை.
ஆனால், அதுதான் நீங்கள். ஆமாம் இந்த வாழ்க்கையை நுகர்வது உங்கள் உணர்வுதான்.
மனமல்ல!
உணர்வுதான் நீங்கள்.

உணர்வின் செயல்தன்மை. 22.1.11

உணர்வுக்கு சுயம் இல்லை . சுயம் என்பது நினைவுத்தன்மை (memory)உள்ளதற்கு மட்டுமே உண்டு. உணர்வு என்பது நிலையான ஓன்று அல்ல! அது தொடர்ந்து மாறி, மாறி நடப்பது. கணத்துக்கு கணம் மாறுவது.

53ஒரு வலியுணர்ச்சி ஒரே மாதிரி இருப்பதில்லை. அந்த உணர்ச்சியில் பலவித மாற்றங்கள் உண்டு. கணத்துக்கு கணம் அது மாறுகிறது. அந்த பலவிதங்களை ஒன்றாக்கி ஒரே வலியாக உங்களை உணர வைப்பது உங்கள் அறிவாகிய உங்கள் மனம்தான்.

உணர்வு பின்னமானது. முழுமையானது அல்ல. அந்த பின்னங்களை கூட்டிக்கூட்டி முழுமையாக்குவது உங்கள் மனம்தான்.

தவிர, உணர்வுக்கு பேதமில்லை. உணர்வு பேதங்களை கற்பிப்பது உங்கள் மனமே!

அனால் உணர்வே உங்கள் வாழ்வோடு நேரிடை தொடர்ப்பு உள்ளது.

அதற்கு நேரிடையாக இருப்பதை உணர மட்டுமே தெரியும்.

மிக முக்கியமான விஷயம் : உணர்வுக்கு நேற்று, இன்று, நாளை எனும் மூன்று காலங்கள் இல்லை.

இருப்பது இந்த கணம் மட்டுமே!.

காலம் பற்றிய கருத்துக்கள். 26.1.11

நமக்கு காலம் பற்றிய மூன்றுவிதமான கருத்துக்கள் உள்ளன. அவை முறையே

1, கடந்த காலம்,

2, நிகழ்காலம்,

3, நிலையான காலம்.

நாம் இதுவரை அறிந்திருப்பது இரண்டு மட்டுமே. ஆமாம் இந்த மூன்றாவதான நிலையான காலம் பற்றி நமக்கு அவ்வளவாக புரிதல் இல்லை. நாம் இன்னும் அங்கு பிரவேசிக்க்கவுமில்லை.

முதலாவதான கடந்தகாலம் நமது மனதில் நடக்கிறது. அவை இறந்த காலங்களின் நினைவுகள். (மெமரி) இவற்றை நமது மூளை செயல்படுத்துகிறது. கடந்த நொடிக்கூட இறந்த காலம்தான்.

இரண்டாவதான நிகழ்காலம் இக்கணம், இக்கணம் இப்பொழுது நடப்பது. இது நமது உணர்வில் நடப்பது. இது உயிர்ப்பானது. உயிரோட்டமிக்கது. இக்கணத்தை உணர்வாலேயே உணர முடியும். இக்கணத்தை, மனதாலாகிய அறிவு அதை தனது சோதனைக்கு உட்படுத்துவதற்க்குள் காலம் கடந்து விடுகிறது.நிகழ கணம் இறந்த கணமாகிவிடுகிறது.

அறிவு எதையும் சோதித்த பின்னரே ஏற்றுக்கொள்ளும்.

உணர்வு நேரடியானது.

மனம் சரிபார்த்த பின்பே ஏற்றுக்கொள்வது. மனதிற்கு சேமிப்பு உண்டு.

உணர்வுக்கு சேமிப்பு இல்லை.

உங்களுடைய 'நான்' கடந்த கால, இறந்த கால சவமாகி நாறிப்போன போன அந்த குப்பைகளின் சேமிப்பு கிடங்கிலேயே கால் ஊன்றி நிற்கிறது. உங்களுடைய 'நான்' தூக்கியெறியப்பட்ட குப்பைகளின் மீது அமர்ந்து அங்கு அழுகி, நாறிக்கிடக்கும் பொருட்களை அசைப்போட்டு உயிர்வாழும் நரி.

ஒரு உயிர்ப்புள்ள பூவின் மணம்போல இக்கணம் திகழ்கிறது.

அதை, அந்த உயிர்ப்பை நீங்கள் அனுபவிக்க வேண்டுமானால் நீங்கள் உணர்வின் மூலமே அனுபவிக்க முடியும்.

மனதால் அதை அணுகக்கூட முடியாது.

விழிப்புணர்வு என்பது பற்றிய ஒரு தகவல். 31.1.11

ஒரு உயிர்ப்புள்ள பூவின் மணம்போல இக்கணம் நேரடியாக திகழ்கிறது. அதை, அந்த உயிர்ப்பை நீங்கள் அனுபவிக்க வேண்டுமானால் நீங்கள் உணர்வின் மூலம் மட்டுமே அனுபவிக்க முடியும். “

நிகழ்காலம் இக்கணம், இக்கணம் இப்பொழுது நடப்பது. இது நமது உணர்வில் நடப்பது. இது உயிர்ப்பானது. உயிரோட்டமிக்கது. இக்கணத்தை உணர்வாலேயே உணர முடியும்.” என நாம் கவனித்தோம்.

உணர்வின் ஆழத்துக்கு நாம் போகும்பொழுது இக்கணம் மட்டுமே மிஞ்சி இருப்பதை காண்போம்.

இங்கு மனம் செயலற்று, ஒரு சாட்சித்தன்மையோடு மட்டுமே செயல்படும். மனம் செயல்பட, கால அவகாசம் தேவை. இக்கணம் எனும் குறுகலான கால இடைவெளியில் மனம் செயல்பட முடியாது. இவ்விடைவெளியில் உணர்வு மட்டுமே தன முழு பூரண தன்மையுடன் செயல்படும்.

மனம் – கடந்த, இறந்தகால நினைவுகளில் மட்டுமே ஈடுபட முடியும். அது உயிர்ப்புள்ள இக்கண நிகழ்வில் நேராக பங்கு ஏற்க முடியாது. மனதிடம் ஓர்மை கிடையாது. அது பல்நோக்குடையது. சந்தேகிப்பது. அதுஆராயும் தன்மையுடையது.

உணர்வால் மட்டுமே நேரடித்தொடர்பு கொள்ளமுடியும். அது ஒர்மையுணர்வு உள்ளது. அதற்கு பல்நோக்கு கிடையாது. அதற்கு எதையும் ஆராயும் விருப்பம் கிடையாது. சந்தேகம் கிடையாது. மிக நெருக்கமான நேரடியானது.

இதையே 'விழிப்புணர்வு' என சொல்லப்படுகிறது.

விழிப்புணர்வு என்பது உணர்வால் மட்டும் இக்கணத்தை, இருப்பை நுகர்வது. இக்கண உணர்வையே முன்னோர்கள் 'விழிப்புணர்வு' என சொல்லியிருக்கிறார்கள்.

உங்கள் உணர்வால் இக்கணத்தில் இருங்கள்.

இப்போது இருப்புணர்வைத்தவிர வேறெதுவும் இருக்காது.
அதுவே விழிப்புணர்வு.

அந்த விழிப்புணர்வே அநுபூதி நிலைக்கு வாசல்.

"எங்கும் நானே! எல்லாம் நானே!". 31.1.11

மூன்றுவித தன்மை நம்மில் செயல்படுகிறது. 1,(memory) கடந்த கால நிகழ்வுகளின் தொகுப்பு கிடங்குகளில் பயணித்து , உங்களுக்கு ஏதுவானதை தீர்மானித்து , உங்களுக்கு எது பொருந்தும், எது பொருந்தாது என உங்கள் பழைய புராணங்களை, உங்கள் சரித்திரத்தை புரட்டிப்பார்த்து உங்களை இன்னும் இந்த பூமியில் தக்க

வைத்திருப்பது , உங்கள் பூரண ஆயுளுக்கு வழி நடத்தும் 'மனம்' ஒன்று. ஓய்வும் கிடையாது.இது தன்னை சுயமென எண்ணிக்கொள்வது. இதற்கு உங்கள் (இரண்டாவது தன்மையான) உணர்வை மாற்றியமைக்கும் திறன் உண்டு.

2, (live) வாழ்வோடு மிக நேரடியாக தொடர்பு கொண்டு (ரத்தமும் சதையுமாக) சுக, துக்கங்களில் கலந்து வாழும் தேக உணர்வு மற்றொன்று.இது மிக உயிர்ப்பானது. இதற்கு இக்கணம் மட்டுமே. இந்த உணர்வில் நீங்கள் விழிப்புணர்வோடு நீடித்து லயிக்க முடிந்தால் (உங்கள் மூன்றாவது தன்மையான அநுபூதி தன்மைக்கு வாசற்படியாக அமையும்.

3,(absolute) இது பரிபூரண தன்மை வாய்ந்தது. காலம் எனும் கருத்தால் இது நிலையான காலம் என வருணிக்கலாம். அனைத்தும் இதனுள் அடக்கம். அதற்கு துவக்கமும் இல்லை, முடிவும் இல்லை. இந்த அண்ட சராசரங்கள் அனைத்தும் இதிலிருந்தே தோன்றி மறைகிறது. முன் கூறிய மன எண்ணங்களையும், உடல் உணர்வையும் கடந்து இதில் பிரவேசிக்க வேண்டியுள்ளது. முன் கூறிய இரண்டையும் விட்டு விட்டாலே நீங்கள் இங்குதான் இருப்பீர்கள். நமது மூல இருப்பே இங்குதான். நமது மூல இருப்பு மட்டும் அல்ல இந்த பிரபஞ்சத்தின் மூல இருப்பும் இதுதான். இதற்கு எல்லையே இல்லை. இதில் நிலைக்கும் உங்களுக்கும் எல்லையே இருக்காது.

இதுதான் கிருஷ்ணா சொன்ன "எங்கும் நானே! எல்லாம் நானே!".

விழிப்புணர்வு 4.2.11

இந்த வாழ்வின் அடிப்படை சீர்திருத்தத்திற்கு,மற்றும்ஆன்மிகம் பற்றி அறிய 'நான்யார்?' எனும் கேள்வி எப்படி அடிப்படையாக அமைகிறதோ அதுபோல, அநுபூதி நிலைக்குள் நுழைய இக்கணம் எனும் விழிப்புணர்வு அடிப்படையாக அமைகிறது. நீங்கள் இக்கணத்தில் மட்டும் சஞ்சரிக்க முடிந்தால், உங்களுக்கு எந்த மன,எண்ண ஓட்டங்களும் இராது. மன,எண்ண ஓட்டங்கள் நிகழ,இக்கணம் எனும் கால இடைவெளி போதாது.

நம் வாழ்வின் 'அடிப்படைஅறிவு' நான் யார்? என்கிற கேள்வி. நம் வாழ்வின் 'அடிப்படைஉணர்வு' இக்கணம் எனும் விழிப்புணர்வு.

இந்த விழிப்புணர்வுதான் அனுபூதி நிலையின் சாவித்துவாரம். இதுவே அறிவின் ஒடுக்கம், உணர்வின் ஒடுக்கம். அனைத்தும் ஒடுங்கி, ஓரிடமாயிருத்தல்.

இதையே சித்தர்கள் "வெம்மாயை அற்று;வெளிக்குள் வெளி கடந்து சும்மாயிருக்கும் சுகம்" என்றனர்.
உங்கள் தியான நேரத்தில் இதை கவனப்படுத்தி இக்கணத்திலே மட்டும் இருத்தி லயித்து நின்றால் - உங்கள் அடிப்படை தன்மையான அநுபூதி தன்மை திறக்கும்.

ஒரு தேவ ரகசியம் 5.2.11

நம்மோடு பின்னி பிணைந்துள்ள நமது இரண்டு அறியாமைகளான நான் எனும் மனம், எனது எனும் உணர்வு இந்த இரண்டையும் நாம் விலக்கிவிட , நமது தியான நேரத்தில் முயலும்போது, அந்த ஆழ்ந்த தியானப் பொழுதில் - அந்த ஈடுபாடு நம்மில் உண்மையாக நிகழ நாம் அனுமதிக்கும்பொழுது - நமது விட்டகுறை,

தொட்டகுறையாக, நமது நான் எனும் அறியாமை அவ்வளவு எளிதில் நம்மை விடுவதில்லை.

உங்களின் உண்மையான ஈடுபாட்டுக்கும், உங்களின் நான் எனும் அறியாமைக்கும் நிகழும் இந்த போராட்ட கணங்களில் உங்களில் ஒரு தேவ ரகசியம் 'ஸ்புரிக்கும்'.

அந்த மகா இயற்க்கை உங்களுக்கு அளிக்கும் வரப்பிரசாதம் இது.

இதை என்னவென இவன் சொல்ல உரிமை இல்லை. அதை அவரவர் தியானங்களிலேயே அறிந்து கொள்ளவேண்டியது.

ஒலியதிர்வு 6.2.11

நாம் தியானத்தின்போது நமது விழிப்புணர்வை - அதாவது இக்கணம், இக்கணம் எனும் இக்கண உணர்வை - அடையும் விதம் பற்றி பார்ப்போம். முதலில் நமது உடலிலுள்ள அனைத்து செல்களையும் உறக்கத்திலிருந்து விழிப்புக்கு கொண்டுவருதல் வேண்டும். எப்படியெனில் நாம் செய்யும் ஆழ்ந்த நாடி சுத்திக்கு பிறகு 'ம்' எனும் மகா மந்திரத்தை நாம் உச்சரிக்க துவங்கி, ஏற்ற இறக்கம் இல்லாது ஒரே சீராக உச்சரித்து, அந்த சப்தத்தை ஒரு லயத்துக்கு கொண்டுவந்து, அந்த சப்தத்தை ஊன்றி கவனிக்க (அறிவால் அல்ல உணர்வால்) அந்த சப்தத்தின் கால இடைவெளி குறைந்து,இக்கணத்துக்கு வரும். சப்தம் வெறும் அதிர்வாக இக்கண அதிர்வாக அதிர்வதை உணர முடியும். அந்த 'இக்கண அதிர்விலிருந்து துவங்கி, உடல் முழுவதும் உள்ள அனைத்து செல்களுக்கும் பரவ விட, அனைத்து செல்களும் இப்போது விழித்துக்கொள்ளும்.அனைத்து செல்களும் அதிர்ந்து ஒரே லயத்துக்கு வர , இப்போது உங்கள் உணர்வு முழுவது ஒரே அதிர்வாக அதிர்வது தெரியும்.அந்த அதிர்வுகளும் அலை அலையாக, அதிர்வலையாக எழுவது தெரியும்.

இப்போது உங்கள் 'உணர்வு தளம்' மனதின் பிடியிலிருந்து விலகி ஒரு சுதந்திர நிலைக்கு வந்திருப்பது தெரியும்.

உணர்வு முழுதும் ஒரே அதிர்வாக இருப்பது உணர்வு சுதந்திரம்.

இந்த நிலையே விழிப்புணர்வு நிலையாகும்.

அகப்பயணம். 9.2.11

நம்மில் மூன்றுவித தளம் செயல்படுவதாக பார்த்தோம். 1, மன-எண்ண தளம் 2, உடல்-உணர்வு தளம் 3, முற்றறிவு, முற்றுணர்வான- அநுபூதி தளம்.

நாம் மன எண்ண தளத்தில் நின்று இந்த மனம் என்பது என்ன? அது எதில் நிலைபெற்றிருக்கிறது? இந்த மனதின் ஆணிவேர் எங்கிருக்கிறது? என மனதால், எண்ணத்தால் ஆழ்ந்து சிந்திதோமானால், மனம் உணர்வின் மீதிருந்தே செயல்பட்டு வருவது தெரியும். மனதிற்கு ஆதாரம் உணர்வுதான். உணர்விலிருந்து எழுவதே எண்ணம், மனம்.

ஆக! மனதில் ஆழ்ந்து சஞ்சரித்தால் அது உங்களை உணர்விடம் சேர்த்து விடுகிறது.

இப்போது நீங்கள் உணர்வு தளத்தில் நின்று ஆழ்ந்து உணர துவங்கினால் முரணான

உணர்வுகள் ஒருநிலைக்கு வந்து தேகம்முழுவதும் ஒருணர்வாக இக்கண உணர்வாக 'விழிப்புணர்வாக' நிலைக்கும். அப்போது, இந்த உணர்வு என்பது என்ன? அது எதில் நிலைபெற்றிருக்கிறது? இந்த உணர்வின் ஆணிவேர் எங்கிருக்கிறது? என்பதை உங்கள் உணர்வால்-விழிப்புணர்வால்- தேட துவங்கினால் அது உங்கள் மூன்றாவது தளமான அநுபூதி நிலையில் வேர் கொண்டிருப்பது தெரியவரும்.

உணர்வுக்கு ஆதாரம் அதிர்வுதான்.

உங்கள் விழிப்புணர்வு அழ்ந்து, அழ்ந்து நோக்க அது அதிர்வாக மாற்றமடைவது தெரியும். இந்த அதிர்வு உங்களிடம் மட்டுமல்ல ,

இந்த பிரபஞ்சமே இந்த அதிர்வுதான் என்பதையும் காண்பீர்கள்.

உங்கள் அதிர்வும், பிரபஞ்ச அதிர்வும் வேறுவேறு அல்ல. இரண்டும் ஒன்றுதான். அங்கு உணர்வு முற்றுணர்வாகவும் அறிவு முற்றறிவாகவும் துலங்கும்.

ஆக! ஆன்மீகம் என்பது அகப்பயணம். நீங்கள் உங்களுக்குள்ளே, உங்கள் மூலத்தை நோக்கி பயணித்து(inner self travel) மூலத்தை கண்டறிவது.

இதில் உங்களுக்கு வெளியே உள்ள கடவுள், மதம், குரு இது எதுவும் உங்களுக்கு ஒரு பொருட்டல்ல! கடவுள், மதம், குரு இவை மூன்றும் உண்மை அல்ல அவைகள் யாவும் ஒரு மாயையே!.

அறியாமையை விட்டு நழுவதல். 9.2.11

தியான நேரத்தில் நாம் நமது இரண்டு அறியாமைகளான 'நான்' எனும் மனம் மற்றும் 'எனது' எனும் உணர்வு இவை இரண்டிடமுமிருந்து நழுவுவது எப்படி என பார்ப்போம்.

இவை இரண்டுமே மாய சொரூபமானது.

இதிலிருந்து விடுபடும் வரை நமக்கு விமோசனம் கிடையாது.

அதற்கு சொந்த இருப்பு இல்லை. அது நிலையற்றது. அது உண்மை இல்லை. இக்கண விழிப்புணர்வின் ஒளிப்பிரதேசத்தில் நாம் இருக்கும்பொழுது 'நான்' எனும் வீட்டைவிட்டு, 'எனது' எனும் வாசல் கதவையும் தாண்டி அவைகளை விட்டு விலகி,- இப்போது மனத்தால் எதையாவது எண்ணுவதோ, உணர்வால் எதையாவது உணர்வதோ கூடாது. இரண்டையும் உதறிவிட்டு - வெளியில்வர

வெட்ட வெளியில் 'இருப்பு' இருப்பதை அந்த இருப்பே அறிந்துணரும் அந்த இருப்பில் தான் நாம் இருக்கிறோம். அங்கு எல்லைக்கு உட்பட்டது ஒன்றும் இல்லை. எல்லையற்ற இருப்பேயுள்ளது. இதுவே நாம் நமது இரண்டு அறியாமைகளை விட்டு நழுவும் உத்தி.

நுகர்வு திறன். 14.2.11

நமக்கு இந்த வாழ்க்கையை நுகர்வதற்கு ஐந்து புலன்கள் இருப்பது தெரியும். கண், காது, மூக்கு, நாக்கு, தேகம் . இந்த தேக உணர்வு என்பதை நாம் முழுமையாக உணர்ந்ததில்லை. கண் என்பது (அதனை சார்ந்த நரம்பு தொகுதி) நமது உடலில் ஒரு

பகுதி. காது என்பதும் (அதனை சார்ந்த நரம்பு தொகுதி) நமது உடலில் ஒரு பகுதி. மூக்கு என்பதும் (அதனை சார்ந்த நரம்பு தொகுதி) நமது உடலில் ஒரு பகுதி.அதேப்போல நாக்கு என்பதும் (அதனை சார்ந்த நரம்பு தொகுதி) நமது உடலில் ஒரு பகுதி.ஆனால் தேகம் என்பது உடலில் ஒரு பகுதியல்ல. அது ஓர் முழுமை. நாம் இந்த தேக உணர்வு பற்றி தெளிவான அறிதல் இல்லாது இருக்கிறோம். இந்த தேகத்தால் குளிர், வெப்பம் , வலி, எரிச்சல் போன்ற உணர்வுகளைத்தான் உணர்ந்திருக்கிறோம். அந்த புலனை நுட்பமாக கவனிக்க தவறி விட்டோம். இந்த புலனை உபயோகிக்கவும் நமக்கு தெரிவதில்லை.

நாம் இந்த புலன்கள் எல்லாவற்றையுமே ஏதோ மேலோட்டமாகவே உபயோகித்து வந்துள்ளோம். இந்த ஐம்புலன்களும் நமக்கு ஐந்து கருவிகள். இந்த ஐம்புலன்களையுமே கூர்ந்து கவனிப்பதில்லை நாம். இந்த வாழ்க்கையை சிறப்புடன் வாழ, இந்த கருவிகளை விட சிறந்த ஓன்று கிடையாது. நம்மிடம் நுகர்வு திறன் மிக குறைவாகவே உள்ளது. (நமக்கு குடும்பத்தில், சமூகத்தில் எவ்வளவோ பிரச்னை. இதற்கெல்லாம் நேரமில்லை.) கூர்மையான கவனத்தோடு இப்பிரச்னையை நாம் அணுகினால் அப்போது தெரியவரும் நாம் எவ்வளவு மெத்தனமாக, சோம்பேறியாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பது. நம்மிடம் இருக்கும் திறனையே நாம் அறியாது காலம கடத்தி வாழ்ந்து வந்துள்ளோம் . இந்த அறியாமை நம் வாழ்வில் ஏன் நிகழ்ந்துள்ளது தெரியுமா? இந்த ஐம்புலன்களுமே மனதுக்கு பின்னல் ஓடுவதால்தான் . இந்த ஐம்புலன்களைப்பற்றியுமே அந்த மனது தெரிந்து வைத்துள்ள அளவுக்கு - இந்த புலன்கள் தங்களைப்பற்றி அறிந்து வைத்திருக்கவில்லை. இந்த புலன்கள் தங்கள் நுகர் திறனை அறிய முயற்சிக்கவேண்டும்.

இந்த ஐம்புலன்களுக்கும் நாம் பயிற்சியளிக்க வேண்டும். அப்போது இந்த வாழ்வின் நுகர்வு தளம் வேறொரு உயர்ந்த பரிமாணத்துக்கு எடுத்து செல்லப்படும்.

வாழ்வின் சாரம். **16.2.11**

நாம், ஏற்கனவே இந்த வாழ்க்கையை நுகர்வது நமது உணர்வே என்று பார்த்தோம். உணர்வின் நுகர்வு தன்மை இக்கணம், இக்கணம் என இக்கணத்திலே நுகர்ந்து விடுதல் அவ்வளவே!

நுகரப்படும் உணர்வை சேமிக்கவும் முடிவதில்லை, அதில் மிச்சம் மீதி எதுவுமில்லை.

நேற்று முழுவதும் குதூகலாமாயிருந்தேன் என்பதில் இப்பொழுது எதுவும் சுவாரஸ்யமில்லை. எந்த பயனும் இல்லை. அது கடந்த ஒன்று. இதற்கு முன் நொடி உணர்ந்தது கூட 'கடந்த' ஒன்றுதான்.

அவ்வப்போது உணர்வது மட்டும் தானா? பின்பு வாழ்வின் சாரம் என்பது இவ்வளவுதானா? மிகவும் நகைச்சுவையான விஷயம் வாழ்வின் சாரமே இவ்வளவுதான்.

சரி இப்படி உணர்வதினால் நமக்கு என்ன கிடைக்கிறது? ஒன்றுமே கிடைப்பதில்லை. (

அவ்வப்போது சற்று 'சேர்ச்சை'யாக இருப்பது தவிர!.)

இந்த சேர்ச்சையில் திருப்தியடைவது யார்?

சந்தேகமென்ன மனம் தான். இது சேர்ச்சையாக இருக்கிறது என தீர்மானிப்பதும் மனமே.

மிகவும் ஏமாற்றம் அளிக்கிறது. வாழ்க்கையே இவ்வளவுதானா?

மனிதனுக்கு மட்டுமல்ல, இங்கு வாழும் உயிர்களுக்கும் இதே நிலைமை தான். இந்த பூமியில் உள்ள உயிர் தொகுதிகளுக்கே இதுதான் நிலைமை. அவ்வப்போது உணர்ந்து விடுதல் அவ்வளவே!. மொத்த வாழ்வின் சாராமுமே இக்கணத்தில் நிகழும் உணர்வு மட்டுமே!

சகோதரா, உன் பார்வையில் ஒரு நாய் பிழைப்புக்கு என்ன அர்த்தமோ , இம்மியும் மாறாமல் உன் வாழ்வுக்கும் அதேயளவுதான் அர்த்தம்.

அமாம்,

இந்த மனம், இந்த உணர்வு இரண்டை மட்டும் நம்பி (இதுதான் வாழ்க்கை என) வாழ்பவனுக்கு இதற்கு மேல் இந்த வாழ்வில் பொருளில்லை.

ஐம்புலன்களின் ஆதாரங்கள். **16.2.11**
கண்களின் நுகர்வு ஆதாரம் உணர்வில் அடங்கி இருக்கிறது.

காதுகளின் நுகர்வு ஆதாரம் உணர்வில் அடங்கி இருக்கிறது.

மூக்கின் நுகர்வு ஆதாரம் உணர்வில் அடங்கி இருக்கிறது.

நாக்கின் நுகர்வு ஆதாரம் உணர்வில் அடங்கி இருக்கிறது.

இந்த தேகத்தின் 'மேலோட்டமான' நுகர்வு ஆதாரம் மட்டுமே உணர்வில் அடங்கி இருக்கிறது.

தேக உணர்வின் அடியாதாரம், உணர்வு நிலை கடந்த, அதிர்வு நிலையான உங்கள் மூலப்பிரகிருதியில் இருக்கிறது.

இந்த பிரகிருதியை நீங்கள் அநுபூதி நிலையில் மட்டும் காண முடியும். இந்த பிரகிருதி முழு ஒளி ரூபமானதும், முழு அதிர்வு தன்மையும் கொண்டதாக இருக்கிறது.

இந்தமூலப்பிரகிருதியின் ஆதாரம் 'இங்கிங்கெனாதபடி எங்கும் வியாபித்துள்ள அந்த ஆதிப்பிரகிருதியுள் அடங்கி இருக்கிறது.

பழக்கதோஷமே மனதின் சுயம். **18.2.11**

இந்த தகவலை சற்று நிதானமாகவும், கவனத்துடனும் படிக்கவும். நமது ஆழ்ந்த தியானத்தில் அனைத்து செல்களும் விழித்து,ஒரே அதிர்வாக ஏகத்தன்மையுடன் புருவ மத்தியில் ஒளிரும் ஒளியில் கலந்து , எல்லைகளற்று, எங்கும் ஒரே ஒளிப்பிரகசமாக துலங்க,
அச்சமயம் நாம் நமது அறியமைகளான நான் எனும் எல்லையுடைய மனம், எனது எனும் எல்லையுடைய உணர்வு இரண்டையும் அந்த ஒளிப்பிரகாசத்திலேயே போட்டு (எல்லைகளை) கரைத்துவிட எத்தனிக்கும்பொழுது,
மனது அவ்வளவு சீக்கிரம் ஒத்துவருவதில்லை. ஆனால், அதன் 'சுயம்' பலவீனமாக, ' எதையாவது தொடர்ந்து எண்ணிக்கொண்டேயிருப்பதை' நம்மால் அறிய முடிகிறது. மனம் இந்த பழக்கதோஷத்தில் கட்டுப்பட்டு நிற்பது தெளிவாக தெரிகிறது. இந்த பழக்க தோஷத்தையே தனது சுயமாக மனம் எண்ணிக்கொண்டிருக்கிறதும் தெரியவருகிறது. நடைமுறை வாழ்வில் நாம், மனதின் இந்த பழக்க தோஷத்தை படிப்படியாக குறைத்துக்கொண்டு வருதல் வேண்டும்.
தேவையில்லாது சதா எதையாவது எண்ணிக்கொண்டிருப்பதை குறைத்துக்கொண்டு வந்து, மன ஓட்டத்தைநிறுத்துதலும் வேண்டும்.

இனி மரணம் உனக்கில்லை. 20.2.11

மரண பயம் இல்லாத மனிதரில்லை என்கிற அளவுக்கு இந்த மரண பயம் நம்மை தொற்றிக்கொண்டுள்ளது. இங்கிருப்பதெல்லாம் அப்படியே இருக்கும் ஒரு நாள் நான் தான் இறந்து 'இல்லாது' போய்விடுவேன் என்கிற அச்சம் நமக்கிருக்கிறது. இந்த இல்லாது போவது என்பது நமது மனதுக்கும், உணர்வுக்குமே பொருந்தும். இந்த 'நான்' ஐ இருப்பதாக பாவித்து வருபவை இவை இரண்டுமே!

மரணத்துக்கு பிறகு இல்லாது போவது இவை இரண்டுமே!.உண்மையிலேயே இல்லாமல் இருப்பவைதான் இவை.(நான் என்பது ஒரு அறியாமை. தான் இருப்பதாக ஒரு மாயா சொரூபத்தை நம்புவது.அதில் உண்மையோ , நிதர்சன்மோ இல்லை.அது மனதின் புனைவு.)

மனதின் புனைவும், மனம் சார்ந்த உணர்வின் புனைவும்கடந்த, தியான வெளியில் என்ன உள்ளதோ அதுவே உண்மை. அது நிலையானது.

உன் உடலை விட்டு உயிர் நீங்கியபின் , உன் உடலையும் எரித்து சாம்பலை கரைத்து விட்ட பின் மீதம் என்ன இருக்கிறதோ (தியான வெளியில் என்ன உள்ளதோ) அதுவேஉண்மை. அது எப்போதும் உள்ளது. நிலையானது. அதற்கு ஆதியில்லை, அந்தமுமில்லை.

தியானத்தில் உனது அறியாமைகளை நீ கடந்து இதில் பிரவேசித்து விட்டால், உனக்கு மரணமில்லை. இந்த மரணம் எதில் நிகழுமோ அதையே (அறியாமை) தொலைத்து விட்ட பின், இனி மரணம் எங்கு நிகழும்?

யதோதகம் சுத்தே சுத்தம் ஆஸிக்தம் தாத்ருகேவ பவதி /
ஏவம் முனேர் விஜானத ஆத்மா பவதி கௌதம //15// - (கடோபநிஷத்.)

பதவுரை : தெளிந்த நீரில் விடப்பட்ட தெளிந்த நீர் எவ்வாறு அதுவாகவே ஆகிறதோ அவ்வாறு உண்மையை உணர்கின்ற மகான் ஆன்ம வடிவமாகவே ஆகிறார்.

ஒளியுடல். 22.2.11

நமக்கு ஸ்தூலமான இந்த உடல் உள்ளது போல மற்றும் இரு உடல்கள் இருக்கின்றது. ஒன்று உணர்வு உடல், மற்றொன்று ஒளியுடல்.இதே போல இந்த பிரபஞ்சத்துக்கும் மூன்றுவித உடல் இருக்கிறது. நாம் நேரிடையாக காணும் இந்த பூமி, மற்றும் சூரியனை கிரகங்களை, உள்ளடக்கிய சூரியக்குடும்பம், இதனையும் உள்ளடக்கிய பால் வீதி மண்டலம் , அதனையும் உள்ளடக்கிய இப்பிரபஞ்சம். இது ஸ்தூல பிரபஞ்ச உடல்.

அடுத்தது ஈர்ப்பு விசைகளாலான உணர்வு பிரபஞ்ச உடல்.

அடுத்து, இவை அனைத்தையும் தோற்றுவித்தும், மறையவைத்தும்,தோற்றுவித்தும் தன்னகத்தே வைத்துள்ள ஒளியுடல். இதை வேதத்தில் பிரம்மம் என்கின்றனர்.

நாமும் நமது தியான வேளையில் இந்த மூன்றுவித தன்மையுள்ள உடல்களையும் தரிசிக்க முடியும். நாம் நமது ஸ்தூல உடல் இயக்கங்களையும், (மனதின் இயக்கமும்) உணர்வு உடல் இயக்கங்களையும் கடந்து (இந்த 'நான்' எனும் இரண்டு அறியாமைகளையும் விட்டு - ஒரு இம்மியளவு இயக்கமும் இல்லாது.) தரிசிக்க முடிந்தால் இந்த ஒளியுடலை அடைவோம். அது ஏற்கனவே நம்மில் உள்ளது தான்.

இந்த, நமது ஒளியுடலில் நாம் தொடர்ந்து நிலைக்க முடிந்தால் அது எல்லைகளற்று இந்த பிரபஞ்ச பேருடலோடு இணைந்த ஒரே ஒளியுடலாக கலந்து பொருந்தி இருப்பதை அறிவோம்.

"எட்டுத் திசையும் பதினாறு கோணமும் எங்கும் ஒன்றாய் முட்டித்ததும்பி முளைத்தோங்கு சோதியை " என்று பட்டினத்தார் பாடுகிறார்.

விருத்தி. 24.2.11

நமக்கு 'நான்' எனும் விருத்தியும், அந்த பிரம்மத்திற்கு பிரபஞ்சமெனும் பொருள் விருத்தியும் உண்டானது வெளிநோக்கிய தன்மையினால் தான்.

நமது மனம் தற்பாதுகாப்புக்காக வேண்டி வெளிநோக்கி செயல்படுவதால், இந்த மனதிற்கு நான் எனும் (மாயசொரூபம்)சுயம் விருத்தியானது.

இந்தபிரபஞ்சத்தில் அணு நிலையில்எலக்ட்ரான் வெளிநோக்கி செயல் படுவதால் தான்(பொருளாக) பிரபஞ்சம் மேலும் விருத்தியாகிக்கொண்டு இருக்கிறது.

இந்த வெளி நோக்கிய தன்மை நம்மில் குறைந்து அக நோக்கான தன்மையாக மாறுமானால், இந்த 'நான்' எனும் சொரூப விருத்தியை நிறுத்த முடியும்.

ஒளியே நான்.அதிர்வே நான். 24.2.11

நமது மிக ஆழ்ந்த தியான வேளையில் நமக்கு புருவ மத்தியில் ஒளி தோன்றுவதை காணலாம். நாம் நமது மனம் , உணர்வு இரண்டையும் கடந்து இந்த அநுபூதி ஒளித்தனமைக்குள் நுழைய ஒரு இலகுவான உத்தி. இதோ!

அதாவது நமது மனமே தனது விருத்தியை குறைத்துக்கொண்டு வந்து தனது மூல

நிலையான ஒளி நிலைக்கு வருகிறது. (உங்கள் மனதில் விளக்கமாவது ஒளி எனும் அறிவேயாகும்.) அறிவே ஒளியாக திகழ்கிறது. உங்கள் மனமே இப்போது -தியான நிலையில்- ஒளியாக துலங்குகிறது.

உங்கள் உணர்வு தளத்தில் உணர்வாக திகழ்வது ஈர்ப்பு விசையே . உங்கள் உணர்வு இக்கணம் , இக்கணம் எனும் விழிப்புணர்வுக்கு வந்து அதுவே அதிர்வாக மாறுகிறது.

ஆக! உங்கள் மனம் ஒளியாக மாறிவிட்டது, உங்கள் உணர்வு அதிர்வாக மாறிவிட்டது. {நீங்கள் மனதையும், உணர்வையும் கடந்து விட்டீர்கள்.)

உங்கள் மனமே ஒளியாகவும், உங்கள் உணர்வே அதிர்வாகவும் மாற்றமடைந்திருக்கிறது.

நீங்கள் தியான வேளையில் இந்த ஒளியே நான். இந்த அதிர்வே நான். என உங்களை ஒளியாகவும், அதிர்வாகவும் அறிந்து அந்த அதிர்விலும், ஒளியிலும் வியாபித்திடுங்கள்.

நீங்கள் தியான வேளையில் ஒளியாகவும், அதிர்வாகவும் இருக்கிறீர்கள்.

அர்த்தமே வேண்டாம் ஆனந்தமா யிரு. 24.2.11

நாம் இப்போது இன்பம் துன்பம் இரண்டையும் மனதின் துணை கொண்டே உணர்ந்து வருகிறோம்.
மனம், இந்த உணர்வு நமக்கு(உயிருக்கு)நல்லது, ஆகவே இன்பமாயிருக்கலாம். அல்லது , இந்த உணர்வு நமக்கு(உயிருக்கு) கெட்டதுஆகவே, இது நமக்கு துன்பம் என மனது சதா தணிக்கை செய்து கொண்டேயிருக்கிறது.

மனதால் தணிக்கை செய்து உணர்வது மட்டுமே புத்திசாலித்தனம் என நினைக்கிறோம். எந்த ஒரு உணர்வும் ஒரு காரண காரியத்தோடு, ஒரு அர்த்தத்தோடு இருக்க வேண்டும் என மனம் நினைக்கிறது -அப்படியே 'சரியாக' நடந்தால் - இப்போது உணர்வு, மனதின் கட்டுப்பாட்டில், கட்டுப்பட்டு இருப்பது மனதுக்கு உறுதியாகிறது. உணர்வு தனித்து உணர துவங்கினால் மனதால் அதை ஏற்றுக்கொள்ள முடிவதில்லை. அது மனதின் சுயத்துக்கு விடப்பட்ட சவாலாக எண்ணுகிறது.

மனதின் சதா எதையாவது நினைத்துக்கொண்டேயிருக்கும் செயலைக்குறைக்க ஒரு உபயம்.

உணர்வு நிலையில்காரண காரியமின்றி சதா இன்பமாயிருங்கள். அவ்வப்போது மனம் ஓடிச்சென்று உணர்வை கவனிக்கும். ஏன் இப்படி இன்பமாக தானே உணர்கிறது என! காரணம் புரிந்தாலும், புரியாவிட்டாலும் " இன்பமயிருப்பது உயிருக்கு உகந்ததே! என விட்டு விடும். மனம் எந்த பாதிப்பும் அடையாது. அதே சமயம் மனதின் தேவையற்ற ஓட்டம் குறையும். உங்கள் கவனம் எப்போதும் உணர்வின் ஆனந்தத்திலேயே குவிக்கப்படுவதால், உங்களின் அத்தனை செல்களும் குதூகலமடையும். ஆகவே ' அர்த்தமே வேண்டாம் ஆனந்தமாயிரு'.

ஈர்ப்பு விசைகள் 25.2.11

நமது உடலில் மின் தன்மை அறிவாகவும், காந்த தன்மை உணர்வாகவும் செயல்பட்டு வருகிறது. நிற்க!

முன் கட்டுரையில், - உங்கள் உணர்வு தளத்தில் உணர்வாக திகழ்வது ஈர்ப்பு விசையே . உங்கள் உணர்வு இக்கணம் , இக்கணம் எனும் விழிப்புணர்வுக்கு வந்து அதுவே அதிர்வாக மாறுகிறது.- என பார்த்தோம்.

நாம் புவிஈர்ப்பு விசையில் கட்டுண்டு பூமியோடு சார்ந்து செயல்படுகிறோம். நமது உடல் மீது புவிஈர்ப்பு விசையும், சூரியனின் ஈர்ப்பு விசையும், மற்றும் கோள்களின் ஈர்ப்பு விசைகளும் செயல்படுகிறது.

இதில் நம் மீது வலுவாக செயல்படும் விசை புவிஈர்ப்பு விசையே.(ஆனால், பூமியே சூரியனின் ஈர்ப்பு விசைக்கு கட்டுப்பட்டுத்தான் சுற்றுகிறது.) இன்னும் உடுமண்டல ஈர்ப்புவிசைகளும் இருக்கின்றன. இத்தனை விசைகளும் நமது காந்த புலன்மீது செயல்படுவதாலே இவ்வியக்கங்கள் நமக்கு உணர்வாக துலங்குகிறது.

இந்த உணர்வு தன்மையை நாம் தியான நேரத்தில் அதிர்வு தன்மையாக மாற்றுவதற்கு , நமக்கு வெளியிலிருந்து, நம்மை (பூமியை) நோக்கி ஈர்க்கும் சூரிய ஈர்ப்பு விசையை நாம் நமக்கு உள் வாங்க வேண்டும். அதாவது நமது உடலிலுள்ள செல்களின் கனம் (weight) பூமியின் ஈர்ப்பு 69விசைக்கு கட்டுப்பட்டு,ஒரு கிறக்க நிலையில்(சுருண்டு) கீழ் நோக்கியே செயல் பட்டுக்கொண்டிருக்கின்றன.

அந்த செல்களை மேல்நோக்கி ,விழிப்பாக (OPEN) புவிஈர்ப்புக்கு எதிராக செயல்பட வைக்க முடிந்தால் உணர்வு நிலை அதிர்வு நிலையாக மாற்றமடையும். (இதனாலேயே தியானத்தில் அமரும் முன் நமது உடல் நேரடியாக பூமியின் மீது படாமல் எதாவது மரப்பலகையையோ , அல்லது எதாவது மொத்த துணிகளையோ ஆசனமாக அமைத்து அதன் மீதே அமருகிறோம்.) நமக்கு முன் வந்த மகான்களும் புவிஈர்ப்பு விசை குறைவாக செயல்படும் இடங்களான மலை உச்சி , அல்லது மிக உயரமான மலைப்பிரதேசம் (இமயமலை) போன்ற இடங்களில் வாழ்ந்து வந்தனர்.

இனி இந்த ஈர்ப்பு விசைகள் நம்மீது எப்படி செயல்படுகின்றன என்பதை பார்ப்போம்.

புவி ஈர்ப்பு விசையே நம் மீது அதிக வன்மையுடன் இயங்குகிறது. நாம் பூமியின் மிக அருகில் பூமியோடு ஒட்டியே இருப்பதால் நம் மீது வன்மையாக செயல்படுகிறது. ஒரு பொதுவான பிரபஞ்ச ஈர்ப்பு விசையானது நம் மீது ஒரு சிறு தாக்கத்தையே ஏற்படுத்த முடிகிறது. பூமியின் நேரடியான ஈர்ப்பு விசையான - சூரிய ஈர்ப்பு விசை- கூட நம் மீது அவ்வளவாக தாக்கத்தை ஏற்படுத்த முடிவதில்லை. இந்த ஈர்ப்பு விசைகள் நம் உடலின் எந்த பகுதியை மையப்படுத்துகிறது என கவனித்தால் தெரியும் , அது நமது முதுகு தண்டேயாகும்.

முதுகுத்தண்டை செங்குத்தாக நேராக நிறுத்தி வைத்தால், வெளியிலிருந்து வரும் சூரிய ஈர்ப்புவிசை நமது உச்சந்தலையில் துவங்கி நேராக கீழிறங்கி முதுகு தண்டு வழியாக, முதுகு தண்டின் நுனியை நோக்கி பிரவேசிக்க முயல்கிறது தெரிய வரும். (இத்தனை வகை உயிர்களில் மனிதனுக்கு மட்டுமே முதுகு தண்டை நேராக நிமிர்த்தி வைக்கும் திறமை இருக்கிறது, காண்க !)

நீங்கள் தியானத்தின் போது உங்கள் உணர்வின் மீது தியானித்து உணர்வின் அசைவ்களை குறைத்துக்கொண்டே வந்தால் அது சிற்றசைவாக, அதிர்வாக உங்கள் முதுகு தண்டின் நுனியான மூலாதாரத்தில் நின்று அனைத்து செல்களையும் மேல்நோக்கி அதிர வைத்தால், அந்த சூரிய ஈர்ப்பு விசை,உச்சந்தலையிலிருந்து கீழிறங்கி முதுகு தண்டின் வழியாக மூலாதாரத்துக்கு ஓடி வரும். நீங்கள் பூமியின் ஈர்ப்பு விசையிலிருந்து விலகி, சூரிய ஈர்ப்பு விசைக்கு ஆட்படும்போது உங்கள் தேகமே ஒளிப்பிரவாகமாகும்.

நீங்கள் பூமியின் ஈர்ப்பு விசையில் செயல்படும் பொழுதே மனம்,மற்றும் உணர்வு செயல்படும்.
சூரிய ஈர்ப்பு விசைக்கு ஆட்படும்போது மனம் ஒளியாகவும், உணர்வு அதிர்வாகவும் செயல்படுவதை காண்பீர்கள்.

முன்பு பூமியின் ஈர்ப்புவிசையில் உங்கள் மூளை செயல் புரிந்ததற்கும் , இப்போது சூரிய ஈர்ப்பு விசையில் உங்கள் மூளை செயல் புரிவதற்கும் வித்தியாசம் இருக்கிறது. அதாவது உங்கள் உடலிலுள்ள செல்கள் சராசரியாக இருக்கும்பொழுது உங்கள் மூளை செயல்பட்டதிற்கும், இப்போது செல்கள் மேல் நோக்கி இருக்கும்பொழுது செயல் படுவதற்கும் உள்ள வித்தியாசம் அது.

இப்போது உங்கள் உடலின் தகவமைப்பே தலை கீழாக மாறி செயல் படுவதை அறிவீர்கள்.

அநுபூதி நிலையில் தொடர்ந்து நீடிக்கும் மகான்களின் நடை முறை நடத்தைகள் வித்தியாசமாக இருப்பதற்கு இதுவே காரணம்.

சத்தியலோகம். 27.2.11

அறியாமையுலகும் - சத்தியலோகமும்.

அந்த அசைவற்ற, நிலையான பரிபூரண சத்தியம் , அதிலிருந்து உதித்த, முழுமையற்ற, குறைபாடுடைய, நிலையற்ற, சதா சஞ்சரிக்கும் சதா மாற்றமடையும், உருமாறும் இயக்கமுறும் 'மாயா' அறியாமை என 'கலந்து' நிலைமை இருக்கிறது.

இதில் நாம் (கண்ணில் காணுவது தான் நிலையானது எனும்)அறியாமையோடு அறியாமையாக கலந்து உறவாடுவோமா ? இல்லை, எது நிலையான சத்தியம் என தேடி இனம் கண்டு சத்தியத்தோடு சத்தியமாக இணைந்து வாழ்வோமா?

இந்த பொருட்களாலான பிரபஞ்சமே நிலையற்ற ஒன்றுதான். சதா மாற்றமுறுவதுதான். (மனிதன் தோற்ற பிரமையில் மூழ்கிக்கிடககிறான்.) - ஒரு பொருளுக்கு திடத்தன்மையையும், 71தோற்றத்தையும் அளிப்பது . எலக்ட்ரான்களின் அதிவேக விளைவுகளே என்பதை முன் கட்டுரைகளில் பார்த்தோம்- இந்த மாயா பிரபஞ்சத்திலிருந்து கிளைத்த அறியாமைகள்தான் அனைத்து உயிர்களும், நீங்களும், நானும்.

நம்மில் கிளைக்கும் அறியாமைகள்தான் மனம் எனும் எண்ணங்களும், உணர்வும். ஆனால் இந்த அறியாமைகள் எல்லாம் எதில் நிலைகொண்டிருக்கின்றன என்றால்? அந்த அசைவற்ற, நிலையான பரிபூரண சத்தியத்திலே!

அந்த அசைவற்ற, நிலையான பரிபூரண சத்தியம் ஒவ்வொரு அணுவிலும் கோர்த்து நிற்கிறது.

அனைத்து அறியாமைகளையும் எலக்ட்ரான் துகள்களே நடத்துகின்றன!. அதற்க்கு இணையாக இருப்பது புரோட்டான் துகள்கள். இதில் எலக்ட்ரான் துகள்களே 'வெளிநோக்கி' செயல்புரிவது.

உங்களுக்கு இருப்பது போலவே, இந்த பிரபஞ்சத்துக்கும் தேடல் இருக்கிறது. முழுமையுறா அனைத்துக்குமே தேடல் இருக்கிறது. அந்த முழுமையுறா தன்மையே அறியாமை. இது அங்கிங்கெனாதபடி பிரபஞ்சமெங்கும் பரவி, விரவிக்கிடக்கிறது. அதுதான் உங்களிடமும் செயல்படுகிறது.

நீங்கள் கோடிக்கணக்கான பிறவிகளாக அந்த முழுமையைத்தான் தேடிக்கொண்டிருக்கிறீர்கள்.

அந்த முழுமையை அடைந்த எதுவும் எதையும் தேடுவதில்லை. அது அந்த முழுமையோடு முழுமையாக முழுமையாகி விடுகிறது.

அந்த முழுமையே சத்தியலோகம்.அறிவு என்பது நிலையான அசைவற்ற சத்தியம், அறியாமை என்பது இயக்கமாயிருக்கிற இயக்க பிரபஞ்சம் முழுவதுமே!.

உங்கள் அறியும் தகவமைப்பை மாற்ற வேண்டும். 28.2.11

நமக்கு ஏற்கனவே விதிக்கப்பட்டிருந்த வாழ்க்கை முறை பிடிக்கவில்லை, அதில் ஏதும் சத்தியம் இல்லை, என தோன்றினால், சரி, இந்த வாழ்க்கையை பின்னும் சததியமுள்ளதாக வாழ வழிவகை என்ன? என புதுவாழ்க்கை முறையை தேட வேண்டும். அதற்கு முன் நமக்கு 72ஏற்கனவே விதிக்கப்பட்டிருக்கும் வாழ்க்கை முறை எப்படிப்பட்டது ? என்பதை அறிய வேண்டும். நமக்குள் புரோக்ராம் ஒன்று செய்யப்பட்டிருக்கிறது. இந்த உடல் சுமார் எழுபது டிரில்லியன் உயிர் செல்களை கொண்டது. இவ்வளவு செல்களும் தாய் தந்தையரின் இணைவிலிருந்து (தாயின் கருமுட்டையை தந்தையின் விந்தணு துளைத்து இரண்டும் ஒன்று கலந்து தாயின் கருவில் தனி உயிராக துவங்கிய வளர்ச்சி இன்று எழுபது டிரில்லியன் உயிர் செல்களை கொண்ட ஒரு குழுவாக, உடல் எனும் அமைப்பாக, தோற்றமாக காட்சி தருகிறது. இந்த புரோக்ராம் பல தலைமுறைகளாக தொடர்ந்து நம்மை வந்தடைந்திருக்கிறது. (தாய் தந்தை இணைவு துவங்கி - 50 வயது - இன்றுவரை நம்மில் நடந்திருப்பது வேதியல் வினைகளே!) இந்த புரோக்ராமை மையப்படுத்தியே வேதியல் வினைகள் நடக்கிறது. அல்லது இந்த புரோக்ராமே வேதியல் வினைகளை சரிபார்த்துககொள்கிறது. சரி, இது உங்களுக்குள் செய்யப்பட்டிருக்கும் புரோக்ராம். இந்த புரோக்ராமை வெளிக்காரணிகள் பாதிக்கவே செய்யும். வெளிசூல்நிலைகளான வெயில், மழை,காற்று தட்ப வெட்பம் இது போன்ற இன்ன பிற. எந்த மாதிரி சூழ்நிலைகளையும் தாங்கி, அல்லது ஒதுங்கி இருந்து தன்னை தகவமைத்துகொள்ளும் அளவுக்கு இந்த புரோக்ராம் செயல்படுகிறது. இந்த புரோக்ராம் தண்டுவடத்திலும், , மூலையிலும், சுரப்பிகளிலும் இந்த மூன்றிலும் கலந்து செயல்படுகிறது. இதிலிருந்து வருவதே உங்கள் எண்ணம், உணர்வு அனைத்தும்.

ஒருமனிதன்தன்னையேதனக்குளஎப்படிஅறிமுகப்படுத்திக்கொள்கிறான்,

அடையாளப்படுத்திக்கொள்கிறான், என்பதையும் கவனிக்க வேண்டும். தான் யார்? நான் இந்த குடும்பத்தவன். என்னுடைய முழு ஈடுபாடும், செயலும் இந்த குடும்பத்துக்காக என்றும் மனிதர்கள் இருக்கிறார்கள். இவர்கள் குடும்ப வாசிகள். அடுத்து ஜாதீய வாசிகள், அடுத்து மதவாசிகள், அடுத்து தேசிய வாசிகள், ஏன்? கட்சி வாசிகள்கூட இருக்கிறார்கள். இதையெல்லாம் தாண்டி பொதுவாக இவர்கள் பூமி வாசிகள். (பூலோகவாசிகள்) இவர்களையெல்லாம் இப்படி பந்தப்படுத்தி வைத்திருப்பது இந்த பூமியின் ஈர்ப்பு விசையான புவிஈர்ப்பு விசையே. வெளிக்காரணியான இந்த ஈர்ப்புவிசையில் நமது புரோக்ராம் கட்டுப்பட்டு நம்மை இத்தனை விஷயங்களில் பந்தபடுத்தியுள்ளது. இந்த ஈர்ப்பு விசையே முதலாமவருக்கு குடும்ப ஈர்ப்பு விசையாகவும், அடுத்தவருக்கு, அடுத்தவருக்கென செயல்படுகிறது. அது அவர்களை அவர்கள் அறிமுகப்படுத்திக்கொண்ட விதம், அடையாளப்படுத்திக் கொண்டவிதம்.

உண்மையான சத்தியம் என்ன? நான் யார்? இந்த பூமியில் நான் பிறந்ததின் காரணம் என்ன? இந்த நான் என்பது என்ன? நான் என்பதே ஒரு கற்பனா ரூபம் என அறிந்த பின் இனி செய்ய 73வேண்டியது என்ன? அந்த மூல சத்தியம் என்ன? இந்த கேள்விகள் எழுந்து இந்த பிரபஞ்சத்தின் ஆதாரம் என்ன? என்று நோக்கும்போது - ஒரு சரியான உண்மையை நாம் இப்போது இருக்கும் உடல் தகவமைப்பில் அறிந்து கொள்ள முடியாது என தெரிய வருகிறது. இப்போது நம்மில் இயங்கும் புரோக்ராம் நம்மை அனைத்தின் மீதும் பந்தப்படுத்தி, இந்த பந்தத்திலிருந்து விடுபட மறுக்கும் புரோக்ராம் அமைப்பு. இந்த அமைப்பில் ஒரு மனிதராவது போதும் என திருதியுற்று மரித்தாரா என்றால் 'இல்லை' என்றே பதில் வரும். ஒரு பொருளிலோ, ஒரு உறவிலோ, ஒரு கற்பனையிலோ பந்தப்பட்டிருக்கும் பொழுது சரியான உண்மையை நாம் அறிய முடியாது.

ஆனால் நம்முடைய அடிப்படைத்தன்மை என்னவோ திருப்தியையும் , பூரணத்தையும் எதிர்கொண்டதாக இருக்கிறது. அந்த திருப்தியையும், பூரணத்தையும் நாம் காண வேறு ஏதாவது வழிமுறைகள் உண்டா? என தேட வேண்டியிருக்கிறது. இப்படி பல காலமாக மனித குலம் தேடிக்கொண்டிருக்கிறது. கண்டடைந்தவர்களும் ஏராளமானவர்கள். கண்டடைந்தவர்கள் தங்களை “நாங்கள் இந்த பூமிக்கு மட்டும் சொந்தமில்லை, இந்த பிரபஞ்சத்துக்கே சொந்தமானவர்கள்” என்று சொல்லியிருக்கிறார்கள். நீங்களும் பிரபஞ்சவாசியாக வாழ விரும்பினால், உங்கள் அறியும் தகவமைப்பை மாற்ற வேண்டும்.

இந்த புரோக்ராம் மாற்றம் என்பது வேதியல் வினைகள் மூலமே சாத்தியப்படும். இந்த வேதியல் வினைகளை எப்படி செய்வது?

புறக்காரணிகளால் நமது புரோக்ராம் மாறுதலடையும் வாய்ப்புள்ளது. ஆனால் நாம் பல காலம் அவைகளை தவிர்த்தே வந்துள்ளோம். நமக்கு வெளியே நெருக்கமாக புவிஈர்ப்பு விசையும், வெளியில் கிரக ஈர்ப்பு விசைகளும், அதற்க்கு அடுத்து சூரிய ஈர்ப்பு விசையும், அதை அடுத்து உடுமண்டல ஈர்ப்புவிசையும், அதையும் அடுத்து உடுமண்டல தொகுப்பு ஈர்ப்பு விசையும்,அதையடுத்து, இப்பிரபஞ்ச ஈர்ப்பு விசையும்,அதையடுத்து, சூழ்ந்து நிற்கும் சூன்ய ஈர்ப்பு விசையுமென மொத்த விசைகளும் நம்மை சூழ்ந்துள்ளன. இதில் ஓர் ஒழுங்கான அமைப்பும் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. அந்த ஒழுங்கான

ஈர்ப்பு விசைகளை நாம் நமக்குள் அனுமதிததோமானால், ஏற்கனவே நம்மிடம் உள்ள இந்த பந்த தன்மை அகன்று, ஒரு நிறைவான, குறைவற்ற, பூரண தன்மையை அடைவோம். அந்த ஒழுங்கான ஈர்ப்பு விசை நம்மில் நுழைந்து நமது புரோக்ராமில் சரியாக தகவமைத்து அந்த பரிபூரண சத்தியத்தை நாம் அறிய வழிவகை செய்து தரும். நம்மையும் பூரணத்தன்மையில் நிலை நிறுத்தும். உங்கள் புரோக்ராம் தன்னிறைவுறும்.

புவி ஈர்ப்பு விசையும், பிரபஞ்ச ஈர்ப்பு விசையும். **3.3.11**

நாம் இப்பொழுது புவி ஈர்ப்பு விசைக்கு உட்பட்டு, இன்றைக்கு நமக்கு இருக்கும் உணர்வு நிலைமையை அனுபவித்து வருகிறோம். இந்த வலி, சுகம் என்பது மாதிரி நமக்கு இப்போதைய உணர்வு இருக்கிறது. இந்த உணர்வுகள் அனைத்துமே இந்த புவிஈர்ப்பு விசை நமது முதுகு தண்டின் கீழ்பகுதியான மூலாதாரம் எனும் முதுகு தண்டின் நுனி பகுதியில் துவங்கி படிப்படியாக மேலேபோய் மூளையை அடைவதால் ஏற்படுவது. இது மூலாதாரத்தில் வலுவாகவும், மூளைப்பகுதியில் குறைந்தும் நமது மூளையிலுள்ள நியூரான் அணுக்களை புவிஈர்ப்பு விசையானது கீழ்நோக்கி இழுத்துவருகிறது. இதனால் நமது உணர்வு நமது உடலைமட்டும் சார்ந்ததாக, எல்லைகள் உடையதாக இருக்கிறது. இது ஒரு குறையான உணர்வே!

நாம் நமது தியானத்தின்போது அந்த பிரபஞ்ச ஈர்ப்புவிசையை நமது உச்சந்தலை தொடக்கி முதுகு தண்டு வழியாக கீழிறக்கி மூலாதாரத்தில் நிறுத்தி, நமது முழு கவன நிலையையும் மூலாதாரத்தில், குவித்து நிறுத்தி அனைத்து செல்களையும் அதிர்வில் எழுப்பி மேல்நோக்கி, புருவ மத்தி, அல்லது உச்சந்தலையை நோக்கி முழு பிரபஞ்ச ஈர்ப்பு விசையையும் நாம் ஏற்றுக்கொண்டோமானால், அந்த ஈர்ப்புவிசை மூளைப்பகுதியில் வலுவாகவும், படிப்படியாக குறைந்து கொண்டே கீழ்நோக்கி மூலாதாரத்தை அடைகிறது.

இப்போது நமது உணர்வு தகவமைப்பே தலை கீழாக மாறுவதை காணமுடியும்.

இப்போது, நீங்கள் உங்களின் உணர்வு எல்லையை கவனித்தீர்களானால், நமது உணர்வு ஒரு எல்லையற்ற தளத்தில் விரிவடைந்து கொண்டேயிருப்பதை காண முடியும்.

அங்கு எந்த எல்லைகளும் இல்லை. நீங்களே இப்போது ஒரு எல்லையற்ற தன்மையில் இருப்பதையும் காண்பீர்கள்.

இந்த எல்லையற்ற தன்மையில் நீங்கள் நிலைத்திருக்கும்பொழுது இயல்பாக ஒரு எண்ணம் உங்களில் தோன்றினால் கூட, அடுத்து அது தொடர் எண்ணமாக மாறுவதில்லை, தொடர்வதுமில்லை.

இதற்கு காரணம்,

உங்கள் உணர்வுக்கு எல்லையிருந்தால், ஒரு எண்ணம் தோன்றினால், அந்த எண்ணம், உணர்வில் விழுந்து அந்த எல்லைகளில் மோதி, எதிரெண்ணமாக தொடர்கிறது. உங்கள் உணர்வுக்கு எல்லையில்லாத போது அந்த உணர்வில் விழும் எண்ணம் அங்கேயே மரித்து விடுகிறது.

எல்லையற்ற உணர்வே முழுமையானது, நிறைவானது, பூரணமானது. அங்கு எந்த

கேள்வியும் இல்லை. கேள்விகேட்க, எந்த ஹேதுக்களும் இல்லை.

இயற்கையினால் நமக்கு விதிக்கப்பட்ட உணர்வே இந்த முற்றுணர்வுதான். நாம் அறியாமையில் சிக்கி இருக்கிறோம்.

இந்த முற்றுணர்வை நோக்கியே அனைத்துயிரும் பயணித்துக்கொண்டிருக்கிறது.

புவியில் தற்போது வசிக்கும் தாவர விலங்குகளின் எண்ணிக்கை 1200000 (பன்னிரண்டு லட்சம்) வகைகள்.

அலை - நிழல் - உரு . 6.3.11

நமது தியானத்தின்போது நாம் ஒளிஅலையாகவும், நிழலாகவும், பின் உருவாகவும் மாறுவதை காணமுடியும். கணநேரம் அலையாகவும், அடுத்து கணநேரம் நிழலாகவும், பின் அது உருவாகவும் மாற்றமடைவதை நாம் அறிய முடியும். அலையாக நம்மை அறியும்பொழுது நமக்கு எல்லைகளே இல்லாது இருப்பதை அறியலாம். நிழலாக இருக்கும்பொழுதும் நாம் எல்லைகளை அறிவதில்லை. நம்மை உருவாக அறியும்போழுதே நமக்கு எல்லைகள் உண்டாவது தெரிகிறது.

உடம்பு 7.3.11

நம்முடைய இந்த உடம்பு இன்று இப்படி இருப்பதற்கு காரணம், நமது பரம்பரை பரம்பரையான சிந்தனை அமைப்பும், பழக்க வழக்கங்களுமே. நமது இந்த உடல் ஒரு உயிருள்ள கருவி.(Bio instrument) உங்களுக்கு இதன் தொழில் நுட்பம் தெரிந்தால், இதன் தன்மையை எளிதில் மாற்றி வைக்க முடியும்.

இதன் தொழில்நுட்பம் மிக எளிமையானது. உடலை எப்படி பழக்கப்படுத்துகிறீர்களோ அப்படியே பழக்கமாகி மாறிவிடும். உடம்புக்கு எந்தவித தனி நோக்கும் கிடையாது. அது ஒரு உயிர்ப்புள்ள கருவி அவ்வளவே!. இதை பழக்கத்தால் மட்டுமே மாற்ற முடியும். நீங்கள் காலையில் ஆறு மணிக்கு எழும் பழக்கமுள்ளவரா? தொடர்ந்து ஒரு பதினைந்து நாட்கள் சரியாக அதிகாலை மூன்று மணிக்கு எழுந்து பழகுங்கள் பின் நீங்கள் கஷ்டப்படவே வேண்டியதில்லை, சரியாக மூன்று மணிக்கு நீங்களாகவே அனிச்சை செயலாக எழுந்து விடுவீர்கள்.

உங்கள் உடலில் செல்கள் புதிது புதிதாக உருவாகிகொண்டேயிருக்கிறது. நீங்கள் எப்படி பழக்கப்படுத்துகிறீர்களோ அப்படியே அது பழகிக்கொள்ளும்.

நீங்கள் நித்தமும் ஒரு குறிப்பிட்ட சரியான நேரத்தில் தியானம் செய்துவர , நீங்கள் உங்களை பொருட்களாலான உருவமாகவோ, அல்லது அலைகளாலான ஒளியாகவோ உங்களை உருவகித்து வந்தால் உங்கள் உடல் அதற்கு பழக்கப்பட்டுவிடும்.

உங்களை நீங்கள் எல்லையுடைய உருவமாகவும் பாவிக்கலாம், அல்லது எல்லைகளற்ற ஒளியாகவும் பாவிக்கலாம். இந்த ஒளி நிலையை தொடர்ந்து பழக்கப்படுத்தி தனது தேகத்தையே ஒளியலையாக மாற்றி தேகத்தையே

ஒளியலையாக மாற்றி ஒளியோடு ஒளியாக இணைத்து காட்டியவர் அருட்பெரும் வள்ளலார் அவர்கள்.

கண்ணாடியின் முகம். 11.3.11

நமது தியானத்தின் பொழுது நாம் (மனதையும், உணர்வையும் கடந்த) ஒளிநிலையில் திளைக்கும்பொழுது நமது இருப்பு தன்மையும், கவனத்தன்மையும் ஒரு நிலைக்கண்ணாடி போல விளங்குவதை காணலாம்.

நிலைக்கண்ணாடி போலஅசைவற்ற(நிலையான) இருப்பும், நடக்கும் அனைத்தையும் பிரதிபலிக்கும் தன்மையும், பிரதிபலிக்கும் அனைத்தையும் கவனிக்கும்(அசைவற்ற) சாட்சித்தன்மையும் கொண்ட ஒரு நிலைக்கண்ணாடி போலநாம் இருப்பதை காணமுடியும்.

அந்த சாட்சித்தன்மை அளவேயில்லாது எங்கும் நீக்கமற நிறைந்துள்ளது.

அச்சமயம் நம்மை ஒரு நிலைக்கண்ணாடியாக பாவித்துக்கொள்ளல் வேண்டும். (நமது மூல உண்மையும் அதுதான்.) கவனிக்கும் சாட்சித்தன்மைக்கு எந்த வித உணர்வு பேதமோ, எந்த வித அறிவு பேதமோ கிடையாது. அது எந்த நிகழ்வை கண்டாலும் சற்றும் சலனப்படுவதில்லை.

அது, நான் எனது என்ற சுயமற்றது. அதுவே அனைத்துமாக இருப்பது.

அதிலிருந்து எதுவும் விலகியிருப்பது இல்லை. அனைத்துமாயிருப்பது அது.

நமது மனதுக்கு காட்சிப்படுவது வெறும் தோற்ற நிகழ்வுகளே!

ஆனால்,அந்த சாட்சித்தன்மைக்கு அதுவே யது. அது , அதுவே அதாக இருப்பதால் அதற்கு பேதமில்லை. நடக்கும் நிகழ்வும் அதுவே! காணும் சாட்சித்தன்மையும் அதுவே!. சுற்று சூழ இருக்கும் பௌதிக உலகும் அதுவே!அனைத்து நிகழ்வுகளும் அதுவே!

வெறும் சாட்சித்தன்மையுடன் மட்டும் விளங்கும் ஒரு மகானின் முகம் கண்ணாடியின் முகத்தைப்போன்று இம்மியும் சலனமற்று தோன்றும்.

நமது நரம்பு மண்டலம். 13.3.11

மொத்தம் 210 வகையான செல்கள் நம் உடம்பில் செயல்படுவதாக பார்த்தோம். இதில் முக்கிய பணிகளை ஆற்றும் செல், நியூரான் செல்லாகும்.
மூளை மற்றும் நரம்புகள் நியூரான் செல்களால் ஆனவை.
78செய்திகளை கடத்துவது நியூரான் செல்கள்.

உறுப்புகளில் இருந்து தண்டு வடத்திற்கு வரும் நரம்புகள் உணர்வு நரம்புகள்.

நரம்பு செல்களால் ஆக்கப்பட்ட நரம்பு திசுக்களின் பணி உணர்சிகளை கடத்துவது. நமது உடம்பில் உள்ள நரம்புகள் அனைத்தும் முதுகு தண்டுவடத்தின் வழியாகவே மூளையை அடைகிறது. தண்டுவட நரம்புகள்(31 இணைகள்)

உடற்செயல்கள் அனைத்தையும் கட்டுப்படுத்தும் ஒரே தொகுப்பு நரம்புறுப்புத் தொகுப்பு ஆகும்.

தலையில் உள்ள உறுப்புகளான கண், காது, மூக்கு, வாய் போன்ற உறுப்புகளிலிருந்து பன்னிரண்டு நரம்புகள் மூளைக்கு செல்கின்றன . இவை கபால நரம்புகள் எனப்படும்.

மூளையில் நிறைந்திருப்பது நியூரான் செல்களே!

நினைவாற்றல் செயலுக்கு காரணமாக அமைவது பெருமூளை.
பகுத்தறிவின் இருப்பிடம் பெருமூளை.

அனிச்சை செயல் என்பது பெருமூளையின் தொடர்பின்றி உடலில் நடைபெறும் செயல். அனிச்சை செயலுக்கு காரணமாக இருக்கும் நரம்பு மண்டலத்தின் உறுப்பு தண்டுவடம். தண்டுவடத்தின் மைய குழலில் நிரம்பியுள்ள திரவம் மூளை தண்டுவட திரவம்.

ஆக! நமது அறிவும் உணர்வும் நியூரான் செல்கலாலேயே பராமரிக்கப்படுகிறது. நமது தண்டுவடம் மூளை மற்றும் நரம்பு மண்டலம் முழுவதும் நியூரான் செல்களால் ஆனவை.

ஆகவே! நாம் நமது தியான வேளைகளில் அந்த பிரபஞ்சத்தின் மூல நாதமான 'ஓம்' எனும் சப்தத்தை நமது உடல் முழுவதும் எதிரொலிக்க, அதிர, தொடர்ந்து உச்சரித்து நமது நரம்பு மண்டலம் முழுமையும் ஒளியாக அதிர்வாக மாற்றமடைய செய்யுங்கள். இப்போது உடம்பிலுள்ள அனைத்து செல்களும் பூரண விழிப்புக்கு வந்து விடும்.

உணர்வு மண்டலம். 14.3.11

நாம் நமது தியான வேளைகளில் அந்த பிரபஞ்சத்தின் மூல நாதமான 'ஓம்' எனும் சப்தத்தை நமது உடல் முழுவதும் எதிரொலிக்க, அதிர, தொடர்ந்து உச்சரித்து நமது நரம்பு மண்டலம் முழுமையும் ஒளியாக அதிர்வாக மாற்றமடைய செய்யுங்கள்.

நிமிர்ந்து அமர்ந்து முதுகு தண்டை நேராக வைத்து கவனம் முழுவதையும் புருவ மத்தியில் வைத்து , உணர்வு மண்டலமான நரம்பு மண்டலத்தில் உள்ள உணர்வுகள் அனைத்தையும் முதுகு தண்டின் வழியாக மேலேற்றி புருவ மத்திக்கு கொண்டுவாருங்கள்.

உங்கள் புருவ மத்தியில் இப்போது ஒரு துளி ஒளி திகழும். அந்த துளியில் உங்கள் அறிவையும், உங்கள் உணர்வு முழுவதையும், உங்கள் சுவாசத்தையும் இணைய விடுங்கள்.

உங்கள் ஒட்டு மொத்த சாராம்சமும் அந்த ஒளித்துளிதான். வெளியிலிருந்து கேட்கும் எந்த சப்தத்தையும் உங்களை கடந்து போக அனுமதியுங்கள். நீங்கள் இப்போது வெட்ட வெளியாக இருக்கிறீர்கள். இதை நித்தம் பழக்கப்படுத்துங்கள்.

முண்டக உபநிஷத்தில் ஒரு பாடல். 15.3.11

ப்ரணவோ தணு: சரோ ஹ்யாத்மா ப்ரஹ்ம தல்லக்ஷயமுச்யதே /
அப்ரமத்தேன வேத்தவ்யம் சரவத் தன்மயோ பவேத் // 4 //

ஒளிமயமான பிரம்மத்தை அடைவது என்பதை வில்லில் நாண் ஏற்றி, இலக்கை வீழ்த்துவதற்கு ஒப்பிட்டு இந்த பாடலில் கூறப்பட்டுள்ளது. முதலாவதாக நாணை வில்லில் இழுத்து கட்டவேண்டும். அடுத்து அம்பை நாணில் வைத்து குறி பார்க்கவேண்டும். இலக்கும் அம்பும் ஒரே நேர்க்கோட்டில் வந்தபிறகு அம்பை பின்னால் இழுத்து எய்ய வேண்டும்.

வில் : ஓங்கார மந்திரம்
80நாண் : மனம்
அம்பு : உணர்வு
இலக்கு : ஒளிமயமான பிரம்மம்.

இதில் ஒவ்வொரு கட்டமும் முக்கியமானவை.

1, நாணை வில்லில் இழுத்து கட்டவேண்டும்.

மனதை அந்த ஓங்காரத்தில் நிலை நிறுத்துதல் வேண்டும். உங்கள் மனமே முழுவதும் ஓங்காரமாக திகழ வேண்டும். உங்கள் உடலிலுள்ள ஒவ்வொரு செல்லும் ஓம் ஓம் என ஒரே லயத்தில் உச்சரிக்க வேண்டும். மனம் ஓங்காரத்தில் கரைந்து அத்தனை செல்களும் ஓங்காரத்தில் அதிர வேண்டும். ஒட்டுமொத்த நீங்களும் வெறும் ஓங்காரமாகமட்டும் இருக்க வேண்டும்.

2, அம்பு மிக கூர்மையானதாக இருக்கவேண்டும்.

உணர்வை ஒன்று திரட்டுதலே அம்பாக இருக்கிறது. உணர்வு ஆழமானஅதன் ஆழ்நிலையான இக்கணம், இக்கணம் எனும் விழிப்புணர்வாக இருக்கவேண்டும். இன்னும் ஆழ்ந்து அதிர்வாக,- உங்கள் அனைத்து செல்களும் இதே உணர்வாக, இதே அதிர்வாக -அதிர்வில் ஒர்மையாக துல்லிய தன்மை(கூர்மை) இருக்க வேண்டும்.

3, அம்பை நாணில் வைத்து குறி பார்க்கவேண்டும்.

முதுகு தண்டு நேராக வைத்து நிமிர்ந்து அமர்ந்து, உணர்வு இக்கணம், இக்கணம் எனும் விழிப்புணர்வாக (இலக்கு) பிரம்ம தாகமாக உருவாகி, முதுகு தண்டின் அடிப்பகுதியான மூலதாரத்திலிருந்து புருவ மத்தியை (பிரம்ம துவாரம் - ஆக்ஞா) நோக்கி பொருத்துதல் வேண்டும்.

4, இலக்கும் அம்பும் ஒரே நேர்க்கோட்டில் வந்தபிறகு

வலிமையாக பலத்தை ஒன்றாக திரட்டி,சற்றும் பிசகாமல் ஒரே கவனத்துடன், இலக்கை நோக்குதல் வேண்டும். ஓம் எனும் வில்லை வளைப்பதின் மூலம், வில்லுக்கு கட்டுக்கடங்காத 81விசை உருவாகிறது - ஓம் எனும் சொல்லை தொடர்ந்து லயமாக உச்சரிக்க, உச்சரிக்க இந்த மந்திர ஓசையுணர்வு உங்கள் உடல் முழுவதும், அதிர்வை உண்டாக்கி உங்கள் மனத்துக்கு,உணர்வுக்கு ஒரு ஓர்மை நிலையை தருகிறது. இந்த

ஓர்மை நிலையே இலக்கின் நேர்கோடு என்பது.

5, அம்பை பின்னால் இழுத்து எய்ய வேண்டும்.

மனம் ஓம் என்ற ஓசையதிர்வில் லயித்து, தன் சுபாவம் விட்டு (தன் சுபாவம் என்பது எப்பொழுதும் வெளி நோக்கி செயல்படுவது. வெளியில் தன்னை சுற்றி நடக்கும் அனைத்து செயல்களிலும் தனது நினைவு தொகுப்பை சதா ஒப்பிட்டு பார்த்துக் கொண்டேயிருப்பது.) உணர்வோடு கலந்து உணர்வுக்கு உந்து சக்தியை தருகிறது.

.

உணர்வு இப்போது தனது 'மேலான' இலக்கு நோக்கி பாய எத்தனமாக இருக்கிறது. வில்லின் விசையும், தன் அறியாமையை விலக்கிய மனமும் உணர்வின் மேலான கூர்ந்த நோக்கும் ஓர்மையாக ஓர் செயலாக இணைந்திருப்பதை காண்கிறோம். இந்த செயலில் உள்ள ஒவ்வொரு அணுவுமே இலக்கை நோக்கியே செயல்பட தயாராக இருக்கிறது.

6, இப்போது நாணிலிருந்து அம்பு விடுபட்டால் நோக்கம் நிறைவுறும்.

அதாவது நமது சராசரி வாழ்வில் மனமும் உணர்வும் இணைந்தே செயல்பட்டு வருகிறது . பெருமூளை நமது நினைவகமாக இருக்கிறது. மனம் பெரு மூளையை தலைமையகமாக கொண்டு செயல்படுகிறது. உணர்வை மனம் தனது வசம் வைத்திருக்கிறது. தண்டுவடம் அனிச்சை செயல்களை கவனித்துக்கொள்கிறது.

அம்பு இப்போது பாயப்போகிறது.

அது நாணின் விசையை கொய்துக்கொண்டு பாய்ந்துவிடும். அம்பும் நாணின் விசையும் அந்த பிரம்மத்தில் சங்கமித்து விடும்.

அதாவது நான் எனும் மனதின் அறியாமையும், எனது எனும் மனதுக்கு கட்டுப்பட்ட உணர்வு கற்றைகளும் அந்த ஒளி பிரம்மத்திடம் சமர்ப்பிக்கப்பட்டால், எங்கும் நீக்கமற பிரம்மம் - பிரம்மம் மட்டுமே -திகழுவதை காணலாம்.

ஒளி தரிசனம். 18.3.11

இந்த 'நான்'மற்றும் 'எனது' எனும் அறியாமைகளை நாம் விட்டெறிவதன் மூலம் - இந்த ஒளி தரிசனம் மூலம் - நமக்கு என்ன கிடைக்கிறது ?

நமது மனதில் உள்ள இருள் அகலுகிறது.
ஒளி துலங்க, துலங்க மனம் தெளிவுறுகிறது.
குழப்பங்கள் முடிவுக்கு வருகின்றன!
அறிவு மேலும், மேலும் விளக்கம் அடைகிறது.
தேவையற்ற சந்தேகங்கள் தொலைகிறது.
உங்கள் மனதை சதா தூண்டிக்கொண்டிருக்கிற தீய பதிவுகள் ஒளிப்பட்டு நசிக்கிறது.
வினைப்பயன்கள் (தீவிர ஒளி தரிசனத்தால்) செயலற்ற நிலைக்கு வருகிறது.
எதிலும் ஒரு நிதானப்போக்கு உண்டாகிறது.
ஒரு சாந்த சொரூபம் வருகிறது.
மனிதன் முழு மனிதனாக மாற வாய்ப்பு கிட்டுகிறது.

அனிச்சை உலகு. 20.3.11

நமது தியானத்தின் பொழுது நாம் நமது உணர்வுகள் அனைத்தையும் ஒன்று திரட்டி மூலாதாரத்திலிருந்து மேல்நோக்கி ஆக்ஞா என்கிற புருவ மத்தியை நோக்கி தியானிக்க சொல்வதின் உபாயம் என்னவெனில்,

நாம் ஏற்கனவே பார்த்தது போல - அனிச்சை செயல் என்பது பெருமூளையின் தொடர்பின்றி உடலில் முதுகு தண்டை ஆதாரமாகக் கொண்டு நடைபெறும் செயல். அனிச்சை செயலுக்கு காரணமாக இருக்கும் நரம்பு மண்டலத்தின் உறுப்பு தண்டுவடம்.

ஆக! மூலாதாரம் தொடக்கி ஆக்ஞா வரை உள்ள நரம்பு பிரதேசம் அனிச்சை செயல்களுக்கான பிரதேசம்.

நாம் ஆக்ஞாவை நோக்கி (ஆக்ஞாவுக்கு தலைமை பொறுப்பை கொடுக்கும் விதமாக) தீவிர தியானம் செய்யும்பொழுது நாம் நமது (எண்ணங்களை உற்பத்தி செய்து கொண்டிடுக்கும்-83நினைவாற்றல் செயலுக்கு காரணமாக அமைவது பெருமூளை. பகுத்தறிவின் இருப்பிடம் பெருமூளை.) மனதையும்,

(அந்த மனதோடு தொடர்பு வைத்துள்ள உணர்வின் இணைப்பான) உணர்வையும்

நமது ஆக்ஞாவில் துவங்கும் ஒளியாகிய பிரம்மத்திடம் சமர்ப்பிக்கிறோம்.

இப்போது நமக்கு நமது அனிச்சை உலகு திறக்கின்றது. இப்போது நாம் நமது மனதை, நமது பக்கத்து வீட்டை எட்டிப்பார்ப்பது போல எட்டிப்பார்த்தால்,

- டி வியில் ‘சேனல்’ நின்றுபோனால் அலையும் வெண்புள்ளி, கரும்புள்ளிகள் போல –

எந்த தகவலுமற்று - எந்த வாசமும் அற்று வெறுமனே துடித்துக்கொண்டிருப்பது தெரியும்.
நினைவாற்றல் செயலுக்கு காரணமாக அமைவது பெருமூளையின் செயல்பாடுகளே, இதுவே 'நான்' மற்றும் 'எனது' எனும் அகங்காரமும், அறியாமையுமாகும்.

நீங்கள் இப்போது பெருமூளையின் வழிகாட்டுதல் இன்றி இருக்கிறீர்கள். அனிச்சை பாதுகாப்பு உங்களுக்கு தொடர்கிறது.

இராமலிங்க வள்ளலார் கீழ்கண்டவாறு கூறுவதை கவனியுங்கள். “மெய்ஞானம் ஏற்பட்டப்பின் அற்புதங்களெல்லாம் மனதால் அறியப்படாமலேயே அநிச்சை செயல்களாக வெளிப்படும். ஸ்தூல தேகம் தானாக பண்படும். ஆன்மா பரமான்ம நிலையில் செயல்படும்.”

ஆசீர்வாதம் 20.3.11

நான் எனும் மனதின் அறியாமையும், எனது எனும் மனதுக்கு கட்டுப்பட்ட உணர்வு கற்றைகளும் அந்த ஒளி பிரம்மத்திடம் ,சமர்ப்பித்து விட்டதால் எங்கும் நீக்கமற பிரம்மம் - பிரம்மம் மட்டுமே -திகழுவதை காணலாம்.எங்கும் ஒரே ஒளிவெள்ளமாக பாய்வதை காண முடியும்.

மனதையும், உணர்வையும் நாம் பிரம்மத்தில் சமர்ப்பித்து விட்டதால், நமக்கு எந்தவித 84எண்ணமோ, எந்தவித உணர்வுகளுமோ தோன்றது, நம்மில் ஒரு இம்மி அசைவோ

ஒரு சிறு அசங்கலுமோ கூட இராது. உங்களை ஒளியாக்கி அந்த பெரோளியிடம் இணைத்து விட்டீர்கள். இப்பொழுது மிக முக்கியமான கட்டம். எங்கும் ஒளி, ஒளி ஒளியைத்தவிர எதுவுமேயில்லை.

இப்பொழுது அந்த ஒளிக்காட்சியை அப்படியே நிலை நிறுத்துதல் வேண்டும். (still) ஒரு போட்டோ பிரேமைப்போல - இதன் தாத்பர்யம் என்னவெனில் - அந்த பிரம்மத்திலிருந்து துவங்கிய இயக்கம் தான் இவ்வளவு அணுக்களும், மூலக்கூறுகளும், பொருட்களும், மலை மடுவு, பூமி, நட்சத்திரம், அண்டம் என தோற்றமாகியுள்ளது.

உங்கள் அகக்காட்சியை இயக்கபூர்வமாகவே கவனித்து வந்தால் உங்கள் உணர்வு முதலில் செயல்பட துவங்கும். அடுத்து மனமும் செயல்பட துவங்கும். மனதையும், உணர்வையும் நாம் ஏற்கனவே சமர்ப்பித்து விட்டதால் அவைகளை மீண்டும் இயங்காமல் வைத்திருக்கவே ஒளிக்காட்சியை (ஸ்டில்) நிலை நிறுத்துதல் வேண்டும்.

அக்காட்சியை அசைவற்று நிலை நிறுத்தி விட்டால், அந்த ஒளித்தன்மை (உடலை விட்டு) தனித்தன்மையாகிவிடும்.

இப்போது நீங்கள் ஒளியாகி விட்டீர்கள். நீங்கள் உங்கள் உடல்வசம் இல்லை. உங்கள் உடல் அந்த
ஒளித்தன்மையிலிருந்து செயல்படும் கோடானு கோடி பிரம்மாண்ட அண்ட சராசர பொருள்களில் ஒரு பொருளே .

உடல்தன்மையும், ஒளித்தன்மையும் பிரிந்து நடக்க, இப்பொழுது அந்த ஒளியின் மூலத்தன்மை உங்களுக்கு பிடிபடும். அந்த ஒளியின் மூலத்தன்மை கருணாகர அருளேயாகும்.

நீங்கள் அந்த அருள் வெளியாகவே இருக்கிறீர்கள். அந்த அகண்டாகார அருள்வெளியிலிருந்து சுரந்து உங்கள் உணர்வு இதயத்திற்கு அருட்கதிர்கள் பாய துவங்கும்.

உங்கள் உணர்வு இதயம் இதுவரை நீங்கள் எந்த பிறவியிலும் அடையாத ஒரு புளங்காகிதத்தை அடையும்.

இப்போது உங்கள் சுற்றம் சூழ அனைத்து திசைகளிலிருந்தும், எட்டு திசை பதினாறு கோணம் மட்டுமல்ல, முன்னூற்று அறுபது டிகிரியிலிருந்தும் ஆசீர்வாதம் கிடைக்கிறது. அனைத்து திசை பொருட்களிலிருந்தும், அனைத்து திசை அணுக்களிலிருந்தும் உங்களை நோக்கி பாய்வது ஆசீர்வாதம், ஆசீர்வாதம், ஆசீர்வாதம் மட்டுமே!

ஏற்கனவே நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்தான் இதை நீங்கள் இதுவரை அறியாதிருந்தீர்கள். இன்று அறிந்து கொண்டீர்கள் . அவ்வளவே!

இனி உங்களுக்கு நடக்கும் செயல்களெல்லாம் உங்களுக்கு ஆசீர்வதிக்கப்பட்டதெனவே அறிவீர்கள்.

பிரம்மம் தன்னிலிருந்து தோற்றம் கொள்ளும் அனைத்தையும் ஆசீர்வதித்துக்கொண்டிருக்கிறது.

நானற்ற உலகு 20.3.11

இது கொஞ்சம் வித்தியாசமான விஷயம்.

எதையும் ஒப்பிட்டுப்பார்க்கும், பொருத்திப்பார்க்கும் மனம் உங்களில் இப்போது செயல்படவில்லை என வைத்துக்கொள்ளுங்கள். உங்கள் உணர்வு இக்கணம், இக்கணம் எனும் எண்ணம் கலப்பற்ற உணர்வதிர்வில் இருக்கட்டும். உங்களைச்சுற்றி நடக்கும் இந்த உலக நிகழ்வுகள் எப்படி உங்களை எந்த பாதிப்புமின்றி கடந்து போய் விடுகிறது என கவனியுங்கள்.வெறும் சாட்சியாக உலகை கவனியுங்கள்.

இந்த உலகம் எப்பொழுதும்போல் இயங்கிக்கொண்டிருக்கிறது. ஆனால் நீங்கள்தான் இல்லை. நீங்கள் இல்லாவிட்டாலும் இயங்கும்தானே!

நீங்கள் இல்லாத உலகை யோசித்து பாருங்கள். இந்த உலகில் நடக்கும் அனைத்து நிகழ்வுகளையும் உங்களால் காண முடியும், கேட்க முடியும், ஐம்புலன்களையும் உபயோகிக்க முடியும். ஆனால் நீங்கள் - எதையும் ஒப்பிட்டுப்பார்க்கும் மனம் - இங்கு இல்லை.

எதுவுமே உங்களை பாதிக்காது. நீங்கள் காணும் எதுவும் இக்கணம், இக்கணம், இக்கணத்தில் நடந்து கடந்து போகிறது. உங்கள் மனது எதையும் பதிவு செய்வதில்லை. நீங்கள் காணும் அனைத்தும் உங்களை கடந்து போய்விடும் . நீங்கள் அனைத்தும் கடந்து போகுமிடத்தில் இருக்கிறீர்கள்.எதிர்வரும் எவரும் புதியவரே! எதையும் உங்கள் மனதின் நினைவோடு பொருத்தி பார்ப்பதில்லை நீங்கள்.

இப்போது புதிதாய் பிறந்திருக்கிறீர்கள் நீங்கள். உங்களிடம் எதைப்பற்றியும் முன் நினைவு எதுவுமில்லை.

இப்போது உங்கள் எல்லைக்கூட உங்கள் உடலோடு மட்டுமல்ல. அளவற்று விரிந்து கிடக்கிறது.ஒட்டுமொத்த பிரபஞ்சத்தின் வெட்ட வெளியே நீங்கள்தான். அந்த வெளிக்குள் தோற்றம் கொண்டிருக்கும் பொருட்கள் அனைத்துமே உங்களுடையது தான், நீங்கள்தான். உங்களை விட்டு பேதமாக எதுவுமேயில்லை. உங்களில் தோன்றி தோற்றம் கொண்டிருப்பது தான் இந்த பிரபஞ்சம்.

, உணர்வை அப்பிராணியாக (மனதோடு தொடர்பின்றி) வைத்திருங்கள்.

நீங்கள் (நான் எனும் அறியாமை) இல்லாத உலகில் வாழுங்கள். இதுவும் ஒரு பயிற்சிதான்.

பிரபஞ்ச சூத்திரம் 20.3.11

நம்மிடம் - மைனஸ் மற்றும் + ப்ளஸ் என்கிற இரண்டுவித பிரக்ஞை தளம் செயல்படுகிறது. இன்றைய வாழ்வில் நாம் சராசரியாக இந்த மைனஸ் பிரக்ஞா தன்மையையே கைக்கொள்கிறோம்.
இந்த மைனஸ் பிரக்ஞா தன்மைதான் நமது இப்போதைய வாழ்க்கை முறை. இதில்

மைனஸ் தன்மையால் நமக்கு எதுவுமே முழுமையடைவதில்லை. எதிலும் திருப்தியும் அடைவதில்லை. ஏனெனில் இங்கு முழுமையே இல்லை. ஆனால் ஒரு முழுமையை நோக்கி சதா அலைவுறுகிறது அனைத்தும். ஆனால் எதுவுமே இங்கு முழுமை அடைய முடியாது என்பதே மைனஸ் விதி. இந்த தோற்ற பிரபஞ்சமே மைனஸ் விதியில் தான் இயங்குகிறது. இங்கு ஒரு முழுமை உண்டென கருதினாலும், அதன் இயக்கமும் மைனஸ் விதியில் தான் இயங்க வேண்டும். இங்கு மைனஸ் இயக்க விதி செயல்படுகிறது. இந்த தோற்ற பிரபஞ்சமே மைனஸ் இயக்கத்தால் தான் 87இயங்குகிறது. இந்த மண்ணுலகில் ஒரு மனிதன் மரணமடைந்தாலும் அவன் பிறவி இன்னும் முழுமையடையவில்லை என்கிறார்கள்.
ஒரு முழுமை என்பது நிலையானதாக இருக்கும். இங்கு எதுவமே நிலையானதல்ல. எல்லாமே சதா மாறிக்கொண்டேயிருப்பவைதான். இந்த மைனஸ் தன்மை ஒரு சமநிலையுறவே தவித்துக்கொண்டிருக்கின்றன . இந்த வினையுறுதலே விரிவடையும் இந்த தோற்ற பிரபஞ்சம் . நமது மனமும் அப்படியே சதா அலைவுறுகிறது.நாம் எப்போதாவது சந்தோசத்தில் திளைக்குபோழுதோ, அல்லது தன்னை மறந்த உடலுறவு நிகழ்வின் பொழுதோ சற்று பிளஸ் பிரக்ஞா தன்மையை உணர்கிறோம். அதாவது - நமது மைனஸ் பிரக்ஞா தன்மையை நாம் கைவிடும்பொழுது - இது நிகழ்கிறது. இச்சமயங்களில் நாம் நம்மையே மறந்திருப்பதால் இந்த நுட்ப நிகழ்வுகளை கவனிப்பதில்லை. இந்த மைனஸ் விதி ஆளும் உலகில் சதா ஏதாவது தேவைகள் இருந்து கொண்டேயிருக்கிறது. இந்த தேவையே தவிப்பாக இருக்கிறது. இது தேவை மட்டுமே உள்ள உலகு.

அடுத்து + ப்ளஸ் என்கிற பிரக்ஞா தன்மையைப்பற்றி பார்ப்போம். இந்த + ப்ளஸ் என்கிற பிரக்ஞா தன்மைதான் இந்துக்களின் பிரம்மம்-கடவுள் , முஸ்லிம்களின் அல்லா, பௌத்தர்களின் சூன்யம், கிருத்துவர்களின் பிதா.மனிதர் அனைவரின் அநுபூதி நிலையுமாகும். இது பூரணத்தன்மையுடையது மட்டுமல்ல, இங்கு அனைத்துமே பிளசாக இருப்பதால் முழுமையையும் கடந்து அபிரிமிதமான தன்மை வெளிப்படுகிறது. இது ஆசீர்வாதத்தையும், அருளையும் பிரயோகித்துக்கொண்டேயிருக்கிறது. இது முழுமையைக்கடந்து இயங்குவதால், தோற்றத்தன்மையையும் கடந்து நிலைபெற்று இயங்குகிறது. இந்த பிளஸ் பிரக்ஞை தன்மையில் பிரவேசிக்க முடிந்தவர்கள் அனுபூதிமான்கள் அவர்களிடமும் அளப்பரிய ஆற்றல் ஏற்படுகிறது. அவர்கள் அருளாளர்கள். அவர்களால் இந்த உடல்தன்மையைத்தாண்டி செயல்புரிய முடிகிறது. இந்த பிளஸ் பிரக்ஞா தன்மை எங்கோ கற்பனையில் இல்லை. இங்கே இப்போதே இருக்கிறது. மைனசும், பிளசும் கலந்தே இருக்கிறது.
சரி! இந்த பிளஸ் மற்றும் மைனஸ் இரண்டுக்கும் இடையில் எதாவது தளம் இருக்கிறதா? என்றால் , ஆம் இருக்கிறது என்றே தெரிகிறது . அதுவே பூரணமான, முழுமையான தளம் அதுவே ஒளித்தளம். ஒரு மனிதன் எப்போது பூரணமான ஒளித்தளத்தில் லயித்து நிற்கிறானோ அப்பொழுதே அறியாமைகள் அனைத்தும் நீங்கி அவன்முற்றுணர்வு, முற்றறிவு பெற்றவனாகிறான் அவனிடம் எந்த மயக்கமுமில்லை, எந்த குழப்பமுமில்லை. அவன் பூரணன்.
பிரபஞ்சத்திலும் இந்த மைனஸ் தளத்துக்கும், பிளஸ் தளத்துக்கும் இடையில் இருப்பது அந்த 88ஒளியே!
- , + , 0 இதுதான் பிரபஞ்ச சூத்திரம்.

'நான்' உருவான கதை. 22.3.11

நம்மிடம் இரண்டு 'நான்'கள் இருகின்றன. நமக்கு இரண்டு வழிகள் உள்ளன. ஒன்று அறியாமையான 'நான்' எனும் கருதுகோள். இன்னொன்று கர்த்தா. இந்த நான்-இல்லாத ஒன்றை இருப்பதாக புனையும் கருத்து. அது நமது எண்ணங்களால் உருவாக்கப்பட்டது. அந்த எண்ணங்களுக்கு ஆதாரம் நினைவகத்தில் உள்ள படிம நினைவுகள். நினைவு (memory) என்பது இறந்த காலத்தினுடையது. இந்த நினைவு தொகுப்பே நான். இதே தொகுப்பை வேறொரு படிமுறையில் உங்களால் தொகுக்க முடிந்தால், நீங்கள் வேறொரு நானாக உங்களை கருதுவீர்கள்.

இந்த நானின் மையம் உங்கள் பாதுகாப்பை முன்னிருத்தியதாக இருப்பதை கவனியுங்கள்.

உங்களை சுற்றி உள்ளவைகளோடு நீங்கள் போராடி உங்களை காத்துக்கொள்ள வேண்டியிருந்ததால் உருவான பாதுகாப்பு மையம் அது. முதன் முதலில் உங்களுக்கு எப்போது ஆபத்து வந்ததை அறிந்தீர்களோ அப்போது விழுந்த விதை அது. - தவிரவும் இந்த தன்மை பரம்பரை பரம்பரையாக கை மாற்றி கொடுக்கப்பட்டுள்ளது - இந்த நான் இந்த உடலை மட்டும் நான் என கருதுவதையும் கவனியுங்கள். இந்த நான் எனும் பாதுகாப்பு தன்மை தனக்கென ஒரு சட்ட திட்ட வளையத்தை உருவாக்கி வைத்துக்கொண்டுள்ளது. அந்த வளையம் தான் நான். இந்த நானுக்கு இது தான் எல்லை.

இந்த பூமியில் நாம் காணும் அனைத்து தாவர வகை உயிரினங்கள், நுண்ணுயிரினங்கள், நகர்வன, பறப்பன, நீந்துவன, நடப்பன மற்றும் விலங்குகள், மனிதர்கள் என உயிருள்ள அனைத்துக்குமே நான் என்ற தன்மை இருக்கிறது. உயிருள்ளதற்கெல்லாம் இந்த நான் தன்மை இருக்கிறது.

உயிருக்கும் ஜடத்திற்கும் உள்ள வித்தியாசமே இந்த நான் தன்மை தான்.

சரி இந்த நான் எப்படி செயல்படுகிறது என காண்போம். நீங்கள் காலையில் விழித்தெழுந்து வாசலில் நின்று பல் துலக்கிக்கொண்டிருந்தீர்கள். உங்களுக்கு நாலாயிரம் ரூபாய் தரவேண்டிய முத்துசாமி சாலை வழியே போகும்பொழுது உங்கள் பார்த்து விட்டு 'காணாததைப்போல்' போகிறான். விட்டு விடுவீர்களா?
உங்கள் மனம்- இந்த நான்- உடனே செயல்பட தொடங்குகிறது. “பார்த்து விட்டு 'காணாததைப்போல்' போகிறான். இவன் நமக்கு பணம் கொடுப்பானென்று என்ன நிச்சயம்? அவனை உடனே துரத்தி பிடித்து பணத்தைககேள்” என உங்களுக்கு உங்கள் மனம் கட்டளை இடுகிறது.

அந்த எண்ணம் உங்களுக்கு எப்படி தோன்றியது?

நீங்கள் காலையில் உங்கள்பாட்டுக்கு வாசலில் நின்று பல் துலக்கிக்கொண்டிருந்தீர்கள்.உங்களுக்கு நாலாயிரம் ரூபாய் தரவேண்டிய முத்துசாமி சாலை வழியே போகும்பொழுது உங்கள் பார்த்து விட்டு 'காணாததைப்போல்' போகிறான்.அவனைப்பார்த்ததும் உங்கள் மூளையில் அவனைப்பற்றிய

நினைவுத்தொகுப்பு திறக்கப்பட்டு அவனைப்பற்றி அனைத்து தகவல்களும் உங்களுக்கு தொகுத்து தரப்பட்டு "பார்த்து விட்டு 'காணாததைப்போல்' போகிறான். இவன் நமக்கு பணம் கொடுப்பானென்று என்ன நிச்சயம்? " என உங்களை உசுப்பியும் விடுகிறது.

இந்த தகவல் உங்கள் பெரு மூளையிலிருந்து நியூரான் செல்களில் பதிந்து (நியூரான் செல் தொடர் வழியாக) ஒரு மின்னோட்டம் மூலம் உணர்வுகளுக்குப் போய் உணர்வின் வழியாக உடல் உறுப்புகளுக்கு போய், பின் அது செயலாக மாறி - எப்படியோ துரத்திப்பிடித்து முத்துசாமியை "இன்னும் ஒரு வாரத்தில் பணத்தை கொடுத்து விடுகிறேன்" என சொல்ல வைத்து விட்டீர்கள்.

1, எண்ணம் தோற்ற நிலைப்பாடு : எண்ணம் > பாதுகாப்பு > சுயம் > நினைவகம் > பெரு மூளை.
உங்களில் எண்ணம் தோன்றுவதற்கு உங்கள் பாதுகாப்புணர்வு காரணமாக இருக்கிறது.
உங்கள் பாதுகாப்பு தன்மைக்கு உங்கள் சுயம் காரணமாக இருக்கிறது.
உங்கள் சுயம் உருவாவதற்கு நினைவக தொகுப்பே (கருத்துரு) காரணம்.
உங்கள் நினைவகம் பெரு மூளையில் இருக்கிறது.

2,எண்ணம் செயல் நிலைப்பாடு : எண்ணம் > உணர்வில் மாற்றம் > உடல் செயல்.
எண்ணத்தினால் உணர்வில் மாற்றம்.
உணர்வினால் உடலில் மாற்றம்.
உடல் மாற்றமே செயலாக பரிணமிக்கிறது.

இந்த நான் தன்னை கர்த்தா என எண்ணிக்கொள்கிறது. இந்த நான் எனும் கருதுகோள் கர்த்தாவாக முடியுமா?

உங்கள் கடந்த கால நிறைவேறாத ஆசைகளே நான் எனும் கருத்துருவாக உருவாகி உள்ளது. ஏற்கனவே முடிந்துபோன காலாவதியான தகவல்களை திரட்டி அதற்கொரு வடிவம் கொடுத்தால் அதுதான் நீங்கள். ஏற்கனவே நிறைவேறாத ஆசைகள் மீண்டும் நிகழ்ந்து அவைகள் முற்றுப்பெறுமா?

இறந்த காலத்தை நிகழ்காலத்தில் நிகழ வைக்க துடிக்கும் உங்கள் அறியாமையை என்ன சொல்ல!.

உங்களோட இந்த 'நான்' வெறும் எண்ணம் மட்டுமே!

உணமையான கர்த்தாவோ இவை எல்லாவற்றையும் கவனித்துக்கொண்டிருக்கிறது.

எல்லாம் தெளிவாகிவிட்டது.

சரி , உங்களின் 'நான்' அறியாமை எங்கு தொடங்கியது என தெரியுமா?

எல்லாம் பாதுகாப்பாக இருக்கிறது. நாமும் எந்த ஆபத்தும் இல்லாது இருக்கிறோம். 'சரி இப்போ நாம் என்ன செய்யலாம்?' என உங்கள் சுயம் நினைத்த போது, "எனக்காக நீ இனி செயல்படலாம்" என உங்களது நிறைவேறாத ஆசைகளின் தொகுப்புகள் சூழ்ந்து

கொண்டு உங்கள் சுயத்தை செயல்பட வைத்தது.

இதுதான் உங்களின் ‘நான்’ உருவான கதை. இல்லாத ஒன்றை இருப்பதாக புனைந்த கருத்து இதுதான்.

வெளி மின்னோட்டம் - உள் மின்னோட்டம். 23.3.11

இந்த பிரபஞ்சமே வெறும் மின்னோட்டம்தான்.
இந்த தோற்ற பிரபஞ்சத்தில் செயல்படும் மின்னோட்ட வகையானது மூன்று தன்மைகளாக பிரிந்து செயல்படுகிறது.
நிலைமின், நேர்மின், எதிர்மின் என.
இந்த தோற்ற பிரபஞ்சத்தில் உள்ள எல்லா பொருட்களையும்போல நாமும் ஒரு பொருள்தான்.
நாம் அணுக்களால் கட்டப்பட்டிருக்கிறோம் .
ஒத்திசைவான அணுக்கள் கூடி மூலக்கூறுகளாக உருவாகியுள்ளது.
மூலக்கூறுகள் கூடி செல்களாக உருவாகியுள்ளது.
செல்கள் கூடி திசுவாக உருவாகிறது.
திசுக்கள் கூடி உறுப்பாக உருவாகிறது.
உறுப்புகள் இணைந்து உடலாக இருக்கிறோம்.

உறுப்புகளுக்கிடையிலும் மின்னோட்டம் இருக்கிறது.
திசுக்களுக்கிடையிலும் மின்னோட்டம் இருக்கிறது.
செல்களுக்கிடையிலும் மின்னோட்டம் இருக்கிறது.
மூலக்கூறு களுக்கிடையிலும் மின்னோட்டம் இருக்கிறது.
அணுக்களுக்கிடையிலும் மின்னோட்டம் இருக்கிறது.
அணுக்களிலுள்ள துகள்களுக்கிடையிலும் மின்னோட்டம் இருக்கிறது.

இத்தனை வகை மின்னோட்டங்களும் - வெளி மின்னோட்டங்கள்.

உள் மின்னோட்டமென ஒரு மின்னோட்டம் இருக்கிறது.

ஒவ்வொரு அணுவினுள்ளும் இந்த உள் மின்னோட்டமானது இருந்து, மற்ற அணுக்களை தன்னோடு இணைக்கிறது. அது பிரபஞ்சம் முழுமைக்கும் ஒரே இணைப்பாக இணைத்து 'ஒன்றாக' ஒரேத்தன்மையில் இருக்கிறது.

இந்த பிரபஞ்சத்தை இணைத்து கட்டி வைத்திருப்பது இந்த உள் மின்னோட்டமே!

வெளி மின்னோட்ட தோற்ற பிரபஞ்சம் உடு மண்டலமாக, நட்சத்திரமாக, சூரிய குடும்பமாக, கிரகங்களாக, பூமியாக, பொருட்களாக, மூலக்கூறுகளாக, தனிமமாக, அணுக்களாக என 'பலவாகி' பல தோற்றங்களில் செயல்படுகிறது.
இதற்க்கு காரணம் வெளிமின்னோட்டமே!
பொருள், இடம், வெளி, காலம், இயக்கம், எண்ணம், செயல் என பலவிதமாக பரிணாமப்பட்டு தொடர்ந்து
தோற்ற மாற்றங்களை (மாயா) ஏற்படுத்திக்கொண்டேயிருக்கிறது.

வெளிமின்னோட்டத்தில் பலவகைப்பாடுகள் இருக்கின்றன.

இதுவே மைனஸ் பிரபஞ்சமெனப்படுவது. .
இங்கு எதுவும் நிலைபெறாது.

மற்றொன்று உள் மின்னோட்டம்.
அது இணைப்பாக இருப்பது. 'ஒன்றாக' இருப்பது.
அந்த உள் மின்னோட்டத்தில் பிரவேசிக்க முயற்சி செய்யுங்கள்.

‘ஸத்’ 27.3.11

முண்டக உபநிஷத்தில் வரும் ஒரு அழகான பாடல் இதோ!
த்வா ஸுபர்ணா சயுஜா ஸகாயா

ஸமானம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே/
தயோரன்ய: பிப்பலம் ஸவாத்வத்தி
அனச்னன் அன்யோ அபிசாகசீதி // 1 //

பொருள்: இணைபிரியாத ஒரே போன்ற இரண்டு பறவைகள் ஒரே மரத்தில் அமர்ந்திருக்கின்றன. அவற்றுள் ஒன்று பழத்தை ருசித்து தின்கிறது. மற்றொன்று தின்னாமல் பார்த்துக்கொண்டிருக்கிறது.

பழத்தை தின்னும் பறவை ஜீவன் (மனம் + பிராணன்= நிழல்)
சும்மா பார்த்துக்கொண்டிருக்கும் பறவை (ஆன்மா= நிஜம்.)

மேலும் இப்படி கூறுகின்றனர் :- பொதுவாக நாம் நம்மை ஜீவனுடன் அதாவது மனதுடனும், உடம்புடனுமே ஒன்றுப்படுத்தி காண பழகியுள்ளோம். அவை இரண்டும் நிழல். உண்மையற்றவை. மாறக்கூடியவை. இவை கொண்டுவரும் அனுபவங்களுடன் நம்மை ஒன்றுபடுத்தி கொள்ளும்போது இன்ப துன்பங்களுக்கு உள்ளாகிறோம். பிறவிச்சுழலில் உழல்கிறோம்.

நம்முள் உள்ள ஆன்மா நிஜம். அது அந்த பிரம்மத்திலிருந்து தோன்றிய பொறி. எனவே அதன் அம்சம் கொண்டது. அதனுடன் நம்மை ஒன்று படுத்திக் கொள்ளும்பொழுது நாம் கவலைகளிலிருந்து விடுபடுகிறோம்.
நமது மகிமையில் திளைக்கிறோம்.

இதோ! மேற்கண்ட விளக்கத்திற்கு ஒரு இயற்பியல் விளக்கம்.

இயற்பியலில் குவாண்டம் தியரி சொல்வது ‘எந்தப் பொருளுக்கும் அலைப் பண்பும் உண்டு, அதே சமயம் துகள் பண்பும் உண்டு’என்கிறது. இந்த பிரபஞ்சத்தில் இருவகையான பண்புகள் இருப்பது தெரியவருகிறது.

இந்த தோற்ற பிரபஞ்சம் துகள் பண்பானது. துகள்கள் எலக்ட்ரான், புரோட்டான், நியூட்ரான்களாக, பின் அணுக்களாக, பல்வேறு தனிமங்களாக, மூலக்கூறுகளாக,(மூலக்கூறு என்பது, சில அணுக்கள் மிக நெருக்கமாக ஒன்றாகப் பிணைக்கப்பட்டு, ஒரு தனிப்பொருள் போல சிறப்பான வேதியியல் இயற்பியல் பண்புகளுடன் இயங்கும் அடிப்படைப் பொருள் கூறு ஆகும்.) பொருட்களாக, தோற்ற பிரபஞ்சம் விருத்தியாகிறது.

துகளின் தன்மை - வினை வேறுவேறு , எலக்ட்ரான், புரோட்டான், நியூட்ரான்தன்மைகள் - வினைகள் வேறுவேறு, அணுக்களின் தன்மைகள் - வினைகள் வேறுவேறு, தனிமங்களின் தன்மைகள் - வினைகள் வேறுவேறு, மூலக்கூறுகளின் தன்மைகள்- வினைகள் வேறுவேறு, பொருட்களின் தன்மைகள்- வினைகள் வேறுவேறு என பல்வேறு தன்மைகள்- வினைகள் விகல்பமாகி முரணான உலகு தோற்றப்படுகிறது.

அலைப்பண்பானது துகள் தன்மையில்லாததால் அது தோற்றப்படுவதில்லை. அலைநிலையே ஆதாரத்தளம். அந்த அலைநிலையிலேயே பிரபஞ்சம் நிலைக்கொண்டிருக்கிறது. அது ஏதும் விகல்பமின்றி ஒரே ஏகத்தன்மையில் இருக்கிறது. மாறுதலே இல்லாத கடையுண்மை என்பதை அடிக்கோடிடுவதற்காக அதை ‘பரப்பிரம்மம்’ என்றும் கூறுவதுண்டு. அங்கிங்கெனாதபடி எங்கும் விளங்கியதாய் இருக்கும் இப்பரம்பொருளைப் பற்றி ‘இருக்கிறது’ என்பதைத்தவிர வேறு ஒன்றும் பேசிவிடமுடியாது. வெறுமனே இருக்கும், அவ்வளவுதான். அது பேசாது, பேசவொண்ணாதது; பார்க்காது, பார்க்கவொண்ணாதது; காரணிக்காதது, காரணத்தில் அடங்காதது; காரியம் செய்யாதது; காரியத்தினால் ஏற்படாதது – இப்படிச் சொல்லிக்கொண்டே போகலாம். முக்காலத்திலும் இருப்பதனால் அதை ‘இருப்பு’ என்று பொருளுடைத்த ‘ஸத்’ என்ற ஒரே சொல்லால் வேதங்கள் சொல்லிவிடுகின்றன. ‘ஸத்’ என்றால் நிலை பெயராத உண்மை.

ஆதியுணர்வு 28.4.11

இந்த பிறவியில் உங்களிடம் ஆரம்பித்த முதல் உணர்வு எத்தகையது என்பது உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா?
அந்த ஆதியுணர்வை நீங்கள் எப்போதாவது யோசித்ததுண்டா?
நீங்கள் உங்கள் தாயின் கருப்பையில் உருவாக ஆரம்பித்தவுடன் உங்களிடம் முதன்முதலில் உருவான அவயவங்கள் எது தெரியுமா?
உங்கள் இதயமும் காதுகளும்தான் முதன்முதலில் உருவாகிறது என டாக்டர்கள் சொல்கிறார்கள்.
ஆக
உங்களின் முதல் உணர்வு அந்த ஆதியுணர்வு உங்கள் இதயத்திற்கும் காதுகளுக்கும் இணைப்பு ஏற்பட்ட உணர்வே உங்கள் ஆதியுணர்வு.
ஒரே சமயத்தில் இதயமும், காதுகளும் உருவாகின்றன. அந்த உணர்வுதான் இந்த அவயவங்களை உருவாக்குகிறது.
இதுவே இந்த பிறவியில் உங்களுக்கு ஏற்ப்பட்ட முதல் உணர்வு.
ஏன் மனித உயிரின் முதல் உணர்வே இதுதான்.
இந்த உணர்வே மனிதனின் அடிப்படையுணர்வும்ஆகும்.உங்கள் இருப்பும் இங்கேயேயுள்ளது .
உங்கள் தியான பொழுதில் மூலாதாரத்திலிருந்து ஆக்ஞாவை நோக்கி உங்கள் உணர்வுகளையெல்லாம் ஒன்று திரட்டி தியானிக்கும்பொழுது பெருமூளையில் செயல்படும் எண்ணங்களாகிய மனம் (துண்டித்து) தனித்து விடப்பட்டு, உங்கள் அனிச்சை மண்டலமான முதுகுத்தண்டுவட பிரதேசத்திலேயே ஒன்றி ஆக்ஞாவில் தோன்றும் ஒளியில் மனங்கடந்து நீங்கள் லயிக்க, அப்போது உங்களுடைய இந்த ஆதியுணர்வு விழித்து கொள்கிறது. அக்கணம் ஆக்ஞாவில் உதித்த முற்றறிவும்,

இதயத்தில் உதித்த முற்றுணர்வும் இணைந்து பிரம்மநிலை உண்டாகிறது. இந்த மெய்யுணர்வே குவாண்டம் தியரியில் சொல்லப்பட்ட அலைப்பண்பு ஆகும்.

1, “அஹம் பிரம்ம அஸ்மி” (பிருஹதாரண்யக உபநிடதம் - யஜுர் வேதம்) ‘நான் பிரம்மமாக இருக்கிறேன்’
2, “பிரஞ்ஞானம் பிரம்ம” (ஐதரேய உபநிடதம் – ரிக் வேதம்) ‘மெய்யுணர்வே பிரம்மம்’
3, “தத் த்வம் அஸி” (சாந்தோக்ய உபநிடதம் – ஸாம வேதம்) ‘அதுவாகவே நீ இருக்கிறாய்’.
4, “அயமாத்மா பிரம்ம” (மாண்டூக்ய உபநிடதம் – அதர்வ வேதம்) ‘இந்த ஆன்மா பிரம்மமே’ எனும்,
இப்படிப்பட்ட மகா வாக்கியங்கள் இந்தநிலையால் ஏற்பட்டதே! .

இயல்விதி - சிறப்புவிதி 29.4.11

இயக்கவிதி என்னும் விதி பிரபஞ்ச பொதுவிதியானது .
மற்றொன்று சிறப்பு விதி, இந்த இயல்புகதியை மீறும் சுயம்.
பிரபஞ்ச பொதுவிதியானது பிரபஞ்சத்தை தோற்றுவித்து இயக்கி நிலைநிறுத்துகிறது.
நட்சத்திரம் அளவுக்கு பெரிய பொருளுக்கும், இம்மியளவுள்ள சிறிய பொருளுக்கும் ஒரே பொது விதிதான்.
இதை ரிதம் என சொல்லுகிறார்கள்.
பிரபஞ்சத்திலுள்ள அனைத்து பொருட்களும் ஈர்ப்புவிசைகள், மின்னாற்றல், (நேர்மின், நிலைமின், எதிர்மின்) போன்ற இயல்பு கதிக்குட்பட்டு இயங்குகின்றன.
ஒரு பொருள் என்ற தன்மையில் நம் உடலும் இதற்கு விதிவிலக்கல்ல!
இந்த பொது விதியை தொடர்ந்தே அனைத்துவித தோற்றமும், இயக்கமும், பராமரிப்பும் நடந்தேறி வருகிறது கண்கூடு.
இந்த பிரபஞ்சத்தில் உயிரை தோற்றுவித்ததும் இந்த பொதுவிதியே!
95ஆயினும் இந்த உயிர்கள் பொது விதியில் கட்டுண்டு இயங்கினாலும் பொது விதியையும் மீறி அவ்வப்போது செயல்புரிகின்றன.
இப்படி அவைகளை மீறி செயல்பட வைப்பது அவற்றின் சுயம்.
பொது விதியை மீறி (அல்லது விலகி) செயல்படும் செயலுக்கு விருப்ப செயல் என பெயரிடலாம்.

நமது உடலில் இந்த பொதுவிதியை கடைபிடிக்கும் பகுதி நமது அனிச்சை மண்டலமாகும்.

இந்த அனிச்சை மண்டலத்தையும் இந்த பொதுவிதியே படைத்துள்ளது.
இந்த விருப்பசெயலை கடைபிடிக்கும் பகுதி பெருமூளை பகுதியான மனம்.
இந்த அனிச்சை மண்டலம் விருப்பசெயல்கள் அனைத்தையும் ஏற்று நடந்துகொண்டிருக்குமானால் நமக்கு எத்தனையோ விபத்துக்கள் நடந்து முடிந்திருக்கும்.
அனைத்து விருப்ப செயல்களையும் அவை ஏற்றுக்கொள்வதில்லை . இந்த அனிச்சை மண்டலத்திலும் ஓர் அழகான ஒழுங்கமைவு இருக்கின்றது.
அந்த பொது கதியை மீறின விருப்ப செயலையே புத்தர் " ஆசையே அனைத்துவித

துன்பங்களுக்கும் காரணம் " என்றார். இந்த ஆசை என்பது 'நான்' வாழவேண்டும் எனும் ஆசையே!
இந்த 'நான்' வாழும் ஆசையை அந்த பொது கதியிடம் ஒப்படைத்து விட்டால் - சரண் செய்து விட்டால் - பிரபஞ்சத்தின் இயல்புகதிக்கு நீயும் வந்து விடுகிறாய். நீ சாக மாட்டாய், பயம் வேண்டாம் உன்னை உன் அனிச்சை மண்டலம் காப்பாற்றிக்கொள்ளும். அந்த வாழ்வு ஒரு ஆனந்தமய வாழ்வு.
இந்த 'நான்' வாழவேண்டும் எனும் ஆசையை சிறு வயதிலேயே வெறுத்து ஒதுக்கி விட்டவர்கள் தான் ரமண மகரிஷி. மற்றும் ஆந்திர மாநிலத்து பாலயோகி இருவரும்.

நமது பொருண்மை. 31.3.11

ஒரு பொருள் ஒளியின் வேகத்தில் பயணம் செய்தால் அந்த பொருளே மறைந்துவிடும். இது சார்பியல் தத்துவம்.
உதாரணத்திற்கு நமது பூமி ஒளியின் வேகத்தில் - ஒரு செகண்டுக்கு, 1,86,300 கி. மீ வேகம் - பயணம் செய்தால் பொருள்,வெளி,இயக்கம்,காலம், இடம் எதுவுமே இருக்காது. ஏன், இந்த பூமியே இருக்காது.

எல்லாம் மறைந்துபோகும். இடம் காலம் என்பது நிரந்தரமானதல்ல அவை சார்புடையவை.

ஒளி வேகத்திற்கு உட்பட்டது மட்டுமே பொருளாக இருக்க முடியும்.
இதுவே துகள்பண்பு பிரபஞ்சம்.

நாம் நிரந்தரம் என நினைக்கும் அளவுக்கூறுகளான காலம், இடம்,பொருள் யாவும் நிரந்தரமானதல்ல! ஒளி ஒன்றைத்தவிர .

ஒளி நிரந்தரமானது. இது ஐன்ஸ்டீனின் சார்பியல் கோட்பாடு.

ஒளி ஒரு தனிமுதற்பொருள்.

அலைப்பண்பு பிரபஞ்சத்திற்கும் துகள்பண்பு பிரபஞ்சத்திற்கும் இடையே இருந்து இரண்டையும் இணைக்கும் பாலமாக செயற்படுவது அந்த தனிமுதற்பொருளான ஒளியேயாகும்.

எந்த பொருளின் பொருண்மை எல்லையற்றதோ அப்பொருளே ஒளியின் வேகத்தை பெறமுடியும்.

ஒளியின் வேகத்தையும் மிஞ்சிய பொருண்மையுடைய ஒன்றே அலைப்பண்பு பிரபஞ்சத்தை நுகர முடியும்.

உயிருள்ள நாம் அந்த எல்லையற்ற தன்மையுடைய பொருண்மையை அடையமுடியும். அதன் மூலம் அந்த அலைப்பிரபஞ்சத்தில் நாம் நுழைய முடியும்.
இந்த மண்ணில் ஏற்கனவே எண்ணற்ற மகான்கள் இந்த எல்லையற்ற தன்மையுடைய பொருண்மையை அடைந்திருக்கிறார்கள்.

அதன்மூலம் அவர்கள் அந்த அலைப்பண்பு பிரபஞ்சத்திற்குள் பிரவேசித்திருக்கிறார்கள்.

நமது உடலிலேக்கூட துகள் பிரபஞ்ச நிகழ்வுகளும், அலைப்பிரபஞ்ச நிகழ்வுகளும் நடப்பதை காணமுடியும்.
97நமது நினைவகமான மனதை கையிற்கொண்டு காணும், எண்ணங்களை (கருத்து, நான், இடம், காலம், இந்த தோற்ற உலகு) மையமாக கொண்ட நிகழ்வுகள் துகள் பிரபஞ்ச நிகழ்வாகும். இவைகள் தனித்தனி எல்லைகள் உடைய அளவுககூறுகள்.

ஒரு தன்னிகரற்ற உணர்வு மூலம் எப்பொழுது உங்களை, உங்கள் சுற்றத்தை, அனைத்தையும் மறந்த அந்த எல்லைகளற்ற நிலையில், ஒரு அதீத உணர்வுத்தன்மையில் திளைத்தீர்களோ!

அப்போது உங்கள் அலைப்பிரபஞ்ச நிகழ்வு உங்களை கடந்து போனதை அறிந்திருப்பீர்கள்.

பரமஹம்ஸ யோகானந்தரின் ' ஒரு யோகியின் சரிதை' பக்கம்: 422 ல், " எழுதப்பட்டிருப்பதை கவனியுங்கள்.

தங்கள் உடலையும் மற்ற பொருட்களையும் உருவாக்கவும் அல்லது உருவழிக்கவும், ஒளியின் வேகத்தில் செல்லவும் மற்றும் படைக்கும் திறன் உள்ள ஒளிக்கதிர்களைக் கொண்டு எந்த உருவத்தையும், ஒரு கணத்தில் வெளிக்கொணரவும் திறன்பெற்ற மகான்கள் இந்த விதிமுறை நிபந்தனையை நிறைவேற்றி இருக்கிறார்கள். அதாவது அவர்களின் பொருண்மை எல்லையற்றது.

"பூரணத்துவம் அடைந்த ஒரு யோகியின் உணர்வுநிலை குறுகிய உடலுடன் ஒன்றாமல்எளிதாக,பிரபஞ்சத்தின்அமைப்புடன் ஒன்றிவிடுகிறது" இவ்வாறு பரமஹம்ஸ யோகானந்தர் சொல்லியிருக்கிறார்.

எதுவெல்லாம் தனித்து எல்லையுடையதாக இருக்கிறதோ அவையெல்லாம் துகள் பிரபஞ்சத்துக்குள் வரும். எது தனித்தன்மையான தன்னையே இழந்து எல்லைகளற்ற நிலையில் வியாபிக்குமோ அதுவே அலைப்பிரபஞ்சம்.

உறைக்குள் உறங்கும் வாள். 1.4.11

நாம் இந்த துகள் பிரபஞ்சத்திலிருந்து விடுபட்டு , அந்த அலைப்பிரபஞ்சத்திற்குள் பிரவேசிக்க - நாம் நமது உடலளவில் உள்ள பொருண்மையை, உடல் அளவிலிருந்து பிரபஞ்ச அளவுக்கு, எல்லைகளேயற்ற வியாபக நிலைக்கு விரிவாக்க - இந்த உபாயம் நமக்கு துணைபுரியுமாவென பார்க்கலாம்.

திவ்ய உடல் எனும் கத்திக்கு உறையாக இருப்பது பூரண உடல்.

இந்த பூரண உடலுக்கு உறையாக இருப்பது இணைப்பு உடல்.

(இணைப்பு உடல் என்பது ஒவ்வோர் உடம்பும் அந்தந்த நிலையில் பிரபஞ்சத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. அதாவது நமது ஸ்தூல உடம்பு ஸ்தூல பிரபஞ்சத்துடனும், நமது மன உடம்பு மன பிரபஞ்சத்துடனும் இணைக்கப்பட்டுள்ளன. எல்லா மனங்களும் ஒரே தன்மையுடையவை. ஒரே பெரிய மனத்தின் பகுதிகள். தன் மனதை அறிந்து அடக்குபவன் ஒவ்வொரு மனதின் ரகசியத்தை அறிகிறான். இந்த பிரபஞ்ச புத்தியே இணைப்பு உடல்.)

இந்த இணைப்பு எனும் உடலுக்கு உறையாக இருப்பது மன உடல்.

இந்த மன உடலுக்கு உறையாக இருப்பது பிராண உடல்.

இந்த பிராண உடலுக்கு உறையாக இருப்பது உணர்வு உடல்.

இந்த உணர்வு உடலுக்கு உறையாக இருப்பது அன்னமய உடல்.

இந்த அன்னமய உடலே நமது ஸ்தூல உடல்.

1, ஸ்தூல உடல் ,
2, உணர்வு உடல்,
3, பிராண உடல்,
4, மன உடல்,
5, இணைப்பு உடல் ,
6, பூரண உடல்,
7, திவ்ய உடல்

இந்த ஏழு உடலுக்கும் ஏழு வித உணர்வுதன்மைகள் இருக்கின்றன. இந்த உணர்வு அடுக்குகளை ஒருவர் தன்னுணர்வின் மூலம் உணர்ந்து பார்த்தல் அவசியம்.

இந்த வித உணர்வுகளை ஒருவர் ஆழ்ந்து ஆராய்தல் வேண்டும். நித்தம் பயிற்சி செய்து வரல் வேண்டும்.

இனி தியானமுறை 2.4.11

நாம் தியான பயிற்சிக்குள் நுழையும் முன் அறியவேண்டிய அடிப்படை விஷயங்கள்மூன்று.

1, நமக்கு ஒரு ஸ்தூல உடலும், ஆறு சூட்சும உடல்களும் செர்ந்தேயுள்ளது. ஸ்தூல உடல் நம் கண்களுக்கும் மற்றவர் கண்களுக்கும் புலனாகும். ஆனால், சூட்சும உடல் நம் அறிவிற்கும், நம் உணர்வுக்கு மட்டுமே புலப்படும். தியான பயிற்சியின் மூலம் முறையாக ஒவ்வொரு உடலாக விழிப்படைய வைக்க வேண்டும்.

1,ஸ்தூல உடல்-
2,உணர்வு உடல் -
3,ஒளியான பிராண உடல்-
4,வெளியான,எல்லையற்ற மன உடல்-
5, இயக்கம் கடந்த, இணைப்பு எனும் மஹத் உடல்-
6,பூர்ண நிறைவான புத்தியுடல்-

7,அருள் பெருகும் ஆனந்த உடல்.

2, நமது உணர்வை நாம் நான்கு வித தன்மைகளில் செயல்படுத்த முடியும்.

1, நிதான கதி. 2, லய கதி, 3, உச்ச கதி. 4, லய உச்ச கதி. (லய உச்ச கதி எனும் நான்காம் நிலையே விழிப்புணர்வு எனப்படுவது.)

நிதானம், லயம், உச்சம், உச்சலயம்.

நிதானம் என்பது சரியாக பொருந்தி வருமளவுக்கு முயற்சித்து செய்துவரல்.
லயம் என்பது பொருந்தியபின் ஒரே சீரான சுற்றளவில் முயக்கம் ஏற்படுகிற அளவுக்கு எடுத்து செல்லுதல்.
உச்சம் என்பது துல்லியமான நிலைக்கு எடுத்து செல்லுதல். மற்றும் அதுவாகவே மாறிவிடல்.
அதுவாகவே மாறிவிட்டதை ஒரே சீரான சுற்றளவில் முயக்கம் ஏற்படுகிற அளவுக்கு எடுத்து செல்லுதல்.

- நமது உணர்வின் துணை கொண்டுமட்டுமே அந்த அநுபூதி நிலையை அடைய முடியும். வேறு மார்க்கமோ, வேறு கதியோ நமக்கு கிடையாது. உணர்வுதான் நம் கைப்பொருள். ஆகவே! தியானப்பயிற்சியில் ஈடுபடுவோர் உணர்வுக்கு வடிகாலான எந்த செயலிலும் ஈடுபடாமல் கவனமாக இருத்தல் அவசியம்.

3, விழிப்புணர்வு என்பது உயிர்ப்புள்ள இக்கணம் மட்டுமே! இக்கணத்தில் கடந்து போகும் உணர்வே விழிப்புணர்வு. அதுவே இருப்பு நிலை. கடந்த நொடி, அடுத்த நொடி இரண்டுமே கருத்து தான். அதில் உயிர்ப்போ சத்தியமோ இல்லை.

தியானமுறை

அதிகாலை நான்கு அல்லது ஐந்து மணியாக இருத்தல் மிக்க நலம். தியானம் செய்யும் இடம் நல்ல காற்றோட்டம் உள்ள இடமாகவும், எந்த இரைச்சலும் இல்லாத இடமாக தேர்ந்து எடுத்துக்கொள்ளவும். காலைக்கடன்களை முடித்து, குளித்து விட்டு அகத்தூய்மை, புறத்தூய்மையோடு கிழக்கு திசை நோக்கி வஜ்ஜிராசனம் இட்டு அமர்ந்து

இரண்டு கைகளையும் சின் முத்திரை இட்டு முழங்கால் மீது வைத்துக்கொள்ளவும். முதுகை நிமிர்த்தி நேராக வைக்கவும். லேசாக கண்களை மூடிக்கொள்ளவும். ஓம் எனும் பிரணவ மந்திரத்தை மூன்று முறை நீட்டி உச்சரிக்கவும். ஓ வென்று ஆரம்பிக்கும் பொழுது அந்த ஓங்காரம் உங்கள் மூலாதாரத்திலிருந்து மேல் நோக்கி ஆக்ஞாவைநோக்கி முதுகுத்தண்டு வழியாக செலுத்த வேண்டும்.

அடுத்து ஒரு மந்திரத்தோடு துவங்கலாம்.

அஸத்தோமா ஸத்கமைய;

தமஸோமா ஜோதிர்கமைய;

மிருத்யோர்மா அம்ருதங்கமைய:

ஓம் சாந்தி, சாந்தி, சாந்திஹி.

அடுத்து இந்த ஸ்தூல உடலுக்கான பயிற்சி 1, மூச்சுப்பயிற்சி:

வஜ்ஜிராசனத்திலேயே இரு கைகளையும் இடுப்பில் வைத்து உடலை முன்னும்,பின்னும் அசைத்தவாறு வாயை மூடிக்கொண்டு மூக்கு துவாரங்களின் வழியாக தொடர்ந்து மூச்சை பீய்ச்சியடிக்க வேண்டும். நமது உடலில் கரிமில வாயு அதிகமாக தேங்கி கிடக்கிறது. அனைத்து கரிமில வாயுக்களையும் வெளியேற்றும் வண்ணம் தொடர்ந்து (மூச்சை வெளியேற்றுவது மட்டும் நோக்காக) பயிற்சி செய்தல் வேண்டும். இது மண்டையிலிருந்து துவங்கி உடல் முழுக்க உள்ள ஒவ்வொரு செல்லில் உள்ள கரிமில வாயுவையும் வெளியேற்றும் வண்ணம் முதுகுத்தண்டு நுனியான மூலாதாரத்திலிருந்து உடலை அசைத்து, அசைத்து மூச்சை வீசியடிக்க வேண்டும். உடல் முழுக்க பிராண வாயு நிரம்பும் அளவுக்கு இதை செய்தல் வேண்டும். இப்போது உங்கள் சுவாச மண்டலம் நிறைக்க வெறும் பிராண வாயு மட்டுமே இருத்தல் வேண்டும். அவ்வப்போது சிறு மின்னல் வெட்டுப்போல உடலில் ஒளி தோன்றி மறைவதை உணர முடியும். முழுக்கவனத்தோடும், முழு ஈடுபாட்டோடும் இதில் ஈடுபடுபவருக்கே இது தோன்றும்.

உணர்வு உடலுக்கான பயிற்சி: 2, இப்போது ஓம் எனும் மந்திர உச்சாடனம். வஜ்ஜிராசனம் இட்டு அமர்ந்து இரண்டு கைகளையும்சின்முத்திரையில்முழங்கால்மீதுவைத்துக்கொள்ளவும். இந்த ஓம் எனும் சொல் அ உ ம் எனும் மூன்று சிறு உச்சரிப்புகளாக இருக்க காண்கிறோம். முதல் உச்சரிப்பான அ வை மூலாதாரத்தில் இருத்தியும், அடுத்த உ வை மணிப்பூரகம் எனும் தொப்புள் பகுதியில் சற்று இருத்தியும், ம் ஐ புருவ மத்தியான ஆக்ஞாவில் இருத்தி முடிக்கவும். இந்த அ உ ம் எனும் மூன்று சிறு உச்சரிப்பும் தனித்தனியாக உச்சரிக்காமல் ஓம் எனும் ஒரே உச்சரிப்பு போல உச்சரித்தல் வேண்டும். இந்த மந்திர உச்சாடனத்தை மிகுந்த ஈடுபாட்டுடனும், உங்கள் உடலில் உள்ள கோடிக்கணக்கான செல்களும் உச்சரிப்பதாக பாவித்து உச்சரித்தல் அவசியம். ஒவ்வொரு செல்லும் பிரபஞ்ச மூல ஒலியான ஓம் எனும் சப்த அதிர்வாக மாறும் அளவிற்கு லயமாக (மூலாதாரம் துவங்கி ஆக்ஞாவில் முடிய) உச்சரித்துவரல் வேண்டும். ஒரே தாள கதியில் இது அமையும்பொழுது, ஒரு ஏக உணர்வு மூலாதாரம் துவங்கி ஆக்ஞாவுக்கு வருவதை உணர முடியும். இந்த அ உ ம் ஆன ஓம் எனும் நேர்க்கோடாக வெறும் அதிர்வாக, இக்கண அதிர்வாக, உடலிலுள்ள கோடிக்கணக்கான செல்களும் ஒரே அதிர்வாக அதிர்ந்து ஏக உணர்வாக மேல்நோக்கி தன்னை திறந்து வைத்து காத்திருந்து அதிர்கின்றன! இந்த இக்கண அதிர்வையே நாம் விழிப்புணர்வு என்கிறோம். மேற்கண்ட அனைத்து செயல்பாடுகளும் நமது உணர்வு மண்டலத்திலேயே நடக்கிறது என்பதை கவனியுங்கள்.

உணர்வு உடல் என்பது இந்த ஸ்தூல உடலின் முதுகு தண்டு வடமும் புருவ மத்தியுமாகும்.

இனி உணர்வுடலுக்கான ஓம் மந்திர உச்சாடன பயிற்சியை , நிதான கதி, லய கதி, உச்ச கதி, லய உச்ச கதி இந்த நான்கு முறைகளில் எப்படி செய்வது என பார்க்கலாம். நமது உணர்வு மண்டலமே நமது உணர்வு உடலாக இருக்கிறது. இந்த உணர்வு உடல் முழுவதும் ஓம் எனும் ஒலியை நமது உணர்வின் நிதான தன்மையுடன் பொருத்தி ஒலிக்க வேண்டும். ஒலியையும் உணர்வையும் பொருத்துதலே நிதான கதி.

ஒலி உணர்வோடு பொருந்திய பின் அந்த ஒலியை ஒரே சீரான தாள கதியில் உச்சரித்து வருதல் லய கதி எனப்படுவதாகும்.

லயம் பொருந்தி ஒரு நேர்கோட்டிற்கு வரும் வேளை அதில் தீவிரமாக செயல்படுதலே உச்ச கதி எனப்படுவதாகும்.

அந்த தீவிர கதி லயமாவதே இக்கணம், இக்கணம் எனும் விழிப்புணர்வாகும்.

இப்போது காலம் எனும் உணர்வு ஒரு க்ஷணம்(க்ஷணத்தில்) மட்டுமே இருக்கும்.

உணர்வு, ஒலியின்அதிர்வு, க்ஷணம் இவை மூன்று மட்டும் கலந்த ஒரு உணர்வு நிலை.

இப்போது மூலாதாரம் துவங்கி உசிமண்டை நேராக பிளந்து ஒரு ஒளி ஸ்தம்பம் எழும். இந்த ஒளி ஸ்தம்பம் உணர்வு உடலின் உச்சமாகும். இது உணர்வு உடலை கடந்து பிராண உடலுக்கு வந்து விட்டதை குறிக்கும்.

பிராண உடலுக்கான பயிற்சி: பிராண உடலின் இருப்பிடம் இந்த ஸ்தூல உடலில் புருவ மத்தியாகும். இப்போது புருவ மத்தியில் ஒளி தோன்றும். ஒரு கட்டை விரல் அளவுக்கு முதலில் தோன்றும். இந்த ஒளி பௌர்ணமி நிலவின் ஒளியைப்போல தனுமையாக இருக்கும். வலது நாசியும் இடது நாசியும் குறுக்கே வெட்டுகிற இடத்தில் இந்த ஒளி தோன்றும். இந்த ஒளி மட்டுமே நீங்கள். இதுதான் உங்கள் மையம். இந்த ஒளியினுள் கலந்து உணர்வின் நான்கு கதிகளையும் பிரயோகித்து ஓம் மந்திர உச்சாடனம் பிசகாது செய்து வரல் வேண்டும். அந்த தீவிர கதி லயமாகும் பொழுது இந்த ஒளி பிரயாணிக்க துவங்கும். மீண்டும் தீவிரமாகும்பொழுது ஒளி பிரயாணித்து விடும். ஒளி பிரயாணிக்க இடம் வேண்டுமல்லவா? அந்த எல்லையற்ற வெளியே மன உடலாகும்.

மன உடலுக்கான பயிற்சி: இந்த மன உடலின் எல்லை நமது ஸ்தூல உடலில் எந்த இடம் என கேட்டால், ஒரு எருக்கன் காய் பழுத்து வெடித்து பின் நோக்கி இணைந்து உள்- வெளியாகி விதைகள் காற்றில் பறந்து போவது போல உவமை சொல்லலாம். நமது உடலே பிளந்து உள்- வெளியாகி எல்லையற்று விரிவாகிக்கொண்டேயிருக்கும்.

இதன் எல்லையற்ற தன்மையே தற்போதைய உணர்வாக இருக்கும். இந்த மன உடலிலும் உணர்வின் நான்கு கதிகளான நிதான கதி, லய கதி, உச்ச கதி, லய உச்ச கதி இந்த நான்கு முறைகளில் ஓம் மந்திர உச்சாடனம் பிசகாது செய்து வரல் வேண்டும். அந்த தீவிர கதி லயமாகும் பொழுது இனியும் விரிவடைய இடமில்லை எனும் நிலை வரும்பொழுது நீங்கள் உங்களுடைய மனம்,மற்றும் உணர்வுகளையும் அந்த மனவெளியில் வீசி எறிந்துவிட்டு அந்த மனவெளியை அசைவற்று (இயக்கமற்று) நிறுத்துதல் வேண்டும். இங்கு மிகவும் கவனமாக கவனிக்க வேண்டியது என்னவெனில், உங்கள் ஸ்தூல உடல் எந்தவித அசைவுமின்றி இருத்தல் வேண்டும். உங்களுடைய உணர்வுடல் செயலற்று இருக்கவேண்டும். உங்களுடைய பிராண உடலும் அசைவற்று இருத்தல் வேண்டும். உங்கள் மன உடல் வெறும் சாட்சித்தன்மையுடன் மட்டும் அசைவற்று இருத்தல் வேண்டும். இப்பொழுது சாட்சித்தன்மையைத்தவிர எதுவுமேயில்லை. ஏன், நீங்களே இல்லை. அந்த சாட்சித்தன்மை உங்களுடையது அல்ல! இந்த பிரபஞ்சத்தினுடையது. நீங்கள் எனும் மனதையும் உணர்வையும் ஏற்க்கனவே அர்ப்பணித்தாகிவிட்டது.

தியானம்

நன்றாக நிமிர்ந்து பத்மாசனத்தில் அமர்ந்து கைகளை சின் முத்திரையில் வைத்து புருவ மத்தியில் விரிவடைந்த மன உடலை தியானித்தல் வேண்டும். உடலில் உள்ள அனைத்து செல்களும் திறந்து நின்று மேல்நோக்கி நிற்க, நாசித்துவாரம் இரண்டும் நன்றாக விரிவடைந்து அசைவற்று நிற்க, உங்களுக்கு இப்போது சுவாசம் நடைபெறாது. ஆனால் நன்றாக திறந்த நிலையில் உள்ள நாசி வழியே நேரடியாக சக்தி இணைப்பு ஏற்ப்படும். இந்த தன்மையில் எவ்வளவு நேரம் இருக்க முடியுமோ அவ்வளவு நேரம் தியானத்தில் இருங்கள். உங்கள் அர்ப்பணிப்பு மனப்பூர்வமான, உளப்பூர்வமான சரணாகதியாக இருந்தால் உங்கள் உடலிலுள்ள ஒவ்வொரு அணுவும் தனித்தனியாகி பிரபஞ்சத்தில் உள்ள அனைத்து அணுக்களுடனும் இணைந்து (உள் இணைப்பு) அனைத்தும் ஒன்று எனும் நிலை உருவாகும். இதுவே பரிபூர்ண நிலை.

குறிப்பு :-

இது தியானத்தை முறையாக கற்றுக்கொண்டவர்களுக்கான அனுபவ பாடம். முறையாக தியானம் கற்றுக்கொள்ளாதவர்கள் தயவு செய்து இதை முயற்சித்து பார்க்கக்கூடாது. மன நிலை பேதலித்து விடவும் வாய்ப்புண்டு. ஜாக்கிரதை.

உணர்வு செறிவு - உணர்வு விரிவு. 5.4.11

நாம் அலைப்பண்பு பிரபஞ்சம் மற்றும் துகள் பண்பு பிரபஞ்சம் இரண்டையும் நுகரும் விதம் குறித்து பார்க்கலாம்.
இந்த ஸ்தூல உடல் , உணர்வு உடல் , பிராண உடல் ,மன உடல் , இணைப்பு உடல், பூரண உடல் , திவ்ய உடல் ஆகிய யாவும் தற்போது ஒன்றினுள் ஒன்றாக உறைபோல் உறைந்துள்ளது.

இந்த தோற்ற பிரபஞ்சமே துகள் பண்பு பிரபஞ்சம்.
எண்ணம்,கருத்து, மனம் இவைகளைக்கொண்டு நாம் நுகரும் இந்த தற்போதயநிலையே துகள் பிரபஞ்சத்தை நுகரும் தற்போதய நிலை.

அந்த அலைபிரபஞ்சத்தை நுகர நாம் நமது சூட்சும உடல்களை இயக்கி அறிந்து கொள்ளவேண்டியுள்ளது.

உணர்வு உடல்
பிராண உடல் ,
மன உடல்,
இணைப்பு உடல்,
பூரண உடல்,
திவ்ய உடல்

ஆகிய யாவும் சூட்சும உடல்களாகும்.

உணர்வு உடல்: நமது ஸ்தூல உடலில் நுகரப்படும் உணர்வு என்பது நம் உடம்பு முழுவதுமே உணரப்படுகிறது. காரணம், உணர்வது என்பது நமது உடலில் உள்ள கோடிக்கணக்கான செல்களின் செயல்பாடு. உணர்வை செல்களே உணர்கின்றன! நமது உடலில் 210 வகையான செல்கள் இருக்கின்றன. அது நமது மூளைக்கு செய்தியாக அனுப்பப்பட்டு அதை நாம் 100அறிகிறோம். நமக்கு உணர்வு ஒரே விதமாக இல்லாமல் அவ்வப்போது மாறுவது இதன் காரணமாகத்தான். ஆக! நமது உணர்வு உடல் விழிப்பது என்பது, கோடிக்கணக்கான செல்களை ஒரே தன்மையான உணர்வு நிலைக்கு கொண்டுவருதலாகும்.

பிராண உடல் : நாம் நமது ஆழ்ந்த சுவாசத்தின் மூலம், மற்றும் நாடி சுத்தியின் மூலம் நமது உடலில் ஜீவிக்கும் கோடானுகோடி செல்களுக்கும் பிராணவாயுவை கொண்டு சேர்த்து அனைத்து செல்களும் முழு பிராண சக்தியுடன் திகழ வைத்து அனைத்து செல்களையும் புவிஈர்ப்பு விசைக்கு எதிராக மேல்நோக்கி எழ வைத்து ஒரே தன்மையாக 'ஏக உணர்வு'டன் பிராணத்தன்மையுடன் ஒளிர வைக்க, தேகம் முழுவதும் ஒளிமயமாக நம் அகக்கண்ணுக்கு காட்சி தரும். அந்த ஒளியுடலே நமது பிராண உடல்.

ஏற்கனவே இந்த சூட்சும உடல்கள் ஒன்றினுள் ஒன்றாக (உறையாக) இருக்கிறதை பார்த்தோம். நாம் தியான பொழுதில் இந்த பிராண உடலை வியாபிக்க செய்யும்பொழுது நமது பிராண உடல் இந்த ஸ்தூல உடலுக்கு வெளியே வியாபித்து பெரிய தோற்றத்துடன் விரிவதை காணமுடியும். இந்த பிராண உடல் யாருக்கெல்லாம் ஸ்தூல உடலுக்கு வெளியே வியாபித்து நிற்கிறதோ அவர்களுக்கு ஏகப்பட்ட நோய் எதிர்ப்பு சக்தி கூடிவருகிறது என்கிறார்கள்.
அது மட்டுமல்ல அவர்களது பிராண உடல் எதுவரை எல்லை கொண்டுள்ளதோ, அந்த எல்லைக்குட்பட்ட பகுதியில் இருக்கும் மற்ற உயிர்களின் மன நிலையையும் அவர்கள் அறிவதாகவும் சொல்லப்படுகிறது.

இந்தவித பிராண உடல் புத்தர்பிரானுக்கு மூன்றுமைல் சுற்றளவுக்கு இருந்ததாகவும்

அந்த மூன்றுமைல் சுற்றளவில் இருந்த அனைத்துயிர்களின் மனநிலையையும் அவர் அறிந்திருந்தார் எனவும் கூறப்படுகிறது.

ஆக! உங்கள் தியானத்தின்போழுது நீங்கள் காணும் ஒளிப்பிரதேசம் உங்களின் பிராண உடலாகும்.

மன உடல் : இந்த ஸ்தூல உடலுக்கு வெளியே பிராண உடலானது விரிவடைய துவங்கியுடன், உறைக்குள் இருக்கும் வாள் என்ற உவமை மாறி உள் ஒடுங்கும் தன்மைகள் இப்போது மாறாக வெளியில் விரிந்து வியாபிக்கும் தன்மைகளாக மாற, பிராண உடலில் ஒளி துலங்கியவுடன் அந்த ஒளி பிரயாணிக்க வேண்டுமே! மன உடலானது பிராண உடலுக்கு வெளியே விரிந்து எல்லைகளற்று வியாபிக்க துவங்குகிறது.

மன உடல் ஓர் எல்லையற்ற நிலையில் வியாபிக்க, எண்ணம் எதுவும் இப்போது மனதில் தோற்றம் கொள்வதில்லை. மாறாக! மனம் வெறும் சாட்சித்தன்மையுடன் நிற்கிறது. மனதினிடம் இப்போது எந்தவித இருமை தன்மையும் இருப்பதில்லை. எந்த விகல்பமும் இருப்பதில்லை. அது ஒரே ஏக தன்மையுடன் திகழ்கிறது.

இணைப்பு உடல்: இந்த பிரபஞ்ச புத்தியே இணைப்பு உடல் என ஏற்கனவே பார்த்தோம். இந்த இணைப்பு உடல், நமது மன உடலையும் தாண்டி வியாபித்து நம்மை பிரபஞ்சத்துடன் இணைக்கிறது. நம்மில் இருக்கும் இந்த இணைப்பு உடல் இப்போது நமது ஆறுவித உடல்களையும் ஸ்தூலம், பிராணன், மனம், இணைப்பு, பூரண, திவ்ய உடல் அனைத்தையும் இந்த பிரபஞ்சத்திலுள்ள அதனதன் தன்மையுடன் அதனதை இணைக்கிறது.
(நமது உள் மின்னோட்டத்தை,பிரபஞ்ச உள் மின்னோட்டத்துடன் இணைக்கிறது)
அந்த இணைப்பு- நமது கருத்துக்கு- புருவ மத்தியையும் இருதயத்தையும் இணைப்பதாக நாம் அறிகிறோம். அது இணைந்து ஒரு பரிபூரணத்தன்மை துலங்குகிறது. ஒரே பூரண நிலையில் இணைப்பு உடல் திளைக்கிறது.

பூரண உடல், : இணைப்பு உடலையும் கடந்து தாண்டி உங்கள் பூரண உடல் வியாபிக்கும்பொழுது அருள்தன்மையும், கருணாகர கருணையும் உங்களிடம் பீரிட்டெழுகிறது. அநேகவித அருள்நிலைகள் தோன்றியவண்ணம் உள்ளது. அந்த பிரபஞ்ச மகாசக்தி உங்கள் வழியாக பீரிட்டு வெளிக்கிளம்புகிறது.

திவ்ய உடல் : இதுவே அலைப்பண்பு பிரபஞ்சம். இங்கு ஆனந்தத்தை தவிர வேறெதுவுமில்லை. அனைத்துவித படைப்புத்தன்மையும் இங்கேயே நடக்கிறது . ஏற்கனவே சித்தி பெற்ற அருளாளர்கள் ஸ்தூல தேகத்தை உதிர்த்து விட்டு, அருவ நிலையில், சூட்சும நிலையில், மண்ணுலகில் வாழும் இந்த உயிரினங்களை காத்து வரும் பணியில் இணைந்துள்ள தேகமே திவ்ய தேகம். திவ்ய உடல்.
இந்த உயிரினங்களின் தலைமை பண்பாகவும் இது திகழ்கிறது.

நாம் நமது பொருண்மையை உணர்வு செறிவு, உணர்வு விரிவு எனும் தன்மையால் அளவுள்ள ஸ்தூல உடல் போன்ற, சிறிய பொருண்மையாகவோ, அல்லது அளவற்ற தன்மையுள்ள பொருண்மையாகவோ நம்மை நாம் மாற்றிக்கொள்ள முடியும்.

இதற்கு அடிப்படையாக உதவுவது உணர்வு செறிவு - உணர்வு விரிவு எனும் தொழில் நுட்பம் தான்.

நன்றாக அறிந்து கொள்ளுங்கள் உணர்வுதான் அடிப்படையான ஆதாரம்.

இது நிதர்சனம். 7.4.11

இயற்கையில் மூன்று வித தன்மைகள் இருக்கின்றன.

1, தேவை.
2, நிறைவு.
3, வழங்குதல்.

இந்த நியதி இந்த பிரபஞ்சம் முழுக்க செயல்பாட்டில் உள்ளது.

1, இந்த பொருட்களால்(நியூட்ரான்,புரோட்டன், எலெக்ட்ரான்அடுத்து அணு அடுத்து தனிமம், அடுத்து மூலக்கூறு, பொருள் என) ஆன தோற்ற பிரபஞ்சம் தேவையை அடிப்படையாகக்கொண்டு இயங்குகிறது.

2, அலைப்பண்பு மற்றும் துகள் பண்பு என மாறி, மாறி இயங்கும் பரமாணு நிலையே தன்னிறைவான பூரண நிலை.

3, நியூட்ரான்,புரோட்டன், மற்றும் எலெக்ட்ரான் மூன்றும் துகள்களே! இவைகளை உருவாக்கும் பரமாணு துகள் பல இருக்கின்றன! இந்த துகள்கள் சில ஒன்று கூடி நியூட்ரான் துகள் ஆகிறது. வேறு சில பரமாணுக்கள் கூடி இணைந்து புரோட்டன் துகள் ஆகிறது. வேறு சில பரமாணுக்கள் கூடி இணைந்து எலெக்ட்ரான் துகள் ஆகிறது.என்கிறது குவாண்டம் இயற்பியல். முக்கியமான விஷயம் என்னவெனில் இந்த பரமாணு துகள் ஒன்றில் இன்னொரு அண்டத்தையே உருவாக்கக்கூடிய சமாச்சாரங்கள் 'விதைகளாக' பொதிந்திருக்கிறது என்கிறது குவாண்டம் இயற்பியல் - இந்த பரமாணு துகளின் உள் நிலைதுலக்கமே வழங்குதல் எனும் அருள்நிலை.

ஆக!
பிரபஞ்சமும் கூட இந்நிலையிலேயே செயல்படுகிறது.
அதேபோல!
மனிதரான நம்மிலும் இது நடைமுறையில் உள்ளது.

இந்த ஸ்தூல உடல் வாழ்க்கைக்கு தேவைகள் இருந்துகொண்டேயிருக்கின்றன. இதில் மன நிறைவுற்றவர்கள் எவருமில்லை. பத்து லட்சம் சொத்துள்ளவனும் திருப்தி அடையவில்லை. ஏன், உலகில் பாதியை பிடித்து விட்டவன்கூட திருப்தியுற்றதில்லை. இந்த ஸ்தூல உடலே ‘தேவை’ என்கிற அணுக்களால் கட்டப்பட்டிருக்கிறது. சதா ஏதாவது தேவைப்பட்டுக்கொண்டேயிருக்கிறது. மனம் தக்க காரணம் சொல்லி, இந்த ஸ்தூல உடலை பராமரித்துக்கொள்கிறது.

ஆக! ஒரு மனிதன் தன் வாழ்வில் இந்த மூன்றுவித தன்மைகளிலும் சஞ்சரிக்க முடியும். மூன்று நிலைகளையும் உணர முடியும். இதுதான் இந்த ஆன்மீக தேடலின் பயன்பாடு.

ஏழு உலகு 9.4.11

நமக்கு ஏழு சரீரம் இருப்பதாக முன்பு கண்டோம். இப்போது ஏழு உலகங்களைப்பற்றி காண்போம்.

1, ஸ்தூல உலகு
2, உணர்வு உலகு
3, பிராண உலகு
4, மன உலகு
5, இணைப்பு உலகு
6, பூரண உலகு.
7, திவ்ய உலகு.

1, ஸ்தூல உலகு , ஏற்கனவே இந்த உலகை நீங்கள் எந்த எல்லைகளுடன் உங்கள் மனத்தால், எண்ணத்தால், கருத்தால் அறிந்திருக்கிறீர்களோ அது உங்கள் ஸ்தூல உலகு. நீர், நிலம், காற்று, தீ, வானம் காடு, மலை, அருவி நாடு, நகரம், உலகு, அண்டம், பிரபஞ்சம் அனைத்தும்- அதாவது இந்த தோற்ற உலகு.
1042, உணர்வு உலகு: இந்த உணர்வுலகு தான் நீங்கள், மற்றும் உங்கள் வாழ்க்கை முழுதும். உங்கள் அனுபவம் முழுவதும் இங்குதான் நடக்கிறது. உங்கள் உயர்வு, தாழ்வு அனைத்தையும் இங்கு தான் நிகழ்த்த முடியும். இந்த உணர்வுலகை சரிவர தெரிந்து கொள்ளாத ஒருவன் துர்பாக்கியசாலி. அணுவளவேயானாலும் இந்த உணர்வுதான், அண்டத்தளவு அகண்டு விரிந்தாலும் இந்த உணர்வுதான். இந்த பிரபஞ்சத்தில் எவ்வளவு விசயங்களை பொறுத்த முடியுமோ அவ்வளவு விசயங்களையும் இந்த உணர்வில் பொருத்தலாம். இதற்கு முன்னும், பின்னும் எதுவுமேயில்லை. இதற்கு ஈடு இணை எதுவுமில்லை.

3, பிராண உலகு: தியானத்தின் பொழுது நாடிசுத்தி செய்து, மூச்சு பயிற்சி செய்து உங்கள் தேகம் முழுதும் பிராண சக்தியில் துலங்க,உங்கள் ஸ்தூல உலகு தாண்டி உங்கள் புருவ மத்தியில் தோன்றி விரியும் ஒளி மயமான உலகு பிராண உலகு. உங்களை உங்கள் உணர்வை ஒளியோடு இணைக்கும் உலகு இந்த பிராண உலகு.

4, மன உலகு : தியானத்தின் பொழுது பிராண உலகை அடுத்து, வெட்ட வெளியாக எல்லைகளேயற்று விரிவடைந்து கொண்டேயிருக்கும் - ஒரு சாட்சித்தன்மை மட்டுமே மிஞ்சியுள்ள - மன உலகு. ஒளியின் திசை வேகத்தாலும், உணர்வின் விலக்கு விசையாலும் உந்தப்பட்டு எல்லைகள் உடைபடும் உலகு. வெறும் வெட்ட வெளியென, வெளிக்குள் வெளியென எல்லையற்று விகசிக்கும் உலகு இந்த மன உலகு. எல்லைகள் காணக்கிடைக்காமல் செயல்மறந்து வெறும் சாட்சித்தன்மையாய் திகைக்க வைக்கும் உலகு.

5, இணைப்பு உலகு: தியானத்தின் பொழுது பிராண உலகு,மன உலகு எனும் ஒளி, வெளி,இரண்டையும் கடந்து, இப்போது இயக்கதன்மையும் கடந்து அந்த மன உலகில் எந்த அசைவுமின்றி -அசைவற்று- நிற்க உங்களின் ஆறுவித சரீரமும் அதனதன் உலகில் இணையும் (இந்த இணைப்பு உங்கள் புருவ மத்தியான ஆக்ஞாவிலிருந்து

உங்கள் 'உணர்வு இதய' மத்தியோடு இணையும் இணைப்பாக இந்த ஸ்தூல உடலுக்கு அறிய வரும்.) இணைப்பு உலகு.

6, பூரண உலகு: தியானத்தின் பொழுதுமுன் சொன்ன, அதாவது பொருள் உலகு- ஒளி உலகு- வெளி உலகு- இயக்க உலகு- எனும் நான்கு வித உலகையும் கடந்து நீங்கள் நுழைவது ஒரு நிறைவான உலகு, எந்த தேவையுமே அற்ற பூரண உலகு, எங்கும் முழுமை எதிலும் முழுமை.துண்டுபடாத ஓர்மையான உலகு எவ்வித பேதமும் அற்ற ஓர்மை. பரிபூரண திருப்தி. அனைத்துமே பூர்த்தியாகிவிட்ட நிலை. இந்த பூரண உலகு.

பொருள் உலகு- ஒளி உலகு- வெளி உலகு- இயக்க உலகு-பூரண உலகு- இந்த ஐந்து வித உலகையும் கடந்து (இப்போது பரிபூரணமான புத்தி உலகை கடக்கும்பொழுது ஓர் அதிசயம் 105நிகழ்கிறது - இது பூரணத்தை கடப்பதால் வரும் அதிசயம்) பூரணத்தையும் கடந்து என்ன இருக்க முடியும்? அதுதான் வழங்குதல், வெளிப்படல் எனும் அதிசயம். எது உங்களுக்கு தேடலாக இருந்ததோ?, எது உங்களுக்கு பூர்த்தி ஆனதோ, அது உங்களிடமிருந்து - உங்களிடம் நிறைந்து- அது வெளிப்படுகிறது. இந்த வெளிப்படல் அல்லது வழங்குதலே அருள்நிலை எனப்படும்.

7, திவ்ய உலகு : இவை அனைத்தும் ஒன்றேயான உண்மை உலகு. தேவை, பூர்த்தி, வெளிப்படல் மூன்றையும் உள்ளடக்கிய முற்றுண்மையான உலகே உண்மை உலகு. இதுவே பரமபதம் எனும் அறுதி நிலை.

1, பொருள் உலகு
2, ஒளி உலகு
3, வெளி உலகு
4, இயக்க உலகு
5, நிறை உலகு
6, அருள் உலகு
7,உண்மை உலகு.

இந்த ஏழு உலகையும் நீங்கள் அறிவதற்கு உங்களுக்கு ஏழு வித உணர்வு தன்மைகள் - சரீரம் - இயற்கை உங்களுக்கு வழங்கியுள்ளது. உணர்வின் உற்ற துணை கொண்டு அந்த அறுதி நிலையை அடைவீராக!

இனி பிரம்ம நிரூபணம். 10.4.11

இந்த கல் பிரம்மமே! ஆனால் பிரம்மம் கல்லல்ல! கல் இல்லாது பிரம்மம் இருக்கும் ஆனால் பிரம்மம் இல்லாமல் கல் இல்லை.

இந்த மண் பிரம்மமே! ஆனால் பிரம்மம் மண்ணல்ல! மண் இல்லாது பிரம்மம் இருக்கும் ஆனால் பிரம்மம் இல்லாமல் மண் இல்லை.

இந்த காற்று பிரம்மமே! ஆனால் பிரம்மம் காற்றல்ல! காற்று இல்லாது பிரம்மம் இருக்கும் ஆனால் பிரம்மம் இல்லாமல் காற்று இல்லை.

இந்த செடி பிரம்மமே! ஆனால் பிரம்மம் செடியல்ல! செடி இல்லாது பிரம்மம் இருக்கும் ஆனால் பிரம்மம் இல்லாமல் செடி இல்லை.

இந்த தீ பிரம்மமே! ஆனால் பிரம்மம் தீயல்ல! தீ இல்லாது பிரம்மம் இருக்கும் ஆனால்

பிரம்மம் இல்லாமல் தீ இல்லை.

இந்த வெளி பிரம்மமே! ஆனால் பிரம்மம் வெளியல்ல! வெளி இல்லாது பிரம்மம் இருக்கும் ஆனால் பிரம்மம் இல்லாமல் வெளி இல்லை.

இந்த நீர் பிரம்மமே! ஆனால் பிரம்மம் நீரல்ல! நீர் இல்லாது பிரம்மம் இருக்கும் ஆனால் பிரம்மம் இல்லாமல் நீர் இல்லை.

நீயும், நானும் பிரம்மமே! ஆனால் பிரம்மம் நீயும்,நானுமல்ல! நீயும், நானும் இல்லாது பிரம்மம் இருக்கும் ஆனால் பிரம்மம் இல்லாமல் நீயும்,நானும் இல்லை.

உன் வாக்கு பிரம்மமே! ஆனால் பிரம்மம் வாக்கல்ல! வாக்கு இல்லாது பிரம்மம் இருக்கும் ஆனால் பிரம்மம் இல்லாமல் வாக்கு இல்லை.

உன் கருத்து பிரம்மமே! ஆனால் பிரம்மம் கருத்தல்ல! கருத்து இல்லாது பிரம்மம் இருக்கும் ஆனால் பிரம்மம் இல்லாமல் கருத்து இல்லை.

உன் வியாக்கியானம் பிரம்மமே! ஆனால் பிரம்மம் வியாக்கியானம் அல்ல! வியாக்கியானம் இல்லாது பிரம்மம் இருக்கும் ஆனால் பிரம்மம் இல்லாமல் வியாக்கியானம் இல்லை.

உன் கடவுள் பிரம்மமே! ஆனால் பிரம்மம் கடவுளல்ல! கடவுள் இல்லாது பிரம்மம் இருக்கும் ஆனால் பிரம்மம் இல்லாமல் கடவுள் இல்லை.

கவனிக்க! கடவுளுக்கு குணங்கள் உண்டு. ஆனால் பிரம்மத்திற்கு குணங்கள் கிடையாது.

கடவுள் சகுண பிரம்மமென்றால்!

மேற்கண்ட கல், மண், காற்று, செடி, தீ, வெளி, நீர், நீ,நான், வாக்கு, கருத்து, வியாக்கியானம் அனைத்தும் சகுண பிரம்மம்தான். பிரம்மம் இங்கு இருக்கிறது என்பதற்கான சகுணமே இவைகள்.

என்றும் சாஸ்வதமானது பிரம்மம். சாஸ்வதமின்றி சதா மாறிக்கொண்டிருப்பது சகுண பிரம்மம்.

ஆம், நாமெல்லாம் சகுண பிரம்மமே! . நம்மிடம் பிறப்பு இறப்பற்ற ஒன்று (பிரம்மம்) செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது. அது தான் நாம்.

தோற்றமாவது மறைவது அனைத்துமே சகுண பிரம்மமே! இந்த அண்டசராசர பிரபஞ்சமே சகுண பிரம்மம் தான். இதில் நிகழும் அனைத்துமே சகுண பிரம்மம்தான். அதை தோற்றுவித்தது பிரம்மம்.

நீ சகுண பிரம்மமாகவே காலம் கழித்து மாண்டுபோவாயா? அல்லது உன் சுய ஸ்வரூபத்தை கண்டடைவாயா?

அருட்தன்மை: தொழில் நுட்பம். 24.4.11

ஜடப்பொருளுக்கும் உயிர்ப்பொருளுக்கும் உள்ள பண்பு வித்தியாசம் உணர்வும், அறிவும், சுய செயல் திறனும் தான்.

ஜடப்பொருளுக்கு உணர்வோ, அறிதலோ, சுய செயல்பாடோ கிடையாது.

உயிர்ப்பொருளுக்கு உணர்தலும், அறிதலும், சுய செயற்பாடுகளும் உண்டு.

அறிதிறனிலும்உணர்திறனிலும் உச்சபட்ச நிலையில் இருக்கிறான் மனிதன்.

இந்த அறிவு என்பது எதனால் ஆனது? உணர்வு என்பது எதனால் ஆனது? இயக்கம் எப்படி உருவாகிறது?

அறிவு என்பது மின்னோட்டத்தால் ஆவது. உணர்வு என்பது காந்தப்புலங்களால் ஆவது. இயக்கம் என்பது மின் துகள்களாலான (நியூட்ரான், புரோட்டான், எலெக்ட்ரான் இவற்றுக்கிடையான) ஈர்ப்பு, விகல்பம் எனும் தன்மையால் உருவாவது. அங்கு மின்னோட்டமும், காந்தபுலமும் (அறிவும், உணர்வும்) செயற்பாட்டிற்கு வருகிறது.

இந்த பிரபஞ்சமே உணர்வும், அறிவும், இயக்கமும் என இருக்கிறது. இதில் ஜடம் எந்த அறிதலுமின்றி இருக்கிறது. அறியும், உணரும் விதத்தில் உயிர்கள் படித்தரங்களில் அமைந்துள்ளன.

ஒரு அணுவுக்கு தனி மின்னோட்டமும், தனி காந்தவோட்டமும் தனி இயக்கமும் உண்டு. அணுக்கள் இணைந்த ஒரு தனிமத்திற்கும் தனி மின்னோட்டமும், தனி காந்தவோட்டமும் தனி இயக்கமும்உண்டு. சில தனிமங்கள் இணைந்திருக்கும் மூலக்கூறுகளுக்கும் தனி மின்னோட்டமும், தனி காந்தவோட்டமும் தனி இயக்கமும்உண்டு.இவ்வகையில் அனைத்து உயிர்களுக்கும், மனிதனான இந்த உடலுக்கும் தனி மின்னோட்டமும், தனி காந்தவோட்டமும் தனி இயக்கமும் உண்டு.

தாவரம், புழு பூச்சிகள், பறவைகள், விலங்குகள், மனிதர்கள் என பரிணாமத்தின் உச்சியில் உள்ள 'உயிரி' மனிதன்.

மனிதன் தனி உயரி அல்ல! கோடிக்கணக்கான உயிர்செல்களால் கட்டமைக்கப்பட்டுள்ள உயிரி.

தாவரம், புழு பூச்சிகள், பறவைகள், விலங்குகள் அனைத்தும்கூட உயிர்செல்களால்கட்டப்பட்டிருப்பவைதாம்.

புவியில் உயிர் என்பது ஒன்றுதான். அது அனைத்துயிரிலும் உயிர் செல்களாக பரிணமித்து இணைந்திருக்கிறது! உயிர் மண்டலம் எனவும் சொல்லிக்கொள்ளலாம். அதை இனி 'பேருயிர்' என அழைக்கலாம். இந்த மண், மலை, கடல் என யாவற்றின் மீதும் படர்ந்து பூமி மீது ஒட்டியுள்ள உயிர்ப் படலம் அது. இந்த பூமியின் மீது நடப்பதெல்லாமே உயிரியக்கமே!

நமது உடலில் எப்படி கோடிக்கணக்கான தனி உயிர்செல்கள் இருக்கின்றனவோ அதே போல அந்த பேருயிரின் உடலில் (தாவரம், புழு பூச்சி, பறவை, விலங்கு, மனிதர் என) தனி உயிராக இருக்கின்றன. அந்த பேருயிரின் உயிர் அடுக்குகளாக இருக்கின்றன.

நமது உடலில் 210 வகையான தனித்தனி செயல்பாடுகள் உள்ள உயிர் செல்கள் இருப்பது போல,பேருயிரின் உடலிலும் பல்வேறு தனித்தன்மையுடைய உயிர்கள் இருக்கின்றன. நம்மால் இவற்றை தாவரம், புழு பூச்சிகள், பறவைகள், விலங்குகள், மனிதர்கள்என்று மட்டுமே வகைப்படுத்த தெரிகிறது.

உயிரணு : உயிரினங்கள் அனைத்துக்கும் அடிப்படை கட்டமைப்பு, தொழிற்பாட்டு அலகு ஆகும். அனைத்து உயிர்களும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட உயிரணுக்களின் கூட்டினால் உருவானவை. தனியொரு உயிரணுவினால் உருவான உயிரினங்களாக பாக்டீரியா வைரஸ் போன்ற நுண்ணுயிர்களை குறிப்பிடலாம். மனிதன் போன்ற விலங்குகள் பல்லுயிரணுக்களுக்கு எடுத்துக்காட்டுகள். விலங்குகளின் உயிரணு, தாவரங்களின் உயிரணு என இரு வகைகளாகவே உயிரணுக்கள் வேறுபடுத்தி ஆராயப்படுகிறது.

தாவரம், புழு பூச்சிகள், பறவைகள், விலங்குகள், மனிதர்கள் அனைத்து உயிரிலும் உள்ள உயிர்செல்களில் சிறு மாற்றங்கள் தவிர அடிப்படையில் எந்த மாற்றமும் இல்லை.

உயிரணுக்கள் பற்றி சில கொசுறு செய்திகள்: (இன்றைக்கு டி என் ஏ நதிக்கு, சற்றேரக்குறைய 3 கோடி கிளைகள் இருக்கின்றன.

இதுவரை இந்த டி என் ஏ நதிக்கு சுமார் 300 கோடி கிளைகள் இருந்திருக்கின்றன வாட்ஸனும் கிரிக்கும் இந்த டி என் ஏ சுத்தமான டிஜிட்டல் செய்தியாக இருப்பதை நம்மை காணவைத்தார்கள்.
நமது ஜெனடிக் அமைப்பு, உலகம் முழுவது இருக்கும் உயிர்களின் அடிப்படை அமைப்பு, அடித்தளம் வரை டிஜிட்டல் அமைப்பு.

நமது ஒவ்வொரு செல்லிலும் 715மெகாபைட் அளவுக்கு விஷயம் இருக்கிறது. ஜீன்கள் சுத்தமான செய்திகளைக் கொண்டிருக்கின்றன.

வாழும் உயிரினம் ஒவ்வொன்றும், உயிர்வாழும் இயந்திரங்கள்.நமக்குள் இருக்கும் ஒரு செய்தித்தளத்தை காப்பாற்றி அடுத்த தலைமுறைக்கு அனுப்ப செலுத்தப்பட்ட, உயிர்வாழ்வதற்கு அந்த செய்தித்தளத்தாலேயே நிரல் கொடுக்கப்பட்ட (ப்ரோக்ராம் செய்யப்பட்ட) உயிர்வாழும் இயந்திரங்கள்.
தலைமுறை தலைமுறையாக பிரதி எடுக்கின்றன.
ஜீன்கள் 10 கோடி தலைமுறை தாண்டிய பின்னரும் இந்தச் செய்திகளை வைத்திருக்கிறது.)

இதில் தாவரங்கள் தவிர ஏனைய உயிர்கள் தங்கள் உடலை வளர்த்திக்கொள்ள இந்த உயிர் மண்டலத்திலேயே தங்கள் உணவை தேர்ந்தெடுத்துக்கொள்கிறது. தங்களைமேம்படுத்திக்கொள்ள தங்கள் இனத்தையே உணவாக எடுத்துக்கொண்டு உயிர் வாழ்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

கல்லை, மண்ணை உண்டு உயிர் வாழும் இனம் எதுவுமில்லை.

தாவரம் மட்டும் உயிர் மண்டலத்திற்கு வெளியேதான் தங்களுக்கு தேவையான

உணவை எடுத்துக்கொள்கிறது. மண்ணிலும், நீரிலும், ஒளிச்சேர்க்கை மூலமும் தங்களை விருத்தி செய்து கொள்கிறது.

ஆக! ஒளிச்சேர்க்கைக்கும் நமக்கும் ஒரு நேரிய தொடர்பு இருக்கிறது.

ஞான நிலை எய்திய மகான்கள் அனைவருமே அந்த ஒளி என்னில் இறங்கியது, ஒளித்தேவதை எனனை வழிநடத்தியது, அருட்பெருஞ்சோதி என சொல்லியிருப்பதை நாம் அறிவோம். அதாவது நமது உடலில் உள்ள அணுக்கள் யாவும் அந்த ஒளியில் திளைத்தால் அனுபூதியடைந்து, மற்றவர்களுக்கு அருள் பாலிக்கிறார்கள் என்பது, மனிதகுலம் உண்மையை தேட ஆரம்பித்த காலத்திலிருந்து தொடர்ந்து நடக்கும் நிகழ்வுகள் ஆகும்.

அப்படி உயர்நிலை அடைந்த எல்லோருமே வேறொரு தளத்தில் இருந்து இயங்கிக்கொண்டிருப்பதாகவும் சொல்லப்படுகிறது. அது சூட்சும நிலை.

அனுபூதியடைந்த அனைவருமே ஒரு சூட்சும நிலையிலிருந்து கொண்டு அனைத்துயிர்களையும் வழி நடத்துவதாகவும் சொல்லப்படுகிறது.
ஒரு ஜீவன் துன்பப்படும்போது, பிறிதொரு ஜீவன் உருகுவது ஆன்ம உரிமை. என்கிறார்வள்ளலார்.

சமண மதம் ஜீவகாருண்ய உச்ச வெளிப்பாடு.

அந்த ஒளியை அடையாத மகான்கள் யாரும் இருப்பதாக தெரியவில்லை. தாவரங்களில் துவங்கும் ஒளிசேர்க்கைக்கும், மகான்கள் அடையும் ஒளியுலகுக்கும் உள்ள சம்பந்தம் ஒரு ஆச்சரியமாக இருக்கிறது. இது ஆராய தக்கது.

இவ்வளவு நாட்கள் உங்கள் வாழ்க்கைக்கு மனம் குருவாக இருந்து உங்களை வழிநடத்தி வந்துள்ளது. அதனுடைய பலன்களை(இன, மத, பொருளாதார ஏற்றத்தாழ்வுகளால், லஞ்ச ஊழல்களால் சீரழிந்து கிடக்கும் உலகு) நாம் ஏற்கனவே கண்டுள்ளோம். அது நமது உயர்வுக்கு சரிவையே ஏற்படுத்தி வந்துள்ளது கண்கூடு. நாம் கடைத்தேற ஒரே வழியான அந்த ஒளியினை குருவாக ஏற்று நற்கதி அடைய முயற்சிப்போம்.

உயிரணுக்கள் உயர் பண்பை அடையும் விதமாகவே இயற்கை செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. இந்த பேருயிருக்கு ஒளியே வழிகாட்டியாக அமைந்துள்ளது.இதை 'நான்' எனும் கருத்துருவே, இந்த கருத்துருவால் ஏற்படும் செயல்பாடுகளே உயிரணுக்களின் உயர் பண்பு உயர்வுக்கு தடையாக அமைகிறது.

அனைத்து வித உயிரணுக்களுக்கும் தனித்தனியான ஆயுட்காலம் அமைந்துள்ளது. அந்தந்த அணுக்கள் அவைகளை போன்று பிரதி எடுத்து உருவாக்கி விட்டுவிட்டு அவைகள் மரித்து விடுகின்றன! நீங்கள் உங்கள் குழந்தைகளை பெற்று வளர்த்தி விடுவதைப்போலத்தான்இதுவும். இதில் உயர் பண்பு, உயிரணுவின் தலை முறைக்கு தலைமுறை உயர்ந்து கொண்டு வருகிறது.

இந்த நான் எனும் கருத்துருவை ஒதுக்கி வைத்து விட்டு அந்த பேருயிரின் உயர் பண்பு 112லயத்துக்கு ஒப்புக்கொடுத்து நீங்கள் வாழ பழகிக்கொண்டால் அந்த இயற்கையின்

இயல்பான உயர்தன்மை செயல்படும்.
ஆனால்! இந்த மனித குலம் இந்த உயர் பண்பை எதிர்த்து போராடி மடிந்து கொண்டிருக்கிறது.

இந்த பேருயிர் ‘உயிரணு வளர் உயர் பண்பு’ சுழற்சி முறையில் ஒரு பொதுத்தன்மையோடு இயங்குவதாக தெரிகிறது. அதன் இயல்பும் இதுவேதான். இந்த உயிரணுக்களின் முதல் தரிசனம் தாவரங்களில் ஒளிச்சேர்க்கை வழியாக ஒளி தரிசனம் அடையப்பெற்று தொடர்கிறது. இந்த உயிரணுக்களின் உச்சபட்ச தியான நிலைகளிலும் கூட ஒளி தரிசனம் நடை பெறுவதை காண முடிகிறது. பிரபஞ்சத்தில் உள்ள அனைத்து உயிரணுக்களின் நோக்குமே தெளிவாக இருக்கிறது. அனைத்து உயிரணுக்களுமே சகோதர சகோதரிகள் தான். அனைவருக்குமே ஒரே நோக்கம் தான். இந்த உயர்நிலை செயல் முறையை நிறைவேற்றத்தான் உடல்கள் (தாவரம், பூச்சி, பறவை, விலங்கு, மனிதன்) தயாராகின்றன.

அந்தஉடல்களைஉருவாக்குவதும்இந்தஉயிரணுக்களேதான். உயிரினங்களால் இந்த உலகம் நிரம்பி இருக்கிறது.

ஒட்டுமொத்த உயிரணுக்களின் பொதுநோக்கு கூட ஒரு தியானம் தான். இந்த உடல்களை பாதுகாக்கும் பொருட்டு மனம் உருவாகிறது. இந்த மனத்தின் வசம் மாட்டிக்கொண்ட பின் உயிரணுக்களின் நோக்கம் தடை படுகிறது. இப்போது தியானம் எனும் தொழில் நுட்பம் தேவைப்படுகிறது. இந்த உடல்களில் மனித உடலால்தான் தியானம் செய்ய முடியும்.

இனி தியான நுட்பம்:
தியானத்தை ஒரு நானோ தொழில் நுட்பம் போல நுணுகி கூர்மையாக ஒரேத்தன்மையாக செய்து வரல் வேண்டும்.
ஒரு நானோ மீட்டர் என்பது ஒரு மீட்டரின் 1,000,000,000ல் (ஒரு பில்லியனில் , 10-9) ஒரு பங்கு.இது
போலமிகதுல்லியமாக,மீச்சிறுபொருளையும்நிலைநிறுத்திகாணும்தன்மையே தியானம். இந்த தொழில் நுட்பத்தின் ஆதாரம், அணு அளவில் எந்த ஒரு செயலையும் செய்யமுடியும் என்பது தான்.
அடுத்து,
particle accelerator தொழில் நுட்பத்தில் அமைவதே தியான தொழில் நுட்பம்.
உங்கள் உணர்வையும் அறிவையும் பொறியாக கொண்டு அமைக்கப்படும் கருவிதான் particle accelerator . இது தான் தியானம். தியான தொழில் நுட்பமே இதுதான்.
இந்த கருவியைக்கொண்டு அறிவு எனும் ஒரு எலெக்ட்ரான் துகளை புருவ மத்தியில் துலங்கும் ஒளியை நோக்கி கூர்ந்து மிக நுண்ணியமாக்கி, அசைவற்று நிறுத்தினால், ஒளித்துகள் தோன்றும். அந்த ஒளித்துகளை நம்மிடம் உள்ள எலெக்ட்ரான் துகளால் முடுக்க அந்த ஒளித்துகளிலிருந்து அளவற்ற சக்தி பீரிட்டு கிளம்பும். இதுவே ஆசீர்வாதம், இதுவே அருள் தன்மை எல்லாம்.

ஊழ்வினை 25.4.11

ஊழ்வினை, கர்ம விதி போன்றவற்றின் பாதிப்புகள் மனிதனை தாக்குகின்றன என முன்னோர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்த ஊழ்வினைப் படிதான் மனிதனுக்கு

நேரும் நிகழ்வுகள் நடந்தேறுகின்றன எனவும் கூறியுள்ளனர். ஊழ்வினை என்பது சரிதான், இந்த ஊழ்வினை எந்த ஆதார மட்டத்தில் நடக்கிறது என்பது முக்கியம். இதுவரை சொல்லப்பட்டுக் கொண்டு வந்துள்ள ஊழ்வினை கருத்துகள் மனிதன் எனும் ஆதார மட்டத்தில் சொல்லப்பட்டு வந்திருக்கிறது. ஆனால் உண்மை என்னவெனில் இந்த ஊழ்வினை என்பது உயிரணு ஆதார மட்டத்திலேதான் நடைபெற்றுக்கொண்டு வருகிறது. அதாவது -அதன் பண்பு மாற்றம் எனும் வகையில்-. மனித ஆதார மட்டம் என்பது, பழைய கருத்துப்படி முன் ஜன்மத்தில் எந்த உயிரணு தொகுதிகளின் கூடாக ஒருவர் இருந்தாரோ, அது இந்த பிறவியிலும் அதே உயிரணு தொகுதியின் கூடாகவே தொடர்கிறது என பொருள் படும். அப்போது அவர் முனுசாமியாக இருந்தால் இப்போது நாராயணனாக குணா விஷேசங்கள் மாறுவதெப்படி? (இவர்களுக்கு மனிதருக்கு மனிதர் வேறுபடுவது, குண விஷேசத்தால் என்பதால்) விதிப்படி உண்மை என்னவென்றால், முனுசாமியோ, நாராயணனோ அது அவர்களின் கருத்துரு மட்டுமே! கருத்துருவின் மீது ஊழ்வினை தொடருமா? உயிரோடு பொருளாக உள்ள உயிரணு மீது ஊழ்வினை தொடருமா? உயிரணுவின் பண்பு மாற்றமே ஊழ்வினை, கருமவிதி யாவும். உங்கள் உடலில் உள்ள கோடிக்கணக்கான உயிரணுக்களையும் விழிப்பு நிலைக்கு கொண்டு வந்து உங்கள் புருவ மத்தியில் உதிக்கும் ஒளிசுடரில் கலக்க விடுங்கள் உங்கள் உயிரணுக்களிலுள்ள 114அனைத்து ஊழ்வினைகளும் கரைந்தோடி விடுவதைப் பார்ப்பீர்கள். ஓர் உயிரணுவின் உச்சக்கட்ட பரிமாணம் ஒளித்தன்மையை அடைவது தான்.

மறைப்பொருள் 26.4.11

கருத்து,விழிப்புணர்வு,அருள்நிலை.

கருத்து என்பது காலத்தின் மூன்று வித தன்மையில்(கடந்த காலம், நிகழ காலம், எதிர் காலம்) நடை பெறுவது.

விழிப்புணர்வு என்பது இக்கணம், இக்கணம் எனும் நிகழ காலத்தில் மட்டும் நடைபெறுவது.

அருள் நிலை என்பது நிலைக்காலம் எனும் அனைத்து (மூன்று வித) காலங்களையும் உள்ளடக்கிய கால நிலையில் நடை பெறுவது.

இதனாலேயே இதை சூட்சுமம் அல்லது மறைபொருள் என சொன்னார்கள்.

அதாவது கருத்துக்கு அது சூட்சுமமாக இருப்பதால்.

ஏதும் அற்ற வெட்ட வெளியை ஒரு பொருளை உதாரணம் காட்டி சொல்ல சொன்னால் முடியுமா? அதுபோல!

கருத்து என்பது உருவமானது. சூட்சுமம் என்பது அருவமானது.

கருத்து என்பது நமக்கு அனைவருக்கும் பரிச்சயமான ஒன்று.

விழிப்புணர்வு என்பது மிக நுட்பமான உணர்வு பூர்வமான செயல்பாடு.

அருள்நிலை என்பது பொருள் நிலையின் இயக்கமற்ற ஓர் அனுபவநிலை.

கருத்தை அறியலாம்.
விழிப்புணர்வை உணர முடியும்.
அருள்நிலையை அனுபவிக்க மட்டுமே முடியும்.

உள் இணைப்பைப்பற்றி 26.4.11

தியானத்தின் பொழுது சூட்சும உடலான இணைப்பு உடலில் இணைப்பு நடக்கும்பொழுது ஒரு உள் இணைப்பைப்பற்றி பார்த்தோம். அந்த உள் இணைப்பு என்னவென்பதை, எப்படி நிகழ்கிறது என்பதை பார்க்கலாம்.

நமது உடலிலுள்ள ஐம்பது முதல் எழுபத்தைந்து டிரில்லியன் மரபணுக்களும் 210 வகைகளாக பிரிந்து செயலாற்றி வருகிறது. இதில் ஒவ்வொரு வகைக்கும் ஒவ்வொரு மாதிரியான பிரச்னை, ஒவ்வொரு மாதிரியான உணர்வுடன் செயல்புரிந்து வருகிறது. இந்த 210 வகைகளையும் நியூரான் வகை செல்கள் மூலம் (நரம்பு செல்கள்) உடலிலுள்ள அனைத்து வகையான செல் தொகுப்புகளுக்கும் செய்திகளை அனுப்பி செய்திகளைப்பெற்று மூளை நிர்வகித்து வருகிறது.

இந்த நிர்வாகத்தின் கட்டுப்பாட்டிலேயே அனைத்து செல்களும் இயங்குகின்றன. இந்த நிர்வாகத்தில் அவ்வப்போது தலையிட்டு நிர்வாகத்தை திருத்தி செயல்படும் ஒரு அமைப்பும் நம்மிடையே உண்டு.
அதுதான் நமது நினைவகம்.

இந்த நினைவகத்தில் தான் உங்களுக்கு உகந்தது எது? ஒவ்வாதது எது? போன்ற உங்கள் பாதுகாப்பு தகவல்கள் இருக்கிறது. அந்த தகவல்களின் அடிப்படையில் தான், அதன் துணையோடு தான் உங்கள் மரபணுக்கள் யாவும் பல கோடி தலைமுறைகளை பாதுகாப்பாக கடந்து வந்துள்ளது. ஆகையால் இந்த நினைவகத்தின் தலையீடு என்பது சரியானது தான்.

ஆனால், இந்த உச்சபட்ச அதிகாரத்தால், அதிகார மிதப்பால் நினைவகம் சர்வாதிகாரப்போக்கில் நடந்து கொள்கிறது. தேவைப்படும்பொழுது நிர்வாகத்தில் மாற்றம் கொண்டு வருவது எனும் நியதி மாறி, முழு நிர்வாகத்தையும் தன் கட்டுப்பாட்டிற்கே எடுத்துக்கொண்டு விட்டது.
சரி!
'தேவைப்படும்பொழுது நிர்வாகத்தில் மாற்றம் கொண்டு வருவது எனும் நியதி' என்கிற 116விதியை யார் கண்காணித்து வந்திருக்க வேண்டும் என்றால்? அது உங்கள் அனிச்சை மண்டலமும் அதன் தலைமையான கவனமும் தான். மிஸ்டர் கவனம் அவர்கள் 'சதா விழித்திருந்து இவைகளை கவனிக்க முடியுமா?' எனும் சோம்பேறி தனத்தினால் வேறு சில விஷயங்களில்(சுகபோகம்) கவனத்தை செலுத்திக்கொண்டு சுகவாசியாக காலம் கழிக்கிறார். பரிபாலனத்தை நினைவகத்திடம் ஒப்படைத்து விட்டு.

உடல் என்கிற தன்மையில் இது உங்களுக்கு பழக்கமாகிவிட்டது. இதிலும் கூட ஏதோ கொஞ்சம் சேர்ச்சை உள்ள மாதிரித்தான் உள்ளது என விட்டு விட்டீர்கள்.

இப்போது இதுதான் நிலை என தெரிய வந்த பிறகு மிஸ்டர் கவனம் அவர்களை மிக கவனமாக இருக்கச்சொல்லி உங்கள் ஜீன் சமூகத்தில் லேசாக கிளர்ச்சி நடக்கிறது. மிஸ்டர் கவனமும் நிலைமையை புரிந்து சுதாரித்துக்கொண்டார். இருந்தாலும் பழக்க

தோஷம் விட மாட்டேன்கிறது. என்ன செய்வார் பாவம்.

கொஞ்சம் கொஞ்சமாகத்தான் நிர்வாகத்தை கையில் எடுத்துக்கொள்ள முடியும். திருவாளர் நினைவகமும் ஒரு உடன்பாட்டு நடவடிக்கைக்கு வந்து விடலாம் என எதிர்பார்க்கலாம். ஆனால் திருவாளர் நினைவகத்தை கொஞ்ச நாட்களுக்கு செயல்பட விடாமல் 'சும்மா' இருக்க வைத்ததால் தான் நிர்வாகம் சீர்படும். மிஸ்டர் கவனத்துக்கும் பொறுப்புத்தன்மை வரும்.

இதற்காக மிஸ்டர் கவனம் சில பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. அதாவது சிற்றின்ப சேட்டைகளிலும்,ருசியான உணவுகளிலும், நினைவகத்திடம் பட்ட அடிமைத்தனத்திலும் உழன்று கிடந்த ஒரு குறுகிய எல்லையான உலகை தாண்டி, எழுபது டிரில்லியன் தொகை கொண்ட சமூகம், அவர்களுக்கான சுதந்திரம், அவர்களுக்கான உரிமைகள், அதன் சகோதரத்வம், அவர்களின் மேம்பாடு எனும் அகண்ட உணர்வுலகை செயல் திட்டமாக கொண்டு சமூகத்தை ஒன்று திரட்டி பிரசாரம் செய்யவேண்டியுள்ளது.

மிஸ்டர் கவனத்தைப்போலவே சமூகமும் கூட பழக்கத்திற்கு வசமாகி கிடக்கிறார்கள். இருந்தாலும் பல தலை முறையாக ஒடுக்கப்பட்டவர்கள் அல்லவா? மிஸ்டர் கவனத்தின் பிரசாரம் சூடு பிடிக்கவே செய்கிறது.

இப்போது சமூகத்தை ஒன்றிணைக்க வேண்டும்.

பாதத்தின் கடைக்கோடியிலுள்ள பாமரனையும் தட்டி எழுப்ப வேண்டும். நாம் அனைவரும் ஒரு தாய் மக்கள் எனும் உணர்வை அவனுக்கு ஊட்டுவது மூலமே பிரசாரத்தை அவனுக்கு ஊட்ட முடியும்.

"சகோதரர்களே! இனி உங்கள் சுக துக்கம் தான் என் சுக துக்கமும் ஒரு தாய் பிள்ளைகள் நீங்கள் கஷ்டப்படும் பொழுது நான் சுகமாயிருக்க முடியுமா? நமது அனைவரின் சுக துக்கத்தையும் நாம் அனைவரும் சமமாக பகிர்ந்து கொள்வோம் . நாம் அனைவரும் ஓருடல், ஓருயிர் எனும் செயல்பாட்டுக்கு வருவோம். அதிகாரமும் அப்படியே! இந்த சமூகத்தில் இருப்பவர் அனைவருக்குமே அதிகாரம் உண்டு. இங்கு எதுவும் தனியுடமை இல்லை. பொதுவுடைமை தான். நாம் ஒன்றாக இணைவோம்.

இரத்தத்தாலும், சதையாலும், உணர்வாலும் நாம் ஒன்றாக இணைவோம் நம்மிடம் இனி ஒரு ஏக உணர்ச்சி செயல்படட்டும். அந்த ஏக உணர்ச்சியே நம்மை, நம் சமூகத்தை மேம்பட வைக்கும்.

நாம் இந்த உணர்ச்சியின் மூலம் உயர் நிலையை அடைவோம். அங்கு பிறப்பில்லை, இறப்பில்லை, ஒரே ஏக மயம்தான். நாம் இனி திவ்ய உடலை அடைவோம்." என அறிவூட்டி, உணர்வூட்டி இதயத்தால், உணர்வால் ஒரு இனத்துக்கான உள்ளுணர்வில் இணைத்துக்கொள்வதே 'உள் இணைப்பு' எனப்படுவது.

சூன்யம். 27.4.11

நீ அசைவற்று இருந்து, உலகத்திலிருந்து விடுபட்டு கடந்து, உருவத்திலிருந்து விடுபட்டு கடந்து,கருத்திலிருந்து விடுபட்டு கடந்து ஒலியிலிருந்து விடுபட்டு கடந்து , ஒளியிலிருந்து விடுபட்டு கடந்து,வெளியிலிருந்தும் விடுபட்டு கடந்து , நிர்மலமான

எதுவுமற்ற சூன்யத்தை அடைவாயாக! அங்கு பொருள் இல்லை, அங்கு இடம் இல்லை, அங்கு வெளியில்லை, அங்கு இயக்கம் இல்லை, அங்கு காலம் இல்லை, அங்கு கருத்தும் இல்லை,அங்கு நீயும் இல்லை. அங்கு ஒரு இருப்பு மட்டு உள்ளது. அந்த இருப்பும் உனதல்ல! சூன்யத்தில் 'இருக்கிறாய்'. அந்த இருப்பு . இது உன் கருத்துக்கு காண கிடைக்காது. அது சூட்சுமம். இந்த பிரபஞ்சத்தின் இருப்பும் இங்கு தான் இருக்கிறது. அங்கு இருப்பது ஒரே இருப்புதான். இந்த இருப்பு புள்ளியற்ற புள்ளியில் ஒடுங்கியுள்ளது. இருப்பது போலும் இல்லாதது போலும் இருக்கிறது.
உலகத்திலிருந்து விடுபட்டது
உருவத்திலிருந்து விடுபட்டது
கருத்திலிருந்து விடுபட்டது
ஒலியிலிருந்து விடுபட்டது
ஒளியிலிருந்து விடுபட்டது
வெளியிலிருந்தும் விடுபட்டது எது தெரியுமா? அதுவே இருப்பு. அது உன்னுடைய அனைத்திலிருந்தும் விடுபட முடிந்தால்! அது உன்னுடையதா? இல்லையில்லை அதனுடையது தான் நீ. அது இங்கு, அங்கு என உள்ள அனைத்தின் ஆதாரமும் ஆகும்.

ஒளித்துணை. 27.4.11

அந்த அனைத்து செல்களுக்கான உள் இணைப்பு முழுமையாகி, ஓர் ஏக உணர்வுடன் ஒரு குழுவாக பரிணமிக்க, நம் குழுவில் உள்ள அனைத்து செல்களும் 'நான்' எனும் கருத்துருவ சுய தன்மையை இணைப்பில் சரண் செய்தல் வேண்டும். இதை சரண் செய்வதில் தயக்கம் ஏற்பட வாய்ப்புண்டு. நடக்கும் அனைத்து வித விஷயங்களையும் 'நான்' கவனிக்கிறேன்.'என்னை'யே சரண் செய்து விட்டால், அப்புறம் நான் யார்? நான் எப்படி செயல்படுவது? இந்த கேள்விகளோடு உங்களுடைய 'நான்' தப்பியோட முயற்சிக்கும்.

இந்த 'நான்' இப்போது இந்த பிறவியில் வந்த ஒரு கருத்து. ஒவ்வொரு பிறவியிலும் ஒவ்வொரு கருத்துருவான 'நான்' இருந்திருக்கிறது. அத்தனை 'நான்'களும் நீங்கள் அலல! உங்கள் மரபணுக்களே இத்தனை 'நான்'களையும் சுமந்து வந்தது. உதறி கீழே தள்ளியும் வந்திருக்கிறது.

நீங்கள் விட்டுவிட வேண்டியது ஒரு கருத்துருவான 'நானை'யே! ஒரு உண்மையான - மூலமான நான்- உங்களில் செயல்படும் மரபணுக்களின் குழுவமைப்பேயாகும்.

ஒரு குழுவாக இருப்பது எப்படி ஒரு முழுமையான ஒர்மையாகும்?

பதில்: குழுவில் உள்ள அனைத்து மரபணுக்களும் குழுவின் பாதுகாப்பு நிர்வாக வசதிக்காக தனித்தனி எனும் கருத்தமைப்பில் செயல்புரிந்து வருகிறது. இப்படி 210 பிரிவுகளாக செயல்புரிந்து வருகிறது. இவை அனைத்துமே தங்களது தனித்தன்மை எனும் கருத்துருவை சரண் செய்து விட்டு ஒன்றாக இனத்தால் வேண்டும்.

ஏக உணர்வு, ஏக அறிவு எனும் கோட்பாட்டில் அனைவரும் ஒளித்தன்மையை உள் வாங்கி, ஒளி ரூபமாகவே மாற, இப்போது அனைத்து செல்களும் ஒளியாக மாறிவிட, ஒரேத்தன்மை வாய்த்து விடுகிறது.

அப்படி ஒளியாக மாறும் மரபணுக்களின் அப்பழுக்கற்ற உடல் பூரண உடலாகும்.

ஒவ்வொரு மரபணுவின் நான் தன்மை சரண் செய்யப்பட்டு பூரண உடல் பெறுதல் வேண்டும். இந்த பூரணஉடல் பொருள் தன்மையை கடந்ததாக இருப்பதால் எண்ணம், கருத்து இவைகளால் இதன் 'பூரண உடல்' தன்மையை நாம் அறிய முடியாது.

அது கண் இல்லாத நான்கு குருடர்கள் யானையை தடவி அடையாளம் சொன்ன கதைதான்.

அனைத்து செல்களும் பூரண உடல் தன்மையை அடைந்தவுடன் அனைத்திற்கும் ஓர் இணைப்பு நடக்கும். அப்படி இணைப்பு நடந்து முடிந்து உண்டாவதே இணைப்பு உடல்.

இந்த சூட்சும பூரண உடலில் நான் எனும் தனித்தன்மை செயல்படுவதில்லை. அதேப்போல இந்த சூட்சும இணைப்பு உடலிலும் நான் எனும் தனித்தன்மை செயல்படுவதில்லை. அதுபூரண ஒளித்தன்மையை கொண்டுள்ளதால் எல்லையற்ற தளத்தில் செயல்படுகிறது.

இந்த பூரண உடல் மற்றும் இணைப்பு உடல் இவைகள் ஒளித்தன்மை வாய்ந்தவையாக உள்ளதால் எல்லைகளற்ற தன்மையில் இயங்குவதாகும். எனவே மனதின் எண்ணத்தால், அல்லது கருத்தால் இவைகளை அறிய முடிவதில்லை. அப்படி கருத்தால் அறிய முடியாததாலேயே இவைகள் சூட்சும உடல்கள் எனப்படுகிறது.

தவிரவும், ஏற்கனவே இந்த அநுபூதி நிலையை அடைந்தவர்களின் சூட்சும உடல்கள் ஒளித்தளத்தில் பொருந்தியுள்ளதால் உங்கள் பூரண உடலும் அங்கு பொருந்துவதே திவ்ய உடல் என்பதாகும்.

அதாவது தாவரங்களில் துவங்கி ஒளிசேர்க்கைப்பெற்று இந்த உயிரணுக்கள் பல்வேறு பிரிவுகளாக, வெளியுலகிலும், உள் நிலையிலும் ஒளியோடு தொடர்பு மாறாமல், பல தலை முறைகள் பல்வேறு கர்மாக்களின் வினையால் தகவமைப்பு மாறி, மாறி பல்வேறு அனுபவங்களுடன், அனுபவ எச்சங்களுடன்,ஸ்தூல, சூட்சும தளங்களில் மாற்றம் கண்டு அனுபவம் எனும் முழு பரிமாணத்துடன் தொடர்ந்து பல்லாயிரம் பிறவிகண்டு, 120தன்னிலிருக்கும் (அனுபவ) அழுக்கை, (நான் எனும்) அறியாமையை, அந்த ஒளியாலே துடைத்து சுத்தமான தூயத்தன்மையுடன் அந்த ஒளியினிடமே ஒப்படைக்க அந்த ஒளித்துணையே வழிநடத்துகிறது.

ஒரு தகவல். 28.4.11

இந்த மனிதகுல சமூகத்திற்கு ஒரு தகவலை இப்போது கொடுக்க வேண்டியது அவசியம் ஆகிறது.
இந்த உணர்வு உடல், பிராண உடல் மன உடல் தொடர்ந்து பூரண உடல் மற்றும் இணைப்பு உடல் இறுதி நிலையான திவ்ய உடல் என இறுதி நிலை வரை பயணித்த , அந்த நிலைகளை உணர்ந்தவர்கள் அதை சில கணங்கள் உணர்ந்ததாலேயே அதை அடைந்துவிட முடியாது.
தொடர்ந்து நித்தம் தியானத்தின் வழியாக அதை உணர்ந்து வருதல் என்பது ஆரம்ப நிலை.
க்ஷணம் தவறாது இதில் நிலைத்தவர்கள் மகான்கள் எனப்படுபவர்கள்.
தொடர்ந்து பயிற்சியிலிருப்பவர்கள் எந்த அளவுக்கு மாற்றம் ஏற்பட்டிருக்கிறார்கள் என்பதை அறிவதற்கு ஒரு உபாயம் உண்டு.
அந்த திவ்ய தேகத்தை உணர்ந்தவர்கள் நீண்ட நாட்கள் இந்த ஸ்தூல ஆதார வாழ்வை

வாழ விரும்ப மாட்டார்கள். எவ்வளவு விரைவாக இந்த ஸ்தூல வாழ்வை உதறி விட வேண்டுமோ அவ்வளவு விரைவாக உதறி விடுவர்.
ஒரு உதாரணம் இதற்கு பொருந்தும் என பார்க்கலாம். அதாவது நூறு சதவிகிதம் அந்த இறுதி நிலையை அடைந்து விட்டவர்கள் சதாசிவ பிரம்மேந்திரர், அக்கம்மாதேவி, சமண மதத்தை சேர்ந்த திகம்பரர்கள்.
இவர்கள் யாவரும் தமது ஸ்தூல தேக உணர்வேயில்லாது மழலை போல திரிந்தவர்கள். இந்த ஸ்தூல தோற்ற உலகத்தைப்பற்றியும் அக்கறை கொள்ளாதவர்கள்.
இன்னும் சிலரை பார்த்தால் அந்த சதவிகிதம் குறையும். அந்த இறுதி நிலையான திவ்ய தேகத்தில் முற்றும் பொருந்தாது குறைவுற்றவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். இந்த குறைவு எதனால் ஏற்படுகிறது என கவனித்தால், இந்த உயிரணு தோன்றி பல்லாயிர பிறவி கண்டு பலகோடி அனுபவம் கண்டு வளர்ந்து வந்துள்ளது.
பொருளுலகு சார்ந்த இந்த 'நான்'. இது பெருங்காய டப்பா மாதிரி உள்ளே காலியாக்க முடிந்தாலும் வாசம் போக்க முடியாதவர்கள் இவர்கள். இந்த ஸ்தூல தன்மைக்கும் சூட்சும தன்மைக்கும் இடையான 121தடுமாற்றம். இது,அவர்களது போதனைகளில் தெரியும். இது தூய உண்மையை அறிவு நிலைகளில் தெளிந்தவருக்கு மட்டுமே சாத்தியப்படுகிறது.
அவர்கள் எத்தனை சதவிகிதம் இந்த பௌதிக உலகில் கவனம் வைத்திருக்கிறார்களோ அத்தனை சதவிகிதம் அவர்களிடம் வேறு ஒரு நோக்கம் இருக்கிறது என கண்டுபிடித்துக்கொள்ளுங்கள். திரு ராமகிருஷ்ணர் யாராவது அன்பர்கள் காசைக்கொடுத்தால் அதை வீசி எறிவாராம். இதற்கு அவர் அப்பொழுது வறுமை நிலையில் இருந்த நேரம்.
இது ஒரு புறமிருக்க
ஒரு துளிக்கு கடல் என்றால் என்னவென தெரியாத அறியாமையின் போது, "தனக்கு ஒரு 'தனி' தன்மையுள்ளது. மற்ற எந்த துளியை விடவும் நான் வித்தியாசமானவன், உருவத்திலும், நிறத்திலும், உள் அமைப்பிலும், குணத்திலும்,அறிவிலும் அனைத்திலுமே மற்றவரிடமிருந்து நான் வேறுபட்டவன். நான் நிகரற்றவன்" என தன்னைப்பற்றி கருத்து கொண்டுள்ளது. எப்போதாவது குளம், குட்டை, ஓடை என காணும்பொழுது சற்று மிரட்சி அடைந்தாலும், பழக்க தோஷத்தால் இந்த தன் பிரபாவம் குறைவதில்லை. என்றாவது ஒரு நாள் ஆர்ப்பரிக்கும் கடலை காண நேரும்பொழுது மட்டுமே இந்த துளி தன்னை அறிந்து தன் மூல நிலை அறிந்து தன் தகவமைப்பை அறிந்து நான் தனியல்ல! என்னை சூழ கடல் இருக்கிறது.
என்னைக்கடலில் விட்டு விட்டால், நான் எனும் துளி காணாது போய் இந்த துளியும் கடலாகிவிடும் எனும் ஏக உணர்வு தோன்றி தன்னை கடலில் சேர்த்து கடலோடு இணைந்து விடுதலே அந்த துளியின் ஆன்மீக வரலாறு.
இனி அந்த துளி பேசுமா? சதாசிவ பிரம்மேந்திரா, சமண திகம்பரர்கள் துளியாக இருந்து கடலாக மாறியவர்கள். என்று மாறினார்களோ அன்றே துளியின் கதை முடிந்து விட்டது.
துரதிர்ஷ்டமாக நமக்கு நிறையவே ஞானவான்களும், மகரிஷிகளும்,ஏன் அவதாரங்களும் கூட கிடைத்தார்கள். இந்த துளிகளெல்லாம் தங்களை கடலில் கலக்க விட்டு அந்த கடலே 'நான்' என ஆரம்பித்து விட்டார்கள். அது நானே! இது நானே! நானே அதுவாயிருக்கிறேன்! நானே இதுவாயிருக்கிறேன் இப்படி ஏகப்பட்ட வசனங்கள். சமீப காலத்தில் கூட ரமணர் போன்ற சிலர் அன்பர்கள் அந்த அநுபூதி நிலைக்கு

வரவேண்டிய உதவிகளை மட்டுமே தன்னை தேடி வந்தவர்களுக்கு அருளினார்கள். எவரெல்லாம் மீண்டும் அந்த 'நான்' ஐ விட முடியாமல் செயல்பட்டார்களோ, செயல்படுகிறார்களோ அவர்களை நீங்கள்தான் அடையாளம் கண்டு கொள்ள வேண்டும்.
இந்த ஸ்தூல நிலைக்கும் அந்த சூட்சும நிலைக்கும் இடையான தடுமாற்றமே இந்த புதுவித நான் உருவாவதற்கு காரணம். இந்த தடுமாற்றத்தில் தடுக்கி விழுந்த சாமிகள் ஏராளம். இதிலும்கூட ஒரு சூட்சும பிரச்னை இருக்கிறது அதையும் நேரம் வரும்பொழுது எழுதுவோம்.
எல்லாவற்றையும் உதறிய பின்பே அறுதி நிலை வாய்க்கும் என்பது சத்தியம். இடையில் சில நோக்கங்களுக்காக சிலர் தங்களை கடவுளாக்கிக் கொள்கிறார்கள். இதெல்லாம் அவர்கள் மனசாட்சிக்கே வெளிச்சம்.

சூட்சும நிலை. 29.4.11

சூட்சுமம் என்றாலே சற்று பயமாக இருக்கிறது அந்த வார்த்தையை பார்த்தால். அது ஏதோ பில்லி சூன்யத்திற்கு சம்பந்தப்பட்ட மாதிரி.
சற்று நாம் அயர்ந்து, கண்களை மூடினாலே அந்த சூட்சும உலகில் தான் சஞ்சரிக்கிறோம்.

சூட்சுமம் என்பது அவ்வளவு எளிமையானது.

தொடர்ந்து தியானம் செய்து வருபவருக்கு, வீட்டில் ஒவ்வொரு அறையாக திறந்து போவது போல அவ்வளவு சுலபமானது.

தியானத்தில் அமர்ந்த ஐந்தாவது நிமிடத்தில் இணைப்பு உடலுக்கு செல்ல முடியும். பழகி விட்டால் ரொம்ப எளிமையாக இருக்கும்.

நமது பால்வெளி மண்டலத்தில் இருக்கும் நட்சத்திரங்களின் எண்ணிக்கையும், நமது மூளையில் உள்ள நியூரான் செல்களின் எண்ணிக்கையும் ஒரே அளவாக முன்னூறு மில்லியன்கள் என ஒரு செய்தி சொல்கிறது. அண்டத்தில் உள்ளது பிண்டத்தில் என்பது இதுதானோ?

எது எப்படியோ நாமும் ஒரு குட்டி பிரபஞ்சம் தான். நம்மில் இருக்கும் அணுக்களை வைத்தே ஒரு பிரபஞ்சத்தையே உண்டாக்கிவிடலாமென குவாண்டம் தியரி சொல்கிறது. நாம் உயிருள்ள பிரபஞ்சம். நம்மிலிருக்கும் ஒவ்வொரு செல்லும் ஒரு அண்டம் என வைத்துக்கொள்ளலாம்,அப்படி பார்க்கும்போது நாமே ஒரு சூட்சுமம் தான்.

சாட்சித்தன்மை என ஏற்கனவே பார்த்தோம், அந்த சாட்சித்தன்மை விரிவு படுவதின் மூலமே நமது சூட்சும உடல்கள் செயல்படுகிறது.

இந்த சாட்சித்தன்மை கவனத்தை அடிப்படையாகக்கொண்டது. இப்போது நமது கவன நிலை ஓரிடத்தில் இருந்து கவனிக்கிறது.

இது ஸ்தூல உடலான கவன நிலை. இந்த சாட்சித்தன்மையானது தியானத்தின் பொழுது மன உடலில் ஒளி விரிவடையும்பொழுது அகண்டு விரிவது.

- உங்கள் உடலில் இருப்பு நிலை எங்குள்ளதோ அங்கு உங்கள் கவன நிலை குடி கொண்டுள்ளது, அல்லது உங்கள் கவன நிலை எங்கு உள்ளதோ அங்கு உங்கள் இருப்பு நிலை ஓடிவருகிறது. -

ஓரிடத்தில் உள்ள கவன நிலை தனது நிலையிலிருந்து 360 டிகிரி திசை வேகம் கொண்டு அது அடையும் 360 இடங்களிலும் இருந்து மீண்டும் அங்கங்கிருந்து360 டிகிரி முடுக்கம் கொண்டு 129600x360=46656000x360 = 16796160000 என திசைவேகம் கொண்டு விரிவடைகிறது.

நமது சாட்சித்தன்மை இவ்வாறாக விரிவடைந்து பல கோடி 'பாயின்ட்' களில் அதாவது முதலில் ஒரு பாயின்ட் இல் இருந்த கவன நிலை அடுத்து 360 பாயின்ட் களில் என , அடுத்து இப்படியே உங்கள் கவனம் பெருகி விரிவடைந்து கொண்டே போகிறது.உங்கள் கவனம் எங்கெல்லாம் போகிறதோ அங்கெல்லாம் உங்கள் இருப்புத்தன்மையும் போகிறது.

இப்போது உங்கள் இருப்புத்தன்மையின் விரிவை கண்டீர்களா?

இந்த அகண்ட சாட்சித்தன்மையை அடைந்த சித்தர் ஒருவர் படுவதை கேளுங்கள். "எண் திசையும், பதினாறு கோணமும், முட்டித்ததும்பி, முளைத்தொங்கும் ஜோதியை" என பாடுகிறார்.

அன்றைய திசைப்பற்றிய அறிவு எட்டு திசையும், பதினாறு கோணமும் தான். இன்றைக்கு அது 360 டிகிரி என வளர்ந்துள்ளது. இதுதான் சூட்சும தேகத்தின் உள்நிலை உணர்வு.

உங்கள் இருப்புத்தன்மை அங்கங்கும் இணைப்பு ஏற்பட்டு உங்கள் கவன நிலை முழுமையாகி பூரணத்தன்மையை அடைகிறது.

தியானத்தில் சுவாசத்தின் பங்கு. 30.4.11

தியானம் செய்யும்பொழுது நமது சுவாசம் எப்படி நடக்கிறது என்று பார்ப்போம். சாதாரணமாக நாம் இருக்கும்பொழுது நமது சுவாசம் வலது நாசியில் சிறிது நேரமும், பின் இடது நாசியில் சிறிது நேரமுமென நமது உடலின் சீதோஷ்ண நிலைக்கு ஏற்றவாறு சுவாசம் மாறுபட்டு ஓடிக்கொண்டிருக்கும்.

தொடர்ந்து வலது நாசியில் சுவாசித்துக்கொண்டிருந்தால் உடல் உஷ்ணமாக மாறும். தொடர்ந்து இடது நாசியில் சுவாசித்துக்கொண்டிருந்தால் உடல் குளுர்ச்சியாக மாறும்.

நாம் தியானம் செய்யும்பொழுது இரண்டு நாசியிலும் சமமாக சுவாசிக்கும்படி சுவாசத்தை அமைத்துக் கொள்ளுதல் வேண்டும். அந்த சுவாசத்தையும் நீண்ட சுவாசமாக, ஆழமாக உள்ளிழுத்து, நிதானமாக மெதுவாக சீராக வெளி விடுதல் வேண்டும்.

ஒரு பறவையின் சிறகை மூக்கின் அருகில் வைத்தால் வெளிவிடும் மூச்சு காற்றின் வேகத்தால் அசையாது இருக்கவேண்டும் என திரு. ஜக்கி வாசுதேவ் அவர்கள் கூறுகிறார்கள்..

அப்படி கவனமாக சீராக சுவாசத்தை நடத்துதல் வேண்டும். அவ்வளவு சீராக சுவாசத்தை நடத்தும்பொழுது உங்கள் முழுக்கவனமும் சுவாசத்திலேயே இருப்பதை உணர முடியும்.

முழுக்கவனமும் சுவாசத்திலேயே இருப்பது என்றால், உங்கள் உடலிலுள்ள 75 டிரில்லியன் செல்களும் ஒரே கவனத்துடன் செயல்புரிகிறது என பொருள். உங்கள் சுவாசமே உங்கள் உடலிலுள்ள செல்கள் சுவாசிக்கத்தான் நடக்கிறது என்பதையும் தெரிந்து கொள்ளுங்கள்.

உங்கள் பிராண உடல் என்பது , உடலிலுள்ள 75 ட்ரில்லியன் செல்களும் பிராண தன்மையில் ஒரே சமச்சீராக, சீரான தன்மையில் இருப்பது தான்.

மெதுவாக, மிக மெதுவாக சுவாசம் நடைபெறுகையில் இது சுலபமாக சாத்தியப்படுகிறது.

மன உடலில் தியானம் முடிந்து இணைப்பு உடல் தியானதிற்குள் நுழையும்பொழுது , மன உடலின் எல்லையற்ற பிரகாசிப்புத்தன்மையை அப்படியே (ஸ்டில்) நிலை நிறுத்தும்பொழுது, உங்கள் வலது நாசியை சற்று தூக்கி நிறுத்தி,(இது நடராஜ தத்துவம்) உடலிலுள்ள 75 ட்ரில்லியன் செல்களும் மேல் நோக்கி, புருவ மத்தியை நோக்கி, தங்களது சுவாச நிலைகளை 125திறந்து வைத்து பிராணன் வேண்டிஏந்தி நிற்க, இப்போது,
இந்த ஸ்தூல உடலில் சுவாசம் நின்றிருப்பதை காண முடியும்.

ஆனால், அனைத்து செல்களுக்கும் பிராண பரிவர்த்தனை தொடரும்.இந்த அதிசய நிகழ்வை ஒரு உதாரணத்தின் மூலம் விளக்குவோம்.

ஒரு விவசாயி தனது தோட்டத்திற்கு தண்ணீர் பாய்ச்சும் முறை என்பது வாய்க்கால், மற்றும் பாத்திகள் அமைத்து தண்ணீரை வாய்க்கால் வழியாக கொண்டு போய் ஒவ்வொரு பாத்தியாக மடை மாற்றி நீர்பாய்சுவான். இது நமது ஸ்தூல உடலின் சுவாச முறை.

தியானதன்மையில் சுவாசத்தை நிலை நிறுத்துதல் (ஸ்டில்) என்பது, தற்கால விவசாய சொட்டுநீர் பாசனம் மாதிரி. சொட்டு நீர் பாசன முறையில் கிணற்று பம்ப் செட்டிலிருந்து மெயின் பைப் வழியாக தண்ணீர் தோட்டத்திற்கு சென்று, அதிலிருந்து பல்வேறு சிறு சிறு பைப்களின் வழியாக ஒவ்வொரு செடியின் அடியிலும் நீர் சொட்டு சொட்டாக விழ, ஒரே சமயத்தில் கிணற்று நீர் தோட்டத்தில் உள்ள
அனைத்து செடிகளுக்கும் தவறாது போய் சேருவதைப்போல- உதாரணம் சொல்லலாம். ஒரு சொட்டும் வீணாவதில்லை. அனைத்து செடிகளுக்கும் ஒரே சீராக, சமச்சீராக நீர் சென்றடைகிறது.
இந்த சுவாச தொழில் நுட்பம் தெரியாது அநுபூதி நிலைக்கு ஆசைப்பட்டு தியானித்து மூச்சடக்கி இறந்தவர்கள் நிறைய பேர்.

யாத்ரா 3.5.11

ஒரு செல் உயிரியாக ஒரு செல் உடலியாக துவங்கி , இன்று எழுபத்தைந்து டிரில்லியன் 210 வித உயிர் ஒரே உடலியாக பரிணாமமுற்று ஆனால் உணர்வுகளில்

முரணான பேதமான விகல்பமான தன்மைகளில் கட்டுண்டு கிடக்கிறோம். ஒருணர்வாக முற்றுணர்வாக முகிழ முடிந்தால், எழுபத்தைந்து டிரில்லியன் உயிரிகளும் ஒரேயுணர்வாக முற்றுணர்வாக முகிழ அப்பொழுது தான் நீ ஓருயிர் ஒருடலியாக முடியும். உன் பரிணாமமும் தொடரும்.

இப்பொழுது (மனித பிறவி) தோற்ற உருவின் முதிர்வு பருவம். இனி 126பொருட்களாலான ஸ்தூல உடல் தாண்டி அடுத்து சூட்சும உடலில் பிரவேசிக்க வேண்டிய பருவம்.
ஒரு காலத்தில் உன்னிடமிருந்த கொம்பை நீ இழந்தாய், பின் உன்னிடமிருந்த வாலையும் இழந்தாய். நீ இழந்த உறுப்புகள் ஏராளம். அதுபோல இப்பிறவி நீ உன் ஸ்தூல உடலை இழந்துவிட்டு சூட்சும உடலில் பிரவேசிக்க வேண்டிய பிறவி.

உன்னுடைய மூலத்தை , மூல தேடலை, மூல உண்மையை கை மாற்றிக்கொடு. இனி அது சூட்சும உடலில் பயணப்படட்டும். நீ கொம்பொடு இருக்கும்பொழுது இந்த மனித உருவின் செயல்தன்மைகளைப்பற்றி எண்ணியதுண்டா? இல்லை. ஏனென்றால் அதற்கான கூறுகள் அப்பொழுது உன்னிடம் இல்லை. அதேப்போலத்தான் இப்பொழுது சூட்சும உலகைப்பற்றி அறிந்து கொள்ளும் கூறுகள் நமது உடலில் இல்லை.

நாம் எந்த திசையிலிருந்து பயணப்பட்டு இன்று இங்கு வந்துள்ளோம் என்பதிலிருந்து இனி எந்த திசைக்கு செல்ல வேண்டும் என்பதை மிக எளிமையாக யூகித்து விடலாம் அல்லவா!

நாம் செல்லும் பாதை சரியானது தானா என்பதை நாம் யூகிக்க ஒரு வழியுண்டு. நாம் நமது முதல் ஒரு செல் நிலையிலிருந்து புறப்படும் பொழுது நம் வழித்துணைக்கு அறிவை கூட கொண்டு வரவில்லை. உணர்வைத்தான் கொண்டு வந்துள்ளோம். அறிவை கூட கொண்டு வந்திருந்தால், நாம் கடந்து வந்த கோடிக்கணக்கான பிறவிகளைப்பற்றி துல்லியமாக நமக்கு தெரிய வேண்டும். ஆனால், இப்போது நாம் செல்லும் பாதை சரியானது தானா என்பது அறிவுக்கு தெரியவில்லை. யூகிக்க வேண்டியுள்ளது. நம் அறிவுக்கு இது தெரியவில்லை.
அறிவு பயணத்தின் அனுபவமாகவும் உணர்வு பயணத்தின் நோக்கமாகவும் செயல்படுகிறது .

உணர்வுதான் நம் வழித்துணையாக கூட வந்தது. அந்த உணர்வு சந்தோஷ நிலையில், திருப்தி நிலையில் இருக்கும்பொழுதெல்லாம் நாம் நம் பயணத்தின் அடுத்த அடியை 127எடுத்து வைத்து முன்னேறி இருக்கிறோம். நமது பயணத்தின் வழித்துணை உணர்வேயாகும். இந்த உணர்வுக்கு கடந்த நிலைகளும், இனி கடக்க வேண்டிய நிலைகளும்தெரியும். நாம் எவ்வளவு சந்தோசமாகவும் திருப்தியுடனும் நிறைவுடனும் இருக்கிறோமோ அவ்வளவு எளிமையும், சுலபமும் ஆகிறது பயணம்.
உணர்வின் நிறைவிலும், பூரணத்திலும், ஏகத்தன்மையிலுமே சூட்சும உடல் பிரவேசமும், திவ்ய உடல் பிரவேசமும் கைக்கூடும்.
சூட்சும உடல்கள் என்பது நீ இதுகாறும் கடந்து வந்துள்ள உடல்கள் போலல்லாமல் ஒட்டுமொத்த மரபணுக்களின் (மரம், செடி, கோடி, ஊர்வன, நடப்பன, பறப்பன, நீந்துவன, மிருகம், மனிதன் எனும் அனைத்துயிரின் மரபணுக்கள்) தலைமைப்பண்பு

ஆகும். ஓருயிர் செல் முதல் திவ்ய உடல் ஈறாக அனைவரும்இன்புற்று வாழ்க! யாவுயிரும் சமம்.

பிரார்த்தனை. 3.5.11

பிரார்த்தனையைப்பற்றி நாம் எவ்வளவோ விஷயங்களை கேள்விப்பட்டிருக்கிறோம். இதைப்பற்றி ஒரு அடிப்படையான விஷயத்தைப்பார்க்கலாம். இந்த பிரார்த்தனை செய்வது எது? அல்லது யார்? பிரார்த்தனை யாரை நோக்கி அல்லது எதை நோக்கி. இதில் நிதர்சனமான நிலைமை என்ன?

இதை செய்யாத மனித உயிரே இருக்காது என்கிற அளவுக்கு இது நம் வாழ்வோடு இணைந்துள்ளது. ஏன், இது ஒரு சுபாவம் என்கிற அளவுக்கு நம் உடலோடு ஊறியுள்ள பழக்கம் இது.

நாம் சிறு குழந்தையாக இருக்குபொழுது பிரார்த்தனை செய்திருக்கிறோம். அந்த பிரார்த்தனை வெளியில் இருக்கும் ஏதோ ஒன்றை நோக்கியோ, யாரோ ஒருவரை நோக்கியோ அல்ல!

128மிக சுபாவமாக நம்மிடமே நாம் பிரார்த்தனை செய்து வந்திருக்கிறோம் என்பதை ஒரு முறை நினைவு கூர்ந்து பாருங்கள்.

நம்மிடமே நாம் பிராத்தனை செய்தபோதெல்லாம் அது கைக்கூடி வந்திருக்கிறது. நன்றாக யோசித்து பாருங்கள். இது உண்மை.

நாம் விரும்பிய ஒன்று நமக்கு நடக்காத போது நாம் போவது இந்த பிரார்த்தனையிடம்தான். இது நம் தாயின் கருணைமாதிரிஅத்தனை கருணையுடையது.

இதே பிரார்த்தனை நாம் நம்மிடமே நடத்தும்பொழுது நிகழும் செயல்பாட்டு தன்மைக்கும், நாம் வெளியில் இருக்கும் ஏதோ ஒன்றிடம் அல்லது ஏதோ ஒருவரிடம் வைக்கும் பிரார்த்தனையின் செயல்பாட்டு தன்மைக்கும் உள்ள வித்தியாசத்தையும் யோசித்து பாருங்கள்.

இந்த பிரார்த்தனை நம்முள் இருக்கும் நமது செல் குழுவுக்குள் விவாதம் செய்யப்பட்டு தேவையானது தான் என்றால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்த பிரார்த்தனையை நடைமுறைப்படுத்த உள்ள ஹேதுக்களைப்பற்றி சாத்தியப்பாடுகளை ஆராய்ந்து தங்களை தயார் செய்து கொள்கின்றன. இது தான் நமக்கு நாமே செய்து கொள்ளும் பிரார்த்தனையின் மகிமை.

அநுபூதி நிலைக்கு முயற்சி செய்யும் அன்பர்கள் தங்கள் வேண்டுகோளை பிரார்த்தனையை தங்களுக்குள்ளேயே செய்து கொள்ளலாம் . இது வெற்றி பெறும் . நீங்கள் உங்களுக்கு வெளியில் இருக்கும் ஏதோ ஒருவரிடமோ , அல்லது ஏதோ ஒன்றிடமோ பிரார்த்தனையை வைக்கும்பொழுதும் அதுவும் ஏற்கனவே நாம் பார்த்தபடி ‘உங்களுக்குள்ளே நடக்கும்’ ஒன்றுதான்.
நமது தியான வேளையில் மன உடலில் தியானிக்கும் பொழுது நமது உடலிலுள்ள அனைத்து செல்களும் ஒளி ரூபமாக மாறி இருக்கும். ஒளியைத்தவிர வேறெதுவும் இருக்காது அப்பொழுது. அதுவே செல்களின் ஏக நிலை. அப்பொழுது நாம் வைக்கும்

பிரார்த்தனை நமது அனைத்து செல்களிலும் பதிவாக்கப்பட்டு அந்த பதிவு எல்லா 129செல்களையும் இணைக்கும் ஒன்றாகவும் இருக்கிறது. இது முழு ஏற்பு ஆகும்.
இந்த பிரார்த்தனை பூடான் லாட்டரியில் எனக்கு பத்து லட்சம் பரிசு விழ வேண்டும் என அபத்தமாக இல்லாமல் நமது உடல், மனம், வாழ்வு சம்பந்தமுள்ளதாக இருப்பின் நீங்கள் கேட்டபடியே நடக்கும்.
இந்த பிரார்த்தனையின் பலத்தை அடிப்படையாகக்கொண்டே ஆதி நாட்களில் யாகம் வளர்த்தி பிரார்த்தித்து தங்களுக்கு வேண்டியதை கேட்டுப்பெற்றிருக்கிறார்கள். நமது வைதிக இந்து மதமே இந்த பிரார்த்தனை பலத்தில் தான் மக்களிடம் செல்வாக்கு பெற்றிருக்கிறது.

0' டிகிரி 4.5.11

புவி மண்டலத்தில் வாழும் உயிரினங்கள் நீரின் நேரடி உதவியுடனே உற்பத்தி, பெருக்கம் அனைத்தையும் செய்துகொண்டிருக்கிறது. நாம் நீரினை சார்ந்து வாழ்ந்து வருகிறோம். நீரின்றி அமையாது உலகு என்பது நீரின்றி அமையாது உயிருலகு என அர்த்தம்.
இந்த நீரின் தன்மையை கவனித்தால் அது 100 டிகிரி உஷ்ணத்தில் திரவ நிலையை விட்டு வாயு நிலைக்கு மாறி விடுகிறது. நீர் 0 டிகிரிக்கு கீழ் வரும்பொழுது திட நிலையாக ஐஸ் கட்டியாக மாறிவிடுகிறது. 0 முதல் 100 வரை திரவ நிலை.
ஆக மூன்று நிலை மூன்று வித செயல்பாடு.
திட நிலையில் பரவாமல் கிடக்கிறது. திரவ நிலையில் பரவினாலும் ஒன்று கூடிக்கொள்கிறது. வாயு நிலையில் பரவலாகி காற்றின் போக்கில் கலந்து பிரிந்து போய்விடுகிறது.
நமது உடலிலும் வெப்பத்தின் ஏற்ற இறக்கத்திற்கேற்பவே உள் இயக்கம் நடை பெறுகிறது.
மனிதனுடைய பொதுவான வெப்பநிலை 37 செல்சியஸ். இந்த 37 ஒன்று கூடினாலும் உடல் நலத்தில் பிரச்னை. ஒன்று குறைந்தாலும் உடல் நலத்தில் பிரச்னை.

இயக்கத்தன்மையை இந்த வெப்பத்தின் அளவுதான் மாற்றி அமைக்கிறது.

130நம்மிடம் உடல், மன, உணர்வு, கவன இயக்கங்கள் என இயக்கங்கள் நடக்கின்றன.

இந்த உடல் இயக்கத்தையும், மன இயக்கத்தையும், உணர்வு இயக்கத்தையும் 0 டிகிரி நிலைக்கு உங்களால் கொண்டு வர முடிந்தால்! கவன நிலையை மட்டும் பூரண விழிப்பாக வைத்திருக்க முடிந்தால்! (கவன நிலையை 0 டிகிரிக்கு கொண்டு வந்தால் தூக்கம் வந்து விடும்) அனுபூதித்தன்மை உங்களில் நிகழும்.

அதாவது 0' டிகிரி என்பது உடல் இயக்கத்தை நிறுத்த வேண்டிய அளவுக்கு வெப்பத்தைக்குறைத்து, மன இயக்கத்தை நிறுத்துமளவுக்குவெப்பத்தைக்குறைத்து, உணர்வு இயக்கத்தை நிறுத்த வேண்டிய அளவுக்கு வெப்பத்தைக்குறைத்து என இதற்கு பொருள்படும்.

உயிரின் சொரூபம். 5.5.11

நமது உயிர் நான்கு வித சொரூபங்களை கொண்டுள்ளது.
1, மாயா சொரூபம் ,
2,இச்சா சொரூபம் ,

3,சாந்த சொரூபம்,
4,ஆனந்த சொரூபம் .
உங்கள் உடல், கவனம், மனம், உணர்வு அனைத்தும் வெளி நோக்கி செயல்படும் பொழுது மாயா சொரூபமென இருக்கிறது. இந்த மாயா சொரூபத்தையே இதுதான் உண்மை என எண்ணிக்கொள்கிறது உயிர்.
உங்கள் மனமும் கவனமும் கூடி செயல்படும்பொழுது இச்சா சொரூபத்தையே இதுதான் உண்மை என எண்ணிக்கொள்கிறது உயிர்.
உங்கள் உணர்வும் கவனமும் சேர்ந்து செயல்படும்பொழுது சாந்த சொரூபத்தையே இதுதான் உண்மை என எண்ணிக்கொள்கிறது உயிர்.

கவன நிலைமட்டும் ஏக நிலையில் இயங்கும்பொழுது ஆனந்த சொரூபத்தையே இதுதான் உண்மை என எண்ணிக்கொள்கிறது உயிர்.
1, மாயா சொரூபம் : தற்சமயம் உலக சமூகம் வாழ்ந்துவரும் நிலை இந்த மாயா சொரூப 131நிலைதான். உங்கள் உடலே இதன் பிரதான கருவியாகும். உடலிலுள்ள புலன்கள்தான் அனைத்தையும் தன்னுள் வாங்கி கிரகிக்கிறது . புலன்களின் பின்னாடியே மனமும், உணர்வும், கவனமும் ஓடுகிறது. இதுதான் உண்மை நிலை இதைத்தவிர மற்றவைகள் கற்பனைகள் என மனம் உறுதிப்பட எண்ணுகிறது. என்னால் பிரத்யட்சமாக வெளியில் உள்ளதை பார்க்க முடிகிறது. அதனோடு உறவு கொள்ள முடிகிறது. கண்களால் பார்ப்பதும், காதுகளால் கேட்பதும், மூக்கால் நுகர்வதும் எப்படி பொய்யாக முடியும்? இதோ இப்போது இங்கே இருக்கிறது. என புலன்களின் வழியாக அறியும் உலகை மறுதலிக்க முடிவதில்லை மனதால்.என் காட்சி பொய்யா? என் காதால் கேட்ட வார்த்தைகள் பொய்யா? இதோ சுற்றியுள்ள பொருட்களுடன் கலந்து வாழ்கிறேனே இது பொய்யாகுமா? அடிக்கிற காற்று பொய்யா? இந்த சூரியன் பொய்யாகுமா? இந்த கடல்தான் பொய்யாகுமா? நான் குப்புசாமிக்கு ஐம்பதாயிரம் ரூபாய் கடன் கொடுக்க வேண்டும் அவன்தான் இது மாயா சொரூபம் என விட்டு விடுவானா? என்ன வேடிக்கையாக இருக்கிறது!
உங்கள் உடலோடு கவனமும் மனமும், உணர்வும்இணைந்து செயல்படும் நிலை இது. அதாவது உடல் பிரதானமாக செயல்படுவது.
இப்படி உடலோடு, வெளியுலகோடு தன்னை சம்பந்தப்படுத்தி ஏற்ப்படுத்திக்கொள்ளும் சொரூபம், மாயா சொரூபம். உதாரணத்திற்கு நான் சுந்தரம் எனும் சொரூபம் - எனக்கு விபரம் தெரிந்த நாளிலிருந்து நான் சுந்தரமாகவே இருக்கிறேன் - நீங்கள் உங்களுக்கு உங்கள் பெயரை வைத்துக்கொள்ளுங்கள். இது தான் மாயா சொரூபம்.
இதை கவனியுங்கள் :
எல்லையுள்ள எண்ணங்களைக் கொண்டு எல்லையற்ற உண்மையை அறிய முடியாது-ஜே. கிருஷ்ணமூர்த்தி.
ஒருவன் தனக்குள் இருக்கும் உண்மையை வெளியில் தேட முடியாது. பகவான் ரமணர்.
தன்னறிவை பெறும்போது பேரறிவு ஒருவரை இயக்கத் தொடங்கும்.
ஜே.கிருஷ்ணமூர்த்தி.
2, இச்சா சொரூபம் : நமக்கு சதா ஏதாவது ஒன்று தேவைப்பட்டுக்கொண்டேயிருக்கிறது. எனக்கு எதுவும் வேண்டாம் என எப்போதாவது நம்மால் சும்மா இருக்க முடிகிறதா? எந்த உயிராவது சும்மாயிருக்கிறதா?சற்று அப்படி சும்மா இருந்தால் மனசு கேட்கிறதா? சும்மாயிருந்து இந்த உடம்பை வளர்த்து என்ன செய்யப்போகிறாய்? எதையாவது உபயோகமாய் 132செய். இந்த தோட்டங்கள், இந்த நகரம், இந்த தார்சாலைகள் இந்த

வாகனங்கள் நாம் தினமும் உபயோகிக்கும் மின்சாரம் இவையெல்லாம் சும்மா இருந்திருந்தால் நமக்கு கிடைத்திருக்குமா? அட சும்மாயிருந்தால் சோறு கிடைக்குமா? ஒரு பூச்சி புழுக்கூட சும்மாயிருப்பதில்லை. ஆறறிவான நாம் சும்மயிருக்கலாமா? உடலால் உழைக்க முடியாதவன் மனதால் உழைக்கலாமே! உழைக்கும் சமுதாயத்தில் எவன் சும்மாயிருக்கிறானோ அவன் ஒரு
விஷக்கிருமி. சும்மாயிருந்து நமது தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள முடியாது. தேவைகள் பூர்த்தியாக வேண்டுமானால் நம் சக்திக்கு முடிந்த வரை நாம் ஏதாவது செய்துகொண்டேயிருக்க வேண்டும். இது எல்லோரும் ஏற்றுக்கொள்ளும் நியாயம் தான், இதில் ஒன்றும் தப்பில்லை. இந்த மனம் சதா
செயல்பட்டுக்கொண்டேயிருக்கிறது. அது எப்பொழுதும் ஓய்வெடுப்பதில்லை. தான் தொடர்ந்து உயிர் வாழ் வேண்டும் (யாருக்குத்தான் இந்த ஆசையில்லை!) தனது பாதுகாப்பு மிக முக்கியம். அதனால் எப்பொழுதும் அலார்டாக இருக்கவேண்டும். இதையெல்லாம் யார் ? செய்வார்கள். நான்தான் கவனிக்க வேண்டும். என்னால் தான் இது முடியும். இந்த உயிரை காப்பாற்றுவதிலும், பாதுகாப்பதிலும் போராடிய அனுபவங்கள் என்னிடம் ஏராளமாக இருக்கிறது. எனக்கு தெரியாமல் இங்கு ஒன்றும் நடந்து விடாது. எல்லாம் என் கட்டுப்பாட்டில் தான் இருக்கிறது. நான் சொல்வதைக்கேட்டுக்கொள்ளும் வரையிலும் இதற்கு அழிவில்லை. என்னோட இந்த 'என் மீதான' ஆசையே உங்களுக்கு கர்வமாக படலாம். இது கர்வமல்ல!
தன்னம்பிக்கை. என்னோட இந்த தன்னம்பிக்கை ஒரு சிலருக்கு
ஆணவமாகப்படுகிறது. எவனைப்பற்றியும் எனக்கு அக்கறையில்லை. என்னைப்பற்றி எனக்குத்தெரியும். அதுபோதும் எனக்கு.
உங்கள் மனதோடு கவனமும் உணர்வும் சேர்ந்து செயல்படும் நிலை இது. அதாவது மனது பிரதானமாக செயல்படுவது.
‘ஆசையே அனைத்து துன்பங்களுக்கும் காரணம்’ என புத்தர் சொன்னது இந்த ‘மனதால் நடத்தப்படும்’இச்சா சொரூபத்தையே!
இதை கவனியுங்கள் :
மனித அனுபவம் அனைத்தும் ஆசையால் சுடர்விட்டெரிவதாக புத்தர் கூறுகிறார். ஏற்கனவே அது பற்றி வளர்கிற பொருளையே மன நிறைவடையாமல், எரித்து பொசுக்குகிறது. புதுப்பொருள்களுடன் 'பற்று' கொண்டுவிடுகிறது. பிறகு தணியாத ஏக்கம் எனும் நோயுடன் எரிகிறது.

3, சாந்த சொரூபம் : இந்த வாழ்க்கையின் அனைத்து சாராம்சங்களையும் நுகர்வது இந்த உணர்வுதான். இந்த உணர்வு தளத்திலேதான் பிறவி, பிறவியாக வாழ்க்கை நகர்ந்து வந்திருக்கிறது. அறிவு வெறும் பதிவுகள்தான்,அனுபவப்பதிவுகள். இந்த உணர்வின் தாகத்தை தணிக்கத்தான் இத்தனைப்பாடுகள். இந்த தாகம் ‘எடுப்பார் கைப்பிள்ளை’யாக உணர்வு, அறிவோடு கூடிக்கொண்டு திரிந்ததால் வந்தது.
இந்த புவிமண்டலத்தில் வாழும் அனைத்து உயிரணுக்களின் உள்ளார்ந்த சாராம்சமும் இந்த உணர்வுதான். அத்தனை உயிரினங்களும் இந்த உணர்வு மண்டலத்திலேதான் நீந்திக்கொண்டிருக்கின்றன! இந்த உணர்வு மண்டலத்திலிருந்து உங்களுக்கு கிடைத்திருக்கும் ஒரு தொடர்புதான் உங்கள் உணர்வு. அனைத்துயிர்களுக்கும் அடிப்படையாககொண்டது உணர்வேயாகும். இந்த உணர்வு அறிவோடு சேர்ந்து இயங்கும்பொழுது அந்த அறிவின் எண்ணத்திற்கேற்றாற்போல், அந்த தகவலுக்கேற்றாற்போல் உணர்வு உடன்பட்டு உணரப்படுகிறது. இதையும் அறிவுதான்

பதிவு செய்கிறது. அறிவுதான் உணர்வை கையாளுகிறது. நமக்கு ஏற்படும் அத்தனை உணர்ச்சியுமே இப்படி ஏற்படுவது தான். இந்த வகை பேதமான உணர்வுகளுக்கு நாம் பழகி இருக்கிறோம். இந்த பழக்கமே நம் வாழ்க்கை முறையாகி விட்டது. ஆனால் உணர்வின் உள்ளார்ந்த தன்மை சாந்தமே!

உங்கள் உணர்வு சாந்தமாக இருந்தால் மனம் தன்னிச்சைக்கு செயல்பட முடிவதில்லை. உங்கள் உணர்வை சற்று மனதின் தொடர்பிலிருந்து விடுவித்துப்பாருங்கள் அது தனது இயல்பான அமைதி நிலையான சாந்த நிலைக்கு வந்து விடும். தொடர்ந்து உங்கள் உணர்வை இந்த சாந்த நிலையில் நிறுத்தி வைத்தீர்களானால் உங்கள் மனம் படுத்த படுக்கையாகி விடும். எழுந்து நடமாடக்கூட அதனிடம் வலுவிருக்காது. உங்களின் இந்த சாந்த உணர்வுக்கு ஒரு உயர்வு சுபாவம் உண்டு. அது உங்களின் உயர்நிலைத்தன்மைக்கு உண்டான பாதையாகும். அந்த பாதையில் எந்த தடங்கலும் இல்லாது ஒரு வழவழப்பான (free) தடங்கலற்ற ஓட்டத்தை அது ஏற்படுத்தும்.

இதை கவனியுங்கள் :
1, எது குறைவானது என்பதை அறிந்து பாதுகாக்கும் போது அது சக்தி என்று அழைக்கப்படும். - தாவோ.
2, பூரண வெறுமையை அடைந்தவன் பூரண அமைதியாய் இருப்பான்.- தாவோ.
4 ஒருவர் தூய்மையாக எவ்வித இயக்கமுமற்று உணர்சிகளால் உந்தப்படாமல் இருக்கும்போது அதன் இருப்பை உணர முடியும். – தாவோ

3, ஆனந்த சொரூபம் : இந்த உடல், மனம், உணர்வு இவைகளை கடந்து கவனம் தனி நிலையாக இருப்பது ஆனந்த சொரூபமெனப்படும். இது ஒரு சூன்ய நிலை. இந்த கவனம் கவனிக்க அங்கு எதுவுமேயில்லை எனும் பொருளில் இதை சொல்கிறோம்.இந்த கவனம் என்பது எதன் துணையுமின்றி நிலைக்கண்ணாடிப்போல அசைவற்று வெறுமையாக கவனித்தல் ஆகும். இங்கு 'கவனித்தல்' என்பது ஒரு இயக்கம் சார்ந்த சொல்லாக இருக்கிறது. ஆனால், இயக்கமுமற்று அசைவற்று வெறுமையாக கவனித்தல் ஆகும். இந்த முழுநிலை கவனம் இந்த உயிரின் முதல் இலக்கணம். இந்த புவியில் எப்போது உயிர் உண்டானதோ அப்போது இந்த கவனத்திலிருந்தே உண்டாகி இருக்கிறது. நன்றாக கவனியுங்கள்,உங்கள் உயிரின் வழியாக எட்டிப்பார்க்கிறது அந்த கவனம்.
ஜடப்பொருட்களும், அறியாமையும், செயல்களும்,கருத்தும், எண்ணங்களும், ஆவலும் கொண்டது மாயா சொரூபம்.
தன்முனைப்பும், ஆசைகளும், கருத்தும், தொழில் நுட்பமும் இடைவிடாத சிந்தனையும் கொண்டது இச்சா சொரூபம்,
நிதானமும்,அமைதியும், திருப்தியும், நிறைவும், பூரணமும் கொண்டது, முக்காலம் அற்று இக்கணம், இக்கணம் எனும் க்ஷணத்தில் உதிப்பது சாந்த சொரூபம்.
இக்கணம் எனும் க்ஷண நேரத்தையும் துறந்து, இயக்கத்தையும் கடந்து நிலையான காலத்தில் இணைப்பாக இணைதல் ஆனந்த சொரூபம். கவனம் புலன் வழியாக எட்டிப்பார்க்கும் பொழுது தோற்ற உலகு தெரிகிறது. கவனம் மனதின் வழியாக எட்டிப்பார்க்கும்பொழுது நமது தேகமே வெறும் இச்சையால் செயல்படுவது தெரிகிறது. கவனம் உணர்வின் வழியாக எட்டிப்பார்க்கும் பொழுது சாந்தமாகவும், பூரண நிறைவாகவும் நமது அம்சம் இருப்பது தெரிகிறது. இந்த கவனம் எதன்

தொடர்புமின்றி தனித்து சுயமாக தன்னையே எட்டிப்பார்க்கும் பொழுது ஒரு மாபெரும் கவனம் இந்த உயிர் வழியாக எட்டிப்பார்ப்பது தெரிகிறது.

சும்மா இரு. 6.5.2011

இந்த பிரபஞ்சத்திலுள்ள அனைத்து சக்திகளும் எவ்வளவு முயற்சிகள் எடுத்துக்கொண்டாலும் ஒருவர் மனதை திருப்தியுற வைக்க முடியாது. அசையும் பொருள், அசையாத பொருள் எவ்வளவு பெற்றுக்கொண்டாலும் மனம் நிறைவடைவதில்லை. அதாவது பிரபஞ்சத்தில் உள்ள அனைத்து சக்திகளும் ஒரு மனிதனின் மனதுக்கு கட்டுப்பட்டு செயல்பட்டாலும், அந்த மனிதனின் மனம் திருப்தியுறாது. தனக்கு திருப்தி தருவது எது என்பதே மனதுக்கு தெரியாது. மனமும் மனதின் அமைப்பும் அப்படிப்பட்டது. அது ஒரு வடிவத்தை எடுத்திருக்கிறது. அந்த வடிவமும் தொடர்ந்து மாறிக்கொண்டேயிருக்கிறதுஅந்த வடிவத்தை எதனாலும் நிறைவு படுத்த முடியாது. இது உயிரின் உண்மைப்பொருள் அலல! இது ஒரு கருத்து தோற்றப்பொருள். ஒரு கருத்துரு. அது ஒரு மாயை. அது அறியாமை. அது மாயா சொரூபமானது. திருப்தி தோன்றினாலும் அது நிலைக்காது. மாறிவிடும். நிலையின்றி மாறுவதே மாயா.

நீ எந்த செயலும் செய்யாமல், எவ்வித முயற்சியும் மேற்கொள்ளாமல் வெறும் வெறுமையில் அமர்ந்திருந்தாலும் உணர்வை நீ திருப்தியுற வைக்க முடியும்.அதற்காக நீ எந்த முயற்சியுமே செய்ய வேண்டியதில்லை. நீ சும்மா இருந்தாலே போதும். ஆமாம், நீ சும்மா வெறுமையில் பூரண வெறுமையாக இருந்தால் தான் உணர்வு திருப்தியுறும். உணர்வை திருப்தியுற வைக்க, நிறைவு பெற வைக்க, உணர்வுக்கு எந்த தேவைகளுமே இல்லை. உணர்வை நீ சும்மா விட்டால் போதும். அதன் ஸ்திதி பரிபூர்ண சாந்த சொரூபமே!

மனத்தை நிறைக்க எதனாலும் முடியாது எனக்கண்டோம், ஆனால் உண்மை வேறுமாதிரியாக இருக்கிறது. மனதை நிறைவு செய்ய ஒரு உபாயம் உண்டு. மனதை வெறுமையால் நிறைவு செய்ய முடியும். இந்த வெறுமையை நேரடியாக மனதிடம் எடுத்துசென்றால் மனம் ஏற்றுக்கொள்ளது. வெறுமையை உணர்வு மூலம் மனதுக்கு கொண்டு சென்று மனதை வெறும் வெறுமையால் நிறைவு செய்ய முடியும்.

நமது மூளையைப்பற்றி ஒரு தகவல். 7.5.11

மனித மூளையின் தோற்றத்தை அதன் செயல்பாடுகளை நமது ஆராய்ச்சியாளர்கள் வகுத்துள்ளனர்.

1, ஊர்வன மூளை : reptilian brain

2, விலங்கு மூளை: paleomammolian brain

3, மானிட மூளை: 2 mm கன அளவில் பெருமூளையை சுற்றியுள்ள அடுக்கு (cerebral cortex or neo mammalian brain.

மூளை அமைந்துள்ள சூழலை காண்போம்.

1, தண்டு வடம்,

2, முகுளம்

3,பான்ஸ்

4, சிறு மூளை

5,பிட்யூட்டரி சுரப்பி

6,ஹைப்போதாலமஸ்
7,ஹிப்போ கேம்பஸ்
8,அமிங்தலா
9,செப்டம்
10,நடுமூளை
11,செரிபெரல்கார்டெக்ஸ்
12, கார்பஸ்கலோசம்
13,லிம்பிக் சிஸ்டம்.

மூளைத்தண்டும் (brain stem) சிறு மூளையும் ஊர்வன உயிரினங்களின் மூளை வளர்ச்சி நிலையாகும்.
லிம்பிக் சிஸ்டம் , செப்டம், அமிங்தலா ஹிப்போகேம்பஸ் ஹைப்போதலாமஸ் ஆகியன விலங்குகளின் மூளைப்பகுதியாகும்.
செரிபெரல்கார்டெக்ஸ் : மானிட மூளை பரிணாம வளர்ச்சியில் விலங்கு மூளைக்கு அடுத்த வளர்ச்சியாகும். மானிட மூளையில் இது 80 சதவிகிதம் இருக்கும்.

1, பான்ஸ்: மூளைப்பகுதிகளை இணைக்கும் பாலமாக அமைந்து விழிப்புணர்வை ஆதிக்கம் செய்கிறது. தியான உடலில் இந்த பகுதியே ஆக்ஞா சக்கரமெனும் புருவ மத்தியாகும். இந்த இடத்தை கவனப்படுத்தியே தியானம் செய்யப்படுகிறது.

.2, செரிபெரல் கார்டெக்ஸ்: இங்கு சிந்தித்தல், திட்டமிடல், சிந்தனையும் செயலும் ஒருங்கிணைய செயல்படல், முடிவு எடுத்தல், இலக்குகளை அமைத்தல், ஆராய்தல் போன்ற செயல்கள் நடக்கின்றன.

இதை புத்தம் புதிய மூளை (new brain) என்று அழைக்கப்படுகிறது. சகிப்புத்தன்மை, பரிவு, இறக்கம், கருணை, பொறுமை முதலியன செரிபெரல்கார்டெக்ஸ்ஸின் செயலாக்கம் தீவிரமாகும்பொழுது மேலோங்குகின்றன. இதை இரண்டு அரைவட்ட கோளங்களாக மூளையின் இடது பகுதி, வலது பகுதி என பிரித்து பார்க்கலாம். மூளையின்இடது பகுதி உடலின் வலது பாக உறுப்புகளையும், மூளையின் வலது பகுதி உடலின் இடது பாக உறுப்புகளையும் இயக்கி கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது. நமது தியானத்தில் இணைப்பு உடலில் தியானம் நடக்கும்பொழுது நமது இதயத்திற்கும் வலது மேல் மூளைக்கும் ஒரு இணைப்பு உண்டாகும். இந்த வலப்புற மூளையில்தான் ஆன்மிகம், அறிவுக்கு அப்பாற்ப்பட்டது, காலத்திற்கும் அப்பாற்ப்பட்டது,யோகம், தியானம், பரவெளி அனுபவங்கள் தொடர்பான செயற்ப்பாடுகள் நடக்கின்றன!
நாம் தியானத்தின் மூலம் செரிபெரல்கார்டெக்ஸ்ஸின் வலது பகுதி செயலாக்கத்தை துரிதப்படுத்தலாம்.

நமது ஒருஜினல் ஸ்திதி. 8.5.2011

இப்போது நமது வாழ்வின் இயங்கு தளம் ஊர்வன மூளை, விலங்கு மூளை மற்றும் மானிட மூளைகளில் தேவைகளுக்கேற்ப சஞ்சரித்து வருகிறது. இந்த இயங்கு தளத்தை மானிட மூளையில் மட்டும் இயங்க வைப்பதே நமது முழு பரிணாமத்தின் சாரம் ஆகும்.

இன்னு நமது உடலில் ஊர்வன மூளை, விலங்கு மூளை தொடர்ந்து வருவதன் காரணம், நமது பாதுகாப்பை உறுதி செய்யும்பொருட்டே தவிர வேறல்ல! அவ்விரு

மூளைகளின் செயல்பாடுகளை கவனியுங்கள்.

மானிடரின் தற்காக்கும் இயல்பு ஊர்வன மூளையின் முக்கிய அம்சம் ஆகும். இது மானிடர் தசைகளை இயக்கி ஓர் இடத்திலிருந்து நகர்ந்து செல்ல உதவுகிறது. மேலும் நுகரும் தன்மையும், இனப்பெருக்கமும் இந்த மூளையின் உதவியால் நடக்கிறது.

லிம்பிக் சிஸ்டம், செப்டம், அமிங்தலா, ஹைப்போகேம்பஸ், ஹைப்போதலாமஸ் ஆகியன விலங்கு மூளைப்பகுதியாகும்.

லிம்பிக் சிஸ்டம் : கற்றல், நினைவு ஆற்றலை,உணர்சிகளை செயல் நோக்கங்களை கவனிக்கிறது.

செப்டம் : அச்சம், கோபம் போன்ற உணர்வு மேலீட்டுக்கு காரணமாகிறது.

அமிங்தலா : வன்தாக்குதலுக்கும், கோபத்திற்கும் காரணமாகிறது.

ஹைப்போகேம்பஸ் : நீண்ட கால நினைவு ஆற்றல் கொண்டது.

ஹைப்போதலாமஸ் : ஆவேச உணர்சிகளை, காம உணர்வுகளை, ஊக்க செயல்களை தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது.

மனிதன் விலங்கு மூளை நிலையிலிருந்து செயல்படும்பொழுது அவனது எண்ணம், செயல், உணர்வு ஆகிய மூன்றும் அசுரத்தனமாக, மூர்க்கத்தனமாக அரக்கத்தனமாக இருக்கிறது.

நமது நான் எனும் கருத்துரு இதில் எந்த மூளைகளின் துணையுடன் செயல்படுகிறது என்பது உங்களுக்கே தெரியும்.
நாம் நமது தியானத்தின் பொழுது இந்த நான் எனும் தன்முனைப்பை சரண் செய்தால் தான், இணைப்பு நிலை உருவாகிறது. இந்த தன்முனைப்பிலேயே ஊர்வன மூளையும், விலங்கு மூளையும் குடிகொண்டிருக்கின்றன. இவைகளை சரண் செய்தல் மூலமே உங்கள் மானிட மூளையை நீங்கள் தூண்டி செயல்பட வைக்க முடியும். அது செயல்படும்போழுதே அதன் அபரிமிதமான செயல்பாடுகளை அறிய, உணர முடியும்.

இந்த தியான நுட்பத்தில் என்ன நடக்கிறது என்று பார்க்கலாம்.

நமது உடலிலுள்ள 75 டிரில்லியன் செல்களையும் ஓம் எனும் உணர்வால் உசுப்பி அனைத்தையும் விழிக்க வைத்து பான்ஸ் எனும் புருவமத்தியான ஆக்ஞாவில் கவனத்தை நிலை நிறுத்தி தியானிக்க,

75 டிரில்லியன் செல்களின் தொடர்பும், மூளைப்பகுதிகளின் இணைப்பு பகுதியான பான்ஸ் மையத்தில் குவிய,

இணைப்பு தியானம் நடக்கும்பொழுது இந்த பான்ஸ் மையத்திலிருந்து வலது செரிபெரல்கார்டெக்ஸ் பகுதிக்கு இணைப்பு நடக்க,

இப்போது 75 டிரில்லியன் செல்களும் செரிபெரல்கார்டெக்ஸ் வலது பகுதியோடு நேரடி தொடர்பு கொள்கிறது.

இந்த இணைப்பில் உங்கள்75 டிரில்லியன் செல்களும் ஒருங்கிணைந்த ஒருமை, முழுமை பூரணம் எனும் தன் (350 கோடி ஆண்டுகால தேடலின் தாத்பர்யம்) சுயம் வெளிப்படுகிறது.

இந்த சுயம்தான் நமது ஒரிஜினல் ஸ்திதி. இதை நோக்கியே நமது பயணம் வந்திருக்கிறது.

மனிதம் எனும் உயர்நிலை. 9.5.11

நம்முடைய நான் எனும் செயல் தன்மை, நான் எனும் தன்முனைப்பு, நான் எனும் துல்லிதமான நம்பிக்கை இவை யாவும், நம்மிடமுள்ள ஊர்வன மூளையின் மற்றும் விலங்கு மூளையின் ஆதாரத்திலேயே செயல்படுகிறது.

நம்மிடம் 210 விதமான செல் தொகுதிகள் செயல்புரிந்து வருகிறது. 210 வித உணர்வுகள் 210 வித எண்ணங்கள் இவைகளை ஒருங்கிணைப்பது உங்களுடைய 'நான்' எனும் கருத்துரு.

அப்படி ஒருங்கிணைக்க வேண்டிய அவசியம் என்ன?
தற்பாதுகாப்புதான் காரணம். உங்களுக்கு தற்பாதுகாப்பு வேண்டியே ஒருங்கிணைக்கப்பட்டது.

உணர்வாலும் எண்ணத்தாலும் தற்பாதுகாப்பு அறிவுறுத்தப்பட்டிருக்கலாம் அல்லது தற்பாதுகாப்பு முனைப்பு ஏற்பட்டு உணர்வும் எண்ணமும் துவங்கியிருக்கலாம்.

எப்படியாக இருந்தாலும் இவைகள் நமது முந்தைய பிறவிகளான விலங்குநிலை, ஊர்வன நிலைகளிலேயே தன்முனைப்பு ஸ்திரமாகி விட்டது கண்கூடு. அந்த மூளைகளும் இன்னும் நமக்கு தொடர்வதற்கு காரணம் அதே தற்பாதுகாப்புதான்.

ஆனால் மானிட மூளையும் விருத்தியாகி உள்ளதே எப்படி?

இந்த 'நான்' கருத்துரு, உணர்வுகள் மற்றும் எண்ணங்களால் உருவாக்கி வடிவமைக்கப்பட்டு, பராமரிக்கப்படுகிறது. உங்களுடைய நான் இருப்பதற்கு சாட்சியமாக என்ன இருக்கிறது? என கேட்டால், உங்கள் எண்ணங்களையும், உணர்வுகளையுமே சாட்சி வைக்கமுடியும். உங்களுடைய கவனத்தால் உங்களுடைய நானை சாட்சிப்படுத்த முடிகிறதா? முயற்சி செய்து பாருங்கள். சாட்சிப்படுத்த முடியாது.

ஆக! உங்களுடைய நான் வெறும் உணர்வு மற்றும் வெறும் எண்ணங்களின் கற்பனையான கருத்துருவேயாகும்.

மிக கவனமாக ஆழ்ந்து கவனியுங்கள், இந்த 'நான்' உடலி சம்பந்தப்பட்டது. உயிரி சம்பந்தப்பட்டதல்ல! ஒரு செல் ஓருடல் துவங்கி, பல செல் ஓருடல் ஆனதிலிருந்தே இந்த நான் உருவாகி இருக்கவேண்டும்.

இந்த நான் எனும் அபிமானமே அந்த உடலைக்கருதியே வந்திருக்கிறது. ஒவ்வொரு உடலிலும் ஒரு நான் செயல்பாட்டு வந்திருப்பதால் தான் உங்களால் உங்களது கடந்த பிறவிகள் ஞாபகம் வருவதில்லை.

இந்த நான் உயிரி சார்ந்து வருவதல்ல! இந்த நானை உயிரி சுவைத்ததில்லை. நானை சுவைப்பது எண்ணமும், உணர்வுமேயாகும். எண்ணமும் உணர்வும் தன்முனைப்பை முன்நிறுத்தியதாகும்.

இந்த உயிரியிடம் நான் எனும் தனித்தன்மை கிடையாது, தன்முனைப்பும் கிடையாது. உணர்வும் எண்ணமும் உடல் சம்பந்தப்பட்டது. கவனம் உயிர் சம்பந்தப்பட்டது.

அதாவது உணர்வை எண்ணத்தை ஒரு தனி செல் அறியமுடியாது, உணரமுடியாது. அதேப்போல் கவனத்தை உடல் செயல்படுத்த முடியாது.

எப்பொழுதெல்லாம்இந்த உயிரி கவன நிலையை தீவிரமாகவும், துல்லியமாகவும் நடைமுறைப்படுத்துகிறதோ அப்பொழுதெல்லாம் தனது உயர்நிலை பரிணாமம் விரைவாக நடந்திருக்கிறது.

செல் நிலைகளோடு தொடர்ந்து வருவது கவன நிலை. உடலி நிலைகளோடு

தொடர்ந்து வருவது உணர்வு மற்றும் எண்ணங்களின் நிலை. இதில் தன் முனைப்பு என்பது உணர்வு மற்றும் எண்ணங்களை மட்டும் உள்ளடக்கியது.

இந்த உணர்வு, எண்ணம், கவனம் ஆகிய செயல்பாடுகள் எந்த மூளைத்தளத்தில் இருந்து செயல்படுகிறது என பார்த்தால்! ஏற்கனவே நாம் பார்த்ததுதான்.

இந்த உணர்வு எண்ணம்இவை இரண்டுமே ஊர்வன மற்றும் விலங்கு மூளைகளில் இருந்து செயல்படுகிறது.

கவனம் மானிட மூளையிலிருந்து செயல்படுகிறது. இது தெளிவாக தெரிகிற ஒன்று.

மானிட மூளை பரிணாமப்பட, விருத்தியாக காரணம்? கவன நிலைதான் இதற்கு காரணம். இது மட்டுமல்ல! ஒரு செல், ஓருடல் நிலையிலிருந்தே பரிணாமப்பட்டு , பரிணாமப்பட்டு இன்றைய மனித நிலை வரை உயர்ந்து வரக் காரணமும் இந்த கவன நிலையே ஆகும்.

ஒரு தனி செல்லின் கவன நிலையிலிருந்து 75 டிரில்லியன் செல்களின் ஒட்டுமொத்த கவன நிலையையும் ஓர்மை படுத்துவதே அநுபூதி நிலை எனப்படுவது. அனைத்து செல்களும் ஒன்றாக இணைந்து ஒரே செயல்படக செயல்படுவது.
இந்த நிலையும் மனித நிலையின் உச்ச நிலையாக கொள்ளலாம்.
இது மனித நிலைதான்.

இதெல்லாம் ஒரு மனிதனின் உள் நிலைகளிலேயே நிகழ்கிறது.

வெளியிலிருந்து (வானத்திலிருந்து) எதுவும் நமக்குள் குதிப்பதில்லை, பிரவேசிப்பதில்லை.
ஆக!
ஒருவர் அநுபூதி நிலையை அடைந்த பின் இந்த ‘நான்’ எப்படி செயல்பட முடியும்?

ஒரு சிலர் அந்த அநுபூதி நிலையை இறைவன் என்றும், தான் அதற்கு பிரதிநிதி என்றும் பறைசாற்றி வந்துள்ளனர்.

ஒருவர் அநுபூதி நிலையில் உண்மையாக லயித்த பின்பு அவருடைய நான் எனும் தனித்தன்மை நசிந்து போவது உறுதி.

அநுபூதி நிலையையும், நான் எனும் தன்மையையும் இணைக்க ஒரு தளம் உண்டு, அது மக்கள் சமூகத்தின் அறியாமையே ஆகும்.

இந்த அறியாமை குளத்தில் மீன் பிடிக்கிறவர்களை நீங்கள் தான் அடையாளம் கண்டு கொள்ள வேண்டும்.
சகோதர, சகோதரிகளே நமது பழைய மனங்களான ஊர்வன மூளை, மற்றும் விலங்கு மூளைகளின் உணர்வு மற்றும் எண்ணங்களின் பிடியிலிருந்து விலகி , அவைகளை தவிர்த்து விட்டு, புதிய மூளையான மானிட மூளையின் தன்மையான கவன நிலையை மேற்கொண்டு, தீவிரமான மற்றும் துல்லியமான கவன நிலையை கைக்கொண்டு, உணர்வற்ற, எண்ணங்களற்ற, கவன நிலையால் நமது பரிணாமத்தின் உச்ச நிலையை அடைவோமாக!
அதுவே நமது 3,50,00,00,000 வருட இடையாறா பயணத்தின் குறிக்கோள் ஆகும்.

தன்முனைப்பு, அறியாமைநிலையான- உணர்வு நிலை, மற்றும் எண்ண நிலைகளிலிருந்து விடுபடுவோமாக!
அந்த அறிவு நிலையாம் கவன நிலையை கைக்கொள்வோம்.

கர்ம விதியின் தாக்கம். 10.5.11

நாம் வாழ்வது காரண காரிய தோற்ற பிரபஞ்சத்தில். நாம் என்பது நமக்குள் இரண்டு வித ஸ்திதியை குறிக்கிறது. ஒன்று எதை நான் என கருதி வருகிறோமோ அந்த சரீரம். அடுத்தது நமக்குள் (இந்த சரீரத்துள்) பாதுகாப்பாக உயிர்த்து வரும் செல்கள். இந்த செல்கள் தொடர்ந்து தங்களை பிரதி எடுத்து ,பிரதி எடுத்து புதுப்பித்துக்கொண்டே வருகின்றன! தொடர்ந்து செல்கள், பல வித மான சரீரங்களை மாற்றி, மாற்றி எடுத்து வந்துள்ளது. இங்கு வாழ்வு என்பது இரண்டு வித தளங்களில் நிகழ்ந்து வருகிறது. ஒன்று அந்த உயிரணுக்களின் செல் வாழ்வு நிலை. இரண்டாவது சரீரங்களின் வாழ்வு நிலை. முதல் செல் ஒரு செல் உடலியாக (ஒரு செல் சரீரமாக) துவங்கி, பல செல் ஒரு உடலியாக, (பல செல் ஓர் சரீரமாக) இப்படி அது பல வித சரீரங்களில் தங்கி, தங்கி பிரதி எடுத்து, பிரதி எடுத்து தங்களை அபிவிருத்தி செய்து வருகிறது. அந்த செல்களுக்கு ஒரே தன்மை மட்டும் உண்டு அது கவனத்தன்மை. ஆனால் சரீரங்களுக்கு அப்படியல்ல! அது சரீரத்திற்கு சரீரம் வித்தியாசமான தன்மைகளையுடையது. ஒரு மரத்தின் தன்மைக்கும், ஒரு புழுவின் தன்மைக்கும், ஒரு பறவையின் தன்மைக்கும், ஒரு பாம்பின் தன்மைக்கும், ஒரு மானின் தன்மைக்கும், ஒரு மனிதனின் தன்மைக்கும் எவ்வளவு வகையான தன்மைகள் மாறி, மாறி உள்ளன! ஒவ்வொரு சரீரத்தின் நோக்கமுமே தனக்குள் இருக்கும் செல்களை காக்க வேண்டும் என்பதே!ஆனால்

சரீரத்திற்கு சரீரம் வித்தியாசமான தன்மைகள். ஒரு மரத்திற்கு தெரியும் பிரபஞ்ச தோற்றம் வேறு மாதிரியானது. ஒரு புழுவுக்கு தெரியும் பிரபஞ்ச தோற்றம் வேறு மாதிரியானது.ஒரு பறவைக்கு தெரியும் பிரபஞ்ச தோற்றம் வேறு மாதிரியானது.ஒரு பாம்புக்கு தெரியும் பிரபஞ்ச தோற்றம் வேறு மாதிரியானது.ஒரு மானுக்கு தெரியும் பிரபஞ்ச தோற்றம் வேறு மாதிரியானது.ஒரு மனிதனுக்கு தெரியும் பிரபஞ்ச தோற்றம் வேறு மாதிரியானது.இந்த பிரபஞ்சத்திற்கு ஒரு அகப் பரிமாணம், ஒரு புறப் பரிமாணம் உண்டு. ஒரு சரீரத்தில் இருக்கும் செல்களின் பரிமாணம் அகப் பரிமாணம். அந்த சரீரத்தின் பரிமாணம் புறப் பரிமாணம். இந்த புறப் பரிமாணம் தான் சரீரத்திற்கு சரீரம் வித்தியாசப்படுகிறது. அந்த செல்களின் பரிமாணம் சரீரம் எதுவானாலும் ஒரே பரிமாணம் தான் அது அகப்பரிமாணம்.

இந்த கர்மா என சொல்லப்படுவது சரீரத்திற்கு தானே தவிர செல்களுக்கு அலல!

சரீரம் மட்டுமே இந்த காரண காரிய தோற்ற பிரபஞ்சத்திற்கு உரியவை. அந்த செல்களின் தன்மை இந்த ஸ்தூல பிரபஞ்சத்திற்கு கட்டுப்பட்டதல்ல! அது இந்த உயிரின் அகப் பரிமாணம். ஒரு தனி செல்லின் உடலாகட்டும், பல செல்களின் சரீரமாகட்டும் அவைகள் ச்தூலமானவை. அவைகள் புறப்பரிமானம் உடையவை. பல் வேறு உயினங்களின் சரீரங்கள் புறப்பரிமாணமானவைகள் . ஆனால் அவைகளின் உள்ளிருக்கும் (செல்களின் உள்) இருக்கும் தன்மை அகப்பரிமாணமானவைகள் .அதாவது ஒரு செல்லின் உள் பரிமாணம் அகப்பரிமாணம் எனவும் வெளிப்பரிமாணம் புறப்பரிமாணம் எனவும் அமைகிறது.

செல்களின் அகப்பரிமாணம் வேறெதுவும் அலல! இந்த பிரபஞ்சத்தின் அகப்பரிமாணமே செல்களின் அகப்பரிமாணமாக பரிணமிக்கிறது. புறப்பரிமானங்களில் இம்மிக்கு இம்மி வித்தியாசம் உண்டு. அகப்பரிமாணத்தில் இம்மிக்கூட வித்தியாசம் இல்லை. அது பரிபூர்ண ஓர்மை. அகப்பரிமாணத்தின் தன்மை கவனம், அல்லது சாட்சித்தன்மையாகும்.

நடந்த சம்பவம். 12.5.11

ஊரில் மாரியம்மன் பண்டிகை போட்டிருந்தார்கள் இரண்டு நாட்களுக்கு முன். இந்த நிகழ்வு நடந்த அன்று பொங்கல் வைபவம் முடிந்து குழந்தைகளுக்கு விளையாட்டு போட்டி நடந்து கொண்டிருந்தது. குழந்தைகள் கோவிலின் வெளிப்பிரகாரத்தில் நடனப்போட்டியில் கலந்து கொண்டு ஆடிக்கொண்டிருந்தார்கள். முன்னூறு சிறுவர் சிறுமியர்கள் இருந்தார்கள். கோவில் மைதானத்தில் நிறைய கடைகள் போட்டிருந்தார்கள். சிறுவர் சிறுமியர்கள் அங்குமிங்கும் ஓடியாடிக்கொண்டு திரிந்து கொண்டிருந்தார்கள். மைதானத்தின் வடக்கே ஒரு ரங்க ராட்டினம் ஓடிக்கொண்டிருந்தது. மாலை மணி ஐந்து இருக்கும். ஒலிபெருக்கி இரைச்சலோடு களை கட்டிக்கொண்டிருந்தது.

அந்த ரங்க ராட்டினத்தின் கீழ் ஒதுக்கு புறமாக ஒரு சிறுவன் குத்தங்காலிட்டு அமர்ந்திருந்தான். வயது நான்கு இருக்கும். அகஸ்த்தமாகத்தான் அவனைப்பார்த்தேன். அவன் ‘இங்கே வா’ என கைகளால் சைகை செய்தான். எனக்கும் அவனுக்கும் ஒரு

ஐம்பது அடிதூர இடைவெளி. அவன் அவனுக்கு தெரிந்த ஏதோ ஒரு சிறுவன் அல்லது சிறுமியை தான் அழைக்கிறான் என நான் எண்ணிக்கொண்டு ' யாரை அழைக்கிறான்' என கவனித்தேன். அந்த சிறுவனை எவரும் கவனிக்கவில்லை. எல்லாம் அதனதன் ஸ்திதியில் சுற்றிக்கொண்டிருந்தது.

மீண்டும் சிறுவனைப்பார்த்தேன். அவன் தொடர்ந்து அழைத்துக்கொண்டிருந்தான் சைகையால். அவன் என்னைத்தான் அழைக்கிறானோ என்னவோ என சந்தேகத்துடன் என்னையா? என சைகையால் கேட்டேன். அவன் சற்று கோபத்துடன் 'ஆமாம் வா' என்பதுபோல என்னை உற்றுப்பார்த்து கையை அசைத்தான். நான் அவனருகில் சென்றேன். அருகில் சென்ற பிறகுதான் தெரிந்தது அவன் நிர்வாணமாக அமர்ந்திருந்தான்.

எனக்கு அவனைப்பார்த்ததும் ஒரு சந்தோசம் பற்றிக்கொண்டது. அவ்வளவு கூட்டம் கூடியிருக்கிற இடத்தில் இது பாட்டிற்கு அம்மணத்துடன் அமர்ந்திருக்கிறதே என!

இது நடந்தது ஒரு தாலுக்கா தலைநகரத்தில். ஒரு நகர்ப்புற சூழலில் இப்படி மாலை நேரத்தில் எந்த குழந்தைகளையும் நிர்வாணமாக பார்க்க முடியாது. அதுவும் திருவிழா கூட்டத்தில். நான் அவனிடம் "என்ன மச்சி?" எனக்கேட்டேன். அவன் அங்கு சுற்றிக்கொண்டிருந்த ரங்க ராட்டினத்தைக்காட்டினான். விஷயம் புரிந்து விட்டது. அவர் அந்த ராட்டினத்தில் சுற்றவேண்டும். அதற்காக அழைத்திருக்கிறார் என்பது.

எனக்கு ஒரு பிரச்னை என்னவென்றால் ராட்டினத்தில் அவன் சுற்றும்பொழுது ஏதாவது தலைசுற்றி வாந்தி எடுத்து விட்டால் என்ன செய்வது. அவன் பெற்றோர்கள் திடீரென தோன்றி “அவனுக்கு ஏற்கனவே தலையில் அடிப்பட்டிருக்கிறது நீ ஏனய்யா அவனை ராட்டினத்தில் ஏற்றிவிட்டீர்” என திட்டினார்களானால் என்ன செய்வது?

சற்று தயக்கம் ஏற்பட்டது என்னிடத்தில். என்னை அவன் கவனித்திருக்க வேண்டும். சற்று அதிகாரத்துடன் " என்னை ஏற்றிவிடு" என்றான். "பயப்படாமல் இருப்பாயா" எனக்கேட்டேன். அமர்ந்திருந்தவன் ஒரேத்தாவாக தாவி ராட்டினத்தின் பெட்டிக்கு வந்தான். ராட்டினத்தை சுற்றுபவர் "ஐந்து ரூபாண்ணா, காசு இந்தப்பையனுக்கு நீங்க கொடுக்கிறீர்களா" என என்னைக்கேட்டார். அவனை பெட்டிக்குள் ஏற்றும்பொழுது எங்கிருந்தோ அவனது அக்காள் வந்து விட்டாள். ஒரு இரண்டாம் வகுப்பு அல்லது மூன்றாம் வகுப்பு படிக்கும் பிராயம். அவனை கீழே பிடித்து இழுத்தாள். சிறுவன் என்னைப்பார்த்தான். நான் " நீயும் அவன் கூடவே அமர்ந்து கொள்" என சொன்னவுடன் அந்தக்குழந்தையும் அவனுடன் அமர்ந்து கொண்டது. ராட்டினத்துக்காரர் " பத்து ரூபா கொடுங்கள்” என சொல்ல பணம் கொடுக்கப்பட்டு மீதம் காலியாக உள்ள பெட்டிகளுக்கும் சிறுவர்களை ஏற்றிவிட்டு ராட்டினத்தை சுழல விட்டார். நான் சிறுவனைப்பார்த்து " டே கெட்டியாக பிடித்துக்கொள்" என்று கத்தினேன். அது சட்டையே செய்து கொள்ளவில்லை. இருந்தாலும் எனக்குள் ஒரு பயம். ராட்டினத்துக்காரர் வேகமாக சுற்றும்பொழுது அவன் வீசிஎரியப்பட்டு விடுவனோ என்று. அவன் பெட்டியில் ஒரு பத்து வயசு மதிக்கத்தக்க பையன் ஒருவன் இருந்தான். நான் கையைத்தட்டி அவனைக்கூப்பிட்டு " அந்தப்பையனை கெட்டியாக பிடித்துக்கொள்" என்றேன். அவனும் தலையை 'சரியென' அசைத்து விட்டு பொடியனை

பிடித்துக்கொண்டான். சரி சுற்றி முடியட்டும், அவன் பாதுகாப்பாக கீழே இறங்கிய பின் நாம் போகலாம் என நின்று கொண்டிருந்தேன். ராட்டினம் வேகமாக சுழல, சுழல பொடியன் ஏகப்பட்ட உற்சாகம் அடைந்து விட்டான். எனக்கு பார்க்க சந்தோசமாக இருந்தது.

ராட்டினத்துக்காரரும் அதிக நேரம் சுற்றவில்லை. வேகத்தை படிப்படியாக குறைத்துக்கொண்டு வந்து நிறுத்த ஆரம்பித்து விட்டார்.

பையன் இருந்த பெட்டி இப்போது மேலே நின்றது. கீழே பெட்டியிலிருந்தவர்களை இறக்கி விட்டுக்கொண்டிருந்தார் ராட்டினக்காரர். நம்ம ஆளு இரு கண்களையும் மூடிக்கொண்டு ஒரு லயத்தோடு தலையை ஆட்டிக்கொண்டு ராட்டினம் சுற்றியதை கற்பனை செய்து கொண்டிருந்தார். முகத்தில் புன்னகை தவழ தனது வலது கரத்தை சின் முத்திரை பிடித்து அனைவருக்கும் ஆசீர்வாதம் வழங்க தொடக்கி விட்டார். நான் கைகூப்பி தொழுது ஆசீர்வாதத்தை பெற்றுக்கொண்டேன்.

மேற்கண்ட சம்பவத்தில் எனக்கு ஒன்று விளக்கம் ஆனது. நம்மிடம் மூன்று வித தன்மையுள்ளது. பிரபஞ்சத்திலும் அப்படிதான் உள்ளது. 1, தேவையின் அடிப்படையில் அமைந்தது. 2, நிறைவான நிலை. 3, சக்தி வெளிப்படுதல். அந்த சிறுவனிடம் எனக்கு இந்தவித மூன்று தன்மைகளும் வெளிப்பட்டது. 1,ராட்டினத்தில் சுற்ற வேண்டும் எனும் தேவை. 2, சுற்றிமுடித்ததும் நிறைவான பூரண சந்தோசம். 3, ஆனந்தம் பொங்க சக்தி வெளிப்பட்டு ஆசீர்வாதமாக மாறியது.

கர்ம வினை என்பது உங்கள் சரீரமே 14.5.11

கர்ம விதி அல்லது கர்ம வினை என்பது யாதெனில் உங்கள் சரீரமே ஆகும். உங்கள் சரீரம் எவ்வகையில் பழக்கப்பட்டுள்ளதோ அந்த பழக்கத்தின் படியே நீங்கள் ஆகிறீர்கள். அதன்படியே உங்கள் சுபாவம் அமைகிறது. உங்கள் உணர்வும் , உங்கள் எண்ணங்களுமே உங்கள் கர்மா . உங்கள் சுபாவம் தான் உங்கள் கர்மா. இந்த கர்மாவே பலருக்கும் பலவகைப்பட்டது. இந்த (அனைவரின்)சரீரத்தின் உள் இருந்து, சரீரத்தை நடத்துவது ஒரு அசைவு நிலையில் உள்ளது, அது அனைவருக்கும் ஒன்றே! அது எந்த விதமான கர்மாவினாலும் பாதிப்புக்கு உள்ளாவதில்லை. அது சுயம்பு .

அனைத்துயிருக்கும் என்றால் அதனதன் கர்மாவினாலேயே அதனதன் சரீரம் உண்டாகிறது. சரீரம் தான் கர்மா , கர்மாதான் சரீரம் . அதனதன் கர்மாவினாலேயே அதனதன் சரீரம் மாற்றமும் அடைகிறது.

நீங்கள் உங்கள் அனைத்து கர்மாவையும்(சரீரத்தால் உண்டாகும் , எண்ணங்கள் , உணர்வுகள் நினைவுகள் , எதிர்பார்ப்புகள் ,சரீர அபிமானம்) விட்டெரிகிறபோழுதே உங்களுக்கு அந்த

பரிபூரணத்தின் அனுக்கிரகம் வாய்க்கப் பெறுகிறது. அந்த அநுபூதி நிலையை அடைய மேற்கண்டவைகள் தடையாக இருக்கின்றன . இந்த தோற்ற உலகில் இந்த கர்மாதான் உங்கள் அடையாளம். நீங்கள் உங்கள் எல்லா அடையாளங்களையும் இழந்து அடையாளமற்ற வெளியில், அந்த வெளியோடு வெளியாக கலக்கும்பொழுது அந்த அநுபூதி நிகழும்.

புத்தர் கூறினார் : ஆசை தளையால் கட்டுண்டு நெடுங்காலம் அலைந்து, திரிந்து இதுவரை எத்தனையோ பிறவிகளெடுத்துக் களைத்து விட்டேன்.
பல விதமான பிறவிகளை நான் எடுத்தாயிற்று இந்த (உடலாகிய) குடிலை கட்டியவனை நான் இரவும் பகலும் தேடியும் காணக்கிடைக்கவில்லை. மீண்டும் மீண்டும் பிறக்க துக்கமாயுள்ளது.
"குடிலைக்கட்டிய கொற்றனே! (ஆசையே உடலாகிய குடிலைக்கட்டிய கொற்றனாக உருவகப்படுத்தி கூறப்படுகின்றது.) இப்போது உன்னை கண்டு கொண்டேன். குடிலை நீ மறுபடியும் கட்டமுடியாது. உன்னுடைய உத்திரங்கள் எல்லாம் உடைந்து விட்டன; குடிலின் முகடும் குலைந்து விட்டது. என் சித்தம் நிருவாணப்பேற்றில் லயித்து விட்டது; (அதனால்) ஆசைகள் அவிந்தொழிந்து விட்டன.

ஆகாசஜன் கதை.15.5.11

யோக வாசிஷ்டம் நூலில் அநுபூதி தன்மையை எடுத்துரைப்பதற்காக ஒரு உவமை கதை சொல்லப்பட்டிருக்கிறது.

முன்பொரு காலத்தில் யுகாந்திர முடிவில் மகாப்பிரளயம் ஏற்பட்ட பொழுது, யமனுடைய காரியதரிசிகள் தங்களுக்கு இடப்பட்ட கட்டளைப்படி எல்லா ஜீவன்களையும் இரையாக்கிக்கொண்டு வருகையில், ஆகாசாஜன் என்பவன் மட்டும் ஒரு கவலையும் இல்லாமல் சுகித்திருந்தான்.

காரியதரிசிகளால் அவனை பறித்து எடுக்க முடியவில்லை. யமனுடைய முக்கிய காரியதரிசியான மிருத்யு இதை கவனித்து ஆகாசஜனை தானே அழிப்பதாக புறப்பட்டான். அவன் இருப்பிடத்தை சேர்ந்து ஆனால் அவனை நெருங்க முடியாமலிருப்பதைக் கண்டான். அவனிடமிருந்து கிளம்பிய தேஜஸ் அவ்வளவு பிரமாதமாக இருந்தது. பிறகு தன் சக்திகளையெல்லாம் ஒன்று திரட்டி, ஒருவாறு உள் நுழைந்து அவனை வாரிஎடுக்க முயன்றான். ஆனால் அவன் கைக்கு ஒன்றும் உருப்படியாக அகப்படவில்லை. இவனும் வெகு நேரம் சிரமப்பட்டான். யாதும் பயனில்லை. என்ன செய்வதென்று அறியாமல் திகைத்து நின்றான். கடைசியில் தன் எஜமானனை யோசனை கேட்டு வரலாமென யமனிடம் வந்து சேர்ந்தான்.

நடந்ததை கேட்ட யமன் " உன் இஷ்டப்படி ஜீவன்களை அழிக்கலாமென நீ கருதுவது தவறு, அதை செய்ய எவராலும் முடியாது. ஒவ்வொரு பிராணியும் தன் கர்மத்தாலே தன் நாசத்தை விதித்துக் கொள்கிறது. கர்மந்தான் ஜீவன்களுக்கு காலம் ஆகையால் தானே நசித்து வருவது தான் உனக்கு இரையாகும். ஆதலால் நீ அவனது கர்மத்தை தெரிந்து கொண்டால் அவனுடைய ஆயுள் காலத்தை நீ அறிவாய்." என்றான்.

இதைக்கேட்டதும் மிருத்யு உடனே புறப்பட்டு பிரபஞ்சம் முழுவதும் தேடி அலைந்தான். எங்கும் அவனுடைய கர்மா பற்றிய எந்த தகவலும் அகப்படாமல் கவலையுடன் மீண்டும் யமனிடமே வந்து சேர்ந்தான். இந்த ஆகாசஜனுடைய சொரூபத்தை பற்றி சொல்லும்படி வேண்டிக்கொண்டான்.

யமன்: "ஆகாசஜனுடைய சொரூபம் நிர்மலமான ஆகாசம்தான். பஞ்ச பூதங்களின்(*அணுக்களின்) சம்பந்தம் இல்லாததால் உருவமும் அமைப்பும் அவனுக்கில்லை. உதவிக் காரணங்களை தழுவியோ அல்லது அவைகளின் சம்பந்தம் இல்லாமலோ எது ஒன்று உண்டாகிறதோ அது தன் மூலக்காரனத்தை தவிர வேறாக, அதாவது இவ்விடத்தில் காரியமாக மாறுதல் அடைய முடியாது. இது அனுபவத்தில் தெரிந்த தத்துவம். இங்கே இந்த ஆகாசஜனுக்கு பூர்வ கருமம் ஒன்றுமில்லை. இப்பொழுதும் கர்மமாகிய அனுபவம் இல்லை. அதாவது அவனுக்கு பிரபஞ்சத்தில் நோக்கமேயில்லை. சித்தின் அசைவின்றி இருக்கிறான். ஒரு பிராண அசைவு இருப்பதாக தோன்றுவதும் பார்ப்பவருக்கே அன்றி, அவனுக்கு அதிலும் நோக்கமில்லை. அவன் கேவல சித் சொரூபமாயிருக்கிறான். இக்காரணங்களால் அவனுக்கு அழிவேயில்லை. மரணத்தின் நினைவு யார் மனத்தில் உதிக்கிறதோ அவன்தான் அதற்கு இரையாவான். ஆகாசஜனோ இவ்வித நினைவு யாதுமின்றி ஞான சொரூபமாகவே இருக்கிறான். நாம் காணும் சொரூபம் நமது தோற்றத்தில் ஏற்படுவது. இதற்கு காரணம் ஆதியில் பிரம்மத்தில் ஏற்பட்ட அசைவே. இந்த அசைவு எங்குள்ளது என்றால் பிரம்மத்தில் அடங்கியுள்ளதே! பிரம்மத்திலிருந்து ஸ்பந்தம் பிரிக்க முடியாததே! இதன் காரணமாகவே சிருஷ்டி ஏற்படுவதும். இத்துடன் நான் எனும் நினைவு அதிகரிப்பால் பிரபஞ்சம் விஸ்தாரமடைகிறது. ஆகவே இந்த ஆகாசாஜன் உதவிக் காரணமின்றி தன் சுய சொரூபமாகிய சூன்யத்தில் நிற்கிறான். ஆதலால் நீ எப்படி அவனை உன் வசமாக்கிக்கொள்ள முடியும்?" என்கிறான்.

மிருத்யு : " சூன்யத்திலிருந்து உண்டாவது எப்படி? பஞ்ச பூதங்கள் இருப்பது எப்படி? இல்லாமல் போவது எப்படி?

யமன் : " மகா பிரளயம் எனும் ஸ்திதி ஏற்ப்பட்டால் சர்வமும் ஐக்யமடைகின்றன. அப்பொழுது மிஞ்சுவது என்ன? அது சூன்யமே! அதுவே பூரணமும். காரணம், காரியம் இரண்டும் நசித்தால் மிஞ்சுவது என்ன? அது சூன்யமே! அதுவே பூர்ணம். சொப்பனத்தில் அனுபவிப்பதென்ன? காரணம் சூன்யமாக இருந்தும், ஸ்தூல தேகம் எப்படி அசையப்படுகிறது? அது போலவேதான் இந்த சூன்யமான பூரணத்திலிருந்து உற்பத்தியான தோற்றமும், நாசமடையும் தோற்றமும் உண்டாகின்றன. எது உற்பத்தி ஆகிறதோ அது நாசமாவது திட்டம். உற்பத்தியாவதற்கும், நாசமடைவதற்கும் காரணமாய் ஒன்று சாசுவதமாக இருந்தே தீர வேண்டும். - இது எந்த க்ஷணத்திலும்,எக்காலத்திலும் உற்பத்தி - நாசமாகிய நியதி கர்மங்கள் ஏற்படும்படி, ஸ்திரமாயும் சாட்சியாகவும் நிற்க வேண்டும். எப்பொழுதும் சாட்சியாக இருப்பதென்றால் அது ஒரு வித விகல்பமும் அடையக்கூடாது. ஆனால் அது எவ்வாறும் நம் புத்திக்கு புலப்படுவதில்லை. ஆதலால் அது சூன்யமே! ஆயினும் இதிலிருந்து தான் இந்த பிரமாண்டம் உற்பத்தியாவதும், லயமடைவதும். ஆகையால் அதுவே பூர்ணம். இப்படி இருக்கும் ஒருவனை நீ எப்படி உன் வசமாக்கிக்கொள்ள முடியும்? இப்படி போகிறது அந்த கதை.

என்னை பெயர் சொல்லி அழைத்த பறவை. 16.5.11

சரீரங்கள் யாவும் தகவல்களால் கட்டப்பட்டிருக்கிறது. ஒரு மண்புழுவுக்கு தோற்றமளிக்கும் பிரபஞ்சம் வேறுமாதிரியானது. ஒரு தேனீக்கு தோற்றமளிக்கும் பிரபஞ்சம் வேறுமாதிரியானது.ஒரு தவளைக்கு தோற்றமளிக்கும் பிரபஞ்சம் வேறுமாதிரியானது.ஒரு ஆந்தைக்கு தோற்றமளிக்கும் பிரபஞ்சம் வேறுமாதிரியானது.ஒரு நண்டுக்கு தோற்றமளிக்கும் பிரபஞ்சம் வேறுமாதிரியானது.ஒரு பாம்புக்கு தோற்றமளிக்கும் பிரபஞ்சம் வேறுமாதிரியானது.ஒரு பச்சோந்திக்கு தோற்றமளிக்கும் பிரபஞ்சம் வேறுமாதிரியானது.ஒரு கீரிப்பிள்ளைக்கு தோற்றமளிக்கும் பிரபஞ்சம் வேறுமாதிரியானது.ஒரு கொக்குக்கு தோற்றமளிக்கும் பிரபஞ்சம் வேறுமாதிரியானது.ஒரு மீனுக்கு தோற்றமளிக்கும் பிரபஞ்சம் வேறுமாதிரியானது.ஒரு நரிக்கு தோற்றமளிக்கும் பிரபஞ்சம் வேறுமாதிரியானது. ஒரு பசுவுக்கு தோற்றமளிக்கும் பிரபஞ்சம் வேறுமாதிரியானது.ஒரு மனிதனுக்கு தோற்றமளிக்கும் பிரபஞ்சம் வேறுமாதிரியானது.கொஞ்சம் நுட்பமாகப்பார்த்தால்

ஒவ்வொரு மனிதருக்குமே தோற்றமளிக்கும் பிரபஞ்சம், வேறு வேறுமாதிரியானது.ஒரு சமூக நீதி

போராளிக்கு தோற்றமளிக்கும் பிரபஞ்சம் வேறுமாதிரியானது. ஒரு திருடனுக்கு தோற்றமளிக்கும் பிரபஞ்சம் வேறுமாதிரியானது.ஒரு புளூ கிராஸ் மெம்பருக்கு தோற்றமளிக்கும் பிரபஞ்சம் வேறுமாதிரியானது.அதாவது அவரவர்கள் எந்த வித தகவல்களால் தங்களை கட்டிவைத்துள்ளார்களோ அந்த தகவல்களுக்கேற்றவாறு நிகழ்வுகள் தோற்றமளிக்கிறது. உங்கள் தகவல்கள்தான் உங்கள் சரீரம். இன்று காலை நான் அந்த மூன்று ஆலமரம் அமைந்துள்ள பெருமாள் கோயில் வளாகத்தில் தியானம் செய்துவிட்டு வருகையில் பாதையோரம் வயலில் இருந்த ஒரு சின்ன பறவை சுந்தரம் என என்னை பெயர் சொல்லி அழைத்தது. குரல் கேடடு நான் சைக்கிளை விட்டு இறங்கி குரல் வந்த திசையைப்பார்த்தேன். அந்த பறவை ஒரு குறும்போடு வாலை ஆட்டிக்கொண்டு மீண்டும் " உன்னை பெயர் சொல்லி கூப்பிடட்டுமா" என்று கேட்டது.நான் சிரித்தேன், 'அதுதான் ஏற்கனவே பெயர் சொல்லித்தானே கூப்பிட்டாய் ' என்று. அதுதான் என் அகம்பாவத்தின் அளவு.

சூட்சும சரீரமும்- ஸ்தூல சரீரங்களும்.18.5.11

என்றென்றும் நிலையானது என்பது சூட்சும நிலையிலேயே இருக்கிறது. நிலையற்றவைகள் தோற்றமாக விகசிக்கிறது. அதாவது சூட்சும நிலை என்பது அணுவாக திரளாத அலை நிலையேயாகும். தோற்றமாக விகசிப்பவைகள் அணுவாக திரண்டு ,தனிமங்களாக, மூலக்கூறுகளாக,இன்னும் பலகோடி பொருட்களாக அபிவிருத்தியாகிக்கொண்டே விரிவடைந்து கொண்டே இருப்பவை. அபிவிருத்தி ஆக, ஆக வெவ்வேறு தோற்றங்கொள்கிறது. அதாவது நிலையாக இருப்பவை அமைதியாக

சித்தில் இருக்கிறது. நிலைகொள்ள முடியாதவைகள் சலனம் கொண்டு (துகள்களாக) தோற்றமாக அபிவிருத்தியாகிறது. சலனத்தில் துவங்கி துகளான தோற்ற கனமும் கூட 'தன்மதிப்பு' உருவாகி மேலும்,மேலும் உணர்வு கூடக்கூட பல்வேறு தோற்றங்களின் (சரீரங்களின்) வழியாக திருப்தியுறாமல் தொடர்கிறது. தேவை, தேவை என தேடிக்கொண்டேயிருக்கிறது. அந்த உணர்வு நசித்து முடியுமிடத்தில் சூட்சுமம் துவக்கமாகிறது. உணர்வு விருத்தியே சம்சாரா. இந்த தோற்ற நிலைகளுக்கு மட்டுமே காரண காரியங்கள் உண்டு. அந்த சூட்சும நிலைக்கு காரண காரிய விதி கிடையாது. இந்த காரண காரியங்கள் அங்கு பிரவேசிக்க முடியாது. அங்கு எதன் மீது பிரவேசிப்பது? அங்குதான் ஒரு அணுக்கூட இல்லையே! இந்த பிரமாண்ட தோற்ற பிரபஞ்சத்தை ஸ்தூல சரீரமாக வைத்துக்கொல்வோமானால், இந்த பிரபஞ்சத்திற்கு ஓர் சூட்சும சரீரம் உண்டு. அந்த சூட்சும சரீரமே என்றென்றும் நிலையானது. இந்த ஸ்தூல சரீரம் கணத்துக்கு கணம் மாறுவதும் நிலையற்றதுமாகும். இந்த தோற்றம் ஒரு மாயை. அதுமட்டுமல்ல இந்த தோற்ற பிரபஞ்சத்தில் எண்ணிலடங்காத தோற்ற சரீரங்கள் உண்டு. ஆயினும் பிரபஞ்சத்தின் சூட்சும சரீரமே அனைத்து தோற்ற சரீரங்களுக்கும் மூல சரீரம். தோற்ற சரீரம் மாறும், அழியும். சூட்சும சரீரம் மாறுவதும் இல்லை அழிவதுமில்லை. ஸ்தூல சரீரங்களுக்கு அடிப்படையாக அமைவது அணுக்கள் என்று சொல்லலாம். சூட்சும சரீரத்திற்கு அடிப்படையாக அமைவது துகளாக விருத்தியடையாத மின்காந்த சமநிலை அலை நிலையாகும். அது சூன்ய சொரூபமானது. இந்த சூட்சும சரீரத்திலிருந்து துவங்கி தோன்றுவதுதான் இந்த ஜீவன்களும். ஆக! ஜீவன்களுக்கும் அதே சூட்சும சரீரம் தான். சூட்சும சரீரம் ஒன்றுதான். ஜடப்பொருளானாலும் உயிர்பொருளானாலும், அது மலையானாலும், மனிதனானாலும் மூல சூட்சும சரீரம் ஒன்றுதான்.

வானம் ஒரு ஸ்தூல சரீரமென்றால் அதனுடைய சூட்சும சரீரமும் ,பூமி ஒரு ஸ்தூல சரீரமென்றால் அதனுடைய சூட்சும சரீரமும் ,கடல் ஒரு ஸ்தூல சரீரமென்றால் அதனுடைய சூட்சும சரீரமும் ,மலை ஒரு ஸ்தூல சரீரமென்றால் அதனுடைய சூட்சும சரீரமும் ,நதி ஒரு ஸ்தூல சரீரமென்றால் அதனுடைய சூட்சும சரீரமும் ,விருட்ஷம் ஒரு ஸ்தூல சரீரமென்றால் அதனுடைய சூட்சும சரீரமும் ,ஒரு செடி ஒரு ஸ்தூல சரீரமென்றால் அதனுடைய சூட்சும சரீரமும் ,ஒரு கொடி ஒரு ஸ்தூல சரீரமென்றால் அதனுடைய சூட்சும சரீரமும் ,ஒரு புழு ஒரு ஸ்தூல சரீரமென்றால் அதனுடைய சூட்சும சரீரமும் ,ஒரு பூச்சி ஒரு ஸ்தூல சரீரமென்றால் அதனுடைய சூட்சும சரீரமும் ,ஒரு பாம்பு ஒரு ஸ்தூல சரீரமென்றால் அதனுடைய சூட்சும சரீரமும் ,ஒரு நாய் ஒரு ஸ்தூல சரீரமென்றால் அதனுடைய சூட்சும சரீரமும் ,ஒரு கிளி ஒரு ஸ்தூல சரீரமென்றால் அதனுடைய சூட்சும சரீரமும் ,ஒரு புலி ஒரு ஸ்தூல சரீரமென்றால் அதனுடைய சூட்சும சரீரமும் ,ஒரு மனிதன் ஒரு ஸ்தூல சரீரமென்றால் அதனுடைய சூட்சும சரீரமும் எல்லாம் ஒன்றே!

காரணம் : தன்னையறிவது 21.5.11

இந்த தன்னையறியும் தேற்றமே இப்பிரபஞ்சம் தோற்றம் கொண்ட காரணம். பிரபஞ்ச இயக்க காரணமும் ஆகும்.

ஒரு உயிர் என்ற வகையில் நம் விஷயத்தில் என்ன நடந்திருக்கிறது பாருங்கள். நமது பயணத்தின் துவக்கமான அந்த ஒரு செல் (உயிரி) உடலிக்கு தன்னையறியும் அமைப்பு ஏற்ப்படவில்லை. ஆயினும் தேடல் நடந்து கொண்டேயிருந்தது. அடுத்து பல செல் ஓருடல் எனும் அடுத்த பரிமாணத்திற்கு வந்தது. அந்த சரீரத்திலும் தன்னையறியும் அமைப்பு ஏற்படவில்லை. ஆனால் தங்களை (செல்கள்) தற்காத்துக்கொள்ளவேண்டிய அவசியம் தீவிரமானது. அந்த தற்பாதுகாப்புத்தன்மையே அடுத்தடுத்து வெவ்வேறு சரீரமாக (அதிக செல்களின் எண்ணிக்கையோடு) உருவெடுக்கின்றன.

இந்தசரீர பரிணாமவளர்ச்சி,பல்லாயிர சரீரங்களைத்தாண்டி தற்பாதுகாப்பு ஸ்திரமாகி, ஸ்திரமாகி கொண்டே வருகிறது. அடிப்படையில் தன்னையறிதலும் சகல வழிகளிலும் முயற்சித்துக்கொண்டே தொடர்கிறது.

அந்தப்பயணம் இன்று தற்பாதுகாப்பில் அதி உச்சம்தொட்டு, அணுக்குண்டு, ரசாயன குண்டு, உயிரியல் குண்டு என உலகில் உள்ள அனைத்துயிரையும் ஒரே வாரத்தில் கொன்று முடித்து விடும் அளவுக்கு ஒரு 'தன்னிகரில்லா' தற்பாதுகாப்பில் இருக்கிறோம்.

இந்த தற்பாதுகாப்பு எனும் சரீர கவசத்தின் உயர்பரிணாமத்தில் நமக்கு வந்து வாய்த்தது தான் உணர்வும், நினைவுத்தொகுப்பும், ஐம்புல அறிவும். தொடர்ந்து கொண்டேயிருக்கிறது தன்னையறியும் தேடல்.

உயிரின் நோக்கம் இதுதான்.

இந்த ஜட பிரபஞ்சத்தில் உயிர் தோன்றிய விதமும், இந்த பிரபஞ்சத்தின் தன்னையறியும் அவா தான். ஏன்? இந்த பிரபஞ்சம் தோன்றியதும் கூட இந்த தன்னையறியும் அவாவினால் தான்.

இந்த பிரபஞ்சத்தின் ஆதி மூல நிலையான அந்த ஏக நிலையான அலைப்பண்பு நிலை - தன்னையறியும் ஒரு சிறு சலனத்தால் - சலனமேற்பட்ட (இடத்தில்) அலை துகள்களாக - துகள்கள் மூவித மின்னோட்ட துகள்களாக - அவை தனிமமாக - இப்படி உற்பத்தியானதே இப்பிரபஞ்சம்.

அணுத்துகளிலிருந்து துவங்கிய தன்னையறிதல் தேடல், இந்த தோற்ற பிரபஞ்சத்தில் இன்று உயிருள்ள மனிதனாக - ஒரு சுந்தரமாக, ஒரு பார்த்தசாரதியாக - பரிணாமம் அடைந்து நிற்கிறது. இவனுக்கே (மனிதனுக்கே) தன்னையறியும் அமைப்பு கிடைத்திருக்கிறது.

இவன் 'நான்' யார்? என தனது சரீரத்தில் துவங்கி தன் புலனறிவு, தனது மனம், தன் உணர்வு இவைகளை கடந்து , இந்த சரீரத்திற்குள்ளிருக்கும் செல்களை ஆராய்ந்து அனைத்து செல்களிடமுமே 'தன்னையறிதல்' எனும் வெறும் கவனம் மட்டுமே இருப்பதையறிந்து - தனது சரீரத்தில் உள்ள 210 வகை தன்மையான இயக்கத்தையும்

ஒரேத்தன்மையான இயக்கத்திற்கு கொண்டு வர சரீரத்திலுள்ள 75 டிரில்லியன் எண்ணிக்கையுள்ள செல்களையும் ஒரு ஏக உணர்வுடன் இணைத்து - அச்செல்கள் தங்களுக்குள் உள் இணைப்பு கண்டு ஒர்மையாகி - தன்னையறிந்து கொள்கிறது.

சரீரங்களின் தன்மை தற்பாதுகாப்பை முதன்மை படுத்தி உள்ளது. சரீரத்திற்குள் இருக்கும் செல்களின் தன்மை தன்னையறிதல் எனும் கவனத்தன்மையை முதன்மை படுத்தி உள்ளது.

* பௌத்த தருமத்தின் சாரத்தை உணர்த்தும் சுலோகமாக இது கருதப்படுகிறது :-

"யேதர்மா ஹேதுபரபாவா: தேஷாம்ஹேதும் ததாகத:

ஆஹதேஷா யோநிரோத: ஏவம்வாதீ மகாசமண:"

இதன் ஆங்கில மொழி பெயர்ப்பு வருமாறு:

Of those conditions which spring from a cause

The cause has been told by tathagata ;

And the manner of suppression

The great samana has like wise taught.'

" காரணம் ஒன்றிலிருந்து எந்த தன்மைகள் ஏற்படுகின்றனவோ, அவைகளின் காரணத்தை ததாகதர் கூறினார்; அதை அடக்கும் முறையையும் அந்த மககிசரமணர் கற்பித்துள்ளார்."

அதி காரணம்: மூலநிலை - தன்னை அறிவது.

உப காரணம்: சரீரம் - தற்பாதுகாப்பு.

சும்மா இருக்க முடியுமா? 22.5.11

சும்மா இருப்பது : அது பிரபஞ்சத்தின் பேர் நிலை. நீங்கள் சும்மாயிருக்க விரும்பினால் அதற்கு அளவற்ற சக்தி வேண்டும். சும்மா இருக்க முயற்சிக்கவே நிறைய சக்தி வேண்டும்.சும்மா என்பது சலனமற்ற நிலை. எந்த வித முனைப்பும் அற்ற தூய நிலை. சாவி கொடுத்த கடிகாரம் மாதிரி மனம் ஓடிக்கொண்டேயிருக்கிறது. அது சற்று சும்மா இருந்து நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? அதை நிறுத்த ஒரு 'சுவிட்ச்' உண்டா? மனம் மட்டுமல்ல அதையும் தாண்டி இருக்கிறது விஷயம். சற்று நேரம் மனதை நிறுத்திப்பாருங்கள் பிறகு தெரியும் மனதை நிறுத்த எந்த அளவுக்கு சக்தி தேவைப்படுகிறது என்பது. அது எப்படியோ கஷ்டப்பட்டு பல நாட்கள் கடின முயற்சி செய்து மன ஓட்டத்தை

சற்று நிறுத்தினால், உடம்பில் உள்ள உணர்வுகள் பலவேஷம் போடுகின்றது. இப்போது உங்கள் உறுதி குலைந்து விடுகிறது. நீங்கள் உங்கள் மனதுக்கு அறிவுரை சொன்னது போய் உங்கள் மனது உங்களுக்கு புத்தி சொல்ல ஆரம்பித்து விடுகிறது. தத்துவத்தில் தேட்டம் இல்லாவிட்டால் இதுதான் நடக்கும்.

சும்மா என்பதை இயற்பியலில் 'குவாண்டம் தியரி' சொல்வது ' துகளற்ற அலை நிலையே சும்மா இருப்பது' என்று. அலை நிலை அடுத்து , துகள் நிலை அடுத்து துகள்கள் கூடி நியூட்ரான், புரோட்டான், எலக்ட்ரான் எனும் மூவித மின் தன்மைகள் உள்ள அணு மூல துகள்கள். இவை மூன்றும் இணைந்து இயங்கி அணுவாக பரிணமிக்கிறது. அணுக்கள் கூடி மூலக்கூறுகளாகிறது. மூலக்கூறுகள் இணைந்து செல் ஆகிறது, 210 வகையான செல் தொகுதியும்(210 வகையான இயக்கங்கள்) மொத்தம் 75 டிரில்லியன் செல்களும் சதா இயங்கிய வண்ணம் உள்ள நீங்கள் மட்டும் அனைத்தையும் அடக்கி . எப்படி சும்மாயிருப்பது?

இந்த 210 வகையான இயக்கத்தையும் நிறுத்த எவ்வளவு சக்தி வேண்டும்? அதற்கு சொல்லி சமாதானப்படுத்த எவ்வளவு நியாயம் வேண்டும்?

இந்த 210 வகையான இயக்கங்களையும் ஓரியக்கமாக கொண்டுவருதலே சும்மாயிருக்க செய்யும் வழிவகையாகும். மொத்தம் 75 டிரில்லியன் செல்களும் அதன் 210 வகையான இயக்கங்களும் ஓரியக்கமாக கொண்டுவர சரியான,தர்க்க ரீதியான நியாயம் இல்லாவிட்டால், அவைகளை சமாதானப்படுத்த முடியுமா?

ஏன் சும்மா இருக்கவேண்டும்? இந்த கேள்விக்கு தகுந்த பதிலை நீங்கள் அளித்தால் அவைகள் உங்களுக்கு உடன்பட்டு வரும். பதிலை தேடுவோம். நமது உடலையும் வாழ்வையும் நிர்வகித்து வருவது நமது மூளையே ஆகும்.

அந்த மூளையில் இன்னும் ஊர்வன இனத்து மூளைப்பகுதி செயல்பட்டுக்கொண்டு வருகிறது. கூட விலங்கு இனத்து மூளையும் செயல்பாட்டு வருகிறது. அவையெல்லாம் நாம் கடந்து வந்த சரீரங்கள் தான். அவைகள் இப்போது உணர்வாகவும், நுகர்வாகவும், (smel)

இடம்பெயர உதவும் வகையிலும் ஊர்வன இனத்து மூளைப்பகுதி செயல்பட்டுக்கொண்டு வருகிறது.நமது விலங்கு இன மூளையோ மன எண்ண ஓட்டங்கள், நினைவாற்றல், (பழிவாங்க) வன்மம், வீரியம் போன்ற செயல்பாடுகளை கவனித்துக்கொள்கிறது. இந்த விதமான மூளைகளை நாம் வித விதமாக உபயோகித்து மிகவும் ரசித்து உபயோகப்படுத்தி இருக்கிறோம் அல்லவா! அது நமக்கு கைவந்த கலை. ஆனால்! இவை யாவும் நமக்கு தற்பாதுகாப்பு கவசங்களுக்காக அமைந்தவை. ஆனால்! நமது ஆதி மூல ஸ்திதி என்ன தெரியுமா? தன்னை அறிதல் என்பதே! தன்னை அறிதல் எனும் அந்த ஆதி தேடல்தான் நமது அறிவிற்கு எட்டாமல் ஏதோ நமக்கு தேவைப்படுகிறது அது என்ன? அசையாத சொத்துக்களா? அழகிய பெண்ணா? ஆடம்பர பங்களாவா? அல்லது ஐம்பது ஏக்கர் நிலமா? சிலருக்கு இன்னும் ஐம்பது தலைமுறைக்கு சொத்து சேர்த்தும் தேவை-

தேடல் முடியவில்லை. காரணம் அறியாமை. நாம் என்ன தேட இங்கு வந்தோம் என்பதே தெரியாத அறியாமை.

ஆதி சங்கரர் சொன்ன நேதி, நேதி -இதுவல்ல, இதுவல்ல- என்று ஒருவன் சத்தியத்தோடு நமது இயல்பான தேடல்தான் என்ன என்று தேடுவானானால் எல்லாவற்றையும் கடந்து அந்த அநுபூதி நிலையாம் பரிபூரண நிலையை வந்தடைவான். விழிப்புணர்வு கொள்ளுங்கள் என சொல்லவேண்டியது இல்லை. அந்த மூலப்பிரகிருதியே விழிப்புணர்வோடுதான் இருக்கிறது. அதன் மேலிருக்கும் அழுக்குப்படலங்களை (உணர்வு, மன ஓட்டங்கள், ஐம்புல அறிவு, நான் எனும் அபிமானம்) நேதி, நேதி என ஒதுக்கி எவன் ஒருவன் சும்மா இருப்பானோ அவனுக்கு அந்த தூய ஒளி கிடைக்கும். இந்த உண்மையை உங்கள் செல்களுக்கு நீங்கள் சொன்னால் அது உங்களுடன் உடன்பாட்டுக்கு வரும். நீங்கள் சும்மா இருந்தால் உங்கள் செல்களும் சும்மா இருக்கும். அந்த சும்மா இருப்பதின் மூலம் 210 வகை இயக்கமும் ஓரியக்கமாக ஏக அமைதியாக துலங்கும்.

அருகத்து நிலையை அடைய புத்தர் உரைத்தது. 1, சிரத்தை, 2, வீரியம், 3, சித்தம், 4, மீமாம்சை ஆகிய நான்கும் வேண்டும்.

சிரத்தை: இலட்சியத்தை அடைய வேண்டும் எனும் தீவிர ஆர்வம்.

வீரியம்: இடைவிடாத முயற்சி,

சித்தம்: தீய சிந்தனைகள் யாவும் நீங்கி, சித்தம் பரி சுத்தமாக வேண்டும்,

மீமாம்சை: தாம் கொண்ட முடிவுகள் சரியானவையா என்று பகுத்தறிந்து பார்க்கும் ஆராய்ச்சி வேண்டும்.

இருத்தி ஆற்றல்கள். 23.5.11

எனது தியான பொழுதுகளில் நான் அடைந்த இருத்தி ஆற்றல்கள் நான்கு வகைப்படும். இந்த இருத்தி ஆற்றல்கள் பல்வேறு வகைகள் இருக்கும் என தோன்றுகிறது. ஒருவர் எப்படி இந்த இருத்தி நிலையை அடைகிறாரோ அதைப்பொறுத்து இருத்தி ஆற்றலின் தன்மை வித்தியாசப்படலாம். அது அவரவர் அனுபவங்கள்.

ஆற்றல் ஒன்று: அப்பொழுது நான் பூரண நிலையை அடைந்தேன். அனைத்துமே நிறைவாக இருந்தது. எந்த தேவையுமே எனக்கு இருக்கவில்லை. இந்த பிரபஞ்சத்தையே எனக்கு ஒருவர் பரிசாக எனக்கே சொந்தமாக கொடுத்தாலும் அது எனக்கு வேண்டாம்.நான் பூரண நிறைவாயிருக்கிறேன். வேறு ஒன்றை பெறுவதற்கு

என்னிடம் இடமில்லை. இந்த உயிரின் தேடல் முடிந்து விட்டது. (complete) ஏன் இங்கு நானே இல்லை. நான் அதுவாகி இருந்தேன். இது ஒரு பேரானந்த நிலை.

ஆற்றல் இரண்டு: எனது இருப்பு நிலை உணர்வு எனது இதயத்தின் மத்தியில் வந்து சூழ்ந்தது. இதயத்தின் மத்தியில் மையம் கொண்டது. அநத மையம் ஒரு அணுவளவு மட்டுமே இருந்தது. அநத மையத்தை நோக்கி இந்த பிரபஞ்சத்தில் உள்ள அனைத்து அனுக்களிலுமிருந்து ஆசீர்வாதமாக வந்து சூழ்ந்தது. அனைத்து அணுக்களின் ஆசீர்வாதத்தை ஒரு அணு தாங்குமா? யோசித்து பாருங்கள். ஆனால் அது அப்படித்தான் நடந்தது. அது பேர்ஆசீர்வாதம். அநத புளங்காகிதத்தை வார்த்தைகளால் விவரிக்க முடியுமா? ஆற்றல் மூன்று: எனது இருப்புத்தன்மை இதயத்தின் மத்தியில் துலங்க அங்கிருந்து புருமத்தியான ஆக்ஞாவை , அங்கிருக்கும் ஒளிப்பிரதேசத்தில் லயித்து இருந்தபொழுது ஒரு அதிசயம் நிகழ்ந்தது. அப்போது நான் அநத ஒளியிடம் பிரார்த்தித்துக் கொண்டிருந்தேன்.என்னை நான் என்ற சரீர அபிமனத்திளிருந்து விடுவிப்பாயாக! இந்த தோற்ற பிரபஞ்சத்தில் இருக்கும் பொருள் சார்ந்த வாழ்வின் மீது உள்ள ஆசையை நீக்கி என்னை அநுபூதி நிலைக்கு எடுத்து செல்வாயாக! என பிரார்த்தித்துக்கொண்டிருந்தேன். எனக்கு ஒரு அசரீரி தகவல் கிடைத்தது. அது ஒரு ஒலியான, மொழியால் கிடைக்கவில்லை. அது எந்த ரூபமாக கிடைத்தது என்பதும் தெரியவில்லை. இந்த பொருள் நிலையான பிரபஞ்ச வாழ்விலிருந்து விடுபட்டு அநத அருள்நிலைக்கு வர 'நீ இன்னும் வைத்திருக்கும் உன் ஆசையை பூர்த்தி செய்து கொள்ள உனக்கு வாய்ப்பு அமையும், அதை நீ கேடடு பெற்றுக்கொள்" அதன்பிறகு அனுபூதிக்கு நீ தயாராகி விடுவாய் என்பதே அநத தகவல். இந்த ஆற்றலின் அடிப்படையிலேயே கோவில்கள், கடவுளர்கள் தோன்ற ஆரம்பித்தனர். நீங்கள் முழு மனப்பூர்வமாக துளியும் நான் என்ற அகங்காரமில்லாமல் உங்களை சரண் செய்து பிரார்த்தித்தால் நீங்கள் வேண்டும் வரம் உங்களுக்கு கிடைக்கும்.

ஆற்றல் நான்கு: தியானப்பொழுதில் நடந்த நிகழ்வு அது. நுண் உடல்களான பிராண உடல், உணர்வு உடல் தாண்டி மன உடலில் தியானித்துக்கொண்டிருந்தபொழுது புருவ மத்தியில் ஒளி தோன்றியவுடன் ஒளி வெளிநோக்கி பிரவேசிக்க துடிக்கிறது. ஒளியின் வேகம் நீங்கள் அறிந்ததுதான். அநத மன உடலை உங்கள் உணர்வு உதவியுடன் நீங்கள் எல்லைகளற்று விகசிக்க வேண்டும். அப்படி எல்லைகளற்று என் மன உடல் விகசித்துக்கொண்டிருந்த பொழுது நடந்தது இது. அநத எல்லையற்ற தளம் விகசிப்பது என்பது ஒரு எருக்கன் காய் நன்று பழுத்து உள்ளிருக்கும் விதைகள் முற்றி விதைகளை சுற்றியுள்ள பஞ்சும் முதிர்வடைந்து, காய் வெடித்து காற்றில் பரவும். அப்படி காய் வெடித்து தனது உள் நிலை என்பது அநத வெடிப்பின் மூலம் வெளி நிலையாக மாறும். அதுபோல உங்கள் மன உடலின் உள்நிலை ஒரு ஒளி வெடிப்பின் மூலம் வெளி நிலையாக மாறி உங்களின் உள்ளிருக்கும் (விதைகளான) இம்மி துகள்களும் வெளிப்போந்து பரவும். அப்போது உங்களது தீவிர கவனம் அதில் ஒரு (விதையின்) துகளின் மீது குவியும் பொழுது அதிலிருந்து அபரிமிதமான ஆற்றல்கள் வெளிப்படுகிறது. அநத ஆற்றல்களின் வலிமையை இந்த உடல் தாங்க முடிவதில்லை. உடனே இந்த உடல் வழியாக அந்த ஆற்றல்களை வெளியே (உடலுக்கு வெளியே) பரவ விட வேண்டியதாக இருக்கிறது. இதுவே மகான்களிடமிருந்து வெளிப்படும் அருளாற்றல் ஆகும்.

ஆயினும் இந்த வித இருத்தியாற்றல்களை கடந்து அந்த மூல உண்மையான சமநிலை தூய்மையை நாம் அடைய வேண்டும். அதுவே அறுதி நிலை. அதன் பிறகு இந்த தோற்ற பிரபஞ்சத்தில் எந்த எண்ணமும் இல்லை. அதுவே பிறவிப்பெருங்கடலை தாண்டிய நிலை.

சுய கலைதல். 23.5.11

நான் என்பது வெறும் அடையாளம் மட்டுமே! இந்த அநுபூதி தன்மையை அடைய விரும்புபவர்கள் தங்களின் அனைத்து அடையாளங்களையும் விட வேண்டியதாக இருக்கிறது. இந்த அடையாள உலகில் தான் யாரென்ற அடையாளமின்றி(உங்களுள்) நிராதரவாக நிற்கும்பொழுதே, அநுபூதி நிலை துலங்குகிறது.அது ஒரு மாசற்ற வெளி. அங்கு எந்த கருத்து நிழலும் இன்றி தூய நிலை வாய்க்கும்போழுதே இது நிகழ்கிறது. எவர் ஒருவர் தனக்குள் எந்த மாசுமருவுமின்ரி ஒரு தூய நிலையில் இருக்க முடிகிறதோ அவரே அந்த அனுபூதியால் ஆசீர்வதிக்கப்பட்டவராகிறார். இந்த அநுபூதி என்பதும் மின்னோட்டத்தின் வெளிநோக்கிய தேடல் முடிவுற்று மீண்டும் தன் மூல நிலையான அமைதி நிலைக்கே(உள் நோக்கி) திரும்புதல் எனும் நிகழ்வாகும். அதாவது தன் அமைப்பு கலைதல். இதற்கு நம்முடைய நான் மனப்பூர்வமாக ஒப்புதல் தரவேண்டும். இந்த மின்னோட்டத்தின் வெளிநோக்கி பயணத்தில் கோடிக்கணக்கான ஆண்டுகள் கூட வந்தது உங்களுடைய நான் எனும் அடையாளத்தன்மை. அதை இனி நீ வேண்டாம் என ஒதுக்குவீர்களானால் அதற்குரிய நியாயமான காரணம் என்னவென்பதை நீங்கள் அதற்கு கூறவேண்டும். அதனால் உங்களிடம் இதுவரை நீங்கள் எப்படி நடந்து கொண்டீர்களோ! , இந்த கணத்திலிருந்து உங்கள் நான் எனும் அடையாளத்தன்மையுடன்நீங்கள் ஒரு வெளிப்படையான தூயத்தன்மையில் பழகுதலும், எல்லா விஷயங்களையும் அதனோடுகலந்து ஆலோசிப்பதன் மூலமும் உங்கள் தேவையை அதனிடம் முன் வைப்பதன் மூலமும் அது தன்னிறைவடைந்து தனது அடையாளத்தை சுய கலைதல் மூலம் கலைத்து விடைபெறும். அதை விடுத்து உங்களுடைய நானை கட்டாயப்படுத்தி சம்மதிக்க வைப்பதோ, அல்லது அதை மதியாமல் நீங்கள் தன்னிச்சையாக செயல் படுவது என்பதோ கோடிக்கணக்கான வருடங்கள் கூட வாழ்ந்த ஒருவரை நீங்கள் அவமதிக்கிறீர்கள் என்றே பொருள். நீங்கள் கடும் தவமிருந்து ஏகப்பட்ட பிரயத்தனங்கள் செய்து பெறப்போகிற அநுபூதி தன்மை என்பது உங்களின் நான் எனும் அடையாளத்தன்மையின் சுயக்கலைதல் எனும் ஆனந்த வைபோகமே! அதை நீங்கள் எவ்வளவு உற்சாகமாக கொண்டாடுகிறீர்கள் என்பது, உங்களுடைய நானிடம் நீங்கள் பெற்றிருக்கும் அனுமதியைப் பொறுத்தது.

அக மன சமநிலை தூய்மை. 24.5.11

தியானத்தின் பொழுது நான் எனும் கருத்துருவையும், உணர்வையும் நமது மூலத்தன்மையிடம் சமர்ப்பணம் செய்வது என்பது - நமது மூலத்தன்மையிடம் இந்த சரீரம் சார்ந்த அனைத்தையும் ஒப்படைத்து விடுதல் ஆகும். அப்படி

ஒப்படைக்கும்போழுதே, இந்த சரீர உணர்வுகள், எண்ண அசைவுகள் எனும் திரை நீங்கி நமது மூலத்தன்மையான எல்லையற்ற சமநிலைமின்வெளி நமக்கு துலக்கமாகிறது. அங்கு பார்ப்போன் இல்லை. அப்போது நமது அக மனம் சிறு சலனமுமின்றி ஒரு சமநிலைத்தூய்மையோடு,அதிகவனம் எனும் செயலற்ற செயல்நிலையில் நின்று வெறும் சாட்சியாக நிலை பெற வேண்டும். இந்த மூலத்தன்மையை பரவெளி, சூன்யம், வெற்று வெளி, பிரம்மம், அதிமனம் என நாம் பெயரிட்டாலும் அது நமது மூலத்தன்மையாகும். இந்த பிரபஞ்சத்தின் மூலத்தன்மையும் அதுவேயாகும். அந்த நூலில்தான் இந்த பிரபஞ்ச பொம்மையே ஆடுகிறது.

உயிர்க்கடல். . 24.5.11

நமது பூமி கோளத்தை சுற்றி ஓர் படலமாக உயிர்க்கடல் படர்ந்துள்ளது. இந்த கடலில் வாழும் சரீர உயிரினங்கள்தான் மரம், செடி, கொடி நீர் வாழ்வன, நிலம் வாழ்வன, காற்றில் வாழ்வன யாவும். மேற்கண்ட உயிரினங்கள் சரீரமெனப்படுபவைகள்.இந்த சரீரத்தை கூடுகளாக கொண்டு ஜீவித்து வருபவை உயிர் செல்களாகும். வெவ்வேறு சரீரத்தில், வெவ்வேறு எண்ணிக்கையில் செல்கள்.

ஒரு சரீரத்தில் உள்ள ஒட்டு மொத்த செல்களுக்கும் ஒன்றுடன் ஒன்று நேரடி இணைப்பு இல்லாமல் தொடர்ந்து பரிணாம நிலையடைந்து வருகிறது. ஒரு மறைமுக வெளி இணைப்பாக சரீர விருத்தி மட்டும் நடக்கிறது. இந்த இணைப்பு செல்களின் வெளி இணைப்பு ஆகும்.

செல்களின் உள் இணைப்பு எந்த சரீரத்திலும் நடப்பதில்லை. அது நடப்பதற்கு சரீரத்தின் உணர்வில் அமைதி நிலை வேண்டும். அது மனித சரீரத்திற்கு மட்டும் வாய்த்திருக்கிறது. நமது சரீரத்தில் நடக்கும் உணர்வு தன்மையை நிதானப்படுத்தி, நிதானப்படுத்தி ஒரு புள்ளியில் எவரால் நிறுத்த முடிகிறதோ அந்த சரீரத்தால் தனது சரீரத்தில் உள்ள அனைத்து செல்களின் உள் இணைப்பை ஏற்படுத்த முடியும். இது நிற்க-
ஏதாவது ஒரு சரீரம் உயிரிழக்கும் நிகழ்வு ஏற்பட்டால் அச்சரீரத்தில் உள்ள உயிர் செல்கள் சரீரத்திற்கு வெளியேயுள்ள இந்த கடலில் கலந்து விடும் என தோன்றுகிறது. அவைகளுக்கு அழிவேயில்லை, மாற்றம் மட்டுமே உண்டு எனவும் தோன்றுகிறது.

அப்படி வெளியேறும் செல்கள் தங்களிடம் உள்ள தகவலுக்கேற்ற தகவமைப்புள்ள இனங்களில் சேர்ந்து விடலாம். மேற்கண்ட நிகழ்வுகளுக்கு அந்தந்த இடத்தில் உள்ள சீதோஷ்ண நிலையும் உதவிகரமாக அமையலாம்.

கிராமத்தில் பெரியவர்கள் எந்த பாம்பையும் கொல்லக்கூடாது என்றும், அசம்பாவிதமாக யாராவது பாம்பைக்கொல்ல நேரிட்டால் அந்த இடத்தில் க்ஷணமும் நிற்காமல் தூர விலகிவிட வேண்டுமென சொல்வார்கள். தவறி அந்த இடத்தில் நின்று விட்டால் ராகு- கேது தோஷம் உண்டாகுமென சொல்வார்கள்.

தியான நிலையில், அல்லது எண்ண ஓட்டத்தையும் உணர்வையும் கடந்த நிலையில் உங்களில் உள்ள அனைத்து செல்களும் ஒரே லயமாக உள் இணைவில் இணைவது அநுபூதி நிலையாகும்.

அப்படி ஒன்றாக இணைந்து செயல்படும்பொழுது அது பொருள்நிலை கடந்த சூட்சும நிலையில் நிலைகொள்ளும்.

அது சூட்சும நிலையில் ஸ்திரமாகி நின்றால் இந்த கடலிலுள்ள அனைத்து உயிரினங்களிலுமுள்ள ஒட்டு மொத்த செல் தொகுதியையுமே அது சூட்சுமத்தில் இணைக்கிறது.

அது சூட்சும சரீரம். அதை திவ்ய உடல் என்கிறோம். இந்த சூட்சும சரீரத்தில் தான் புத்தர், மகாவீரர், போன்ற அறுதி நிலையை அடைந்தோர் எந்த அடையாளமும் இன்றி கலக்கிறார்கள். அவர்களோடு நீங்களும் கலக்க முடியும்.

சாதகருக்கு ஒரு தெளிவான உபாயம்.25.5.11

நம்முடைய நான் எனும் அறிவு, உணர்வு மற்றும் சரீரம் சார்ந்த அனைத்தையும் நமது மூல நிலையான மின்காந்த சமநிலை அலைத்தளத்திடம் சரண் செய்யும்பொழுதே நமக்கு நமது மூலநிலை துலக்கமாகிறது என்பது கண்கூடு. நமது நான் எனும் பேதமையை ஒரு தெளிவான உபாயத்தின் மூலம் சரண் செய்ய முடியும். நாம் நம்மை நமது உடல் மற்றும் அவயவங்கள் மற்றும் அனைத்து செல்கள்,அனைத்து அணுக்கள் யாவற்றையும் ஒளித்தன்மைக்கு கொண்டுவந்து, நமது தேகமே ஒளியாக, நமது உள் உறுப்புகளும் ஒளியாக, நமது புலன்களும் ஒளியாக, நம்முடைய உடலிலுள்ள அனைத்து அணுக்களுமே ஒளியாகி நாம் ஒரே ஒளியாகி அந்த ஓளியை நாம் சமர்ப்பித்தல் வேண்டும். இப்படி சமர்ப்பிப்பத்தின் மூலம் நமது நான் எனும் பேதைமை சமர்ப்பணம் ஆகிறது. இப்படி இந்த சமர்ப்பணம் முடிந்த பிறகு ஒரு தூய ஒளி மட்டுமே நம்மிடம் மிஞ்சுகிறது. இந்த நான் என்பதின் அசைவுகள் எதுவும் இருப்பதில்லை.

இந்த பிரபஞ்சத்தில் ஒளி ஒரு தனி முதற்பொருள்.இந்த பிரபஞ்சத்தில் உள்ள எந்த ஒரு பொருளும் ஒளியின் வேகத்தை அடைந்தால் அந்த பொருளே மறைந்து விடும் என்பது இயற்பியல் விதியாகும்.

ஆகவே உங்கள் சொரூபம் ஒளி சொரூபம் ஆகட்டும்.உங்கள் பொருட் தன்மை ஒளித்தன்மையை அடையட்டும். ஒரு நாளில் எவ்வளவு நேரம் இந்த தூய ஒளியாக நீங்கள் இருக்கிறீர்களோ அந்த அளவுக்கு உங்களுக்கு அநுபூதி நிலை நெருங்கி வருகிறது.

ஹைடெக் தியானா.26.5.11

இந்த விதமான தியானமுறை இதற்குமுன் யாராவது செய்து இருக்கிறார்களா என்பது தெரியாது . நான் இதை முயற்சி செய்து பரீட்சை செய்திருக்கிறேன் .

தொடர்ந்து நித்தம் தியானம் செய்து வருபவர் யாராயினும் இந்த முறையை முயற்சி செய்து பார்க்கலாம் . அநுபூதி நிச்சயம். தியான பயிற்சி அறியாதவர்கள் யாரும் தயவு செய்து இதை முயற்சிக்க வேண்டாம் .

முதலில் நாம் எந்த விதமான பொருட்களால் உருவாக்கப்பட்டிருக்கிறோம் என கவனிக்க வேண்டும் . மீண்டும் இது (நம் உடல்) எங்கு துவங்கியதோ அங்கு சென்று கவனிக்க வேண்டும் தியான முறையில் .

நாம் பலவித உடல் உறுப்புகளால் ஒன்றிணைந்து இருக்கிறோம். கண்கள், காதுகள், மூக்கு, நாக்கு, பற்கள், மூளை, மயிர்கள், தோல், முதுகெலும்பு, கைகள், விரல்கள், நகம், தசைகள், நரம்பிழைகள், குரல்வளை, நுரையீரல், இதயம், சிறுநீரகம், ரத்தம், மூச்சுக்குழல், உணவுக்குழல், இரைப்பை, கல்லீரல், மண்ணீரல், உதரவிதானம், பித்தப்பை, சுரப்பிகள், பெருங்குடல், சிறுங்குடல் , மலக்குடல், மூத்திரப்பை, கணையம், குடல்வால், கொழுப்பு, 206 எலும்புகள். ஆகியவைகள்.

மேற்கண்ட உறுப்புகள் எல்லாம் திசுக்களால் ஆகியிருக்கின்றன.

மேற்கண்ட திசுக்கள் 210 வகையான செல்களால் உருவாக்கப்பட்டிருக்கிறது. அதாவது நம் உடலில் 210 வகையான செயல்பாடுகள் நடக்கின்றன.

இந்த 210 வகை செல்களும் உருவத்திலும், செயல்பாட்டிலும் வித்தியாசமானவைகள். நமது உடல் 210 வகையாக மொத்தம் 75 டிரில்லியன் எண்ணிக்கை அளவு செல்களாக இருக்கிறது.

இந்த செல்களின் குவியலே நமது உடம்பு. இந்த செல்கள் எதனால் உண்டாக்கியுள்ளன என கவனிப்போம். இந்த செல்களின் பொருட் தன்மை என்னவெனில் அவைகள் மூலக்கூறுகளாக இருக்கின்றன. இந்த மூலக்கூறுகளின் எண்ணிக்கை தெரியவில்லை. நாமே யூகித்துக்கொள வேண்டியதுதான்.

இந்த மூலக்கூறுகள் வெவ்வேறு தனிமங்களால் உருவாகியுள்ளது.அந்த தனிமங்களின் எண்ணிக்கையும் நமக்கு தெரியவில்லை. அதையும் நாமே யூகித்துக்கொள்ள வேண்டியதுதான்.

ஒவ்வொரு அணுவும் மூன்று வித தன்மையுடன் இருப்பது நமக்குத்தெரியும். நேர் மின் துகள்- எதிர் மின் துகள்- நிலை மின் துகள் இந்த துகள்கள் மொத்தம் நம் உடலில் எவ்வளவு எண்ணிக்கை என்பதும் நமக்குத்தெரியாது. அதையும் நாமே யூகித்துக்கொள்ள வேண்டியதுதான்.

இந்த நியூட்ரான் துகள், புரோட்டன் துகள்,எலக்ட்ரான் துகள் இவைகள் ஒவ்வொன்றும் உருவாக பல இம்மி துகள்கள் தேவை என்கின்றனர் இயற்பியலார்கள். அந்த இம்மி துகள்கள் மொத்தம் நம் உடலில் எவ்வளவு எண்ணிக்கை என்பதும் நமக்குத்தெரியாது. அதையும் நாமே யூகித்துக்கொள்ள வேண்டியதுதான்.

இந்த இம்மி துகள், துகளாகவும் அலையாகவும் இரண்டு வித தன்மையில் இருப்பதாக குவாண்டம் தியரி கூறுகிறது. கவனித்துக்கொள்ளுங்கள்.

1, உடல் உறுப்புகள்

2, திசுக்கள்,

3, 210 வகையான 75 டிரில்லியன் செல்கள்,

4, எண்ணிலடங்காத மூலக்கூறுகள்,

5, எண்ணிலடங்காத அணுக்கள்,

6, எண்ணிலடங்காத அணுக்களின் மூவகை துகள்கள்

7, எண்ணிலடங்காத இமமித்துகள்கள்.

அதாவது நாம் பல்வேறு உறுப்புகளாக இருக்கிறோம்,
அதே சமயம் பலவிதமான திசுக்கலாகவும் இருக்கிறோம்,
அதே சமயம் 210 வகையான, மொத்தம் 75 டிரில்லியன் செல்களாகவும் இருக்கிறோம்,
அதே சமயம் எண்ணிலடங்கா மூலக்கூறுகளாகவும் இருக்கிறோம்,
அதே சமயம் எண்ணிலடங்கா அணுக்களாகவும் இருக்கிறோம்,
அதேசமயம் எண்ணிலடங்கா நியூட்ரான், புரோட்டான், மற்றும் எலக்ட்ரான் துகள்களாகவும் இருக்கிறோம்,
அதேசமயம் எண்ணிலடங்கா இம்மித்துகள்களாகவும் இருக்கின்றோம்.

நமது உள்நிலையை (அக நிலை) 7 விதமான பரிமாணங்களில், நம்மை நாம் அறிய முடியும் என்பது இதன் மூலம் தெரிய வருகிறது அல்லவா!

நாம் நம்மை இதுவரை உடல் உறுப்புகளாக மட்டுமே அறிவோம். மற்ற தன்மைகளை நாம் அறிய முயற்சிப்பதில்லை. நம்மிடம் எப்போதும் ஒரு வெளிநோக்கிய தன்மையில் மட்டுமே செயல்படும் தன்மைக்கு பழக்கப்பட்டு ஆட்பட்டிருக்கிறோம். பெரிய, பெரிய பொருட்களையே பெரும்பாலும் நாம் கண்டு வந்துள்ளோம் வெளியில்நமது புலன்களின் வழியாக. நாம் உள் நோக்கி பார்க்க வேண்டுமெனில் ஒரு நுண் தன்மை வேண்டியிருக்கிறது. இந்த நுண் தன்மை கவனத்தின் மூலமே செதுக்கி எடுக்க வேண்டியுள்ளது. இன்னும் நுட்பமாக, இன்னும் நுட்பமாக என நுண்மையாக மிக நுண்மையாக கவனத்தை நுண்மைப்படுத்த வேண்டியுள்ளது. கவன நிலையை நுண்மைப்படுத்த உணர்வு ஒத்துழைக்க வேண்டும். உணர்வு மெலிதாக, மிக மெலிதாக உணர்வுரும் பொழுதே இது சாத்தியமாகிறது. உணர்வு மெலிதாக மனம் ஒத்துழைக்க வேண்டும். மனம் சதா ஏதாவது சஞ்சலித்துக்கொண்டிருக்கும் பொழுது உணர்வு அதற்கு ஈடு கொடுக்க வேண்டியுள்ளது. இப்போது உணர்வும் தடித்தே இயங்குகிறது.ஆக! நிலைமை இப்படித்தான் இருக்கிறது. நமது கவன நிலையை நுண்மைப்படுத்த தியானம் ஒரு தலை சிறந்த பயிற்சி முறையாகும்.

இனி தியான முறை:

அதி காலை நேரம் மிகவும் நல்லது. காலை ஒரு நான்கு மணிக்கு எழுந்து ஒரு சிறு எக்சர்சைஸ் ஐந்து நிமிட நேரம் செய்து விட்டு உடலில் உள்ள அனைத்து செல்களையும் நன்றாக விழிக்க வைத்து, காலைக்கடன் முடித்து விட்டு குளித்து தியானத்தில் அமரவும். வெட்டவெளியாக இருப்பதும், நல்ல காற்றோட்ட வசதி உள்ள இடமாக இருப்பதும் அவசியம். கிழக்கு முகமாக அமர்ந்து தியானிப்பதும் நல்லது. ஆசனத்திற்கு நல்ல சுத்தமான படுக்கை விரிப்பை மடித்து வைத்து அதன் மீது வஜ்ஜிராசனம் இட்டு அமர்ந்து கொள்ளுங்கள்.முதலில் மூச்சுப்பயிற்சியை ஒரு பத்து நிமிட நேரம் செய்யுங்கள்.

ஒரு மந்திரத்தோடு துவங்கலாம்.

அஸத்தோமா ஸத்கமைய;

தமஸோமா ஜோதிர்கமைய;

மிருத்யோர்மா அம்ருதங்கமைய:

ஓம் சாந்தி, சாந்தி, சாந்திஹி.

மூச்சுப்பயிற்சி:

வஜ்ஜிராசனத்திலேயே இரு கைகளையும் இடுப்பில் வைத்து உடலை முன்னும்,பின்னும் அசைத்தவாறு வாயை மூடிக்கொண்டு மூக்கு துவாரங்களின் வழியாக தொடர்ந்து மூச்சை பீய்ச்சியடிக்க வேண்டும். நமது உடலில் கரிமில வாயு அதிகமாக தேங்கி கிடக்கிறது. அனைத்து கரிமில வாயுக்களையும் வெளியேற்றும் வண்ணம் தொடர்ந்து (மூச்சை வெளியேற்றுவது மட்டும் நோக்காக) பயிற்சி செய்தல் வேண்டும். இது மண்டையிலிருந்து துவங்கி உடல் முழுக்க உள்ள ஒவ்வொரு செல்லில் உள்ள கரிமில வாயுவையும் வெளியேற்றும் வண்ணம் முதுகுத்தண்டு நுனியான மூலாதாரத்திலிருந்து உடலை அசைத்து, அசைத்து மூச்சை வீசியடிக்க வேண்டும். உடல் முழுக்க பிராண வாயு நிரம்பும் அளவுக்கு இதை செய்தல் வேண்டும். இப்போது உங்கள் சுவாச மண்டலம் நிறைக்க வெறும் பிராண வாயு மட்டுமே இருத்தல் வேண்டும்.

அடுத்து ஓம் எனும் மந்திரத்தை ஒரு பத்து நிமிட நேரம் உச்சரியுங்கள். இந்த ஓம் எனும் மந்திர உச்சரிப்பு உங்கள் முதுகுத்தண்டு நுனியான மூலாதாரத்திலிருந்து மேல் நோக்கி கிளம்பி புருவ மத்தியான ஆக்ஞாவை வந்தடைய வேண்டும். அதாவது உங்கள் நரம்பு மண்டலத்தில் இது நடக்கிறது. பத்து நிமிட நேரத்திற்குப்பின் ஒரு லயத்துக்கு வந்து விடும். இது லயத்துக்கு வந்து விட்டதை நாம் எப்படி தெரிந்து கொள்வது என்றால், உடலின் உள் அவ்வப்போது சிறு மின்னல் வெட்டு தோன்றி மறையும். இதையும் சற்று நுட்பமாக கவனிப்பவருக்கு மட்டுமே தெரியும். இந்த மின்னல் வெட்டு துலங்கும் பொழுது அந்த ஒளித்தன்மை உங்கள் உடலை

ஆட்கொள்கிறது என அர்த்தம். அந்த ஒளித்தன்மை தான் இனி நீங்கள் செல்ல வேண்டிய உங்கள் பாதை. அனுபூதித்தன்மை உங்களில் துலக்கமாகத்தொடங்கி விட்டது என பொருள்.

இந்த ஒளிதான் இனி உங்கள் குரு. இந்த ஒளிதான் உங்களுக்கு வழிகாட்டி. இந்த ஒளியிடம் உங்களை ஒப்படையுங்கள்.

உங்களுக்கு முன்னால் ஒரு பொன்னிற ஆசனமிட்டு அதில் உங்கள் ஓளியை அமரவையுங்கள். அந்த பொன்னிற பீடத்திலிருந்து உங்கள் ஒளி சுடர்ந்து ஒளிரட்டும். இப்போது உங்கள் உயிர் அந்த ஒளியின் பொறுப்பில் இருக்கிறது. நீங்கள் அதன் அடிமை. உங்களுக்கென சுய விருப்பு வெறுப்பு இல்லை. நீங்கள் வெறும் சதை எலும்பு ரத்தத்தால் ஆன ஜன்மம். உங்களுக்கு எல்லாமாக இருப்பது அந்த ஒளியே! அந்த ஒளியால் தான் நீங்கள் இன்று இந்த கதியில் இருக்கிறீர்கள். அந்த ஒளியிலிருந்தே நீங்கள் தோன்றினீர்கள். உங்களுக்கு எந்த ஆபத்து வந்தாலும் இந்த ஒளியே உங்களை காக்கிறது. இனி எப்போதும் உங்களை காக்கும். அந்த ஒளிக்கு நீங்கள் உண்மையாக நடந்து கொள்ளுங்கள். உங்கள் சதை, எலும்பு, ரத்தம் அனைத்தும் ஒளியானால் நீங்கள் அதுவாகும் விந்தை நிகழும்.

இந்த ஒளி, மாறாதது. மாசற்றது,எந்த நோக்கமுமற்றது, அது தூய்மையானது, பரிபூரணமானது, முழுமையானது, நிறைவானது, அள்ள அள்ள குறையாதது, என்றென்றும் அது நிலையானது. இனி உங்கள் குருவின் காலடியில் உங்கள் தியானத்தை தொடங்குங்கள். அந்த ஓம் எனும் பிரணவ நாதம் உங்களை உங்கள் குருவோடு இணைக்கட்டும். ஓம் மந்திரத்தை தொடர்ந்து உச்சரியுங்கள். அது ஒரு அனிச்சை செயலாக தொடர்ந்து நடக்கட்டும். அந்த நாதமே உங்கள் வேள்வி. தொடர்ந்து ஓம் மந்திரத்தை உச்சரித்துக்கொண்டே தியானத்தை தொடருங்கள். இப்போது உங்களுக்கும் உங்கள் குருவுக்கும் இடையில் மானசீகமாக ஒரு வாழையிலையை நீர் தெளித்து அவருக்கு படையல் இடும் வகையில் போட்டு வையுங்கள். நீங்கள் இனி உங்கள் குருவுக்கு உங்களை சரண் செய்யும் நிகழ்வு துவங்கப்படும். நீங்கள் ஒரு சாட்சித்தன்மையுடம் மட்டுமே செயல்பட வேண்டும். ஓம் மந்திர உச்சாடனம் ஒரே மாதிரியாக ஏற்றம் இறக்கம் இல்லாது ஒரே லயமாக ஒலிக்கட்டும். இதை உங்கள் அனிச்சை மண்டலம் கவனித்துக்கொள்ளட்டும். முதலில் உங்கள் உடம்பு எத்தனை வகையான உறுப்புகளால் உருவக்கப்பட்டுள்ளதோ அந்த உறுப்புகளை உங்கள் குருநாதரின் முன் அந்த வாழை இலையில் எடுத்து வையுங்கள். (எல்லாம் மானசீகமாகத்தான்) " குருவான ஒளியே என்னுடைய இந்த அங்கங்கள் உன்னால் உற்பத்தியாக்கப்பட்டது. நீயின்றி இது உருவாக முடியாது.நீயின்றி இது உயிர்வாழ முடியாது. இவைகளை மீண்டும் உன்னிடமே ஒப்படைக்கிறேன். இந்த அங்கங்களில் உள்ள பழைய வினைகளை நீக்கி விடுவீராக! அது இனி புதிய பொலிவுடன் செயல்பட ஆசீர்வதிப்பீராக! அவைகள் உங்களைப்போலவே ஒளி மயமாகட்டும். அவைகள் உங்களைப்போலவே தூய்மையாகட்டும். அருள்வீராக! எனது கருத்துருவான நான் எனது என்பனபோன்ற எனது அறியாமையை இந்த அங்கங்களிலிருந்து நீக்கி விடுவீராக! இந்த பிரபஞ்சத்தில் உள்ள அனைத்துயிர்களின் அங்கங்களுடன் உங்கள் முன் இருக்கும் இந்த அங்கங்களை தொடர்பு படுத்துவீராக! இந்த அங்கங்களை உங்களிடம் மனப்பூர்வமாக ஒப்படைக்கிறேன்

பெற்றுக்கொள்வீராக! இவைகள் என்றுமே உங்களுடையதுதான்". எனசொல்லி உங்கள் குருவிடம் இலையில் உள்ள உங்கள் அங்கங்களை முழுமையாக ஒப்படையுங்கள்.

அடுத்து உங்களிடம் உள்ள அனைத்து திசுக்களையும் அந்த இலையில் வையுங்கள். குருவை நோக்கி,
" குருவான ஒளியே என்னுடைய இந்த திசுக்களை உன்னால் உற்பத்தியாக்கப்பட்டது. நீயின்றி இது உருவாக முடியாது.நீயின்றி இது உயிர்வாழ முடியாது. இவைகளை மீண்டும் உன்னிடமே ஒப்படைக்கிறேன். இந்த திசுக்களில் உள்ள பழைய வினைகளை நீக்கி விடுவீராக! அது இனி புதிய பொலிவுடன் செயல்பட ஆசீர்வதிப்பீராக! அவைகள் உங்களைப்போலவே ஒளி மயமாகட்டும். அவைகள் உங்களைப்போலவே தூய்மையாகட்டும். அருள்வீராக! எனது கருத்துருவான நான் எனது என்பனபோன்ற எனது அறியாமையை இந்த திசுக்களிலிருந்து நீக்கி விடுவீராக! இந்த பிரபஞ்சத்தில் உள்ள அனைத்துயிர்களின் திசுக்களுடன் உங்கள் முன் இருக்கும் இந்த திசுக்களை தொடர்பு படுத்துவீராக! இந்த திசுக்களை உங்களிடம் மனப்பூர்வமாக ஒப்படைக்கிறேன் பெற்றுக்கொள்வீராக! இவைகள் என்றுமே உங்களுடையதுதான்". எனசொல்லி உங்கள் குருவிடம் இலையில் உள்ள உங்கள் திசுக்களை முழுமையாக ஒப்படையுங்கள்.

அடுத்து உங்களிடம் உள்ள அனைத்து செல்களையும் ஓர் நுண்ணுடலாக்கி, அந்த நுண்ணுடலை (நுண் சரீரம்) அந்த இலையில் வையுங்கள். குருவை நோக்கி,
" குருவான ஒளியே என்னுடைய இந்த நுண்ணுடல் உன்னால் உற்பத்தியாக்கப்பட்டது. நீயின்றி இது உருவாக முடியாது.நீயின்றி இது உயிர்வாழ முடியாது. இதை மீண்டும் உன்னிடமே ஒப்படைக்கிறேன். இந்த நுண்ணுடலில் உள்ள பழைய வினைகளை நீக்கி விடுவீராக! அது இனி புதிய பொலிவுடன் செயல்பட ஆசீர்வதிப்பீராக! இன்னுண்ணுடல் உங்களைப்போலவே ஒளி மயமாகட்டும். அவைகள் உங்களைப்போலவே தூய்மையாகட்டும். அருள்வீராக! எனது கருத்துருவான நான் எனது என்பனபோன்ற எனது அறியாமையை இந்த நுண்ணுட லிலிருந்து நீக்கி விடுவீராக! இந்த பிரபஞ்சத்தில் உள்ள அனைத்துயிர்களின் நுண் உடல்களுடன் உங்கள் முன் இருக்கும் இந்த நுண்ணுடலை தொடர்பு படுத்துவீராக! இந்த நுண்ணுடலை உங்களிடம் மனப்பூர்வமாக ஒப்படைக்கிறேன் பெற்றுக்கொள்வீராக! இன்னுண்ணுடல் என்றுமே உங்களுடையதுதான்". எனசொல்லி உங்கள் குருவிடம் இலையில் உள்ள உங்கள் செல்களாலானநுண்ணுடலை முழுமையாக ஒப்படையுங்கள்.

அடுத்து உங்களிடம் உள்ள அனைத்து மூலக்கூறுகளையும் ஓர் நுண்ணுடலாக்கி, அந்த நுண்ணுடலை (நுண் சரீரம்) அந்த இலையில் வையுங்கள். குருவை நோக்கி,
" குருவான ஒளியே என்னுடைய இந்த நுண்ணுடல் உன்னால் உற்பத்தியாக்கப்பட்டது. நீயின்றி இது உருவாக முடியாது.நீயின்றி இது உயிர்வாழ முடியாது. இதை மீண்டும் உன்னிடமே ஒப்படைக்கிறேன். இந்த நுண்ணுடலில் உள்ள பழைய வினைகளை நீக்கி விடுவீராக! அது இனி புதிய பொலிவுடன் செயல்பட ஆசீர்வதிப்பீராக! இன்னுண்ணுடல் உங்களைப்போலவே ஒளி மயமாகட்டும். அவைகள் உங்களைப்போலவே தூய்மையாகட்டும். அருள்வீராக! எனது கருத்துருவான நான் எனது என்பனபோன்ற எனது அறியாமையை இந்த நுண்ணுட லிலிருந்து நீக்கி விடுவீராக! இந்த

பிரபஞ்சத்தில் உள்ள அனைத்துயிர்களின் மூலக்கூறு நுண் உடல்களுடன் உங்கள் முன் இருக்கும் இந்த மூலக்கூறு நுண்ணுடலை தொடர்பு படுத்துவீராக! இந்த நுண்ணுடலை உங்களிடம் மனப்பூர்வமாக ஒப்படைக்கிறேன் பெற்றுக்கொள்வீராக!
இன்னுண்ணுடல் என்றுமே உங்களுடையதுதான்". எனசொல்லி உங்கள் குருவிடம் இலையில் உள்ள உங்கள் மூலக்கூறுகளாலானநுண்ணுடலை முழுமையாக ஒப்படையுங்கள்.

அடுத்து உங்களிடம் உள்ள அனைத்து அணுக்களையும் ஓர் நுண்ணுடலாக்கி, அந்த நுண்ணுடலை (நுண் சரீரம்) அந்த இலையில் வையுங்கள். குருவை நோக்கி, “குருவான ஒளியே,ஒளியான குருவே என்னுடைய இந்த நுண்ணுடல் உன்னால் உற்பத்தியாக்கப்பட்டது. நீயின்றி இது உருவாக முடியாது.நீயின்றி இது வாழ முடியாது. இதை மீண்டும் உன்னிடமே ஒப்படைக்கிறேன். இந்த நுண்ணுடலில் உள்ள பழைய வினைகளை நீக்கி விடுவீராக! அது இனி புதிய பொலிவுடன் செயல்பட ஆசீர்வதிப்பீராக! இன்னுண்ணுடல் உங்களைப்போலவே ஒளி மயமாகட்டும். அவைகள் உங்களைப்போலவே தூய்மையாகட்டும். அருள்வீராக! எனது கருத்துருவான நான் எனது என்பனபோன்ற எனது அறியாமையை இந்த நுண்ணுட லிலிருந்து நீக்கி விடுவீராக! இந்த பிரபஞ்சத்தில் உள்ள அனைத்துயிர்களின் அணு நுண் உடல்களுடன் உங்கள் முன் இருக்கும் இந்த அணு நுண்ணுடலை தொடர்பு படுத்துவீராக! இந்த நுண்ணுடலை உங்களிடம் மனப்பூர்வமாக ஒப்படைக்கிறேன் பெற்றுக்கொள்வீராக! இன்னுண்ணுடல் என்றுமே உங்களுடையதுதான். இன்னுண்ணுடலை உங்களோடு கருணை கூர்ந்து இணைத்துக்கொள்வீராக". எனசொல்லி உங்கள் குருவிடம் இலையில் உள்ள உங்கள் அணுநுண்ணுடலை முழுமையாக ஒப்படையுங்கள்.அடுத்து உங்களிடம் உள்ள எண்ணிலடங்காத அணுக்களின் மூவகை துகள்களகளையும் தனித்தனியே தியானியுங்கள். எதிர் மின் துகள்களான எலக்ட்ரான் துகள்களோடு இப்பிரபஞ்சமெங்கும் பயணியுங்கள். இந்த பிரபஞ்சத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் முட்டி மோதி தளும்பட்டும். நீங்களும் ஒரு எலக்ட்ரான் துகள் ஆகி விடுங்கள். பிரபஞ்சத்தில் உள்ள அனைத்து எலக்ட்ரான் துகள்களோடும் கூடி உறவாடுங்கள். உங்களின் குருவின் கையைப்பிடித்துக்கொண்டு இப்பிரபஞ்சமேல்லாம் சுற்றி வாருங்கள். உங்களின் வெளி நோக்கியத்தன்மை அகண்டு விகசித்து விரிவடையட்டும். உங்கள் குருவான ஒளி ஓடிவிளையாட பேரிடம்(பெரு வெளி) ஏற்படுத்திக்கொடுங்கள். உங்கள் குதூகலமும் உங்கள் குருவின் குதூகலமும் இணையட்டும். இணைந்து விளையாடி திரியுங்கள் இருவரும். அடுத்து நேர்மின் துகளான எண்ணிலடங்காத துகள்களுடன் உங்கள் குருவின் துணையோடு நேர்மின் விசையாகி இப்பிரபஞ்சத்தையே உங்கள் ஒரு நேர்மின் புரோட்டானிடம் கொண்டு வாருங்கள். இதற்க்கு இக்கணம், இக்கணம் எனும் இந்த க்ஷண நேரம் மட்டுமே தேவை. ஒரு பேரண்ட பிரபஞ்சமே ஒரு துகளில் அசைவதை காணுங்கள். அந்த ஒரு துகளில் நீங்கள் உங்கள் குரு இந்த பிரபஞ்சம் மூவரும் அடங்கி நிற்கிறீர்கள் என்பதை காணுங்கள். இங்கிருந்து தான் இந்த பேரண்ட பிரபஞ்சமே உருவானது. ஒரு முதல் புரோட்டானிலிருந்தே இந்த தோற்ற பிரபஞ்சம் உருவானது. அந்த சையும் துகளை கடந்து நிலை மின்னான உங்களிடம் உள்ள எண்ணிலடங்காத நியூட்ரான் துகள்களோடு உங்களை இணையுங்கள். இப்போது ஒரு அசைவற்ற ஸ்தம்பன நிலை உண்டாகும். உங்களுடையது என கருதப்பட்ட அனைத்தும் இழந்தாகி விட்டது.இனி

எதனோடும் பேதமில்லை. இதுவே சமநிலை. இதுவே பூரண நிலை,எல்லாம் ஒரு புள்ளியில் முடிந்து விட்டது. இனி அவனில்லை அது மட்டும்தான். இனி உங்கள் குருவின் ஸ்திதி.

அடுத்து இம்மி துகள் நிலை. இதுவரை உச்சரித்துக்கொண்டிருந்த ஓம் மந்திரத்தை நிறுத்தி விட்டு, வஜ்ஜிராசனம் விட்டு பத்மாசனத்தில் அமர்ந்து இரு கரங்களிலும் சின் முத்திரைப்பிடித்து முதுகுத்தண்டு நேராக வைத்து இரண்டு நாசிகளையும் விடைத்து சற்று மேல் நோக்கி நிறுத்தவும். வலது நாசி சற்று தூக்கலாக இருக்கட்டும். மூலாதாரத்திலிருந்து உங்கள் புருவ மத்தி வழியாக வலது மண்டைப்பகுதிக்கு ஒரு ஒளி பாதை செல்வதை கவனியுங்கள். உடல் சிறிதும் அசைவின்றி தளர்த்தி வைத்துக்கொள்ளவும். ஒரு பூரண ஓய்வுக்கு தயாராக அனைத்தையும் வையுங்கள். உங்கள் புருவ மத்தியில் ஒரு இம்மி துகளை கொண்டு வாருங்கள். அது அசைவற்று நிற்ப்பதை கவனியுங்கள். உங்களிடமும் இப்போது எந்த வித அசைவும் இல்லை. என் இந்த பிரபஞ்சமே அசைவற்று நிற்ப்பதை கவனியுங்கள். இங்கு காலம் இல்லை, இடம் இல்லை, பொருள் இல்லை, ஒரே ஒரு அசைவற்ற இம்மி துகளை தவிர எதுவுமில்லை. நன்றாக கவனியுங்கள் அந்த இம்மி துகளும் இப்போது இல்லை. அங்கு ஒரு மின்வெளி மட்டுமே இருக்கிறது. இப்போது உங்கள் குரு தன்னோடு உங்களை இணைத்துக்கொள்கிறார். இனி நீங்கள் வேறு உங்கள் குரு வேறு அல்ல! இதுவே இம்மியையும் கடந்த அலை நிலை. இயற்பியலில் சொன்னால் மின்காந்த அலைநிலை. இந்த பிரபஞ்சத்தின் மூல சரீரமும், உங்கள் மூல சரீரமும் ஒன்றே தான். அதுவே திவ்ய சரீரமெனப்படுவது.

குறிப்பு : நீங்கள் உங்களிலுள்ள மீச்சிறு அளவான ஒரு இம்மித்துகளை கவனம் கொள்ள முடியும் பொழுது அநுபூதி நிலை உங்களுக்கு வாய்க்கிறது.

நான் ஓய்வு பெறுகிறேன். 27.5.11

எனக்கு எவர் மீதும், எதன்மீதும் விருப்போ வெறுப்போ இல்லை.காரணம்இன்றிதொடர்ந்து வரும் எண்ணங்களின் பின்னால் அலைவது சலிப்பாக இருக்கிறது .அதனால் என்ன பிரயோஜனம் என்றும் தெரிவதில்லை. இந்த உடலிலுள்ள உணர்வுகளும் அப்படித்தான். இவற்றை எவன் கேட்டான். சற்று சும்மா இருந்தால் ஆகாதா? என்னைக்கேட்டு எவரும் என்னை பெற்றார்களா? எவரோ பெற்றதற்கு நான் படுகிறேன். எனக்கு எந்த எண்ண ஓட்டமும் வேண்டாம்.எந்த உணர்வும் என்னை சொரிய வேண்டாம். நான் சும்மா இருந்தாலும் உணர்வில் ஏதோ ஓரிடத்தில் நமைச்சல் ஏற்படுகிறது. எப்போது நான் பூரண ஓய்வில் இருப்பது? இது சுந்தரத்திற்கு கொடுக்கப்பட்ட தண்டனையா? எனக்கு போதும். எல்லாம் போதும். என்னை இதிலிருந்து விடுவித்துக்கொள்ளவே விரும்புகிறேன். இந்த நிர்வாகத்திலிருந்து என்னை விடுவித்துக்கொள்கிறேன் . இதையெல்லாம் எவன் நிறுவினானோ அவனிடமே இதை ஒப்படைத்து விட்டு போகிறேன் . இது எனது ராஜினாமா .போதும் நான் ஓய்வு பெறுகிறேன். இனி இது அவன் நிர்வாகம். இதை நிறுவியவன் இனி கவனித்துக்கொள்ளட்டும். நாளையே நான் மரிப்பதாக இருந்தாலும் நான் நிம்மதியாக மரிப்பேன். இல்லாத ஒன்றை இருப்பதாகஅறியாமையின் பேதமையால்

பாவித்து வந்து பல வருடங்கள் ஒரு கிறக்கத்தில் ஓடி விட்டது, வீணாகிவிட்டன நாட்கள். அறிவுள்ளோர் விழித்துக்கொள்க!

நான் என்பது என்ன : அறுதி உண்மை . 27.5.11

உயிர்கள் அனைத்தும் செல்களை மையப்படுத்தியே நடக்கிறது . சரீரம் என்பது இந்த உயிர்கள் வாழும் கூடு. ஒரு சரீரத்தில் உள்ள பாகங்கள் யாவும் இந்த செல்கலாலேயே கட்டப்பட்டிருக்கிறது. ஒரு தாவரமானாலும் , ஒரு ஊர்வன உயிரியானாலும் , ஒரு பறப்பன உயிரியானாலும் , ஒரு நீர்வாழ் உயிரியானாலும் , ஒரு விலங்கு ஆனாலும் , ஒரு மனிதனானாலும் இதுவே அடிப்படை .

ஒரு செல் ஓருடலி என துவங்கி பல செல் ஓருடலி என பல்வேறு உயிரினங்கள் அமைகின்றன ! இதுவே பரிணாம படிமுறையுமாகும். இதில் ஒவ்வொரு உயிரினத்திற்கும் ஒவ்வொரு விதமான புலன்களும் , அதற்குண்டான நுகர்வு திறனும் அமைகிறது . ஒவ்வொரு உயிருக்கும் இந்த பிரபஞ்சம் ஒவ்வொரு மாதிரியாக தோற்றம் தருகிறது இதில் மனிதனுக்கு ஐம்புலன்கள் . அந்த ஐம்புலனின் நுகர்வுக்கேற்றவாறு இந்த பிரபஞ்சம் அவனுக்கு தோற்றம் கொள்கிறது . . (நம்மைப்பொறுத்தவரை இரு வேறு நிலைகள் : கட்புலனாகும் நிலை (visibility) கட்புலனாகா நிலை (invisibility) மின்காந்த அலைவரிசையில் 400 முதல் 650 நானோமீட்டர்கள் வரை அலைநீளம் மட்டும் ஒளியலைகள் நம் கண்ணுக்கு புலப்படும் . இப்பால் புற ஊதா கதிர்களையோ , அப்பால் அகச்சிவப்பு கதிர் வீசினையோ நாம் கண்டறியோம்.) இந்த பிரபஞ்சத்தில் இன்னும் மனிதன் அறிய முடியாத விஷயங்களும் இருக்கத்தான் செய்கிறது . மனிதன் காணும் இந்த தோற்ற பிரபஞ்சம் வெறும் அலைத்தன்மைகளால் ஆனது . அவனுடைய விசேஷ புலன்களாலேயே இப்படி, பொருட்களாக அவனுக்கு தோற்றம் தருகிறது .

இப்படி வெவ்வேறு விதமான புலன்கள் உள்ள உயிர்கள் தோன்றுவதற்கு காரணம் என்ன? இதற்கு அவைகளை தோற்றுவிக்கும் செல்களிடமே தான் காரணத்தை தேட வேண்டியுள்ளது . ஒரு செல் ஓருடலி என இருந்தது அவைகள் பல செல்கள் ஓருடலி என பரிணாமமுற காரணம் என்ன ? அந்த செல்களுக்கு ஏதோ ஒரு தேடல் இருப்பது தான் காரணமாக இருக்க முடியும்.

அது தொடர்ந்து வாழ விழைகிறது. இரு வேறு செல்களின் அடிப்படை தேவை ஒன்றாக இருப்பதால் அவைகள் இயல்பாக இணைந்து வேறுடல் எடுக்கிறது. செல்லின் உடல் அமைப்பு என்பது அதன் பாதுகாப்பு தன்மையை கொண்டதாகும் . இப்போது பல செல்கள் ஒன்றாக கூடும்பொழுது அதன் உடலமைப்பு அதன் கூட்டத்திற்கேற்றவாறு மாற்றம் கண்டு பாதுகாப்புத்தன்மையிலும் ஒரு தொழில் நுட்ப முன்னேற்றம் காண்கிறது . இது பரிணாமமாக , பரிணாமமாக செல்களின் எண்ணிக்கை கூடிக்கொண்டே போய் சரீரங்கள் மாற்றமடைகின்றன ! கூடவே தற்பாதுகாப்பு தொழில் நுட்ப திறனும் கூடிக்கொண்டே வருகிறது .

செல்களின் அடிப்படைத்தன்மை ஒரு தேடலாகவும் , அதன் சரீரத்தன்மை பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாகவும் அமைகிறது . இந்த செல்களின் பாதுகாப்பு தன்மையின் காரணமாகவே இத்தனை வித சரீரங்கள் , இத்தனைவித புலன் அமைப்புகள்.ஒரு மனித சரீரம் கிட்டத்தட்ட அனைத்துயிர் அனுபவங்களையும் கடந்து தான் வந்திருக்கிறது . அவன் கடந்து வந்த பல் உயிரி(சரீர) பாதுகாப்பு தொழில் நுட்பங்களையும் தனது சரீர பாகங்களாகவும் , பல 'தகவல்களாக' நினைவகத்திலும் சேமித்து வைத்திருக்கிறது . இந்த சரீரத்தின் முழு கவனமும் , தொழிற்பாடுகளும் தற்பாதுகாப்பு மட்டுமே !

வேறு செயல் இவன் புரிவதாயினும் அவைகளும் அடிப்படையில் தற்பாதுகாப்பை உறுதி செய்வதாகவே காணப்படுகிறது . இன்றைக்கு இதுவே (தற்பாதுகாப்பு மட்டுமே)வாழ்க்கை முறை என்றாகிவிட்டது .

இந்த சரீரம் தன்னுள்ளிருந்து தன்னை வடிவமைத்து இயக்கிக்கொண்டிருக்கும் அந்த செல்களை மறந்து விட்டது . மறந்தது மட்டுமல்ல ! இந்த உண்மையை (சொன்னால்) ஏற்றுக்கொள்ளாத சரீரங்களும் உண்டு . அந்த செல்கள் எந்த தேடலுக்காக இந்த சரீரங்களை தாண்டும் பயணத்தில் மேற்கொண்டது என்பது அதன் தேடல் முடிந்து -'இப்போது நிறைவாயிருக்கிறது, இனி எதுவும் வேண்டாம்'- என அனைத்து தேடல்களையும் எப்போது முடித்துக்கொள்கிறதோ அதுவாகத்தான் இருக்க வேண்டும் அதன் தேடல். .

அதன் பயணதுவக்கம் ஒரு தேடல் என்பது மட்டும் தெரிகிறது . அது என்ன தேடல் என்பது புரிவதில்லை நமக்கு . அனால் அதன் தேடல் முடியுமிடம் தெரிகிறது . அதனால் அதன் தேடல் இதுதான் என உறுதி செய்யப்படுகிறது நம்மால் .

தற்பாதுகாப்பு முனைப்பு தொழில் நுட்பம் விருத்தியாக, விருத்தியாக அது சரீரத்துக்கு சரீரம் வித விதமான புலன்களாக அபிவிருத்தி அடைந்து வந்துள்ளது. உணர்வுகள் சரீரத்திற்கு ஏற்பட்ட காரணமும் இப்படித்தான். இடம் பெயர்ந்து நகரும் ஆற்றல் அமைந்ததும் தற்பாதுகாப்பு முனைப்பினால்தான்.

இந்த சரீரங்களின் உள்ளிருக்கும் செல்களின் செயல்பாடுகள், தங்களை தொடர்ந்து உற்பத்தி செய்து கொள்வதும்,தேடலும் தான்.

இந்த சரீரத்திற்கு வெளியில் தட்ப வெப்ப நிலைகளின் ஏற்ற இறக்கத்தால் செல்களுக்கு ஏற்ற சூழலாக இருப்பதில்லை. சரீரம் என்பது இவைகள் வாழ வாகான தட்ப வெப்பமாய் அமைத்துக்கொள்ள முடிகிறது.

முதலில் தட்ப வெப்ப சூழ்நிலைகளிலிருந்து காப்பாற்றிக்கொள்ள வேண்டிய நிலை வந்தது. அடுத்து தங்களைப்போன்ற மற்ற இனங்களிடமிருந்து காப்பாற்றிக்கொள்ள வேண்டிய நிலை வந்தது.அடுத்து மனிதனுக்கு, பாவம் அடுத்த மனிதனிடமிருந்தே தன்னை காப்பாற்றிக்கொள்ள வேண்டிய நிலை வந்தது. ஒரு

மனிதப்பிறவியாவது தனக்கு இன்னொரு மனிதனால் உயிருக்கு ஆபத்து எக்காலத்திலும் ஏற்ப்பட்டதில்லை என சொல்ல முடியாது. அப்படி ஒருவர் சொல்கிறார் என்றால் அவரே தற்பாதுகாப்பு தொழில் நுட்பத்தில் தலை சிறந்து விளங்குகிறார் என்று பொருள்.

இந்த சரீர ஜீவன்களுக்கு அறிவு ஏற்பட்டதற்கு காரணமே செல்களுக்கான தற்பாதுகாப்பு முனைப்பால்தான். இன்று அந்த அறிவின் உச்சம் என்ன என்பது மனித குலத்தில் நடக்கும் அன்றாட செய்திகளில் கண்டு கொள்ளலாம். உங்கள் குடும்ப அமைப்பு, சமூக அமைப்பு, அரசு அமைப்பு, உங்கள் மத அமைப்பு, ஜாதீய அமைப்பு, கட்சி அமைப்பு, இது போல பல அமைப்புகளும் உங்கள் செல்களின் பாதுகாப்புக்காக உருவானதுதான். இந்த அமைப்புகள் ஏற்படுத்தும் சட்ட திட்டங்களும், அதை மீறுதலும், அதற்கு தண்டனை அளித்தலும், பின் தீவிரவாதம் தோன்றுதலும் இந்த செல்களின் தற்பாதுகாப்புக்காக நடப்பவைகள்தான்.

இந்த செல்களின் வெளிப்புற செயல்பாடுகள், சுய பாதுகாப்பு, இன விருத்தி, உணவு இவைகளை முன் நிறுத்தி நடக்கிறது. இவைகளின் உட்புற செயல்கள் தேடல் எனும் தீவிர கவனம் மட்டுமே! உட்புறத்தில் கவனம் எனும்தீவிரநிலைஇருப்பதாலே செல்கள்இணைந்துகூட்டமாக ஓருடலில் செயல்படும் பொழுது விதவிதமான புலன்களும், விதவிதமான உணர்வுகளும், விதவி தமான அறிவு நிலைகளும் மற்றும் நகர, நடக்க, ஓட, நீந்த, பறக்க எனும் செயலாற்றல்களும் விருத்தியாகின்றன.

இந்த மனித பிறவிக்கு ஏற்பட்டிருக்கும் அத்தனை வித அறிவாற்றல்,நினைவாற்றல், உணர்வாற்றல், செயலாற்றல் ஆகிய அனைத்து வித ஆற்றல்களும் நமது வாழ்க்கையின் ஒரு பக்க வளர்ச்சியாகும். அடுத்த பக்க வளர்ச்சி என்பது ஒரு தீவிர கவனமாக மட்டுமே இருக்கிறது. அதில் எப்போதும் மாற்றம் ஏற்படுவதில்லை.

இந்த உயிரின் ஆதி தேடல் என்ன என்பதை கோடி, கோடியாக இறந்து மடியும் இந்த மனித குலம் கவனிப்பதாக இல்லை. ஒவ்வொரு இன சரீரத்திலும் இந்த மூல நிலையான தீவிர கவனம் 'அனிச்சை மண்டலமாக' இருந்து செயல்பட்டுக்கொண்டிருக்கிறது.

இனி வலி என்கிற உணர்சியைப்பற்றி பார்க்கலாம். இந்த வலி எனும் உணர்ச்சி உங்கள் சரீரத்திற்குத்தானே தவிர உங்கள் உடலிலுள்ள செல்களுக்கு கிடையாது. ஆம், செல்களுக்கு உணர்வே கிடையாது. உணர்வு என்பது பல் வேறு சரீரங்களுக்கு மட்டும்தான் உண்டு.

இந்த சரீர உணர்வை வைத்தே 'நான்' என்கிற கருத்துரு உருவானது. இந்த சரீரத்தையே நான் என அபிமானம் கொள்கிறோம். இந்த சரீரத்திற்கு ஒரு உயிர் மட்டுமே உண்டு எனவும் வலிவோடு எண்ணுகிறோம்.

ஒரு செல்லின் அடிப்படை வாழ்வு தேடல் என்பதாக இருக்கிறது. அது ஒரு தாவரத்தில் உள்ள செல்லானாலும் சரி, ஒரு மண் புழு உடலிலுள்ள

செல்லானாலும் சரி , மனித உடலிலுள்ள ஒரு செல்லானாலும் சரி அப்படித்தான் இருக்கிறது . ஆகையால் , நீங்கள் உங்கள் சரீரத்தை கருதி எங்கள 'மனிதஇனம்' என சொல்வதுபோல – அந்த செல்களுக்குஒரு இனம் உண்டு அது செல்லினம் . அது இந்த பூமி மீது உயிர் மண்டலமாக இருக்கிறது . ஆக ! அனைத்துயிரும் ஓரினம்தான் .

இந்த புவியின் மீது உயிர் என எடுத்துக்கொண்டால் ஒரே இனம் அது செல்லினம் . இதனாலேயே தன்நிலையுணர்ந்த மகான்கள் ஜீவ காருண்யம் வளர்த்தார்கள் .வள்ளலார் "வாடிய பயிரை கண்டபோதெல்லாம் , வாடினேன் " என்றார் . தாயுமானவர் : "யாவுயிரும் இன்புற்றிருக்க நினைப்பதுவேயல்லாமல் ; வேறொன்றறியேன் பராபரமே " என்கிறார் . ' வெளியில் நடமாடினால் கூட கண்ணுக்கு தெரியாத சிற்றுயிர்கள் காலில் மிதிபட வேண்டியிருக்கும்' என பயந்து குகைக்குள்ளேயே வாழ்ந்து வந்த சமணர்கள்.

நாமோ இந்த சரீரத்தில் உண்டாகும் உணர்ச்சிகள் தான் இந்த வாழ்க்கையே என்றெண்ணி வாழ்ந்து வருகிறோம் . அனால் , நம் வாழ்வோ உணர்ச்சிகள் அற்ற ஒரு தளத்தில் தேடல் எனும் தீவிர கவனம் எனும் தன்மையில் உள்ளது .

உங்கள் உடலிலுள்ள செல்களின் வெளி இணைப்பே சரீரமாக உருவெடுக்கிறது . அனைத்து செல்களின் உள் இணைப்பு அநுபூதி நிலையாக அறியப்படுகிறது. அப்போது உங்கள் செல்களின் தேடல் கண்டடையப்படுகிறது .

உங்கள் செல்களின் உள் இணைப்பை ஏற்படுத்த - அதன் வெளி இணைப்பான 'நான்' எனும் கருத்துரு கலைதல் வேண்டும் . 'நான்' எனும் சரீரம் சார்ந்த உணர்வுத்தன்மை ஒடுங்க வேண்டும்இந்த'நான்' எனும்சரீர அபிமானத்தை விட்டுவிட வேண்டும்.

நமது சரீரத்தின் மின் நிலைகள். 28.5.11

நாம் அனைவரும் அணுக்களால் கட்டப்பட்டிருக்கிறோம். இந்த பிரபஞ்சத்தின் அடிப்படை அலகும் அணுக்களே! ஒரு அணு எப்படி செயல்படுகிறதோ அதன் அடிப்படையில் தான் நமது சரீரமும் செயல்படுகிறது. இந்த சரீரத்தில் ஏழு வித சக்கரங்கள் நமது யோக சூத்திரங்களில் சொல்லப்பட்டுள்ளது. 1, மூலாதார சக்ரா, 2, ஸ்வாதிஷ்டான சக்ரா, 3, மணிப்பூரக சக்ரா, 4, அனாஹத சக்ரா, 5, விசுத்தி சக்ரா, 6, ஆக்ஞா சக்ரா, 7, சகஸ்ரார சக்ரா. இந்த சக்ரா எனப்படுவது உடலில் ஒரு பொருளாக (அவயவமாக) இல்லை. ஆனால் உங்கள் உடலிலுள்ள மின்தன்மை வகைகள் செயல்படும் மையங்களாக இது இருக்கிறது.

1, மூலாதார சக்கரம்: இது உங்கள் முதுகுத்தண்டின் அடிப்பகுதியான, ஆசன வாயின் அருகே அமைந்துள்ளது. உடல் ஆரோக்கியம், தற்பாதுகாப்பு ஆகியவற்றுக்கு இந்த சக்கரத்தின் செயல்பாடு முக்கியமாகிறது. இது நான்கு இதழ் தாமரை.

2, ஸ்வாதிஷ்டான சக்கரம்: இது ஆண், பெண் குறி பாகத்தில் இன விருத்தி உறுப்புகளை ஒட்டி அமைந்துள்ளது. இது இன விருத்தி, அடிப்படை உணர்சிகள், ஆகியவற்றுக்கு காரணமாக அமைகிறது. இது ஆறு இதழ் தாமரை.

3, மணிப்பூரக சக்கரம்: இது உடலில் தொப்புளுக்கு கீழ் வயிற்றுப்பகுதியில் அமைந்துள்ளது. இது ஜீரணம், செயலாற்ற தேவையான சக்தி போன்ற செயல்பாடுகளுக்கு காரணமாகிறது. இது பத்து இதழ் தாமரை.

4, அனாஹத சக்கரம்: இது சரீரத்தின் நெஞ்சுப்பகுதியில் அமைந்துள்ளது. அன்பு, கருணை போன்ற உணர்வுகளுக்கு காரணமாகிறது. இது பன்னிரண்டு இதழ் தாமரை.

5, விசுத்தி சக்கரம்: இது மனிதனின் தொண்டைப்பகுதியில் அமைந்துள்ளது. பேச்சுத்திறனும், அடுத்தவருக்கு ஒன்றை விளக்கும் திறனும் இந்த சக்கரத்தால் நிர்வகிக்கப்படுகிறது. இது பதினாறு தாமரை இதழ்கள்.

6, ஆக்ஞா சக்கரம்: இது இரு புருவ மத்தியில் நமது இரண்டு நாசிகளும் சந்திக்குமிடத்தில் அமைந்துள்ளது. இது கூர்மையான, தெளிவான புறப்பார்வை, மற்றும் அக பார்வை ஆழமான சக்திகள் , ஞான தெளிவு ஆகியவற்றுக்கு காரணம் ஆகிறது. இது இரண்டு இதழ் தாமரை.

7, சகஸ்ரார சக்கரம்: இது தலையின் உச்சிப்பகுதியில் அமைந்துள்ளது . ஆத்மா ஞானம் , அநுபூதி நிலை ஆகிய சக்திகள் இந்த சக்கரத்தால் பெறப்படுகிறது . இது ஆயிரம் இதழ் கொண்ட தாமரை.

நமது சரீரத்தில் சகஸ்ரார சக்கரம் மின்காந்த அலைத்தளமாக செயல்படுகிறது.அடுத்து நியூட்ரான் மையமாக செயல்படுவது நமது இதயத்தின் மையப்பகுதியாகும். இந்த இடத்தை யோக சூத்திரத்தில் வரும் 7 சக்கரங்களின் பட்டியலில் வரவில்லை. அடுத்து புரோட்டான் மையம் ஆக்ஞா சக்கரமாகும். அடுத்து விசுத்தி சக்கரம்,அனாஹத சக்கரம்,மணிப்பூரக சக்கரம்,ஸ்வாதிஷ்டான சக்கரம்,மூலாதார சக்கரம்ஆகிய இந்தஐந்து மையங்களும் எலக்ட்ரானின்(orbit) சுற்றுப்பாதை ஆகும்.

இனி நமது தியானத்தில் நிகழும் இந்த மின் போக்கை கவனிப்போம். நாம் நமது முதுகுத்தண்டு அடி நுனியான மூலாதாரத்திலிருந்து நமது இருப்பு நிலையை புருவமத்தியிலுள்ள (புரோட்டான் -நேர்மின் - மையத்தை) ஆக்ஞாவை நோக்கி ஒவ்வொரு எலக்ட்ரான் சுற்றுப்பாதை சக்கரத்திலும் சிறிது நேரம் இருத்தியிருந்து மேல்நோக்கி செலுத்த எதிர் மின்னான எலக்ட்ரானின் செயல்பாடுகள் குறைந்துக்கொண்டே வந்து (புரோட்டான் -நேர்மின் - மையத்தை) ஆக்ஞாவை வந்தடைகிறது. உங்கள் இருப்புநிலை இப்போது உங்கள் புருவ மத்தியில் மட்டும் இருப்பதை உணர்வீர்கள்.

எவர் ஒருவர் தொடர்ந்து இந்த நிலையில் இருக்கிறாரோ அந்த இடத்தில் பல அதிசய நிகழ்வுகள் நடந்திருபதாக பல மகான்களின் வாழ்க்கை நிகழ்வுகளிலிருந்து தெரிய வருகிறது. இது அந்த 5 (எலக்ட்ரான் சுற்றுப்பாதையின் பயனான) உடல்

ஆரோக்கியம், தற்பாதுகாப்பு,இன விருத்தி, அடிப்படை உணர்சிகள்,ஜீரணம், செயலாற்ற தேவையான சக்தி,பேச்சுத்திறனும், அடுத்தவருக்கு ஒன்றை விளக்கும் திறனும் ஆகிய நான் எனும் அனைத்து சரீரம் சார்ந்த உணர்வுகளையும் நாம் ஒப்படைக்கும்போழுதே அந்த அநுபூதி நிலை துவங்குகிறது.

அடுத்து புருவ மத்தியிலுள்ள புரோட்டான் மையத்தில் உள்ள இருப்பு நிலை இப்போது ஒளிமயமாக ஒளிரும் . இப்போது அந்த ஒளி இயங்க ஆரம்பிக்கும் .(இதுவரை உங்களின் இருப்புநிளையானது எலக்ட்ரானின் தளங்களில் செயல்பட்டதால் உங்களுக்கு மூவித காலங்கள்(நேற்று,இன்று,நாளை) கருத்தில் இருந்தது . இப்போது எலக்ட்ரானின் செயல்பாடுகள் நின்று போனதால் உங்களிடம் நேர் மின் தன்மையும் , நிலை மின் தன்மையும் மட்டுமே உள்ளது. ஆகையால் இப்போது அந்த மூவகை காலத்தன்மை செயல்படாநிலை உள்ளது .

இப்போது இக்கணம் , இக்கணம் எனும் இந்த க்ஷண காலநிலை மட்டுமே செயல்படும். ஒளி இயங்க ஆரம்பித்தவுடன் உங்கள் இருப்புநிலையும் அகண்டு விஸ்வரூபம் எடுக்கும் . ஒரு எல்லையற்ற தன்மையில் உங்கள் இருப்பு நிலை விரிவடைந்து கொண்டே போகும் . நீங்கள் இப்போது ஒளிரூபமான வெளியாகி விடுவீர்கள் .

அடுத்து நிலைமின் காலமான இயக்கமற்ற , அல்லது இயக்கம் கடந்த காலநிலை துவங்கும் . அப்போது நீங்கள் ஒரு (still) நிறுத்த நிலையில் அப்படியே அனைத்துவித இயக்கங்களையும் நிறுத்துதல் வேண்டும் . காலம், இயக்கம், உணர்வு, எண்ணம் ஏதுமின்றி நிலையாக (still) உங்கள் இருப்புணர்வை நிறுத்த - உங்கள் புருவமத்தியிலிருந்து இருப்புத்தன்மை உங்கள் இதயத்தின் நடு மையத்துக்குவந்து சேரும். இந்த இதய மையமே உங்கள் நியூட்ரான் (நிலைமின்- சமநிலை) தளமாகும். இங்கு உங்கள் இருப்புநிலை பரிபூரண இருப்புத்தன்மையை அடைகிறது. அது நிறைவான முற்றுணர்வு. தொடர்ந்து மணிக்கணக்காக இதில் லயிக்கும் சாதகருக்கு பலவிதமான 'இருத்தி ஆற்றல்கள்' கைக்கூடி வருகிறது. இவைகளையே சித்துகள் என அழைக்கின்றனர்.
இதையடுத்து பலநாட்கள் தொடர்ந்து இந்த மையத்தில் நிலை நிற்பவருக்கு அடுத்த நிலையான மின்காந்த அலைத்தளமான சகஸ்ரார சக்கரத்தில் உங்கள் இருப்பு நிலை நிற்கிறது. இங்கு அநுபூதி நிலை வாய்க்கிறது. இந்நிலை அடைந்தோருக்கு இனி பிறப்பில்லை. இதுவே அவதூத நிலை. இந்த நிலையை அடைந்த மகான்களுக்கு இப்பிரபஞ்சம் நமக்கு தோற்றம் தருவது போல உருவங்களாக தெரியாது. ஒரே அலைகளாக அவர்களுக்கு தெரியும். அதாவது இப்பிரபஞ்சத்தின் உண்மையான தோற்றம் தெரியும். காரணம், இவர்களுக்கு சூட்சும புலன்கள் உருவாகிவிடும். அவர்களே இவ்வாழ்க்கையை நிறைவாக வாழ்பவர்கள். அவர்களது அலையையும் அந்த பிரபஞ்ச அலைகளோடு இணைத்து விடுவர்.
அவர்கள் முழுமையானவர்கள்,அவர்களதுபிரபஞ்சமும் முழுமையானது.

அறிவியலாருக்கு ஒரு வேண்டுகோள். 4.6.11

நமது அறிவியல் தனது ஆய்வுக்காக ஒரு பொருளை தேர்ந்து கொண்டு ஆய்வு செய்கிறது. அதே சமயம் அறிவோன் அறியப்படும் பொருள் என அந்த ஆய்வில் இரு

துருவ நிலை இருக்கிறது. இதில் அறியப்படும் பொருள் எனும் துருவ எல்லையை நாம் எட்ட முடிந்தாலும் அறிவோன் எனும் ஒரு திசை இருப்பதையே நாம் கருத்தில் கொள்வதில்லை. அதாவது எதை எது அறிய முயற்சிக்கிறது? என நாம் ஆய்வு செய்வதில்லை. இதை அந்த ஆய்வுக்கு வெளியே இருந்து அந்த ஆய்வை காணும் போது கண்டுகொள்ளப்படும். அறியப்படும் பொருள் வெளியே இருக்கிறது. அறிவோன் உள்ளே இருக்கிறான். வெளியே உள்ள பொருளின் தகவமைப்பை அதன் தொழில் நுட்பத்தை அறிந்து கொள்கிறோம். உள்ளிருக்கும் இந்த அறிவோனின் தகவமைப்பு மற்றும் தொழில் நுட்பத்தையும் அறிவியல் அறிய வரும்போது எதிலும் முற்றான முடிவு கண்டடையப்படும். நமது ஆய்வுகள் வெளி நோக்கிய பார்வையில் வெற்றிக்கண்ட அளவுக்கு, உள் நோக்கிய பார்வையில் அனுபவம் ஏற்படவில்லை.

சமநிலை 5.6.11

நண்பர்களே எப்பொழுதும் சமநிலையில் நிற்க கவனம் கொள்ளுங்கள் .
இதை நீங்கள் எக்கணமும் கவனத்திலிருந்து பிசகாமல் பார்த்துக்கொள்ளுங்கல் .
நீங்கள் முதன்முதலில் சமநிலையில் இருக்கும்பொழுது ஒரு ஒய்வுத்தன்மையை அறிவீர்கள் . உங்கள் கவனத்தை உங்கள் மேலாளராக நியமியுங்கள் . உங்களுக்குவெளியில் நடக்கும் நிகழ்சிகளை எதன் சார்புமின்றி கவனியுங்கள் . இப்போது உங்களுக்கு எந்த அடையாளமும் இல்லை . அப்படி ஒன்று வேண்டுமானால் நீங்களே அனைத்தின் சமநிலையென உங்களை நீங்கள் அடையாளமாக வைத்துக்கொள்ளுங்கள் . தொடர்ந்து நீங்கள் சமநிலையில் இருக்கவேண்டுமானால் ஒரு சுலபவழி இருக்கிறது .
நீங்கள் வெறும் சாட்சித்தன்மையோடு மட்டும் இருங்கள் .
உங்களை வெட்டவெளியாக்கி விடுங்கள் . உங்களிடம் திடமாக எதுவுமில்லை எனில் நீங்கள் பாதிப்படைய மாட்டீர்கள் . நீங்கள் ஒரு வெளியாக இருந்தால் அனைத்து உங்களை ஊடுருவி போய்விடும் . நீங்கள் ஒரு வெட்டவெளியான சாட்சித்தன்மையாக இருங்கள் . வெளியிலிருந்து உங்களுக்கு கிடைக்கும் எந்த தகவலையும் உங்கள் நினைவில் உள்ள எந்த தகவல்களுடனும் ஒப்பிட்டு பார்க்காதீர்கள் .
நாம் இருப்பது சார்புநிலை பிரபஞ்சத்தில் .
ஆகையால் நாம் எதையாவது சார்ந்துதான் செயல்படமுடியும் . சமநிலை என்பது நம் முன் இருக்கும் இரண்டை – இரண்டையுமே சமமாக பாவித்தல் - அவை இரண்டுமே அடிப்படைத்தன்மையில் ஒரே தன்மையதாக இருக்கிறது .
மேம்போக்காகத்தான் மாறியிருக்கிறது .
இதுபோல் நம்மை சுற்றியுள்ள ஒவ்வொன்றுமே உருவால் , இயக்கத்தால் , தன்மையால் வேறுபட்டிருந்தாலும் அனைத்தின் மூலநிலையும் ஒன்றே ! இதுவே சமநிலை .

நீங்கள் தொடர்ந்து சமநிலையில் நீடித்து இருந்தால் , இயல்பாகவே மூலநிலையை அடைவீர்கள் . உங்களுள் 210 வகையான தன்மைகளில் இயக்கம் நடைபெறுகிறது . இவற்றுக்குள் ஒரு இணக்கம் கொண்டுவாருங்கள் . அதற்க்கு உங்கள் உணர்வை சமநிலையில் வைத்திருக்க வேண்டும் .

மனதை சமநிலையில் வையுங்கள் என்றால் , மனமே இல்லாது போனது போல் தோன்றும் . உணர்வை சமநிலையில் வையுங்கள் என்றால் உணர்வே இல்லாமல் போனது போல தோன்றும் . ஒரு விஷயத்தை சமநிலையில் வைப்பது என்பது கிட்டத்தட்ட அந்த விஷயமே இல்லாதது போல் தோன்றும் . அனால் , அந்த விஷயம் மிக துல்லியமான நிலையில் , ஒரு பூடகமாக இருக்கிறது என பொருள்படும் .

மனதில் ஏதாவது எண்ணம் உதயமாகும்பொழுது அதில் உள்ள எந்த கருத்தையும் அலசாதீர்கள் . சார்ந்து செயல்படுவது என்பது இந்த தோற்ற பிரபஞ்சத்தின் செயல்பாடு . எதையும் சாராமல் சுயம்புவாக இருப்பது அந்த மூலநிலையின் நிலைபாடு .

சரணாகதி. 6.6.11

இந்த சரீரத்தின் கட்டுப்பாட்டை இதன் ஆதிமூலமான நியதியிடம் ஒப்படைக்கிறேன். இந்த சரீரத்திற்க்கே சுபாவமான நான் எனும் போலித்தன்மை இனி விடைபெறட்டும். இனிமேல் அதன் ஸ்திதி.

இந்த சரீரத்துக்கான வாழ்வு முறையை கை விடுகிறேன். இந்த மனமெனும் செயல்பாட்டை ஆதிமூலத்தின் அனிச்சைமண்டலத்திடம் சரண் செய்கிறேன். தேவைப்படும்பொழுது, தேவைகளுக்கேற்ற மாதிரி இனி அது இதை பயன்படுத்திக்கொள்ளட்டும். பழக்க தோஷமாக இருக்கும் இந்த மனது மீண்டும் சுயமாக எண்ணம் கொள்ளும் பொழுது அந்த ஆதிமூலம் மனதின் தவறை சுட்டிக்காட்டி மனதை திருத்தி தன் வசப்படுத்திக்கொள்ளட்டும்.

அந்த ஆதிமூலத்தின் இயல்புத் தன்மையான தீவிர கவனம் இந்த சரீரத்தில் தொடர்ந்து நிலை பெறட்டும். இந்த சரீரமும், இந்த மனதும், இந்த உணர்வும் அந்த ஆதிமூலத்தினுடையது. இவைகள் இனி எப்போதும் அதனிடம் கட்டுப்பட்டு செயல்படட்டும். ஆதிமூலத்தின் தீவிர கவனத்தை மூடி நின்ற மனமெனும் திரை இனி தன்னை விலக்கிக்கொள்ளட்டும். சரீரத்தில் உள்ள ஒவ்வொரு செல்லும் விழிப்பாக இருந்து இதை நடைமுறை படுத்தட்டும்.

மனம் எனும் வானம் எந்த சிறு முகிலும் அல்லாது நிர்மலமாக இருக்கட்டும். சரீரம் சார்ந்த சமுதாய அடையாளங்கள் வலுவிழந்து சத்தியம் நிலை பெறட்டும். எது பொய்யானதோ, எது பயனற்றதோ, எது என்றைக்குமே கடைத்தேற முடியாததோ, எது ஒரு சிரங்கு போன்ற நமைச்சல் உள்ளதோ, எது ஒருபிரயோஜனமற்ற வெறும் பழக்க தோஷமோ அதை இன்று கை கழுவுகிறேன்.

எது நம்மை நற்கதிக்கு இட்டுசெல்கிறதோ அதனிடம் லயமடைகிறேன்.

இதுவரை நடந்து வந்த கபட நாடகங்களுக்கு மேடையாக இருந்த 'உணர்வை' அந்த ஆதிமூலத்திடமே ஒப்படைக்கிறேன். இனி இந்த உணர்வு ஒரு நிலைக்கண்ணாடியில் தெரியும் காட்சி பிம்பம் போல அந்தந்த க்ஷணத்தில் உருக்கொண்டு மறைவதாகட்டும். இனி உணர்வுக்கும் எண்ணத்திற்கும் தொடர்பு வேண்டாம். மனதிடமிருந்து உணர்வுக்கு விடுதலை கிடைக்கட்டும்.

உணர்வு: இது கடந்து போய்க்கொண்டிருக்கும் ஒன்று. ஒரே உணர்வு தொடர்ந்து நீடிப்பதில்லை. (தொடர்ந்து நீடிப்பதாக எண்ணுவது மனதின் ரசவாதம்) க்ஷணத்துக்கு க்ஷணம் உணர்வின் பரிமாணம் வேறு.

இந்த ஆதிமூலத்தின் உண்மை ஒளி துலங்கிய பின் மனம், உணர்வு இவை இரண்டின் சாயமும் வெளுத்து விட்டது. மனம் சுயமல்ல! இதை மனமே அறிந்து சரணடைகிறது. இந்த சரீரத்திற்கு வாழ்க்கை என்றால் வெறும் அனுபவம் மட்டுமே! அதில் வேறு சாராம்சம் எதுவுமில்லை. விகல்பமேல்லாம் பலமிழந்து ஏகாந்தம் துவங்கட்டும். அனைத்து ஒன்றும், அனைத்தையும் சார்ந்தே இருக்கிறது.

புலன்கள். 7.6.11

புலன்கள் இந்த உயிர்களுக்கு வந்த விதம் என்ன? அந்த முதல் செல், ஒரு செல் ஒரு உடலிக்கு தேடல் மட்டும் இருந்தது. ஏன்! ஏதோ ஒரு தேடலாலேயே, உயிரும் கூட உற்பத்தி ஆகியிருத்தல் வேண்டும். அந்த தேடல் முதல் செல்லில் கண்ணைக்கட்டி காட்டில் விட்ட மாதிரி இனம்புரியாத குழப்பத்தில் உழன்று கொண்டிருந்திருக்க வேண்டும். அடுத்து வந்த பிறவிகளில் தொடர்ந்து உயிர் வாழ்தல், தற்காத்துக்கொள்ளுதல் போன்ற புற விஷய (இயற்கை சூழல்) நிர்பந்தங்களுக்கு ஆளாகியிருக்க வேண்டும். அதன் பிறகு அந்தந்த சரீரங்களுக்கேற்ற புலன்கள் உருவாக்கி இருக்கவேண்டும். புலன்களின் உதவியாலேதான் சரீரங்கள் ஜீவித்திருக்கின்றன!அந்த தேடலுக்கு கருவி சரீரம், சரீரத்துக்கு கருவி புலன்கள். ஆக! இந்த ஆதி தேடலின் புற தகவமைப்பே சரீரமும், புலன்களும். புலன்கள் சரீரத்தை சார்ந்து இருக்கிறது. சரீரம் அந்த தேடலை சார்ந்து இருக்கிறது. மனிதனுக்கு கருவியாக ஐம்புலன்களும், பல பிறவிகளை கடந்து வந்திருப்பதால் ஏற்பட்ட நினைவக யூக புலன் ஒன்றும் உண்டு.

நம்மிடம் மூன்று வகையான புலன்கள் இருக்கிறது. 1, ஸ்தூல புலன், 2, யூகப்புலன், 3, சூட்சும புலன்.
ஸ்தூல புலன்கள்: கண், காது, மூக்கு,நாக்கு, தேகம் ஆகியன ஆகும். இந்த பிரபஞ்சத்தை ஐந்து புலன்களின் வழியாக இப்போது அறிகிறோம். இவற்றுக்கு நுகர கிடைப்பது ஒரு தோற்ற பிரபஞ்சம் ஆகும். ஒரு வேட்டுக்கிளிக்கு பிரபஞ்சம் வேறுமாதிரியானது. ஒரு வௌவாலுக்கு பிரபஞ்சம் வேறுமாதிரியானது.ஒவ்வொரு இனத்துக்குமே ஒவ்வொரு மாதிரியான புலன்கள் இருக்கின்றன. அவைகள் ஒவ்வொரு மாதிரியான பிரபஞ்சத்தை அறிகின்றன! இதில் மனிதர்களும் அடக்கம்.

யூகப்புலன்: இது அவரவர் அறிவின் தெளிவிற்கு ஏற்றவாறு யூகித்து அறிவது. உதாரணத்திற்கு எனது 25 வது வயதில் நான் ஓவியம் வரைய கற்றுக்கொண்டிருந்த சமயம் எனக்கு வெளித்தோற்ற காட்சிகள் அங்கங்கு வட்டமாகவும், சதுரமாகவும், முக்கோணமாகவும் , செவ்வகமாகவும் ஒரு காட்சி ஒரு பிரேம் ஆகவும் என ஒரே

ஜியோமிதி காட்சிகள் தான் அறியப்பட்டது. அறிவில் தெளிவுள்ளவர்கள் யூக அனுமானத்தின் வாயிலாக சில உண்மை நிலைமைகளை அறிந்து கொள்கின்றனர்.

சூட்சும புலன்: இது தேக உணர்வுகளை, புலனுணர்வுகளைத் தாண்டிய நிலையில் வாய்ப்பது. டெலிபதி, ஒரு சம்பவத்தின் முன் அறிவிப்பு, ஏக உணர்வு ஆகியவைகள் ஆகும். நமது உடலிலுள்ள அனைத்து செல்களும் இணைந்து ஒரே உணர்வாக உணர்வது ஏக புலன் ஆகும். இப்பிரபஞ்சத்தின் முழு மாதிரியை எந்த இனமும் இன்னும் அறியவில்லை. எப்போது அந்த ஆதி மூலத்தின் தேடல் முடிவடைகிறதோ, தேடல் நிறைவடைகிறதோ அப்போது ஒரு முழுமையான புலன் உதிக்கும். அந்த தேடல் நிறைவாகும் சரீரத்தின் வழி இந்த முழுமை பிரபஞ்சம் அறிதல் ஆகும்.

சிறப்பு சூட்சும புலன்கள் : அதாவது நமது (உயிரினங்கள்) புலன்கள் துவங்கிய விதம் ஒரு வெளி நோக்கிய (எலக்ட்ரான்) தன்மையில் தோன்றியவைகள் ஆகும். அது இந்த தோற்ற பிரபஞ்சத்தை ஒத்து அமைகிறது. இந்த பிரபஞ்சமும் தோற்றமாவதற்கு காரணம் அது வெளிநோக்கிய (எலக்ட்ரான்) விரிவேயாகும். இப்போது நாம் பார்க்கப்போகும் விஷயம் சற்று புதுமையானது. நாம் ஏற்கனவே பார்த்த மாதிரி நமது தியான வேளையில் நமது புரோட்டான் தளமான புருவ மத்தியில் நமது இருப்பு நிலையை நிறுத்தி அடுத்த தளமான இதய மத்தியான நியூட்ரான் தளத்திற்கு எடுத்து செல்லும்பொழுது அங்கு நீண்ட நேரம் தொடர்ந்து லயிப்பவர்களுக்கு பல விதமான இருப்பு ஆற்றல்கள் வாய்க்கப்பெருகிறது. இந்த ஆற்றல்களை ஒருவர் நுகர்வதற்கு, அந்தந்த ஆற்றல்களையொட்டிய சூட்சும புலன்கள் உருவானாலன்றி அந்த ஆற்றல்களை ஒருவரால் நுகர முடியாது. அங்கு உதிக்கும் ஆற்றல்களே அதற்கேற்ற சூட்சும புலன்களை ஏற்ப்படுத்தி கொடுக்கிறது. இந்த புலன்களை தொடர்ந்து ஒருவர் பழகி வர, அவரால் அந்த ஆற்றல்களை உபயோகப்படுத்த முடிகிறது. இங்கு கவனிக்க வேண்டியது இந்த இருத்தியாற்றல் நிகழுமிடத்தில் எலக்ட்ரான் தன்மை மட்டுப்பட்டு புரோட்டான், நியூட்ரான் தன்மைகளால் இந்த விஷேச புலன்கள் உருவாகிறது.

அதேப்போல அந்த ஆதிமூலத்தின் தேடல் நிறைவடையும் தளமான சகஸ்ராரம் எனும் மின் காந்த அலை தளத்தில் நுகரப்படும் முழுமையான பிரபஞ்சத்தை அறிய ஒரு மின்காந்த அலைகளால் உருவாக்கப்படும் சூட்சும புலன் உருவானானால் அன்றி சாதகரால் முழுமையான பிரபஞ்சத்தை தரிசிக்க முடியாது.

பாவனை . 7.6.11

உங்களில் இயல்பாகவே நிலைத்திருப்பது அந்த அநுபூதி தன்மை . ஏன்? ஒவ்வொரு உயிரிலுமே அதுவே அஸ்திவாரமாக நிற்கிறது . இந்த பிரபஞ்சத்திற்கும் அஸ்திவாரம் அதுதான். (ஓர் அணுவுக்கு எது அஸ்திவாரமாக திகழுகிறதோ,அதுவேஅந்த பிரபஞ்சத்திற்கும் அஸ்திவாரமாகும். அல்லது ஓர் பிரபஞ்சத்திற்கு எது அஸ்திவாரமாக திகழுகிறதோ,அதுவே ஓர் அணுவுக்கும் அஸ்திவாரமாகும்.ஓர் தனிமத்துக்கும் அதுவே அஸ்திவாரமாகும், தனிமங்களாலான மூலக்கூறுகளுக்கும் அதுவே அஸ்திவாரமாகும், இப்படி , இப்படி) உங்களிடம்

இருக்கும் இதை மறைப்பது எது ? தீர விசாரித்தால் தெரிய வரும் , அது மனதின் பாவனைகளே !

முன் தோன்றிய மகான்கள் கூறியிருப்பது “உங்கள் மனதின் பேத தன்மையாலேயே உங்களுக்கு தோற்ற பிரபஞ்சம் தோற்றமளிக்கிறது” என்று . அதாவது இந்த பிரபஞ்சத்தின் துளி நீங்கள் . நீங்கள் இந்த பிரபஞ்சத்தின் அம்சமேயன்றி வேறெதுவாக இருக்க முடியும் . நீங்கள் உங்களின் உண்மையான ஸ்திதியை விட்டு ‘தங்களை சுயம் என கருதத்துவங்கி விட்டர்கள் . அதனால் வந்த வினைகளே அத்தனையும் . நான் தனி எனும் கருத்து வலுவாக , வலுவாக மனதிற்கு பாவனை அதிகமாகிறது .ஒரு குடம் விஷத்தில் ஒரு துளி தேன் ‘நான்’ என்கிறீர்கள்.

மின்காந்த ஆதி சமநிலையில் ஏற்பட்ட பாவனை சலனமே பிரபஞ்ச துவக்கம் ஆகும். அலை நிலை, துகளாக மாறியது ஓர் எளிமையான பாவனை. துகள்கள் கூடி நியூட்ரானாக, புரோட்டானாக, எலக்ட்ரானாக ஓர் அணுவின் மூவித மின்தன்மையும் பாவனையேயாகும். அணுவில் துவங்கி இன்று மனிதனாக வியவகரித்து நிற்பதும் பாவனைகளாலேதான். மனிதனுக்கு மன பாவனை. இதனாலேயே முன்னோர்கள் இந்த பிரபஞ்சமே உங்கள் பாவனை என சொன்னார்கள். இந்த பாவனைகளின் உச்சபட்ச நிலையே உங்கள் மனித மனம் என்பது. இந்த பிரபஞ்சம் உலக பந்தங்கள் யாவும் உங்கள் மனம் எனும் தோற்றத்திலேதான் பிரதிபலிக்கிறது. மனம் அசைவற்று நின்றால் இந்த பிரதிபலிப்புகளின் தர்மம் உங்களுக்கு விளங்கும்.

ஒரு 350 கோடி வருட தொடர் பாவனைகளாலேயே பல சரீரம் கண்டு இந்த பாவனை பிரபஞ்சத்திலேயே உழன்று கொண்டு வந்திருக்கும் இந்த மனமானது அனைத்தையுமே பிரத்யட்சமான உண்மை என நம்புவதில் எதுவும் குறை கூற முடியாது . நிலையான உண்மையை அறியும் பக்குவம் இந்த (மனித) சரீரத்திற்கு வாய்த்திருக்கிறது . இந்த பாவனைக்கு மூலக்காரணி பேதித்தல் எனும் பேத தன்மையாகும் . எது ஒன்றும் அது , நான் என பேதம் கானும்போழுதே தனி எனும் பாவனை உருவெடுக்கிறது .

இந்த பாவனா (பிரபஞ்ச) பாவன (உலகில்) பாவனா மனதினால் அனுபவிக்கப்பட்டும் புற உலகில் சம்பந்தப்பட்டும் 'நான்' என்பது அசைக்க முடியாத உண்மை எனும் மயக்கத்தில் இருக்கிறது .

இன்னொருவர் நிலைமை ‘இந்த பிரபஞ்சத்தின் ஒரு சிறு துளியே நான்’என்றறிந்தும் இந்த வாசனைகளை , ருசிகளை விட முடியாமல் இதுவே சற்று நன்றாகத்தான் இருக்கிறது என மெத்தனமாக இருப்பது.

மூன்றாவது, நான் இப்பிரபஞ்சத்தின் சிறு பகுதியாக இருக்கும்போது நானே பிரபஞ்சம் தானே எனும் ஒரு அறியாமை இறுமாப்பு சிலரிடம் உள்ளது . சில இருத்தி ஆற்றல்களும் அவர்கள் வசப்படுமானால் சொல்லவே வேண்டாம்.

அவரவர் அவரவர் சுதந்திரப்படி அனுகலாம்தான் . ஆயினும் ஒரு 350 கோடி வருட பாரம்பரியமிக்க ஒரு தேடல் உங்கள் வழி வருகையில் உங்கள் தீர்ப்பு என்ன ? நீங்கள் அந்த ஆதிநிலைத்தேடலா ? அல்லது வெறும் நான் எனும் பாவனையா ? நீங்கள் சத்தியமா ? வெறும் பாவனையா ?

ஒரு எளிமையான நிரூபணம். 10.6.11

கவனம் : இந்த கவன நிலையில் எவர் ஒருவர் துல்லிய நிலையில் உள்ளவரோ அவராலேயே இங்கு சொல்லப்படும் விஷயத்தையும் துல்லியமாக அறிந்து கொள்ள முடியும்.

கவனம், இதுவே உங்களின் ஆதி மூல நிலையுமாகும். இந்த உயிரினங்களின் ஆதிமூலமும் இதுவே!

சாவகாசமாக ஓரிடத்தில் அமர்ந்து லேசாக கண்களை மூடி உடலிலோ, மனதிலோ எந்த ஒரு அசைவும் இன்றி இருங்கள். இப்போது உங்களைச்சுற்றி நடக்கும் இயக்கங்களின் சப்தஒலிகள் கேட்கிறது. விடுங்கள் அது அதுபாட்டுக்கு நடக்கட்டும். உங்கள் உள்ளே பாருங்கள். உங்கள் உடலிலுள்ள அனைத்து செல்களின் இயக்கம் தெரிகிறது. இப்போது உங்கள்மனதில் ஏதாவது ஒருவிஷயத்தை எண்ணுங்கள். எண்ணம் தோன்றுகிறது. சரி, அந்த எண்ணம் நீங்களா? அந்த எண்ணத்தை கவனிப்பவர் நீங்களா? நன்றாக கவனித்து சொல்லுங்கள். தெளிவாக தெரியும் அந்த எண்ணத்தை கவனிப்பவர்தான் நீங்கள். சரி, கவனிப்பவர்தான் நீங்கள் என்றால்? அந்த எண்ணம் வேறு யாரிடத்தில் நிகழ்ந்தது? மீண்டும் ஆழ்ந்து துல்லியமாக கவனியுங்கள். அந்த எண்ணம் உங்கள் சரீரத்தில் நிகழ்ந்தது. ஆமாம் உங்கள் சரீரத்தில் உள்ள மனதில் ஆயிரமாயிரம் எண்ணங்கள் வந்து போகின்றன! எண்ணம் தோன்றுகிறது, எண்ணம் மறைகிறது அது சரீரத்தின் ஸ்திதி.

கண்களை மூடியவாறே இருங்கள். உங்களது வலது கரத்தால் உங்கள் உடலில் ஏதாவது ஓரிடத்தில் கிள்ளுங்கள். இன்னும் சற்று பலமாக கிள்ளுங்கள். வலிக்கிறதா? வலிக்கிறது என்றால் அந்த வலியை பாருங்கள். அந்த வலி நீங்களா? அந்த வலியை கவனிப்பவர் நீங்களா? அந்த வலியை கவனிப்பவர்தான் நீங்கள் இல்லையா! இன்னும் ஒருமுறை இதையே செய்வோம். இப்போது சற்று பலமாக கிள்ளுங்கள். இப்போது வலி அதிகமாக தொடர்ந்து வலிக்கிறது. நன்றாக பொறுமையாக கூர்ந்து கவனியுங்கள். அந்த வலியை விட்டு அப்பால் வந்து அந்த வலியை உங்களால் கவனிக்க முடிகிறதா? முடியும், அந்த வலி நீங்களா? அப்பால் வந்து நின்று கவனித்தது நீங்களா? அதை கவனித்தவர்தான் நீங்கள். அந்த வலி உங்களுடையது அல்ல! உங்கள் சரீரத்திற்க்கே அந்த வலி. இந்த வலி மட்டுமல்ல, பல விதமான இன்ப துன்ப உணர்வுகளும் உங்கள் சரீரத்தினுடையதே!

இந்த சரீரத்தின் ஸ்திதி வேறு, கவனம் எனும் என் ஸ்திதி வேறு என எவரால் தெளிவாக அறிந்து கொள்ள முடிகிறதோ அவர் கவன நிலையில் துல்லியமாக இருக்கிறார் என சொல்லிவிடலாம். இந்த உயிரினங்களில் எது கவனம் என்பதாக

உள்ளதோ அது இப்பிரபஞ்சத்தின் ஆதி மூலம்ஆகும். அந்த ஆதிமூலத்தின் சரீரம் இந்த பிரபஞ்சம் ஆகும். இப்பிரபஞ்சம் வெறும் சரீரம் ஆகும். நண்பர்களே! தொடர்ந்து உங்கள் கவன நிலையை ஸ்திரமாக்குங்கள்.

கவன தியானம்.12.6.11

இந்த கட்டுரையை சற்று சீரிய கவனத்துடன் அணுகவும். நீங்கள் தியானத்துக்கு தயாரானதில் இருந்து ஒரு சீரிய கவனத்துடன் இதை துவங்குங்கள். ஒரு தூய்மையான மந்திரத்துடன் துவங்குவோம்.

ஓம்,
அஸத்தோமா ஸத்கமைய;
தமஸோமா ஜோதிர்கமைய;
மிருத்யோர்மா அம்ருதங்கமைய:
ஓம் சாந்தி, சாந்தி, சாந்திஹி.

நமது சரீரத்தில் உள்ள ஏழு சக்கரங்களையும் அறிந்திருப்பீர்கள்.

1, மூலாதார சக்கரம்
2, ஸ்வாதிஷ்டான சக்கரம்
3, மணிப்பூரக சக்கரம்
4, அனாஹத சக்கரம்
5, விசுத்தி சக்கரம்
6, ஆக்ஞா சக்கரம்
7, சகஸ்ரார சக்கரம்.

ஓம் எனும் பிரணவ மந்திரத்தின் துணையுடன் துவங்குவோம். வஜ்ஜிராசத்தில் அமர்ந்து கொள்ளுங்கள். உங்கள் கவன நிலை ஒரு லேசர் ஒளி போல துல்லியமாக இருக்கட்டும். உங்கள் கவனம் ஒரு இம்மியும் அப்பால் நகராமல் தீவிரமாக கவனித்துக்கொள்ளுங்கள்.

உங்கள் இயல்பு போல ஓம் எனும் மந்திரத்தை தொடர்ந்து உச்சரியுங்கள். உங்கள் கவனம் அந்த ஓம் எனும் ஒளி எங்கிருந்து கிளம்புகிறதோ அங்கு குவிந்திருக்கட்டும். ஓம் எனும் சப்தம் இப்போது ஒரு அதிர்வாக மட்டும் இருப்பதை கவனியுங்கள். அந்த அதிர்வின் ஒவ்வொரு பாகையும் உங்கள் கவனத்திற்கு வந்து செல்வதை கவனியுங்கள்.

உங்களுடைய முழு இருப்புணர்வையும் உங்கள் மூலாதாரத்திற்கு எடுத்து செல்லுங்கள். ஓம் மந்திர அதிர்வு தொடர்ந்து அதிரட்டும். உங்கள் முழு கவனமும் மூலாதாரத்தில் இருப்புணர்வோடு இருக்கட்டும். நீங்கள் இப்போது உங்களுடைய மூலாதாரத்தில் மட்டுமே இருக்கிறீர்கள். மூலாதாரத்தில் ஒரு ஒளிப்பந்து உருவாவதை கவனியுங்கள். அந்த பந்து எவ்வளவு விரிவடைகிறதோ அவ்வளவு

விரிவடையட்டும். உங்களின் தீவிர கவனத்தை அந்த பந்தின் மையத்திலேயே குவித்து வையுங்கள்.
இப்போது நீங்கள் உங்களின் மூலாதாரத்தில் உள்ள ஒரு ஒளிப்பந்து மட்டுமே! அதை தவிர்த்து எங்கும் எதுவுமில்லை.

இந்த நிலையை தொடர்ந்து ஐந்து நிமிட நேரம் நிர்வகித்து வாருங்கள். இதற்கிடையில் உங்கள் மனதில் ஏதாவது எண்ணம் தோன்றினால் அது வெறும் சரீர எண்ணம், நமக்கு வெளியில் என்னென்னவோ நடக்கிறது நாம் அதை கவனிக்காமல்தான் இங்கே உள்ளே இருக்கிறோம், அது போலவே இந்த எண்ணங்களும் ஒன்றும் சாரமற்றவை, அதற்கு ஒன்றும் மதிப்பு கொடுக்க வேண்டியதில்லை.

தொடர்ந்து கவனம் பிசகாமல் ஓம் எனும் அதிர்வோடு மூலாதாரத்திலேயே இருங்கள். எந்த எண்ணங்கள் வந்தாலும் நீங்கள் அதை கவனிக்காமல் இருந்தால் அவை விரைவில் விலகி மறைந்துவிடும்.

திவ்யமாக மூலாதாரத்தில் லயித்த பிறகு அடுத்த சக்கரமான ஸ்வாதிஷ்டான சக்கரத்திற்கு உங்கள் இருப்புணர்வை மாற்றுங்கள். ஓம் எனும் அதிர்வை எக்காரணம் கொண்டும் நிறுத்தக்கூடாது. இந்த சக்கரத்திலும் உங்கள் இருப்புணர்வும் கவன நிலையும் இணைந்து லயித்த பின் ஒரு ஐந்து நிமிட நேரம் தொடர்ந்து லயித்து விட்டு அடுத்த சக்கரத்திற்கு மாற்றலாம்.

இப்படி தொடர்ந்து , மணிப்பூரக சக்கரத்திலும், அனாஹத சக்கரத்திலும், விசுத்தி சக்கரத்திலும் இருப்புணர்வையும் கவன நிலையையும் இணைத்து ஐந்து நிமிட நேரம், ஐந்து நிமிட நேரம் லயித்து இருந்து விட்டு பின் ஆக்ஞா சக்கரம் சென்று ஒரு பத்து நிமிட நேரம் ஓம் மந்திர அதிர்வோடு இருப்புணர்வோடு தீவிர கவனம் பிசகாமல் இருக்கவேண்டும். ஆக்ஞா சக்கரத்தில் உருவாகும் ஒளிப்பந்தானது விரைந்து விரிவடைந்து கொண்டே போகும். உங்கள் கவன நிலையும் அதன் விரிவு கூடவே எல்லையற்று போய்க்கொண்டேயிருக்கும். உங்கள் கவனம் என்பது இப்போது ஒரு பிரபஞ்ச தன்மையானதாக விளங்கும். இப்போது நீங்கள் வேறு இப்பிரபஞ்சம் வேறு அல்ல! உங்கள் சரீரமும் இந்த பிரபஞ்ச சரீரமும் ஒரே சரீரம் தான். உங்கள் சரீரம் இந்த பிரபஞ்ச சரீரத்தோடு இணைந்து விட்டது.

இந்த பிரபஞ்சத்தில் நடக்கும் ஒரு நிகழ்வும் உங்களுக்கு வெளியே நடக்கும் ஓர் நிகழ்வு போல, உங்கள் சரீரத்தில் நடக்கும் (ஒரு எண்ணம், அல்லது ஒரு உணர்வு) நிகழ்வுகளும் உங்களுக்கு வெளியே நடக்கும் ஒரு நிகழ்வுகள்தாம்.

நாம் எந்த சக்கரத்தில் நமது இருப்புணர்வையும், கவனத்தையும் வைத்து ஓம் மந்திரத்தை உச்சரித்து அதிர்வை உண்டாக்குகிறோமோ அந்த சக்கரத்தில் ஒளி உண்டாவதற்கு காரணம் என்னவெனில், நாம் உள்ளிழுக்கும் பிராண வாயுவே காரணம் ஆகும். எந்த சக்கரத்தில் நிலைகொண்டு இருக்கிறோமோ அந்த சக்கரத்திற்கே நமது முழு பிராணனையும் செலுத்தவேண்டும். உள்ளிழுக்கும் முழு பிராண வாயுவும் நீங்கள் நிலைகொண்டுள்ள அந்த சக்கரத்திலேயே நிற்க

வேண்டும். அந்த பிராண சக்தியே உங்களுக்கு ஒளியாக துலங்குகிறது. ஒரு முறை ஓம் மந்திரத்தை உச்சரித்து முடியும்பொழுது உள்ளிருக்கும் பிராணன் தீர்ந்துவிடும். மீண்டும் பிராணனை உள்ளிழுக்கும்பொழுது ஆழ்ந்து நிறைய பிராணனை உள்ளிளுத்துக்கொண்டு உச்சரிக்க வேண்டும்.

மிக முக்கியமான விஷயம் ஒன்று என்னவென்றால், நீங்கள் நிற்கும் சக்கரம், உங்கள் இருப்புநிலையுணர்வு, உங்கள் பிசகாத கவனம், சுவாச பிராணனால் ஆன ஒளி ஆகிய நான்கும் ஒன்றாக இணைந்து அச்சக்கரத்திலேயே நீங்கள் இருக்குபொழுது, நீங்கள் முழு ஒளியாகிவிடுவீர்கள். அந்த ஒளிதான் நீங்கள், அது தான் உங்கள் பிரபஞ்சம். அதற்கு வெளியே எதுவுமேயில்லை. அது முழுமையானது. இதை உங்கள் அனுபவமாக்கவேண்டும்.

உங்கள் அறிவு, உங்கள் உணர்வு, உங்கள் இருப்புநிலை, உங்கள் பிரபஞ்சம் எல்லாம் அந்த ஒளிதான். அந்த ஒளிக்கு வெளியே, அந்த ஒளியைத்தாண்டி எதுவுமேயில்லை. அதுவே முற்றான இலக்கு. இந்த முற்றான இலக்கான ஒளித்தன்மையை உங்கள் சரீரத்தின் எலக்ட்ரான் சுற்றுப்பாதையான ஐந்து சக்கரங்களில் (1, மூலாதார சக்கரம் 2, ஸ்வாதிஷ்டான சக்கரம் 3, மணிப்பூரக சக்கரம் 4, அனாஹத சக்கரம் 5, விசுத்தி சக்கரம்) துலக்கத்திற்கு கொண்டுவரவே இந்த தியானம் செய்யப்படுகிறது. இந்த ஐந்து சக்கரமும் ஒளியால் துலங்கும் பொழுது அதன் சுற்றுப்பாதையில் உள்ள அனைத்து மாசுகளும் நீக்கப்பட்டு தூய்மையாக்கப்படுகிறது.

அனைத்து சுற்றுப்பாதையில் உள்ள எலக்ட்ரான்களும் ஒளிமயமாக மாற உங்கள் புரோட்டான்தளமான
ஆக்ஞா சக்கரத்திற்கு(அதன் நேர்மின் இழுப்புக்கு) இலகுவாக வந்து சேருகிறது.

நேர் மின் தளமான ஆக்ஞா சக்கரத்திற்கு வரும் எலக்ட்ரான்கள் புரோட்டான்களாக மாறி செயல்பட இந்த சக்கரத்திலும் நீங்கள் தொடர்ந்து ஓம் மந்திர உச்சரிப்பை தொடர இங்கிருக்கும் அனைத்து புரோட்டான்களும் ஒளியாக துலங்குகிறது.

அதாவது உங்கள் இருப்புணர்வும், கவனமும், பிராண சக்தியும் ஒன்றாக இணைந்து செயல்படும்பொழுது மின்(நேர், எதிர்,
நிலை) தன்மையுள்ள துகள்களை ஒளித்தன்மைக்கு மாற்றி
கொண்டுவருகிறது. இதுவே தியான தொழில் நுட்பம்.

நீங்கள் தியானம் செய்யும்பொழுது உங்கள் சரீரத்தில் எலக்ட்ரான் துகள்கள் புரோட்டான் துகள்களாக மாறும்பொழுது - அல்லது உங்கள் எலக்ட்ரான் சுற்றுப்பாதைகளில் உள்ள துகள்கள் ஒளிமயமாக மாறிவிட்டபின் - இருத்தி ஆற்றல்கள் உங்கள் சரீரத்தில் தோன்றுகிறது.

இதேப்போல உங்களுடைய ஏழு சக்கரங்களிலும் நிலை நின்று பின் பத்மாசனமிட்டு அமர்ந்து கைகளை சின் முத்திரையில் வைத்து நிமிர்ந்து அமர்ந்து ஓம் எனும் மந்திரத்தை மனத்தால் தியானித்து (ஏற்கனவே சொன்ன மாதிரி இருப்புணர்வு, கவன நிலை, பிராண சக்தியான ஒளி, அந்த சக்கரம் அனைத்தும் இணைந்து) ஒரு

சக்கரத்திற்கு ஐந்து நிமிட நேரம் ஒதுக்கி சகஸ்ரார சக்கரத்தில் முடித்து, பின் ஆக்ஞா சக்கரத்தில் உங்களை நிலை நிறுத்துங்கள். இப்போது உங்கள் உடல் எனும் ஸ்தூல நிலை ஒளிநிலையாக மாறி உங்கள் புருவ மத்தியான ஆக்ஞா சக்கரத்தில் நிலைகொள்ளும். வெறும் ஒளிதான் நீங்கள். இப்பிரபஞ்சம் முழுவதும் வெறும் ஒளி மட்டுமே இருக்கிறது. அந்த ஒளியிலேயே தொடர்ந்து இருங்கள். அந்த ஒளி விகசித்து எல்லையற்று பரவும். கூடவே உங்கள் கவனமும் எல்லையற்ற தன்மைக்கு பரவுவதை காண்பீர்கள். எல்லையற்ற வெறும் கவனமாக மட்டும் இருங்கள். அது மட்டுமே என்றும் நிலையாக இருக்கிறது. இப்போது ஒரு மாபெரும் கவனம் உங்கள் வழியாக கவன நிலை கொண்டிருப்பதை அறிவீர்கள். இப்போது நீங்கள் வேறு அது வேறு அல்ல!

மனம் என்கிற மாயாஜாலம். 13.6.11

உங்களை, உங்கள் உள்ளிருந்து இயக்கிக்கொண்டிருக்கும் அந்த ஆதிமூலத்திற்கும், உங்கள் சரீரத்திற்கும் இடையில் மனம் எனும் ஒரு மாயாஜாலம் இருக்கிறது. அது பேதங்களையே தனது அஸ்திரமாக கொண்டுள்ளது. எவர் ஒருவர் இதில் ஆர்வமாக உள்ளாரோ அவரை இந்த மாயா வசீகரித்து வைத்துக்கொள்கிறது. உங்களுடைய மனம் கொண்டு எதை ஒன்றை நீங்கள் அறிய நேர்ந்தாலும் இந்த பிரபஞ்சத்தில் ஒரு துணுக்கு கூட ஒன்றைப்போல ஒன்று இருப்பதில்லை என்பதை அறிவீர்கள்.

மனம் : இது உங்களை உள்ளிருந்து இயக்கம் ஆதிமூலத்திற்கும் செயல்படும் உங்கள் சரீரத்திற்கும் இடையேயுள்ள மின்னோட்ட தளமாகும். நீங்கள் கண்களை மூடி உள்ளே கவனித்தால் இந்த மின்னோட்ட தளம் தெரியும். இருப்பினும் மனதின் செயல்கள் ஒருவருக்கொருவர் மாறுபட காரணம் அவரவர் நினைவகங்களில் படிந்துள்ள வாசனைகளேயாகும்.

இந்த வாசனைகள் உள்ளவரை இந்த இடையாறாத மின்னோட்டத்தால் பாவனைகளாக தூண்டப்பட்டுக்கொண்டேயிருக்கும். இந்த தூண்டல்களுக்கு சரீரம் உட்படும்பொழுது உணர்ச்சிகளாக மாற்றம் கொள்கிறது.

இவைகளை ஒருங்கிணைப்பதே மனம் செய்யும் வேலை. மனம் தற்பாதுகாப்பு எனும் ஸ்திதியால் உருவானது என்பதால் (சர்வ அதிகாரம்) இவையனைத்தும் இயல்பாக மனதின் கட்டுப்பாட்டுக்குள் வருகிறது. மனம் தனது மாயாஜாலத்தினால் உங்கள் வாசனைகளையும் உணர்ச்சிகளையும் வசியப்படுத்தி வைத்திருக்கிறது.

இது எப்படியாயினும் மனம் வாசனைகளற்று உணர்வுகளுமற்று நிர்மலமான தூய நிலையில் நிற்கும்பொழுதே உங்களுடைய உண்மையான ஸ்திதி விளக்கமாகுமென்பதும் என்பதும் ஸ்திதியாகும்.

இந்த வாசனைகள் அற்றுப்போனால் மனம் சாந்தமடையும். வாசனைகளை நேரடியாக நீக்கவோ, அழிக்கவோ உபாயம் இருப்பதாக தெரியவில்லை. அவைகள் உங்கள் தீராத ஆசைகளால் வந்து குடியேறியவைகள். அவைகளின் ஆசைகளை பூர்த்தி செய்வதன் மூலம் மட்டுமே அவைகளை நீக்க முடியும். இது நடை முறைக்கு ஒவ்வாது.

மனதின் இரு துருவங்களாக வாசனைகளும், உணர்வுகளும் இருக்கின்றன. இந்த உணர்வுகள் என்பது தற்சமயம் மனதின் கட்டுப்பாட்டில் இருந்தாலும் நம்மால் (சரீரத்தால்) உணர்வு நிலையை ஒரு சமநிலைக்கு கொண்டுவர முடியும். இப்படி உணர்வை சமபாவனையில் நிறுத்த மனதின் மாயாஜாலம் எனும் வித்தை பலிதமாகாமல் க்ஷீணமடையும்.

இதை ஒரு தவம் போல தொடர்ந்து சமபாவனையில் பாவித்து வர, மனமும் சமபாவனையை எய்தும். நமது மூல இயல்பான - வெறுப்பு, விருப்பற்ற - தன்மை நம்மில் மிளிரும். தினசரி இப்படியே தொடர்ந்து சமபாவனையில் இருங்கள்.

ஒரு புத்தரின் முகத்தில் தவழும் தெளிவு, ஒரு ஜே கிருஷ்ணமூர்த்தியின் முகத்தில் தவழும் தெளிவு என்பது அவர்களின் உணர்வின், மனதின் சமநிலையேயாகும்.

உங்கள் ஆதிமூலத்திற்க்கும் உங்கள் சரீரத்திற்கும் இடையேயான அந்த மின்னோட்ட தளத்தை ஒரு ஒளித்தளமாக பாவித்து வாருங்கள். அதுவே தூயநிலையுமாகும்.

தீவிர கவன தியானம். 13.6.11

நீங்கள் இப்போது எந்த சக்கரத்தில் நின்று தியானிக்கிறீர்களோ அந்த சக்கரத்தில் உங்கள் இருப்புணர்வு மற்றும் தீவிர கவனம் சுவாச பிராணன் மற்றும் ஓம் எனும் மந்திர அதிர்வு இன் நான்கையும் இணைத்து லயிக்க வேண்டும்.

சுவாசத்தை ஆழமாக உள்ளிழுத்து நான்கு வினாடி நேரம் நிறுத்தி பின் சீராக மெதுவாக (நொடி, நொடியாக தீவிர கவனம் பிசகாமல்) சுவாசத்தை வெளியில் விட்டு ஒரு நான்கு வினாடி நிறுத்தி (நொடி, நொடியாக தீவிர கவனம் பிசகாமல்) சுவாசத்தை ஆழ்ந்து உள்ளிழுக்க வேண்டும். சுவாசம் எப்போதும் ஆழமாகவும், நீளமாகவும் இருக்க வேண்டும்.

இப்படி தீவிர கவனத்துடன் க்ஷணம் தவறாது சுவாசத்தை கவனித்து தொடர்ந்து ஒரு சக்கரத்தில் ஐந்து நிமிட நேரம் தீவிர கவனத்துடன் தியானித்து வருவீர்களானால் அப்போது ஒரு உண்மை உங்களுக்கு புலப்படும்.

இப்போது நீங்கள் தியானிக்கும் அந்த சக்கரம் ஒரு நெருப்புத்துண்டம் போல தக, தகவென ஒளி கனன்று கொண்டிருக்கும். (வெப்பம் இருக்காது)ஒளி மட்டுமே கனன்று கொண்டிருக்கும். சுவாசத்தை வெளியில் சீராக விட்டுவிட்டு நான்கு விநாடி நேரம் பொறுத்து பின் பிராணனை உள்ளிழுக்க அந்த பிராணன் உங்கள் சக்கரத்தின் மீது மோதியவுடன் கனன்று கொண்டிருக்கும் நெருப்புத்துண்டத்தின் மீது பெட்ரோலை வீசியது போல 'குபீரென' ஒரு பெரு ஒளி தோன்றுவதை காண முடியும்.

அந்த சக்கரத்தை அப்படி நெருப்புத்துண்டம்போல் கனன்றுகொண்டிருக்க வைப்பது உங்கள் இருப்புணர்வும், உங்கள் தீவிர கவனமும், சுவாச பிராணனும் இவைகளை அதிர்வுற வைத்து செயற்படும் ஓம் எனும் மந்திரமும் ஆகும்.

நீங்கள் ஆழ்ந்து உள்ளிழுக்கும் அவ்வளவு (முழு அளவு) பிராணன்களையும் நீங்கள் தியானிக்கும் அந்த சக்கரத்திலேயே தேக்கி நிறுத்த வேண்டும். இந்த சுவாச கதியை க்ஷணமும் தவறாது அதி தீவிரமாக கவனித்தல் வேண்டும். தொடர்ந்து கவனித்தல் என்பது க்ஷணம் தவறாது கவனித்தல் என்பதாகும்.

சுவாசத்தை வெளியில் சீராக விட்ட பின் நான்கு விநாடி இடைவெளி விட்டு மீண்டும் உள்ளிழுக்கப்படும் சுவாசம், சக்கரத்தின் மையப்பகுதிக்கு இழுக்கப்பட வேண்டும். இந்த நான்கு விநாடி இடைவெளியில் உங்கள் அதிதீவிர கவனமும் உங்கள் இருப்புணர்வும் அந்த சக்கரத்தின் மையத்தை தேடி அங்கு நின்று உறுதி செய்தல் வேண்டும். அந்த மையத்தை விட்டு இடம் பெயர்தல் கூடாது.

இப்படி நீங்கள் தீவிர கவனத்துடன் அனைத்து சக்கரங்களிலும் தியானிப்பீர்களானால் உங்கள் அனைத்து சக்கரமும் ஒளி பெற்று ஒன்றாக இணைந்து அந்த ஆதிமூல நிலையான ஓர்மை நிலையை அடைவீர்கள். உங்களில் ஒரு நிறைவான பூரணத்துவம் திகழும்.

நிழல்களால் ஆன மனம். 14.6.11

நமது புரோட்டான் தளமான ஆக்ஞா சக்கரத்தில் தீவிர கவன தியானம் மேற்க்கொள்ளும்பொழுது இச்சக்கரம் பூர்ண ஒளியால் பிரகாசிக்கிறது. தவிரவும் நமது எலக்ட்ரான் சுற்றுப்பாதைகளான ஐந்து (மூலாதார சக்கரம், ஸ்வாதிஷ்டான சக்கரம், மணிப்பூரக சக்கரம், அனாஹத சக்கரம், விசுத்தி சக்கரம்) சக்கரங்களிலும் ஏற்கனவே நாம் தீவிர கவன தியானம் செய்துள்ளபடியால் அச்சக்கரங்களும் ஒளித்தன்மையில் இருக்கின்றன.
இப்போது ஆக்ஞா சக்கரத்தில் ஒளிரும் ஒளியை அப்படியே அசைவற்று நிறுத்த (காலம், இயக்கம் கடந்து) மேற்கண்ட ஐந்து சக்கரங்களின் ஒளிகளும் ஆக்ஞா சக்கரத்தில் வந்து ஒரே ஒளியாக நிலைபெறுகிறது.
நமது சரீரத்தில் செயல்படும் எலக்ட்ரான் மின்னோட்டமே மனம் என்பது.
ஆக்ஞா சக்கரத்தில் ஒளி அசைவற்று நிற்கும்போது மனதை நாம் தேடிப்பார்த்தாலும் கிடைப்பதில்லை.
எங்கும், எதிலும் அந்த ஆதிமூலத்தின் வெளிச்சம் தான். மனமோ நிழல்களால் உருவாவது.

இங்கோ ஒளியின் வெளிச்சம்.

மறு பிறவி. 14.6.11

இந்த வார்த்தையை கேட்டதும் ஒரு வித மயக்கம் வருகிறது. இதை எந்த தளத்தில் நின்று கவனிப்பது என்று. அனுபவமாக இதை சொல்லவேண்டுமானால் இறந்து பார்த்தவனுக்கே இது தெரியும். இருந்தாலும் நாம் சரியாக யூகிக்கலாம். இந்த

சரீரத்திற்கு என தனியாக உயிரில்லை. இருக்கிற உயிர் என்னவோ சரீரத்தில் உள்ள செல்களுக்குத்தான். இவன் மறுபடியும் பிறவி எடுக்க வேண்டும் என்றால் இந்த சரீரத்தில் உள்ள அனைத்து செல்களும் கட்டமைப்பு மாறாமல் அடுத்த கதியை அடைய வேண்டும். அப்படி அது தனது டி என் ஏ க்களில் கொஞ்சமும் நிலை தவறாமல் இடம் பெயர வேண்டும். அதற்க்கு வாய்ப்பேயில்லை. அவன் அடுத்த பிறவி ஒரு குரங்காக இருக்கும் என (அவன் பாவ புண்ணிய கர்மா வினை) வைத்துக்கொண்டால்கூட அங்கு ஒரு தாய், தந்தையின்றி எந்த குரங்கும் பிறப்பதில்லை. அந்த குட்டிக்குரங்கில் இருக்கும் டி என் ஏ செய்திகளை என்ன செய்வது? உயிருள்ள (கரன்ட்) டி என் ஏ வை , ஆவியாக உள்ள டி என் ஏ துரத்தியடிக்க முடியுமா? அவனை மண்ணில் புதைத்து விட்டால் அந்த உடலை பாக்டீரியாக்கள் சூழ்ந்து கொள்கின்றன. தைரியமாக இருங்கள் உங்களுக்கு மறுபிறவி கிடையாது. இந்த மறுபிறவி சமாசாரமே உங்களின் கடந்த காலத்துக்கு ஒத்துவரும். உங்களுக்கு ஒரு தாய்,தந்தை இருந்தது போலவே அனைத்துயிருக்கும் பெற்றோர்கள் உண்டு. உங்களின் நல்ல, தீய வினைகள் உங்கள் குழந்தைக்கு போய் சேர வழியுண்டு. தாய், தந்தை இருவரும் இணைந்து பிறக்கும் குழந்தைகளுக்கே பிறவிகள் என சொல்லமுடியும். பிறவிகள் இப்படித்தான் தொடர்கிறது. இறந்த பின் இறப்பின் முன் தொடர்ச்சி வாய்ப்பேயில்லை. அப்படி மறுபிறவி ஏற்ப்பட்டாலும் அது செல்களுக்கே ஏற்ப்படுகிறது. அது தூய நிலையாக மீண்டும் ஏதாவது ஒரு உடலில் சுவாசமாகவோ, உணவாகவோ உள் நுழைய முடியும். அது ஒவ்வொரு செல்லுக்கும் ஒவ்வொரு மாதிரி அமைய வாய்ப்புண்டு. அங்கும் கூட அந்த செல் அந்த உயிரின் சரீர அமைப்பையே ஏற்றுக்கொள்ளும். இல்லை இதை ஒரு சாமியார் அடித்து சொல்கிறார் என்றால், இது ஒரு மாயா பிசினெஸ். நாம் வாழும் இந்த மண்ணுலகில் காணும் ஒரு உயிரையாவது பெற்றோர் இல்லாத பிறவி என்று காட்ட முடியுமா? உங்கள் சாமியாரால்?

மூன்று.15.6.11

உலகில் தோன்றிய அனைத்து மதத்திலும் இந்த மூன்றுவித சக்திகளிப்பற்றி வெவ்வேறு விதமாக சொல்லப்பட்டிருக்கிறது.
‘ஒரு யோகியின் சரிதம்’ - எனும் பரமஹம்ஸ யோகானந்தரின் நூலில்:-
'சிறந்த நாவலாசிரியர் லியோ டால்ஸ்டாய் 'மூன்று துறவிகள்' (The Three Hermits) என்ற ஒரு அழகான கிராமியக்கதை எழுதியுள்ளார். அவருடைய நண்பரான நிகோலஸ் ரோரிக் என்பவர் அதை பின் வருமாறு சுருக்கி உரைத்துள்ளார்:
" ஒரு தீவில் வயதான மூன்று துறவிகள் வசித்து வந்தார்கள். அவர்கள் மிக எளிமையானவர்களாக இருந்ததால், அவர்களுடைய ஒரே பிரார்த்தனையும் 'நாங்கள்மூவர், நீயும் மூன்றே - எங்கள மீது கருணை காட்டுவாய்!' என்பதாகவே

இருந்தது. அவர்களுடைய கபடமற்ற இப்பிரார்த்தனையின் போது பேரதிசயங்கள் நடந்துள்ளன'. இப்படி போகிறது அந்த சிறுகதை. ஒரு யோகானந்தர் போன்ற மஹாயோகி இந்த மூன்று என்பதன் விஷயத்தை இப்படி வெளிப்படுத்தியுள்ளதே இங்கு குறிப்பிடத்தக்கது.
ஹிந்து மதத்தில் பிரம்மா, விஷ்ணு, சிவா - ஆக்கல்,காத்தல், அழித்தல் என்று மூன்று.

நமக்கு இந்த ‘மூன்று’ அறிந்த விதம்பற்றி பார்ப்போம்.

1, பற்றாக்குறை, 2, பூர்த்தியாதல், 3, வெளிப்படல்.

இந்த மூன்று நிலைகளும் இப்பிரபஞ்சம் முழுதும் விரவிக்கிடக்கிறது. இப்பிரபஞ்சமே இம்மூன்று நிலைகளாகவே இருக்கிறது. முதல்நிலை தோற்ற பிரபஞ்சமாக விளங்குகிறது.(பொருள்நிலை)இரண்டாவது நிலை அணுக்கள் தளமாக இருக்கிறது.(அணுநிலை) மூன்றாவது நிலை ‘துகள் மற்றும் அலை’ எனும் தளமாக இருக்கிறது. (மின்காந்த அலைநிலை).
மேற்கண்ட மூன்று நிலைகளை ,நம்மிடமுள்ள மூன்று வித நிலை கொண்டே நுகர முடியும். அவையாவன : 1, சரீர புலன்வழி நுகர்வு (முக்கால பரிமாணம்) 2, வெறும்உணர்வு வழி நுகர்வு (இக்கணம் இக்கணம் எனும் நிகழ் நொடி, இந்த க்ஷண பரிமாணம்) 3, உள்ளிருக்கும் ஆதிமூல ஏகநிலை நுகர்வு பரிமாணம் (காலம், இயக்கமற்ற நிலை).

1, சரீர புலன்வழி நுகர்வு பரிமாணம் : இந்த சரீர புலன்வழி நுகர்வில் நுகரப்படும் தோற்றப்பிரபஞ்சம் நமக்கு பற்றாக்குறையையே நிலவ வைக்கிறது.இந்த முழுபிரபஞ்சமே உனக்கு சொந்தம் என்றாலும் கூட புலன்வழி நுகர்வில் திருப்தி ஏற்படுவதில்லை. இதற்கு இந்த நடைமுறை சமூகமே சாட்சி. எவராவது புலன்வழி நுகர்வில் திருப்தியடைந்தவர் உண்டா? நம்முடைய அறியாமை! இதைத்தான் வாழ்க்கை என நாம் வாழ்ந்து வருகிறோம்.

கவிஞர் கண்ணதாசனின் சிறுகதை ஒன்று 'ஒரு ஊரில் பெரிய மளிகைக்கடைக்காரர் ஒருவர் இருந்தார். அவருக்கு ஏகப்பட்ட நிலபுலங்கள் இருந்தன. ஊரிலேயே அவர் குடும்பம் தான் பணக்கார குடும்பம். அவருக்குமூன்று மகன்களும்ஒருமகளும்இருந்தார்கள். அவருக்கு அந்திமக்காலம் நெருங்கி வந்ததால் அவர் இன்றோ நாளையோ இறந்து விடுவார் என்ற நிலைமையில் வீட்டில் கிடத்தியிருந்தார்கள். ஒரு வாரத்திற்கு முன்பேஉறவினர்கள் அனைவரும் வந்து கூடிவிட்டனர். தொடர்ந்து இரண்டு நாட்களாக அவருக்கு ஒருவர் மாறி ஒருவர் பால் ஊற்றிக்கொண்டிருந்தனர். அவரோ அசைந்து கொடுப்பதாயில்லை. கிழவன் எப்போது சாவான் நாமெல்லாம் பிழைப்பை பார்ப்பது என ஓரிருவர் முனக தொடக்கி விட்டனர். " கிழவனுக்கு ஏதோ ஒரு தீராத ஆசை இருக்கிறது போல் இருக்கிறது அவனுக்கு சாக மனம் வரவில்லை அது என்ன என்று தெரிந்து கொண்டாலாவது நம்மால் ஆன முயற்சி ஏதும் செய்து பார்க்கலாம்" என பேசிக்கொண்டனர். கிழவன் திடீரென அங்கு தன்னை சூழ இருந்தவர்களை

பார்த்தார். அனைவரும் கிழவன் தன்னுடைய ஆசையை சொல்லப்போகிறான் என ஆர்வத்துடன் கிழவனை நோக்கினர். கிழவன் மெல்ல தன் அருகில் இருந்த தன் மனைவியிடம் கிசுகிசுக்கும் குரலில் " எங்கே உன் பெரிய மவன்" என்றார். அவள் தங்கள் பெரிய மகனை சுட்டிக்காட்டினாள். அவனும் கிழவன் அருகில் வந்து “உங்கள் ஆசை என்னப்பா?” என்று கேட்டான். கிழவன் மீண்டும் " நடு மகன் எங்கே?" என்று கேட்டார். அந்த பையனே " அப்பா நான் இங்கேதான் இருக்கிறேன்" என்றான். கிழவன் தன் மகளின் பெயரைச்சொல்லி "இருக்கிறாளா?" என்று கேட்டார். “அப்பா நான் ரெண்டு நாளாக உங்கள் கால்மாட்டிலேதான் அமர்ந்து இருக்கிறேன்" என்றாள். ‘கிழவன் சாகும்போது நமக்கு ஏதாவது நகைகளை தர சொல்லமாட்டானா' என்னும் ஏக்கம் அவள் கண்ணில் தெரிந்தது. சற்று தள்ளி நின்ற இரண்டு கிழங்கள் பேசிக்கொண்டது. அவனுக்கு(கிழவனுக்கு) சாகும்போது தன் மக்கள் மீது எவ்வளவு பிரியம் பார். ஒவ்வொருவராக கூப்பிட்டு அவர்கள் முகத்தை பார்க்கிறான் சாகும்போதும் பாசம் விடாதுபோல் இருக்கிறது" என்று. கிழவன் தன் மனைவியின் கைகளை பிடித்து இழுத்து சின்னவன் எங்கே?" என்றான். கூட்டமே ஆர்வமாக இருந்தது. கிழவன் தனது சின்ன மகனை பார்த்ததும் மண்டையை போட்டுவிடுவான். ஒருவாரத்து கூத்து ஒரு முடிவுக்கு வந்து விடும் என்று. கிழவனின் சின்ன மகன் “அப்பா நான் இங்கேதான் இருக்கிறேன் என்னப்பா உங்களுக்கு வேணும்" என்று அவரது கையைப்பிடித்தான். கிழவன் ‘அந்த கைகளை வெடுக்கென தள்ளிவிட்டு’ " எல்லோரும் இங்கே இருக்கிறீர்களே! கடையை யாருடா பார்த்துக்கிறார்கள்?" என்று கொபித்துக்கொண்டனாம் கிழவன். இதுதான் சரீர புலன்வழி நுகர்வுவின் யதார்த்தம். அதிக பட்சமாக சொத்துக்களை 'காக்கும்பூதமாக' வாழ்ந்து செத்துவிடலாம் அதற்கு மேல் ஒன்றும் விஷயம் இல்லை, எந்த சாரமும் இல்லை இந்த புலன்வழி நுகர்வு வாழ்க்கையில்.

உணர்வு வழி நுகர்வு பரிமாணம் : இந்த உணர்வுவழி நுகர்வில் நுகரப்படும் பிரபஞ்சம் நிறைவான (புல்) உணர்வை தரக்கூடியது. இது பூர்த்தியான (கம்ப்லேடே) உணர்வை தரக்கூடியது. இதை உணர்ந்த ஒருவனுக்கு எதுவுமே தேவைப்படுவதில்லை. அவன் நிறைவாயிருக்கிறான். அவன் வாழ்வு பூர்த்தியான தன்மையில் இருக்கிறது. ஒரு அணுவளவும் அவனுக்கு தேவைகள் இல்லை. மனம் நிரம்பிக்கிடக்கிறது. உணர்வு நிரம்பிக்கிடக்கிறது. சரீரம் நிரம்பிக்கிடக்கிறது. அவன் வாழ்வும் நிரம்பிக்கிடக்கிறது. அவன் முழுமையானவன். அவனிடம் எந்த கேள்வியும் இல்லை. அவன் தனக்கு தானே நிறைவாகிவிட்டவன். அது பூர்ணம், இது பூரணம், பூரணத்திலிருந்து பூரணத்தை எடுத்தால், எடுத்ததும் பூரணம் மிஞ்சி இருப்பதும் பூரணமே! அவனுக்கு அனைத்துமே பூர்ணம். இந்த பிரபஞ்சமே பூரணத்தில் நிரம்பி நிற்கிறது.

ஒரு சாதகன் இந்த உணர்வு நுகர்வு ஆற்றலை, தியானத்தின்போது தம் இதயத்தின் மத்தியில் நிறுத்தி தொடர்ந்து தியானிப்பானேயாகில் அவனுக்கு ஏகப்பட்ட இருத்தி நிலை ஆற்றல்கள் கைகூடி வருகின்றன! முன்னோர்கள் சொன்ன அணிமா,மகிமா, லகிமா போன்ற சித்துகள் இந்த உணர்வு நுகர்வு தன்மையினாலேயே சித்திக்கின்றது என்பதை அறியவும்.

ஏகநிலை நுகர்வு பரிமாணம் : இந்த ஏகநிலை நுகர்வில் இருப்போற்க்கு பிரபஞ்சம் அலைநிலையாகவே காட்சியளிக்கிறது. இந்த தோற்ற பிரபஞ்சத்தில் நடக்கும் ஒரு நிகழ்வு, இந்த அலைநிலை பிரபஞ்சத்தில் சற்று முன்னரே நடக்கிறது. இந்த அலைநிலையில் நிலை பெற்ற அருளாளர்களால் இந்த சம்பவங்களை தேவைப்பட்டால் மாற்றி அமைக்க முடியும். (அதாவது இந்த தோற்ற பிரபஞ்சத்தில் நடக்கும் ஒரு நிகழ்வு, அந்த அலைநிலை பிரபஞ்சத்தில் ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பே நிகழ்கிறது.அந்த அலைநிலை பிரபஞ்சத்தில் நடக்கும் ஒரு நிகழ்வு இந்த தோற்ற பிரபஞ்சத்தில் நிகழ ஒரு குறிப்பிட்ட நேரம் ஆகிறது.) இந்த ஏக நிலை தியான பயிற்சியை நீண்ட காலம் செய்து வருபவரும், அனைத்து அறியாமைகளிலிருந்தும் விடுபட்டவரும், அனைத்து பற்றுக்களையும் துறந்தவரும் ஆகிய ஒரு தூயநிலையாளரிடமே இந்த ஏகநிலை நுகர்வு சக்தி கிடைக்கிறது.

இதில் எந்த வாழ்வை வேண்டுமானாலும் நீங்கள் தேர்ந்து எடுக்கலாம் உங்களுக்கு பரிபூரண சுதந்திரம் உண்டு.

அந்த மகா இயற்கை எவ்வளவு வாய்ப்புகளை நம்முன் வைத்திருக்கிறது பாருங்கள்.

உங்களுக்கு வேண்டியதை எடுத்துக்கொள்ளுங்கள்.

அறுதி நிலை.17.6.11

உண்மையின் பல நிலைகளை கடந்து இப்பொழுது அறுதி நிலையை நாம் வந்தடைந்துள்ளோம். உண்மையின் அடிப்படை தன்மையானது மின் தன்மையாக இருப்பதை அறிகிறோம். இந்த பிரபஞ்சம் முழுமைக்குமே (தோற்ற பிரபஞ்சம் மட்டுமல்ல, அனைத்தையும் உள்ளடக்கிய -அதாவது உருவத்தன்மை , நுண் தன்மை, சூட்சுமத்தன்மை- மூன்றையும் உள்ளடக்கிய) மின் தன்மையானதுதான். இந்த தோற்ற பிரபஞ்சம் முழுமைக்கும் உள்ள பொருட்களும் வெறும் மின் தன்மையானது தான். இந்த முழுமையான பிரபஞ்சம் முழுக்க வெறும் மின்னோட்டம் மட்டும் தான்.ஒரு இம்மியளவும் மின்னைத்தவிர்த்து வேறு இல்லை. வேறு எதுவாக இருந்தாலும் அது உண்மையல்ல! அது நமது கருத்தேயாகும்.

அந்த மின்தன்மை தோற்ற பிரபஞ்ச பொருள்களில் அணுக்களாக இருக்கிறது. அந்த அணுவோ மூவித (நிலைமின், நேர்மின், எதிர்மின்) மின் தன்மையான துகள்களாக இருக்கிறது. அந்த அணுக்களில் இருந்து எதிர் மின் துகள்களான எலக்ட்ரான்களால்தான் இந்த தோற்ற பிரபஞ்சம் தோற்றத்தன்மையை அடைகிறது. ஒரு திட பொருளாக நாம் அறிவதற்கு காரணம் அணுக்களின் வெளி வட்டத்தில் மிக வேகமாக சுற்றும் எலக்ட்ரான்களால்தான் என்கின்றனர் இயற்பியலார். இந்த பிரபஞ்சம் விரிவடையக் காரணமும் வெளிநோக்கிய தன்மையில் செயல்படும் எலக்ட்ரான்களால்தான். இந்த புவியீர்ப்பு விசை, சூரிய ஈர்ப்புவிசை, போன்ற ஈர்ப்புவிசைகள் மின்னின் இன்னொரு தன்மையான காந்த தன்மையே! அந்த மூவித

மின் துகள்கள் அடிப்படையில் பரமாணு துகள்களாக (sub- particles) இருக்கிறது. அந்த துகள்கள் மற்றொரு நிலையில் அலைகளாக இருக்கிறது. அந்த அலைகளே மின் அலைகள்தான். இந்த மூல அலை மின் நிலையிலிருந்து எழும் இம்மி துகள்கள் (sub- particles) வெவ்வேறு துகள்கள் இணைந்து நியூட்ரான், புரோட்டான் மற்றும் எலக்ட்ரான் துகள்களாக உருவெடுக்கின்றன!

இந்த தோற்ற பிரபஞ்சத்தில் பல்வித பொருட்கள் பலவித தனிமங்களால் உருவாகின்றன. பல தனிமங்கள் ஒன்றிணைந்து மூலக்கூறுகளாக வேதியல் வினைகள் பெற்றும் பொருட்கள் உருவாகின்றன. இந்த வேதியல் வினைகளுக்கும் மின் தன்மைகளே காரணம். ஆக! இந்த தோற்ற பிரபஞ்சத்திற்கும், பிரபஞ்சத்தில் நடக்கும் அனைத்து நிகழ்வுகளுக்கும் காரணம். மூவித (நிலைமின், நேர் மின், எதிர்மின்) மின் தன்மைகள் மட்டுமே!

இந்த முழுமையான பிரபஞ்சத்தின் உள்நிலை ‘மின்காந்தசமநிலை அலைத்தளமா’கும். அதுவே அனைத்திற்கும் ஆதாரம்.

என்றென்றும் நிலையாக இருப்பதும் அதுவே! அதிலிருந்து மாற்றமடைவதெல்லாம் என்றாவது மீண்டும் இந்த சமநிலையை அடந்தேயாக வேண்டும் என்பதும் நியதி.

அடுத்து தியான நிலையில் மின்னோட்டத்தின் செயல்பாடுகளைப்பற்றி பார்க்கலாம்.

நாம் நமது தியான செயலின் வழியாக இந்த பிரபஞ்சம் முழுக்க இந்த மூவித மின் தன்மைகள் செயல்படும்(பிரபஞ்ச இயல்பு மின் நிலை) நிலைகளுக்கு , எதிர் நிலையாக, எதிர்ப்பதமாக இந்த மூவித மின் தன்மைகளை இயக்குவதாகும். நமது உடலில் இந்த மின் தன்மை புவி ஈர்ப்புவிசைக்கு கட்டுப்பட்டு நம் உடலில் கீழ்நோக்கி செயல்படுகிறது. நாமும் பொருள் நிலையில் செயல்படுகிறோம். இது பிரபஞ்ச இயல்பு மின் நிலையாகும். இதேப்போலதான் அனைத்து உயிர்களும் அனைத்து பொருள்களும் இயங்குகின்றன.

நாம் நம்முடைய இப்போதைய இருப்பு நிலையாக வந்து சேர்ந்திருக்குமிடம் நமது (உடலில்) மூலாதாரம் ஆகும். நமது இருப்புநிலை உணர்வான நுண் உடல் அங்கிருந்து தான் செயல்படுகிறது. இது நமது முதுகுத்தண்டின் கீழ்பகுதியான நுனிப்பகுதியில் அமைந்துள்ளது. இந்த நுண் உடல்

மூலாதாரத்திற்கு சென்றதற்கு காரணம் புவி ஈர்ப்பு விசையே! இதுவே பூமியின், பிரபஞ்ச இயல்பு மின் நிலையுமாகும். இதோடு கூட எலக்ட்ரான் வெளிவிசையும் நமது இருப்புத்தன்மை நுண்உடல் மூலாதாரத்திற்கு போனதற்கு உறுதுணையாக இருக்கிறது.

இந்த புவி ஈர்ப்பு விசையையும், எலக்ட்ரான் வெளி விசையையும் எதிர்த்து, அந்த பிரபஞ்ச இயல்பு மின் இயக்கத்தையும் எதிர்த்து, நமது இருப்பு நிலை நுண் உடலை மூலாதாரத்திலிருந்து நமது முதுகுத்தண்டு (நரம்பு மண்டலம்) வழியாக மேல் நோக்கி புருவ மத்தியான ஆக்ஞா சக்கரத்திற்கு, பிராண வாயுவை நமது

செல்களுக்கு நிறைவாய் கொடுப்பதன் மூலமும், ஓம் எனும் 'சப்தத்தின் மூல' அதிர்வான மந்திரத்தை தொடர்ந்து உச்சரிப்பதன் மூலமாகவும் எடுத்து செல்லுதல் வேண்டும். (மின்னோட்டத்தை ஆதி சமநிலைக்கு மீட்டெடுத்தல் - அதுவே மின்னோட்டத்தின் மூல இயல்பும் கூட.) நித்தம் தொடர்ந்து இந்த பயிற்சியை செய்வதன் மூலம் இந்த உடலை சிறிது சிறிதாக பழக்கப்படுத்துதல் வேண்டும். உடல் நன்கு பழக்கப்பட்டப்பின் ஒரு க்ஷண நேரம் உங்கள் இருப்புத்தன்மையான இந்த நுண் உடல் மூலாதாரத்தை விட்டு புருவ மத்தியான ஆக்ஞாவிற்கு வந்து நிற்பதை அறிவீர்கள். மீண்டும் அந்நுண்ணுடல் பழைய படியே மூலாதாரத்திற்கே சென்று விடுவதையும் காண்பீர்கள்.

என்ன காரணத்தால் இந்த நுண்ணுடல் மீண்டும் பழைய நிலைக்கே போய்விடுகிறது என்பதை கவனிக்க வேண்டும். இந்த எலக்ட்ரானின் வெளிநோக்கியத்தன்மை,நமது முதல் செல் நிலையிலிருந்து(ஒரு செல் ஒரு உடலி) நமக்கு தொடர்ந்து பலவிதமான (பல செல் ஒரு உடல்) சரீரங்களை உண்டாக்கி, ஊர்வன, நகர்வன, பறப்பன, ஒடுவன, நீந்துவன போன்ற பல சரீரங்களைக் கடந்து விலங்கு சரீரங்கள் வழியாக இன்று மனிதன் என்ற சரீர நிலைக்கு கொண்டு வந்துள்ளது. இந்த ஊர்வன இனத்து தகவமைப்பான உணர்தல்,நுகர்ச்சித்திறன் மற்றும் விலங்கு இனத்து தகவமைப்பான பழிவாங்குதல், வன்மம்,தற்காப்புதிறன்(நான்) மன அமைப்பு போன்ற தன்மைகளை நாம் விட்டு விலகுவதற்கு, நம்மால் முடியாததே காரணமாக அமைகிறது.

இப்பிரபஞ்சம் தோன்ற துவங்கியதிலிருந்தே மூன்று வித அணுத் துகள்களும் செயல்பட்டாலும் உண்மை நிலை என்னவென்றால், எலக்ட்ரானின் (பிடிவாத)செயல்பாட்டுக்கே மற்ற இரண்டு துகள்களும் ஈடுகொடுத்து வருகிறது என்பது கவனிக்கப்பட வேண்டிய ஒன்று.

இந்த உணர்வு மற்றும் மன எண்ண ஓட்டங்கள் நான் எனும் சரீர அபிமானம் இவைகள் யாவற்றையும் எவன் ஒருவன் தனது தியானத்தின் மூலம் விட்டொழிக்கிறானோ அவனது இருப்பு தன்மையான நுண்ணுடல் அவனது புருவ மத்தியான ஆக்ஞாவிற்கு வந்து நிற்கிறது.

இப்போது நாம் இன்னொரு மூல உண்மையை தெரிந்து கொள்ள வேண்டும். நாமும் ஒரு அணுவைப்போல மூவித மின் தன்மைகளுக்கான தளங்களுடன் இருக்கிறோம் என்பதே அது! நமது மூலாதாரம்(எதிர்மின்) எலக்ட்ரான் தளமாகவும், நமது ஆக்ஞா புரோட்டான் (நேர்மின்) தளமாகவும் நமது இதய மத்தி (நிலைமின்) நியூட்ரான் தளமாகவும், நமது சகஸ்ரார சக்கரம் பிரபஞ்ச மூல நிலையான மின்காந்த சமநிலை அலைத்தளமாகவும் இருக்கிறது என்பதே அந்த உண்மை. நமது உடலில் உள்ள 75 டிரில்லியன் செல்களையும் நிர்வகிப்பது கூட, ஒரே ஒரு செல்லாகத்தான் இருக்கும் எனவும் தெரிகிறது.

இந்த புரோட்டான் நேர் மின் நிலையமான ஆக்ஞா சக்கரத்தில் இருப்பு நிலையான நுண் உடலை தொடர்ந்து நிறுத்த நாம் காலம் எனும் இன்னொரு உண்மையைப்பார்க்க வேண்டும். இந்த காலம் மூன்று வித தன்மையில் நாம்

அறிந்துள்ளோம். 1, நிலையான காலம், 2, இக்கணம், இக்கணம் மட்டுமே உள்ள உயிருள்ள காலம், இந்த க்ஷணம் மட்டுமே!,3, நேற்று இன்று நாளை எனும் 147

முப்பரிமாண காலம். இந்த நிலையான காலம் என்பது நியூட்ரான் தளத்திலும், இக்கணம் எனும் நிகழ் காலம் புரோட்டான் தளத்திலும், இந்த முப்பரிமாண காலம் எலக்ட்ரான் தளத்திலும் கோலோச்சுகிறது. இந்த ஆக்ஞா சக்கரத்தில் நுண் உடலை நிறுத்த இந்த இக்கணம் எனும் நிகழ் கால உணர்வில் நாம் இருத்தல் வேண்டும். இந்த நேர் மின் தளத்தில் தொடர்ந்து ஒருவனால் நிற்க முடியுமானால் அவனுக்கு இருத்தி நிலை எனும் சக்தி நிலை கூடி வருகிறது. அப்படி நிலைத்து நிற்க ஒருவரால் முடியும்பொழுது அவருக்கு ஏகப்பட்ட சித்திகள் கைக்கூடி வருகிறது. அவரால் இந்த தோற்ற பிரபஞ்சத்தில் உள்ள எலக்ட்ரான் இயக்க சக்திகளை தம் வசப்படுத்த முடியும். அநத விஷயங்கள் தோற்ற பிரபஞ்ச விதியில் இருக்கும் நமக்கு அதிசய நிகழ்வுகளாக விளங்குகிறது. நமது தோற்ற பிரபஞ்ச (எலக்ட்ரான் விதியான) 'லாஜிக்'குகள் அவற்றோடு பொருந்தி வராத நிலையும் ஏற்படுகிறது.

அடுத்து நேர் மின் நிலையமான புரோட்டான் தளமான ஆக்ஞாவிலிருந்து உங்கள் இருப்பு தன்மையான சூட்சும உடலை (கவனிக்க: முன்பு சொன்னது நுண்ணுடல், இப்போது சொல்வது சூட்சும உடல்) அநத நிலைமின் நிலையமான நியூட்ரான் தளத்திற்கு எடுத்து செல்ல, மீண்டும் நாம் இந்த கால நியதிக்கு வரவேண்டும். அநத நிலை மின் தளமான இதயமத்திக்கு செல்ல புரோட்டானின் கால நியதியான இக்கணம் இக்கணம் எனும் ஸ்திதியை கடைபிடிக்க வேண்டியுள்ளது. தொடர்ந்து இக்கணமெனும் அதிர்வு அதிர, அதிர அது லாவகமாக உங்கள் நிலைமின் தளமான இதய மத்திக்கு இடம்பெயர்வதை காணமுடியும்.

உங்கள் இருப்புநிலையுணர்வு இப்போது இதய மத்தியில் மையம் கொள்கிறது. கூட உணர்வும் சமநிலையும் அடைகிறது. இதயத்தில் உணர்வு சமநிலையடையும்பொழுது உணர்வு, நுட்ப உணர்வாக விரிவடைகிறது. இப்போது உணர்வுத்தன்மையை அப்படியே அசைவற்று நிலை நிறுத்த வேண்டியுள்ளது. அதாவது காலம் கடந்த, இயக்கமற்ற, பொருள்தன்மை கடந்த அசைவற்ற நிலை அது. அப்படி அசைவற்று நீங்கள் இருக்கும்பொழுது உங்கள் இருப்பு தன்மையான சூட்சும உடல், அங்கிருந்து சகஸ்ராரத்திற்கு ஓர் இணைப்பை ஏற்படுத்துகிறது. அந்த இணைப்பில் காலம் இல்லை, இயக்கம் இல்லை, பொருள் கடந்த நிலை அது.

அநத பிரபஞ்சம் துவங்கிய பொழுதும் எலக்ட்ரான்கள் தோன்றும் வரை காலமேயில்லை , இடமும் இல்லை,பொருளும் இல்லை, வெளியும் இல்லை அதன் பிறகே அனைத்தும் ஏற்பட்டது. இப்போது உங்கள் இருப்பான சூட்சும உடல் அநத ஆதி மூல நிலையான சமநிலைமின் அலைத்தளத்திற்கே சென்று விடுகிறது. இப்படி உங்களின் 350 கோடி வருட பயணம் தன் நோக்கத்தை பூர்த்தி செய்து இனிதே நிறைவுறுகிறது.

விடுபட்டவைகள் இன்னும் நோக்கமறியாது அலைந்து கொண்டிருக்கின்றன.

தியான நிலையின் பொழுது மூலாதாரத்தில் இருந்து செயல்பட்டுவந்த எலக்ட்ரான் செயல்பாட்டை மேல்நோக்கி ஆக்ஞாவை அடைய செய்யும்பொழுது அவைகள் நேர்மின் சக்தியான புரோட்டானுடன் வந்து இணையும் பொழுது அங்கு (அவனிடம்) எதிர் மின் தன்மை செயல் முடிகிறது. அவனது இருப்புநிலையை நியூட்ரான் தளமான இதய மத்தியிலிருந்து மூலநிலையான சகஸ்ராரத்திற்கு நகரும்பொழுது இந்த கணங்களில் இருத்தி நிலை ஆற்றல்கள் சாதகனுக்கு கைக்கூடிவருகிறது. இந்தஆற்றல்கள் அவன்இருக்குமிடத்திலும் அவனையறியாமலும் நடப்பதும் சகஜமான ஒன்றாக இருப்பது பல மகான்களின் வாழ்வில் நிகழ்ந்துள்ளது. எவன் ஒருவன் தொடர்ந்து சமநிலை தூய்மையில் நிற்கிறானோ அவனுக்கு அநுபூதி நிலை வாய்க்கிறது. அவனது இருப்பான இருப்புநிலை ஆதி மூல நிலையான மின் காந்த சமநிலை அலைதளத்திற்கே சென்றடைகிறது. பூரணம் சம்பூர்ணம் ஆகிறது. இப்படி இந்த தோற்ற பிரபஞ்சமும் ஓர் நாள் சம்பூர்ணம் ஆகும். ஆக! அறுதி நிலை உண்மை என்பது மின்னே ஆகும்.

மற்ற அனைத்தும் கனவில் வரும் ராஜ்ஜியம் போல் கலைந்து போவதுவே!

ஓம் பூர்ணமத; பூர்ணமிதம் பூர்ணாத் பூர்ணமுதச்யதே
பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவாவ சிஷ்யதே.
ஓம் சாந்தி, சாந்தி சாந்திஹி.

உயிர் ஒரு கண்ணோட்டம். 23.6.11

உயிர் என்பதற்கு லட்சணம் சுயமாக செயல்படுதல் மற்றும் தன்னைப்போல பிரதி எடுத்தல் ஆகிய இரண்டும் ஆகும். உயிர் ஒரு முறைதான் தோன்றியது. அதில் இருந்து துவங்கி பிரதி எடுத்தலே இன்று இந்த பூமி மீது உள்ள அனைத்துயிர்களுமாகும். அந்த முதல் உயிரை 'ரெப்ளிகேட்டர்' என்கிறார்கள். ஒரு முன்னூறு நானூறு கோடி வருடங்களுக்கு முன் கடலில் மியுரின் , ப்ரைமிடைன் போன்ற கூட்டணுக்கள் நீரோடு கலந்து குழம்புபோல் இருந்தது. இதன் பெயர் பிரைமிவல் சூப். (primeval soup) இவை கட்டிதட்டி கடலோரங்களில் இருக்க - இவற்றின் மீது *1 சூரிய வெளிச்சம் படப்பட (அல்ட்ரா வயலட்) அளவில் பெரிய கூட்டணுக்கள் ஆயின! இந்த கூட்டணுக்களில் ஒரு நாள் ஒரு கணத்தில் ஒரு கூட்டணு மட்டும் தப்பி பிறந்தது. அது ஒன்றும் பெரிய மாலிக்யூல் இல்லை. அதன் பெயர் ரெப்ளிகேட்டர் . இந்த ரெப்ளிகேட்டர் என்கிற எளிய கூட்டணு தன்னைத்தானே பிரதி எடுக்கும் குணம் கொண்டது. இந்த ரெப்ளிகேட்டர்தான் உலகின் முதல் உயிர். இன்று நாமிருக்கும் இந்த பூமியை சூழ்ந்துள்ள உயிர் மண்டலம் இந்த ரேப்ளிகேட்டரிலிருந்து உருவானது தான்.

மனிதன்:

சரீரம்

↓
உறுப்பு
↓
புலன்கள்
↓
திசு
↓
செல்
↓
குரோமோசோம்
↓
டி என் ஏ - ஆர் என் ஏ

டி என் ஏ என்பது ஒரு நீளமான சங்கிலி. நியுக்ளியோ - டைடுகள் என்கிற சிறிய கூட்டணுக்களால் ஆனது. இந்த நியுக்ளியோ - டைடுகள் நான்கே நான்கு வகைதான். A T C G , 1, அடினைன், 2, தயோமைன், 3 , சைட்டோசைன், 4, குவானின். இந்த A T C G கூட்டணுக்கள் மனிதர்கள் மட்டுமின்றி தாவரங்கள், மிருகங்கள் எல்லோருக்கும் பொது. வரிசை அமைப்பிலும் எண்ணிக்கையிலும்தான் வித்தியாசம்.

ஒவ்வொரு குரோமோசோம்களும் ஒரு தகவல் பெட்டகம். அதில் உள்ள ஒவ்வொரு பாராவையும் எக்ஸான் என்றும் இவற்றுக்கிடையில் வருவதை இன்ட்ரான்கள் என்றும், ஒவ்வொரு பாராவின் வார்த்தைகளை கோடான் என்றும் எழுத்துக்களை பேஸ் என்றும் சொல்கிறார்கள். அந்த எழுத்துக்கள் நான்குதான் A T C G இதில் மூன்று எழுத்துக்கள் கொண்டது ஒரு வார்த்தையாகிறது. இப்படி ஒரு மனிதன் 100 கோடி வார்த்தைகளால் ஆனவன். இவ்வளவும் ஒரு செல்லின் நியுகிளியசில் அடங்கியுள்ளது.
உலகில் உயிர் தோன்றிய ஆரம்ப நாள் போராட்டங்களின் *2சுவடுகள் இன்றும் அதில் டிஜிட்டலாக எழுதப்பட்டிருக்கின்றன! டி என் ஏ யின் ஏணிப்படிகளில் எளிய ரசாயனப்பொருட்களில் உள்ள செய்திதான் மனிதன் வாழ்வதற்குண்டான புரோட்டீன்களாக உருவாக்குகிறது. உயிரே நான்கெழுத்து டிஜிட்டல் சரம். ஒரு மூன்றெழுத்து வார்த்தை புரோட்டீனை செய்கிறது. டி என் ஏ : அது ஒரு *3மரணமற்ற சுருள் (immortal coil) என்று, ரிச்சர்ட் டாக்கின்ஸ் சொல்லியிருக்கிறார்.

தாயிடமிருந்து ஒரு செல் (46 குரோமோசோம்கள்) தந்தையிடமிருந்து ஒரு செல் (46 குரோமோசோம்கள்) இரண்டும் கலந்து தாயிடமிருந்து 23 குரோமோசோம்களும் தந்தையிடமிருந்து 23 குரோமோசோம்களும் இணைந்து ஒரு செல் உருவாகிறது. அதுவே நீங்கள். அந்த ஒரு செல் பிரதி எடுக்க துவங்கி 9 மாதத்தில் ஒரு குழந்தையாக உருவாகிறீர்கள். நீங்கள் *4தனி உயிரி அல்ல! மற்ற உயிர்களின் தொடர்ச்சி.

கரு வளர்ச்சி படிநிலைகள்:

1,இனச்செல் வளர்ச்சி,

2,கருவுருதல்,

3, பிளவிப்பெருகல்,

4, இருபடை கருக்கோள்,

5, உருப்புகளமைத்தல்

6, வளர்ச்சி

7, உறுப்பு வேறுபாடுகள்.

இருபடை கருக்கோள்: ஒரு அடுக்கு செல்களையுடைய கருக்கோள் செல்கள் முறையாக நகர்ந்து இரண்டு (புறப்படை அகப்படை) அல்லது மூன்று (புறப்படை நடுப்படை அகப்படை) அடுக்குகளை உடைய ஒரு நிலையான அமைப்பை தோற்றுவிப்பதே இருபடை கருக்கோள் எனப்படும்.

புறப்படை செல்கள் தோற்றுவிக்கும் உறுப்புகள் :மூளை, தண்டுவடம், குருத்தெலும்பு, அட்ரினல், பிட்யூட்டரி, பைனியல், தோலின் மேல்பகுதி, கண், உட்செவி, உடற்பக்க உணர்ச்சி உறுப்பு.
நடுப்படை செல்கள் தோற்றுவிக்கும் உறுப்புகள் : தசைகள், எலும்புகள், சிறுநீரகம், இனப்பெருக்க உறுப்பு, அட்ரினலின் மேல் பகுதி, உடற்குழி எபிதீலியம் இணைப்பு திசு இதயம், நிண நீர், மண்ணீரல்.
அகப்படை செல்கள் தோற்றுவிக்கும் உறுப்புகள் : உணவு மண்டலம், இரைப்பை, சிறுகுடல் சுரப்பி (கல்லீரல் கணையம்) நாக்கு, தைராய்டு பாரா தைராய்டு, பிட்யூட்டரியின் மேல் பகுதி தைமல், செவி உறுப்பு, நுரையீரல், மூல இனச்செல்.

உயிர் என்பது புதிதாக தோன்றுவதில்லை. முதல் உயிர் தோன்றிய காலத்திலிருந்து இந்த செல் பிளவு விடாமல் நடந்து வந்து கொண்டிருக்கின்றது.
தற்கால நிலைகளில் உயிர்கள் தானே தோன்றுவதில்லை. உயிர் என்பது அது தோன்றிய காலத்திலிருந்து செல் பிளவுகளால் - புரோட்டோ பிளாசத் தொடர்ச்சியாக வந்திருக்கிறது. *5சரீரம் இறந்தாலும் அவைகளின் உயிரணுக்கள் புரோட்டோ பிளாசத் தொடர்ச்சியை நிலை நாட்டுகின்றன.

ஒரு கைப்பிடி அளவு மண்ணில் பல லட்சக்கணக்கான பாக்டீரியா செல்கள் இருக்கின்றன!
சாதாரண பாக்டீரியாக்கள் பிளவுபடல் மூலம் இனப்பெருக்கம் செய்கின்றன! ஒரு செல் இரண்டாக பிரிகிறது. துரித வேகத்தில் இது நடைபெறுகிறது. அதிக உணவு

இருந்து எவ்வித தடையும் இல்லாதிருந்தால், ஒரே ஒரு பாக்டீரியா மட்டும் மேற்கூறியவாறு பெருகி ஒரு வாரத்தில் பூமியளவு பாக்டீரியாக்கள் உற்பத்தியாகிவிடுமாம்.

ஒரு செல் உள்ள அமீபாவை இரண்டு பாதியாக துண்டித்து ஒன்றை உட்கரு உள்ளதாகவும், மற்றொன்றை இல்லாததாகவும் எடுத்துக்கொள்வோம். அப்போது உட்கரு இல்லாத பகுதி சிறிது நேரம் அசைந்து பிறகு சுருண்டு செயல்படாமல் இறுதியில் இறந்துவிடும். உட்கரு உள்ள பகுதிகள் சகஜமாக நீடித்து உயிருடன் இருக்கும். ஆகவே இதிலிருந்து உட்கருவை விட்டு தனியாக சைட்டோ பிளாசம் மட்டும் உயிர் வாழ முடியாது என்று தெரியவருகிறது. இது போலவே சைட்டோ பிளாசம் இல்லாமல் உட்கரு சில வினாடிகளுக்கு மேல் உயிர் வாழ முடியாது. இவ்வாறு உட்கருவும் சைட்டோ பிளாசமும் சேர்ந்து ஒரு முறையை அமைக்கின்றது. சைட்டோ பிளாசத்திற்கும் உட்கருவுக்கும் தனித்தனி அலுவல்கள் உண்டு.

டி என் ஏ- இது எல்லா உயிருள்ள பொருள்களின் குரோமோசோம்களிலும் உள்ளன! குரோமோசோம்களில் புரதத்தின் சேர்க்கை நடைபெறுவதில்லை. உட்கருவிற்கு வெளியே *6சைட்டோ பிளாசத்தில் நடைபெறுகின்றது. (சரீரம் இங்குதான் கட்டப்படுகின்றது) இதிலிருந்து ஒரு நடுத்தர தகவல் தாங்கி டி என் ஏ- விலிருந்து சைட்டோ பிளாசத்திற்கு தகவலை கொண்டு சேர்க்கிறது. அந்த தகவல் தாங்கி ஆர் என் ஏ -வாகும். டி என் ஏ -உட்கருவிலும் ஆர் என் ஏ- சைட்டோ பிளாசத்திலும் காணப்படுகின்றது.

மனிதனிடத்தில் தான் நரம்பு மண்டலம் அதன் அபிவிருத்தியின் உச்ச நிலையை அடைந்துள்ளது.

நரம்பு செல்கள் (neurone) தூண்டுதல்களை தாங்கி செல்கின்றன. தனிப்பட்ட நியூரான்கள் ஒன்றை ஒன்று அடுத்து இருக்கின்றன. நரம்பு அணு வெளிச்சம் *7(axon) ஒரு குட்டையான பிரிவின் அல்லது டென்ட்ரைட்டுடன் (dentrite) செயல்படும் முறையில் தொடர்பு கொண்டு இருக்கிறது. ஆனால் அமைப்பு முறையில் தொடர்பில்லை. தூண்டலானது நரம்பணுவில் வெளிக்கம்பியின் முடிவை அடைந்ததும் அங்கு ஹார்மோன்கள் உண்டாகி பரவி டென்ட்ரைட் முடிவை (அடுத்த நியூரானின்) அடைகின்றது. அது புதிய தூண்டுதலை ஆரம்பிக்கிறது. தூண்டுதலானது தாக்குதல்களாக புரோட்டா பிளாசத்திற்கு செல்கின்றது. இங்கு மின் மாறுதல் ஏற்படுகின்றது. நரம்பு செல்லின் வழியாக ஒரு தாக்குதல் கடந்து

சென்ற பின் புரோட்டோ பிளாசம் சிறிது நேரத்திற்கு *8உணர்ச்சியற்றதாகின்றது.
பின் இவ்வுணர்ச்சியை பெறுகின்றது.

*1 ஒளியிலிருந்து தொடங்கப்பட்டது உயிர் என்பதற்கு மேற்கண்ட இந்நிகழ்வு சாட்சியாக இருக்கிறது. இந்த ஒளி எந்த அளவுக்கு உங்களில் துலக்கமாகிறதோ அந்த அளவுக்கு உங்களுக்கு அறிவு தெளிவாகிறது. இந்த ஒளியால் நீங்கள் உங்களின் மூல ஸ்திதியை அடைகிறீர்கள். ஒளி எங்குள்ளதோ அங்கு தூய்மையும், தெளிவும் நிலை கொள்கிறது.

*2 உயிர் தோன்றிய ஆரம்ப நாள் போராட்டங்கள் கூட சுவடுகளாக உங்கள் குரோமோசோம்களில் இன்னும் இருக்கிறது என்றால், அந்த ஆதி முதல் ஒளி நிகழ்வும் அவசியம் உங்கள் குரோமோசோம்களில் பதிவாகியிருக்கவேண்டும். அந்த ஆதிமுதல் ஒளி நிகழ்வுக்கு உங்களை கொண்டுபோகச்சொல்லி உங்கள் குரோமொசொம்களிடம் மன்றாடி கேட்டுக்கொள்ளுங்கள். அங்குதான் உங்களுடைய எல்லா கேள்விகளுக்கும் பதில் இருக்கிறது.

*3 இந்த உயிர் செல் அழிவதில்லை. ஒரு சரீரம் இறக்க நேரிடும்பொழுது அந்த சரீரத்தில் உள்ள செல்கள் தங்களின் புற அமைப்பில் உள்ள (A T C G) தகவல்களை உதறிவிட்டு பூரண தூய்மையோடு வெளியேறி விடுகிறது. அது மரணமற்றது. மரணமடைவது சரீரமே! எது மரணமற்றதோ அதுவே நீங்கள். நீங்கள் இந்த பூமி மீது படர்ந்து உள்ளீர்கள்.

*4 நீங்கள் தனி உயிரி அல்ல! இதில் இரண்டு பொருள் உள்ளது. ஒன்று: நீங்கள் தனியான ஒரு உயிர் அல்ல! உங்களுக்குள் எழுபது டிரில்லியன் உயிர் செல்கள் குடியிருக்கிறது. அந்த செல்களை தவிர்த்து உங்களில் எதுவுமில்லை. நீங்கள் அந்த செல்கள் குடியிருக்கும் கூடு அவ்வளவே!
அந்த கூட்டில் நடக்கும் நிகழ்வுகளில் இருந்து உங்களை நீங்கள் எப்படியோ கண்டுபிடித்திருக்கிறீர்கள் போங்கள். ஒரு பறவையின் கூட்டுக்கு என்ன உயிர் சம்பந்தமோ அதுபோலதான் உங்கள் கூட்டுக்கும். என்ன இந்த கூட்டுக்கு கொஞ்சம் அதிகாரம் உண்டு. அந்த செல்களை பாதுகாக்கும் அதிகாரம். அந்த செல்கள் தங்களை பாதுகாத்துக்கொள்ளும் பொருட்டே இந்த கூட்டை வடிவமைத்துள்ளது. கூட புலன்களையும் கொடுத்திருப்பதால் உங்களுக்கு இந்த நான் என்ற மயக்கம். கூட உணர்வும், அறிவும் இருப்பதால் இதில் விடாப்பிடியாக இருக்கிறீர்கள். அனால் இந்த கூடு ஒரு நாள் அழிந்துவிடும். அனால் இதில் தங்கியிருந்த உயிர் பறவைகள் பறந்து போய்விடும். இரண்டு : நீங்கள் தனி உயிராக புதியதாக ஒன்றும் தோன்றவில்லை. இங்கு ஏற்கனவே தொடர்ந்து உயிரை படி எடுக்கும் வேலைகள் அங்கங்கே தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. இந்த பூமி முழுக்கவும் இந்த வேலையைத்தான் உயிரிகள் செய்து கொண்டிருக்கின்றன! உயிரிக்கு தொழில் இது மட்டுமே! கடலோரம் கிடக்கும் மணல்களில் நீங்கள் ஒரு துகள். அனால் உங்களுக்கு அந்த கடல் அளவு கர்வம். நீங்களாகவே எதுவும் முடிவெடுத்து செய்ய முடியாது. உள்ளிருக்கும் டி என் ஏ உங்கள் சட்டையை பிடித்து கேள்விகேட்கும். அதற்க்கு நீங்கள் அடங்க வில்லையென்றால் எந்த டாக்டராலும் இனம் காண

முடியாத படி ஒரு புது நோயை உங்களுக்கு தரும். உங்கள் லகான் உங்கள் டி என் ஏ விடம் இருக்கிறது. நீங்கள் ஒரு டம்மி பீஸ். இதனாலேதான் நீங்கள் அடிக்கடி பரம்பரை பெருமையை பேசுகிறீர்களா? உழவு வயலில் விவசாயி கைகளால் அடி வாங்கி உழைக்கும் மாட்டுக்கும் உங்களுக்கும் லவலேசமும் வித்தியாசமில்லை.

*5 உயிரணுக்கள் என்றும் மரிப்பதில்லை. நானூறு கோடி ஆண்டுகளாக அது பல்லாயிர பிறவிகளை (சரீரங்களை) சட்டையை கழற்றி வீசுவதைப்போல, கழற்றி வீசிக்கொண்டு வந்திருக்கிறது. நீங்களும் ஒரு பூப்போட்ட சட்டை அவ்வளவே! அது நிலையாக இருக்கிறது. அதை கவனியுங்கள்.

*6 நாம் ஏற்க்கனவே கூறியுள்ளபடி உயிர் செல்லின் அக அமைப்பு கவனம் எனும் தன்னையரிதலான தேடல் மட்டுமே! அதன் புறவமைப்பிலேயே அதன் பாதுகாப்பு சம்பந்தமான சரீர விஷயங்கள் வருகிறது. பல்வேறு சரீரம், பல்வேறு புலனமைப்புகள். அந்த ஆதிமூல கவனம் தனக்கு அடுத்த தளத்தில் பிரவேசிக்க சரீரம் உண்டாகிறது. சரீரத்திலுள்ள புலன் வழியாக பிரவேசிக்க பிரபஞ்சம் உண்டாகிறது. ஒட்டுமொத்த சரீரத்தின் வழியாக பிரவேசிக்க சம்சாரம் உண்டாகிறது. சம்சாரம் வழியாக பிரவேசிக்க சமுதாயம் உண்டாகிறது. சமுதாயம் வழியாக பிரவேசிக்க சண்டை உண்டாகிறது.

*7 வெளிச்சம் இல்லாமல் எதுவும் தெரிவதில்லை. ஒரு நியூரான் செல்லில் துலங்கும் இந்த சின்ன வெளிச்சத்திற்க்கே ஒரு சிறிய தூண்டுகோல் என்றால், உங்கள் நரம்பு மண்டலம் முழுக்க உள்ள அனைத்து நியூரான்களையும் தியானத்தின் மூலம் ஒளி மயமாகவே மாற்றினால் என்னவாகும் சற்று சிந்தியுங்கள். உங்கள் நரம்பு மண்டலத்தில் உள்ள அனைத்து நியூரான் செல்களுமே அந்த ஒளியால் திளைத்தால் உங்கள் நரம்பு மண்டலத்தின் போக்கு என்ன ? அந்த அனைத்து நியூரான்களும் ஒளியால் இணைந்தால் நிகழப்போவது என்ன? உணரும் பொருளே ஒளியாகிப்போனபின் இந்த பிரபஞ்சமே ஒளியாகத்தானே காட்சியளிக்கும். இந்த ஒளியில் நீங்கள் எவ்வளவு நேரம் நிற்கிறீர்களோ அவ்வளவு கர்மவினைகளின் பதிவுகள் அழிகின்றன!நீங்கள் தூய்மையானவர் ஆகிறீர்கள். இந்த உலகிலேயே அதிக அளவு எவன் குற்றம் புரிந்துள்ளானோ, எவ்வளவு பாவ காரியங்களை செய்துள்ளானோ அவனுக்கும் இந்த ஒளி தரிசனத்தினால் விமோசனம் உண்டு. அந்த ஒளியால் எந்த பாவத்தையும் கழுவமுடியும். உங்கள் பாவ வினைகள் ஏதுமிருந்தால் உடனே கழுவிக்கொள்ளுங்கள்.

*8 இது தான் உயிருக்கே உண்டான மாஸ்டர் பீஸ். நாம் ஒரு உணர்வை உணரும் விதம் இவ்விதமாக இருக்கிறது. அந்த நியூரான் செல்லின் உட்கருவான புரோட்டா பிளாசத்திற்கு ஒரு தாக்குதல் செல்லும்பொழுது அங்கு ஒருசிறுமின்மாற்றம்ஏற்பட்டுஅந்ததாக்குதல்கடந்துசென்றபின் புரோட்டோ பிளாசம் சிறிது நேரத்திற்கு உணர்ச்சியற்றதாகின்றது. பின் சற்று நேரத்தில் அது சகஜ நிலையை அடைகின்றது. இதிலிருந்து நாம் அறிய வருவது எந்தவித உணர்வும்

அவ்வப்போதைக்கான நிகழ்வு நிரலேத்தவிர நீடித்த உணர்வு ஒன்று இல்லை. அப்படி நாம் உணரவும் முடியாது. (அப்படி உணர்வதெல்லாம் உங்கள் மனதின் ரசவாதமே!)
இப்படி உணர்வற்று சற்று நேரம் இருப்பதை நண்பர் பார்த்தசாரதி போன்றோர் ஸ்தம்பன நிலை என்கிறார்கள். உயிரின் மூல நிலையே ஸ்தம்பன நிலைதான்.ஒவ்வொரு செல்லின் ஸ்தம்பன நிலையை கடந்து கடந்து தான் சரீரம் உணர்வை கண்டுகொள்கிறது. ஒரு நியூரான் நரம்பணு வெளிச்சமான (AXON) சிறு அளவு வெளிச்சத்திற்கே இந்தளவு பயன் எனில் நமது தியானத்தின் பொழுது துலக்கமாகும் முழுஅளவு ஒளிக்கு எவ்வளவு பயன் கிடைக்கும் என எண்ணிப்பாருங்கள். தவிரவும் உணர்வு மண்டலம் முழுக்க இந்த நியூரான் செல்களே ஆதிக்கம் செய்கிறது. இந்த நியூரான் செல்களையும் ஒளியைக்கொண்டே வேலை வாங்கவேண்டும் போல் தெரிகிறது. வேறு எந்த ககனத்தாலும் அவைகளை தூண்டவோ,துலக்கவோ முடியாது போல் இருக்கிறது. பல தியான அமைப்புகளிலும் இந்த முதுகுத்தண்டை நேராகவைத்து அமருங்கள் என சொல்லுவதை கவனித்திருக்கிறோம். இந்த முதுகுதண்டு என்பது நமது உணர்வு மண்டலமாகும். இந்த உணர்வு மணடலத்தின் வாயிலாகவே நீங்கள் அநுபூதி நிலையை அடைய வேண்டியிருக்கிறது. உங்கள் உணர்வு மண்டலத்தில் உள்ள அனைத்து நியூரான் செல்களையும் உங்கள் தியான ஒளியில் நிறைந்து தொடர்ந்து லயிக்க விடுங்கள். அவைகள் தொடர்ந்து லயித்து ஒளியிலேயே அசைவற்று நிற்கும்பொழுது அது நிகழும். அப்போது அனைத்து நியூரான் செல்களும் உணர்வற்ற நிலையில் ஒரே தன்மையில் ஏகத்தன்மையில் ஒன்றாக இணைவதே அநுபூதி நிலையாகும். அதுவே பரிபூரண நிலையுமாகும்.

* குறிப்பு : ஒரு உயிரின் பாரம்பரிய செயல்முறை, விஞ்ஞான ஆராய்ச்சி சாலையில் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால் ஓர் ஆஸ்ட்ரிய சந்நியாசி மடத்தில் கிரிகோர் ஜோகன் மெண்டல்என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.

பரமபதம்.

இந்த மண்ணின் மீது உயிர் வாழ்க்கையே அந்த இயற்கைக்கு ஒரு பரமபத விளையாட்டாக இருக்கிறது. டி என் ஏ தகவமைப்பில் சில நேரம் திடீர் மாற்றம் ஏற்ப்பட்டு அந்த டி என் ஏ ஒரு உயர்பரிமான நிலைக்கோ அல்லது ஒரு தாழ்வு பரிமாண நிலைக்கோ கொண்டு செல்லப்படுவதுண்டு என மரபியல் அறிவியலார் சொல்கின்றனர். இது ஒருபுறமிருக்க, ஒரு செல் பல கோடி வருடம் படி தவறாமல் ஏறி வந்து உயர் நிலையை அது அடைந்தாலும் அந்த உயர்நிலையில் அது என்ன சரீரம் எடுத்துள்ளதோ அந்த சரீரத்தின் வழியாக வாரிசுகளை உற்பத்தி செய்தாலும் கூட, அந்த சரீரம் வயதாகி இறக்க நேரிடும்பொழுது அதன் சரீரத்தில் உள்ள அனைத்து செல்களும் பரமபத விளையாட்டில் பாம்பின்வாய் சிக்கிகீழே ஆரம்பித்தஇடத்திற்கே தங்கள் துவக்க நிலைக்கே வந்து விடுகிறது.

ஒரு முன்னூற்றைம்பது கோடி வருட காலம் தொடர்ந்து இடைவிடாது ஒரு திவ்ய தேடலோடு வந்துள்ள உங்கள் சரீரத்தில் உள்ள செல்களை இயற்கையின் பரமபத

விளையாட்டில் விட்டு வேடிக்கை பார்ப்பீர்களா? அல்லது இந்த சரீரத்தை தந்தது அந்த செல்கள்தான் இந்த சரீரத்தில் தோன்றிய ஒரு கருத்துருதான் நான். என்பதை ஒரு நியாயமான தன்மையுடன் அணுகி அலசிப்பார்த்து இந்த சரீரம் எப்போது வேண்டுமானாலும் செத்தொழியலாம். கூடவே நானும் செத்தொழிய வேண்டியதுதான். இப்படி வீண் விரயமாகப்போகும் ஒரு வாழ்க்கையை சீர் தூக்கி ஆராய்ந்து நமது சரீரத்தில் ஜீவிக்கும் செல்களை அதன் தேடலான தன்னையறிதல் முழுமை பெற, அதன் வழியாக அந்த செல்களின் அடுத்த உயர்நிலை பரிமாணத்தை அடைய, இந்த கருத்துருவான 'நான்' எனும் மன, உணர்வு சகிதம், என்னைப்படைத்த என் தெய்வங்களான அந்த செல்களுக்கு உறுதுணையாகி அவைகளுக்கு சேவை செய்வதே பாக்கியமாக கருதி என்னை அவர்கள் வாழ்க்கைக்கு அர்ப்பணிக்கிறேன் என்று சத்தியத்துக்கு கட்டுப்பட்டு என் செல்களுக்கு சேவை செய்தே என்னை கரைத்துக்கொள்வேன் என உறுதி பூண்டு , இதுவரை எந்த சரீரத்தை, சரீரம் சார்ந்த வாழ்வு முறையை உண்மை என நம்பி வாழ்க்கை முறையை வாழ்ந்து வந்தேனோ அந்த முறையை இனி மாற்றி - அதை கை விட்டு - என்னை உருவாக்கிய என் தெய்வங்களான எனது செல்களின் உயர் கதிக்கு தேவையான ஒரு சரீர வாழ்க்கையை இனி மேற்கொள்வேன்.

தார்மீக சிந்தனை, தார்மீக உணர்வு உள்ள எவரும் இதை கடந்து போக மாட்டார்கள் என்பது உறுதி. அந்த செல்கள் தங்களின் பாதுகாப்புக்காக சரீரங்களை உருவாக்கி வந்திருந்தாலும் இந்த சரீரங்களுக்கும் வாழ்க்கையை கொடுத்தே வந்துள்ளது. பாதுகாப்புக்கூடவே,இந்த சரீரத்திற்கு சில வாய்ப்புகளையும்
நல்கி இருக்கிறது. செல்கலாகிய தாங்கள் தன்னையறியும் பொருட்டே ஒரு திவ்ய தேடலுடன் வந்திருக்கிறது. அதன் தேடல் பரிமாணமே ஒரு மனித சரீரத்தின் வழியாக துலக்கமாகிறது. இங்கு ஒரு விஷயத்தை நாம் ஆழ்ந்து கவனிக்க வேண்டும். அந்த செல்கள் தங்களை தானறிதல் எனும் அநுபூதி நிலையில் அவைகள் ஒரு ஏகத்தன்மையை மட்டுமே அடைகிறது. அப்பொழுது ஏற்படும் ஒரு பூரண உணர்வு(முற்றுணர்வு) , பூரண அறிவு (முற்றறிவு) மற்றும், இதயத்தை முன் நிறுத்தி செய்யும் தியான நிலைகளில் வாய்க்கும் இருத்தி நிலைஆற்றல்கள் இவைகள் யாவும் உங்கள் சரீரத்திற்க்கே அன்றி உங்கள் செல்கள் இதை உணர்வதில்லை,அறிவதில்லை. இது உங்கள் சரீரத்திற்கு கிடைக்கும் பரிசு. இந்த சரீர உன்னதத்தையும் நீங்கள் (சரீரம்) அனுபவிக்க முடியும்.

செல் தள வாழ்க்கை முறையை இனி மேற்கொள்வோம். செல் தள வாழ்க்கை முறை என்பது சக ஒரு செல்லையும் தன்னைப்போல் பாவித்து, யாதொரு செல்லுக்கும் தீங்கிழைக்காமல் வாழ்வை நடத்துவது. அதாவது யாதொரு
செல்லின் தொடர் பயணத்தையும் இடையூறு செய்யாத வண்ணம் என்று பொருள்.

இந்த சரீரத்தை முழுமையாக அதன் அனைத்து தாத்பர்யங்களுடன் தன்னுள் இருக்கும் செல்களிடமே அர்ப்பணித்து விடுதல் என்பது பக்தி நிலைகளிலேயே மேன்மையான பக்தி நிலையாகும்.

சமநிலை உணர்வு. 29.6.11

'நரம்பு இழைகள் மூலம் கடத்தப்படும் துள்ளலைகள் அடிப்படையிலேயே எல்லாம் ஒன்றைப்போன்றே மற்றொன்று இருக்கிறது. 'உணர்சிகள் நரம்புகளின் மூலம் கடத்தப்படுவதில்லை'. கடத்தப்படுவது மின்சார வெள்ளமே! துள்ளளைகளை உண்டு பண்ணுவது அது வெப்பம் உணர்த்தும் உறுப்பானாலும் சரி, அல்லது தொடுதல் உணர்த்தும் உறுப்பானாலும் சரி, நரம்பில் பாய்வது மின்சாரமே! மூளையில் தான் தூண்டுதல் என்னவென்பது அடையாளம் காணப்படுகிறது. அதுவும் மூளையின் எந்தப்பகுதியினுள் துள்ளலை நுழைகிறதோ அதைப்பொருத்தது'. நாம் அனுபவிக்கும் உணர்ச்சிகள் நமது மூளைப்பகுதிக்கு எந்தெந்த இடத்தில் (தூண்டலுக்கேற்றவாறு) அந்த மின் சிற்றலை வந்து சேருகிறதோ அதற்க்கேற்றாற்ப்போல் நமக்கு உணர்ச்சி தோன்றுகிறது. அதாவது மூளை அங்கு உங்களுக்கு ஒரு வித்தியாசமான உணர்வை உருவாக்குகிறது. மூளையில் நடக்கும் வேதியல் வினையே உணர்வுகள். நாம் அவைகளை வெறும் வேதியல் வினைகளாக கவனித்தோமானால் நமக்கு உணர்ச்சி பேதம் இருக்காது. உணர்ச்சித்தன்மையில் நாம் சமநிலையில் இருக்க முடியும் . எல்லாம் வெறும் மின்னின் விளையாட்டுகளே!

மேற்கண்ட தகவல் ஒன்பதாம் வகுப்பு அறிவியல் புத்தகத்தில் உணர்ச்சி உறுப்புகள் எனும் பாடத்தில் வருகிறது. இதன் மூலம் நமக்கு தெரிய வருவது என்னவெனில் நாம் உணரும் உணர்வுகள் வெறும் மின் சமிக்ஞைகளே! நமக்கு ஏற்படும் உணர்வுகள் எல்லாமே வெறும் மின் சிற்றலைகள் (துள்ளலைகள்.) அது எப்படி நம் நியூரான் செல்களின் வழியாக மூளைக்கு வருகிறது என்பதையும் இப்போது பார்ப்போம்.

பெருமூளை அரைக்கோளங்களில் குறிப்பிட்ட பகுதிகள் உடலின் குறிப்பிட்டப் பகுதிகளை பாதிப்பதாக உள்ளன! அல்லது குறிப்பிட்ட பொறிகளிலிருந்து வரும் துள்ளலைகளை பெறுவதாக இருக்கும். எல்லா பொறிகளிலிருந்தும் துள்ளலைகளை பெறுவதாக அமைந்துள்ளதும் ,பெற்றபின் செயல் துள்ளலைகளை சுரப்பிகளுக்கும், தசைகளுக்கும் அனுப்பி அவை முறையாக செயல்பட காரணமாக இருப்பதும் பெருமூளைப்பகுதியாகும். தொடர்பு மையங்களில் வெவ்வேறு பொறிகளிலிருந்து வரும் வேறு வேறு தூண்டல்களை ஒன்றோடொன்று தொடர்புபடுத்துவதும் பெருமூளைப்பகுதியேயாகும்.
பெருமூளை அனுபவ விபரங்களை சேர்த்து வைக்கிறது அதனால் இயங்கு முறைகள் கடந்த கால அனுபவத்திற்கு தக்கவாறு மாற்றியமைக்கப்படுகிறது.

நரம்பு இழைகள் மின்சார துள்ளலைகளைமுழு நீளத்திற்கும் மிக விரைவாக எடுத்துசென்று அடுத்துள்ள நரம்பு செல்லுக்குக் கடத்தும் தனிப் பண்பை

உடையன! ஆனால் கம்பியில் மின்சாரம் கடத்தப்படுவதற்கும், நரம்பில் மின்சாரம் கடத்தப்படுவதற்கும் ஒரு வேறுபாடு உண்டு. ஆக்சான் (AXON) தனக்குள்ளே மின்னேற்றத்தை அதிகப்படுத்துகிறது. நரம்பு தூண்டப்படும்போது அது விடுவிக்கப்படுகிறது. அடுத்த துள்ளலை கடந்து செல்வதற்குள்,ஆக்சான் தனக்குள்மின்னேற்றத்தை மிகுதிப்படுத்துகிறது.
நாம் நம்முடைய பதற்றத்தை அதிகரிப்போமானால் இந்த ஆக்சான் இன்னும் அதிக அளவில் மின்னேற்றத்தை செல்களுக்கு ஏற்படுத்தும். நமது பதற்றமே ஒரு வலிமையான தொடர் தூண்டுதலாகும். நாம் சமநிலையை அனுசரித்துக்கொண்டிருந்தால் நம்மில் நடக்கும் அனைத்துமே ஒரு சீரான லயத்துக்கு வரும். அது ஒரு ஒழுங்குப்பட்ட இயக்கமாகவே அறியப்படும். வலியோ மற்ற முரணான உணர்வுகளோ நம்மை பாதிப்பதில்லை.

செல்நிலை தியானம். 27.6.11

நமது சரீரத்தை நாம் நமது செல்களிடம் ஒப்படைத்து விட்ட பிறகு, நாம் செய்யும் தியானமானது சரீரம் சம்பந்தப்பட்டதாக அல்லாமல் நமது செல்களை சம்பந்தப்பட்டதாக இருக்கும். இதுவும் நாம் எப்பொதும் செய்யும் தியானமே தான். ஆனால் கவன நிலை மட்டும் செல்களின் கவன நிலையாக இருக்கும். ஒரு ஆழ்ந்த சுவாச பயிற்சியை எடுத்துக்கொண்ட பிறகு வஜ்ஜிராசனம் இட்டு அமர்ந்து ஓம் மந்திர உச்சாடனத்தை தொடர்ந்து உச்சரிக்க வேண்டும். அப்படி உச்சரிப்பது நமது செல்களுக்கு கட்டுப்பட்டு நடக்கும் நமது தேகமேயாகும். அதாவது இந்த ஓம் மந்திரத்தை மட்டும் நமது தேகம் நமது செல்களுக்கு கட்டுப்பட்டு செய்ய வேண்டும். ஒரு அனிச்சை செயலாக. நமது தேகம் கண்டபடி சுதந்திரமாக செயல்படுதல் கூடாது. அப்போது தேகத்தின் வேலை ஓம் மந்திரத்தை உச்சரிப்பது மட்டும்தான். இப்படி நமது தேகம் நமது செல்களின் கட்டுப்பாட்டுக்குள் வரவேண்டும். அப்போது உங்களுக்கு எந்த சிந்தனையோ, உடலின் பிற உணர்வுகளோ தோன்றாது. இப்படி நிலவுகையில் தன்னிச்சையாக உங்கள் அனைத்து செல்களும் விழிப்பதை காண முடியும்.

எனது அனுபவத்தை சொல்கிறேன். நான் வஜ்ஜிராசனமிட்டு அமர்ந்து கொண்டேன். ஓம் மந்திரத்தை உச்சரிக்க தொடங்கியவுடன் மனதில் ஏதோ எண்ணம் தோன்றியது. உடனே எனது கவனம் என் சரீரத்தைப்பார்த்து " நீ முழுவதுமாக உன்னை செல்களிடம் ஒப்படைத்தது உண்மையானால் நீ சுயமாக எதுவும் செயல்படக்கூடாது" என்று சொன்னது தான் தாமதம் என் சரீரம் முழுமையாக தன்னை அனைத்து செல்களிடமும் ஒப்படைத்து விட்டு ஓம் மந்திரத்தை மட்டும் உச்சரிப்பதில் கவனம் கொண்டது. அதுவும் கூட சிரமப்படவேண்டியதில்லாமல் கடிகாரத்திற்கு சாவி கொடுத்து விட்ட

மாதிரி தன்னிச்சையில் சற்று நேரத்தில் லயமாகி நடந்து கொண்டிருந்தது. எனது செல்கள் விழித்தது. ஒரு பெரிய தீ ஜ்வாலை எனது மூலாதாரம் பற்றி மேல்நோக்கி உயர்ந்து எரிகிறது. ஆனால் கொஞ்சமும் வெப்பமில்லை. என் தேகமே வெறும் தீஜ்வாலைதான் .தீ எரியும்பொழுது கேட்க்கும் சடச்சட சப்தம் மட்டும் கேட்டது. தேகம் கனன்றது. முதுகுத்தண்டு ஒளி ஸ்தம்பமாக நின்றது. புருவ மத்தியில் சூரியனை உற்றுப்பார்க்கும் பொழுது காணும் வட்டவடிவ 'திகரி' என்பார்களே அதுபோல் இருந்தது. எனது கவனம் ஒரு பரந்த அளவில் எல்லையற்ற நிலையில் இருந்தது. அப்படியே இத்தியானம் தொடர்ந்தது. சரீரம் எப்போது ஓம் மந்திரத்தை உச்சரிப்பதை நிறுத்தியது என்பது எனக்கு தெரியாது. அது செல்களுக்கு தெரிந்திருக்கும்.

ஒளியை துலங்க விடுங்கள்.

நாம் ஒளி என்றால் அது ஒரு வெளிச்சம் என்கிற அளவில் மட்டும் எடுத்துக்கொள்கிறோம். என்சைக்ளோபீடியா என்ன சொல்கிறது என பார்க்கலாம்."ஒளி என்பது, பொதுவாக அகச்சிவப்புக் கதிர்களுக்கும் புற ஊதா கதிர்களுக்கும் இடைப்பட்ட அலை நீளம் கொண்ட மின்காந்தக் கதிர் வீச்சுகள் என்றும், 'ஒளியினுடைய அலைநீளம் 0.01நானோ மீட்டர்(காமாக்கதிர்) முதல் ஒரு கிலோமீட்டர் (ரேடியோ நீல அலை) நீளம் வரைக்கும் உள்ளது'.என்கிறது. இதில் 400 நானோ மீட்டர் முதல் 700 நானோ மீட்டர் அளவுள்ள ஒளியான வெளிச்சம் மட்டுமே நமக்கு கட்புலனாகிறது. நமக்குள் எங்கிருக்கிறது ஒளி என்று நீங்கள் கேட்கிறீர்கள். இதை அடுத்து பார்ப்போம். அதற்கு முன் இன்னொன்றை பார்ப்போம். நமக்கு ஒளியைப்பற்றி எப்படித்தெரியுமென்றால் ஒளி சூரியனிலிருந்து வருகிறது. அந்த ஒளியால்தான் நமக்கு எல்லாபொருட்களும் இருப்பது தெரிகிறது. இரவில் நட்சத்திரத்திலிருந்தும் ஒளி வருவதை கண்டிருக்கிறோம். மற்றபடி நிலவொளியை கண்டிருக்கிறோம். அப்புறம் மின் ஒளியை காண்கிறோம். அது எப்படியாயினும் ஒளி வெளியிலிருந்து தான் வருகிறது. சரி, சூரியனில் எப்படி ஒளியுண்டாகிறது? அது சூரியனில் உள்ள அணுக்கருக்கள் இணையும்பொழுது , அணுக்களிலிருந்து வெளிப்படுவதே ஒளியாகும். ஒரு கொசுறு தகவல்;- சூரியனின் எடை மட்டுமே சூரிய மண்டலத்தின் நிறையில் 98.6 சதவிகிதத்தைக் கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது - ஒளிச்சேர்க்கையின் போது தாவரங்கள் சூரிய ஒளி ஆற்றலை வேதியல் ஆற்றலாக மாற்றுகின்றன. ஆக! ஒளி அணுக்களிலிருந்து வெளிப்படுவதாகும். அது விண் மீனாகட்டும், சூரியனாகட்டும் ஒளி உற்பத்தியாவது அணுக்களிலிருந்து தான். அந்த அணுக்கள் நம் உடலிலும் உள்ளது. நம் செல்களின் கருவிலும் ஒரு

நுட்பத்தன்மையில் ஒளியிருக்கிறது. நம் செல்லின் உட்கருவில் ஒளியும் கவனமும் மட்டுமே இருக்கிறது. நாம் தியானத்தில் நமது சரீர புலனுணர்வுகளைத்தாண்டி (கடந்து) நம்முள்ளிருக்கும் செல்லின் உட்கருவிலிருக்கும் ஒளியையும்,கவனத்தையும் ஆழ்ந்து தியானிக்க ஒளிதுலங்குவதை காணமுடியும். அந்த ஒளி இப்பிரபஞ்சம் முழுக்க படர்வதையும்,உங்கள் கவனம் விரிவடைத்து, விரிவடைத்து ஒரு அகண்ட கவனம் துலங்குவதையும் காணமுடியும். இப்போது உங்களிடம் அகண்ட கவனமும், அகண்ட ஒளியுமட்டுமே இருக்கும். உங்களுள்ளிருக்கும் அனைத்து செல்களிலும் ஒளி சுடர ஆரம்பித்துவிடும். இங்கு ஒரு கொசுறு தகவல் ;- உயிரணுக்கள் மனிதக்கண்ணின் பார்வை புலத்தினை விடவும் ஐந்து மடங்கு சிறியளவான 10 முதல் 20 மைக்ரோ மீட்டர் (1000 µm= 1mm) விட்டம் கொண்டதாக காணப்படுவதையும், ஒளியூடுமை (ஒளியை ஊடுபுக விடும் தன்மை) கொண்டிருப்பதையும் குறிப்பிடலாம். எது எப்படியோ நாம் நம்மை ஒரு செல்லாக பாவித்து அதன் உட்கருவிலிருக்கும் ஒளியையும், கவனத்தையும் துலங்க வைக்க முடியும். அந்த ஒளி துலங்கினால், நமக்கு நன்மைகள் துலங்கப்போகிறது என்று அர்த்தம்.

அதிர்வலைகள்.

நாம் இப்போது அதிர்வலைகளைப்பற்றி பார்க்கலாம். இந்த பிரபஞ்சமே அதிர்வலைகளால் உருவாகி இருப்பது தான். அதாவது பல்வேறு அதிர்வுகளாலான பொருட்களால் ஆனது. அதாவது மின்காந்த அலைகளாலானது . இந்த மின்காந்த அலையான ஒளியின் அதிர்வு 0.01 நானோ மீட்டரில் இருந்து 100 கிலோ மீட்டர் வரையிலும் இருப்பதாக அறிவியலார் சொல்லுகின்றனர். இந்த அலைவரிசையில் நமக்கு கட்புலனாவதோ - ' பொருள்களிலிருந்து உமிழப்படும் அல்லது எதிரோளிக்கப்படும் கண்ணுறு ஒளியைக் கொண்டு நம்மைச் சுற்றி நடைபெறுவனவற்றை பார்க்கவும் அறியவும் முடிகிறது. இதன் அலைநீள நெடுக்கம் 4000 A முதல் 8000 A உள்ளது' என என்சைக்ளோபீடியா சொல்கிறது. இந்த அலைவரிசைக்கு கீழுள்ளதையோ, மேலுள்ளதையோ நம்மால் அறிய முடிவதில்லை. ஆனால் இப்பிரபஞ்சம் எல்லா அலைவரிசையிலும் தான் உள்ளது. மின்காந்த அலை மூலம் மின்காந்த சக்தி பயணிக்கின்றது. பொதுவாக மின்காந்த சக்தியை மின் சக்தி என்றே கூறுவர். வீச்சு, அதிர்வு எண் மாற்றுவதன் மூலம் மின்காந்த அலைமூலம் தகவலையும் பரிமாறலாம்.

இன்னொரு தகவல்: மின்காந்த அலையை, அலை எண்ணை கொண்டு பல வேறாகவகைப்படுத்தலாம்.அவ்வாறுவகைப்படுத்தும்மின்காந்தஅலைகள்வெவ் வேறுதன்மைகளைகொண்டிருக்கும்.

காம்மா அலைகள் (10^{10} - 10^{13} GHz)

ஊடு கதிர் அலைகள் (10^{8} - 10^{9} GHz)

புற ஊதா கதிர்கள் (10^{6} - 10^{8} GHz)

ஒளி அலைகள் (10^{5} - 10^{6} GHz)

அகச்சிகப்பு கதிர்கள் (10^{3} - 10^{4} GHz)(

மைக்ரோ வேவ் அலைகள் (3 - 300 GHz)

ரேடியோ அலைகள் (535 kHZ - 806 MHz)

நிறைநிலையடைந்த அனுபூதிமான்களாகிய மகான்கள் இந்த பிரபஞ்சத்தை அனைத்து அலைவரிசையிலுமே அறிகிறார்கள். இதற்கு பல மகான்களின் கருத்துகளை உதாரணம் காட்டமுடியும். இங்கு வெவ்வேறு உயிரினங்கள் வெவ்வேறு அலை வரிசைகளில் நுகரக்கூடியதாகவும் அறிய வருகிறோம்.நாம் செய்யும் தியானத்தில் ஒலியின் ஓம் எனும் அதிர்வின் மூலம் நமது அதிர்வெண்ணில் (frequency) மாற்றத்தை கொண்டுவரமுடியும்.

இந்த தோற்ற பிரபஞ்சம் தோன்றுவதற்கு முன் மின் காந்த அலைகள் ஒரு சீரான சமநிலையில் (அலைவரிசையே இல்லாது ஒய்வு நிலையில்) இருந்துள்ளது. அந்நிலை இப்போதும் அடிப்படைத்தன்மையில் அப்படியே உள்ளது. அந்த அலைவரிசையற்ற சீரான மின்காந்த சம நிலையை அடைவதே நிறை நிலையாம் அநுபூதிநிலை என்பது. எக்கணமும் அந்நிலை அனைத்து அணுக்களிலும் உள்ளார்ந்து நிலை நிற்கிறது. மனித உயிராகிய நமது ஒவ்வொரு செல்லின் அடிப்படை கருவிலும் அந்நிலை, அந்தர் தியானம் எனப்படும் ஓர் ஒடுக்க நிலையில் உள்ளார்ந்து உள்ளது. இந்நிலையை நம் செல்கள் அடைந்து 'நிறைநிலையாவதே' நமது செல்களின் நோக்கமாகும்.

செல்லின் அடிப்படை கருவாயுள்ள இந்த அந்தர் தியானமென்னும் ஒடுக்க நிலையையே இந்துமத முனிவர்கள் பிரம்மம் அல்லது கடவுள் என்றும், புத்தர் இதை சூன்யம் என்றும், ஏசு பிதாவே என்றும் , நபி உருவமற்ற கடவுள் அல்லா என்றும் அவரவரும் அவர்கள் புரிந்து கொண்டபடி இதற்கு ஒரு பெயரிட்டுள்ளனர். மக்களும் அந்த கடவுளர்களை கண்ணுக்குத்தெரியாத விண்ணுலகில் எங்கோ இருப்பதாக எண்ணிக்கொண்டு தோற்றமளிக்கவில்லையே என வருத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றனர். இதையே தான் மதவாதிகள் கடவுள் உங்களுள்ளேயே இருக்கிறார் என்கிறார்கள்.

. நாம் நமது தியானத்தில் ஓம் எனும் அதிர்வை நமது செல்களுக்கு உண்டாக்கி, செல்கள் அனைத்தையும் ஒருணர்வுக்கு ஓரதிர்வுக்கு கொண்டுவந்து அந்த அதிர்வு நிலையை சீராக குறைத்துக்கொண்டே வந்து அதிர்வு சற்றும் இல்லாத வெறுமை நிலையில் நிற்பீர்களானால், உங்களுள் இருக்கும் அந்த ‘அந்தர் தியான நிலை’ உங்கள் உடலிலும் உங்கள் உயிரிலும் பாய தொடங்கும். மனிதனுடைய அலைவரிசையான அதிர்வெண்ணை அவனில் நிர்ணயிப்பது அவனது சுவாசமேயாகும். நீங்கள் எவ்வளவு மெதுவாக சீராக சுவாசத்தை எடுக்கிறீர்களோ அதற்கேற்ற அதிர்வெண் தகவமைப்பு மாறுபடுகிறது. எவ்வளவுக்கெவ்வளவு மெதுவான சீரான தன்மையில் சுவாசிக்கிறீர்களோ அவ்வளவுக்கவ்வளவு மீச்சிறு பொருட்கள் (செல், அணு) உங்கள் உடலில் விழிப்பு நிலையை அடைகின்றன! அதையும் கடந்து சுவாசம் மிக சீராகி சுவாசமே அசைவற்று நிற்றல் (மின்காந்த அலைவரிசையை கடந்து , மின்காந்த - அலைவரிசையற்ற -சமநிலையில்) செல்லின் உள்ளொடுங்கியுள்ள அந்தர் தியானமெனப்படும் பூரண நிலையில் நிற்றலாகும். அணு மூலக்கூறுகளாலான செல்லின் உட்கருவமைப்பும், பிரபஞ்சத்தின் உட்கருவமைப்பும் ஒன்றேதான். வேறு வேறு அல்ல. செல்களின் வெளிப்புற சரீர அமைப்பே அலைவரிசைகளுக்கு கட்டுப்படுவது. அதேப்போல பிரபஞ்சத்தின் சரீர அமைப்பே அலைவரிசைக்கு கட்டுப்பட்டது.

உள்ளிருக்கும் 'நிறைநிலை' சுத்த சுயம்புவாகும்.

தியானத்தன்மையின் அடிப்படை.

நாம் தியானிக்கும்பொழுது நமது புருவ மத்தியான ஆக்ஞாசக்கரத்தில் ஒளி துலங்குவதைக் கண்டிருக்கிறோம். அந்த ஒளி நிலையிலேயே பல நாட்கள், தான் தொடர்ந்து நீடித்திருந்ததாக பகவான் ராமகிருஷ்ண பரமஹம்சர் சொல்லியிருக்கிறார். "எங்கும் ஒரே ஒளிவெள்ளமாக இருந்தது, ஒளியைத்தவிர வேறு எதுவுமேயில்லை" என்றும் கூறியிருக்கிறார். இந்த ஒளியைப்பற்றி கூறாத அனுபூதிமான்கள் கிடையாது. நமது வள்ளலார் இதை அருட்பெருஞ்ஜோதி என்கிறார். ஜோதியைத்தவிர்த்து வேறொன்றும் இல்லை என்கிறார். இந்த ஜோதி நாம் தியானிக்கும் பொழுது நமது புருவ மத்தியான ஆக்ஞாசக்கரத்தில்துலங்க காரணம் என்ன?

நாம் அனைவரும் மற்றும் இங்குள்ள பொருட்கள் அனைத்தும், மற்றும் இந்த பூமியும், மற்றும் இந்த சூரிய குடும்பமும், மற்றும் அனைத்து முழு பிரபஞ்சமும் மின் காந்த அலைகளால் உருவானவைகள்தான்.மின்காந்த அலையைத்தவிர வேறொன்றும் இல்லை. இந்த மின்காந்த அலைகளே நியூட்ரான், புரோட்டான் மற்றும் எலக்ட்ரான் ஆகிய மூவித மின் துகளாகிறது. இந்த மூவித துகள்கள் பல்வேறு நிலைகளில் இணைந்தே பல்வேறு அணுக்கள்

ஆகின்றன! வெவ்வேறான அணுக்கள் இணைந்து மூலக்கூறுகள் ஆகின்றன! பின் பொருளாக இப்படி பிரபஞ்சமாக விகசித்து நிற்பதும் இந்த மின்காந்த அலைகளே! இந்த மின்காந்த அலையானது ஒளித்தன்மையானதாக இருக்கிறது. இந்த ஒளியின் முழுத்தன்மையையும் நமது புலனால் அறிய முடிவதில்லை. "அலைநீளம் - 700 நானோமீட்டர்கள் முதல் 400 நானோமீட்டர்கள் வரை. நம் கண்ணுக்கு தெரியும் ஒளி அலைவரிசைகள் மிகக் கொஞ்சம் தான். வானவில்லின் ஏழு வர்ணங்களான VIBGYOR எனப்படும் வயலட் முதல் சிவப்பு வரை உள்ள இந்த அலைகளிலேயே நாம் காணும் அனைத்து வண்ண ஜாலங்களும் அடக்கம்." என்கிறது என்சைக்ளோபீடியா. "மின்சாரமும், காந்தமும் ஒருவிதமாகச் சேரும்போது ஏற்படும் சக்தியின் வெளிப்பாடே மின்காந்த அலைகள் ஆகும். இது பூமியிலிருந்தும், இந்தப் பிரபஞ்சத்தில் உள்ள எல்லாப் பொருட்களிலிருந்தும் இயற்கையாகவே எழுகிறது." என்கிறார்கள் அறிவியலார். நமது அனுபூதிமான்கள் இந்த ஒளியை 'ஒளித்தேவதை' என்றும் வர்ணித்துள்ளனர். இந்த "ஒளியிடம் தன்னை அர்ப்பணித்து விடல் வேண்டும்" என்கின்றனர். ஒளியிடம் தன்னை அர்ப்பணித்து விடல் என்பது என்ன? அதாவது தன்னை என்றால் (நமது பொருள் சார்ந்த வாழ்வமைப்பை என பொருள்.) நம்மை நாம் எப்படி அறிகிறோம்? நம்மை ஒரு (உடல் எனும்)ஸ்தூல பொருளாகவே நாம் நம்மை அறிகிறோம் அல்லவா? நாம் ஒரு பொருளாக இருந்து நோக்கும் தன்மையைத்தான் ,'நான்'என அறிகிறோம். அதாவது இந்த (நாம்) பொருள், 'அடிப்படையில்' எதனால் உருவாகியுள்ளது எனப்பார்த்தால் அது மின்காந்த அலையாலேயே உருவாகியுள்ளது உண்மை என தெரிகிறது. நாம் நம்மில் உள்ள பல்வேறுத் தன்மைகளான அணுத்தன்மை, செல்தன்மை, திசுத்தன்மை, உறுப்புத்தன்மை மற்றும் முழு ஸ்தூலத்தன்மை (உடல்) ஆகிய தன்மைகளில் உடல் எனும் முழுஸ்தூலத்தன்மையையே கடைப்பிடித்து வருகிறோம். அதாவது உடலிலுள்ள புலன்களின் வழியாக! இந்த பொருட்தன்மையையே அந்த மின்காந்த ஒளியாகிய புருவ மத்தியில் தோன்றும் ஒளியிடம் அர்ப்பணித்து விட சொல்கின்றனர். அதாவது நான் எனும் மனம்,உணர்வு, செயல் அனைத்தையும் அந்த ஒளியிடம் அர்ப்பணிக்கும் பொழுது நமது மூல நிலையான அந்த மின்காந்த ஒளியானது முழுமையாக துலங்கும். அதாவது நாம் பொருள் தன்மையில் செயல் படாது 'சும்மா' இருந்தால், தனது மூல நிலையான மின்காந்த ஒளி துலங்குகிறது. இதுவே தியானித்தல் எனும் பொருளாகும். இந்த பிரபஞ்சத்தில் எந்த ஒரு உயிர் இந்த மின்காந்த அலையின் அனைத்துவித அதிர்வெண்களிலும் பிரவேசிக்க முடிகிறதோ அந்த உயிர் ஓர் நிறைநிலை அடைந்த உயிராக கொள்ளப்படும். மகா பரி நிர்வாணம் என இதை அழைக்கிறார்கள். நிர்வாணா என்பது நமது குறைபட்ட அதிர்வெண் ஆற்றலை துறத்தல் ஆகும். இதுவே அனைத்துயிரின் நோக்கமும் ஆகும். இந்த பிரபஞ்சத்தில் உள்ள எந்த ஒரு உயிரும் இந்த நிறைநிலை தன்மைக்கு முயற்சித்தால் நிச்சயம் விரைவில்கைக்கூடிவரும்.

முடிவுரை :

எது உண்மையில் உள்ளதோ என அதை காண புறப்பட்டு, கண்டு பின் அதைப்பற்றி இந்த சமூகத்திற்கு போதனை செய்ய, அதுவே ஆன்மீகமாக, மதமாக நிறுவனமாக மாறிவிட்டது. ஒரு தனி நபரின் தேடல் கோடிக்கணக்கான மக்களின் வழிகளை திசை திருப்பிவிடுகிறது. இது இப்படித்தான் அமைப்பு ரீதியாக நடைபெறுகிறது. இன்னும் சற்று கூர்ந்து நோக்கினால் சில அமைப்புகளில் ஒரு தனி மனிதன் இது போன்ற உண்மையைப்பற்றிய தேடல் விஷயங்களில் அவன் சுதந்திரமாக (அவன் கடைபிடிக்கும் மதத்திற்கு வெளியே) கூட யோசிக்கவோ, கருத்து பரிமாற்றம் செய்யவோ, செயல்படவோ கூட முடியாத நிலை இருக்கிறது இன்று.

நான் ஒரு தனி மனிதன் எனக்கு எந்த கட்டுப்பாடும் பிடிக்கவில்லை. நான் சர்வ சுதந்திரமானவன். எனக்கு வேண்டியதை நானே தேடிக்கொள்கிறேன். நான் முட்டாளில்லை. இதற்கு முன் என்ன சொல்லியிருக்கிறார்களோ அதை நான் கவனித்து அதில் உள்ள உண்மையை மட்டும் தேர்ந்து கொள்கிறேன். நான் யாருக்கும் போதிக்கவுமில்லை. நான் தேடும்பொழுது எனக்கு இப்படித்தான் அது வெளிப்பட்டது. உங்களுக்கு வேறுமாதிரியும் அது வெளிப்படலாம். ஆனால் அது எப்பொழுதும் அப்படியேதான் இருக்கிறது. கருத்து நிலையிலிருந்து அதை சொன்னால் அது சூன்யம். அதனுடைய நிலையிலிருந்து சொன்னால் அது தான் அனைத்தும்.

அறுதி உண்மை இவ்வளவுதான் என அறிந்த பின் அனைத்து மாயா நிலைகளும், கற்பனை நிலைகளும், கருத்து நிலைகளும் ஒரு நிழல் உலகாக அலைவது தெரிகிறது. இதை (அறுதி நிலையை) அனுபவமாக கொண்டுவர ஒரு இறப்பியல் பாவனைஅனுபவம் நமக்கு தேவைப்படுகிறது. இதை நீங்களே தனிமையாக கற்பனையில் இறந்து உங்கள் விருப்பப்படி எரித்தோ, புதைத்தோ விடலாம். இந்த சரீரத்தை. கற்பனை நிகழ்வை படிப்படியாக ரசித்து உணருங்கள். எப்படியாயினும் இது ஒரு நாள் நிகழப்போவது என்னவோ உண்மைதான், அல்லவா!

உங்கள் சரீரத்தை. அப்படி தொலைத்த பின் ஒரு வெறுமை அல்லது சூன்யம் உதிக்கும்.எவ்வளவு நேரம் இந்த சூன்ய நிலையில் இருக்க முடியுமோ அவ்வளவு நேரம் இருங்கள். அது ஒரு பரிபூரண ஓய்வு நிலை. இந்த கற்பனை அனுபவத்தை நீங்கள் அடிக்கடி நிகழ்த்தி பார்த்துக்கொண்டால் நீங்கள் தியானம் செய்யும்பொழுது உங்கள் சரீரத்தை ஒரு அமைதி நிலையில் வைத்துக்கொள்ள உதவும். சரீரமும் உணர்வும் ஒரு அமைதி நிலையில் இருந்தால் உங்கள் அநுபூதி நிலை உடனே சித்திக்கும்.

சரீரம் சும்மா இருந்தால் அந்த ஆதிமூலம் விழிக்கும். அந்த ஆதிமூலம் தான் 350 கோடி வருட காலமாக ஒவ்வொரு சரீரத்தையும் உருவாக்கி ஒரு சுய தேடலாக வந்துகொண்டிருக்கிறது. அது கண்ட சரீரங்கள் பல்லாயிரம். பல்லாயிர சரீர அனுபவம் கடந்து வந்தது உங்கள் சரீரமே அன்றி அந்த ஆதிமூலத்திற்கு எந்த அனுபவமும் இல்லை. அது ஒரு தாவரத்தில் இருக்கும்பொழுது என்ன தன்மையில் இருந்ததோ, ஒரு புழுவினுள் இருக்கும்பொழுதும் அதே தன்மையில் தான் இருந்தது.

பல்லாயிர (இன) சரீரங்களிலும் அதன் தேடல் தன்மை மட்டுமே இருந்தது. அது சரீரங்கள் வழியாக வந்ததால் சரீரங்களுக்கு பாதுகாப்பு தன்மைக்காக புலன்களை வழங்கியது. அதன் அடிப்படை தன்மை ஒன்றுதான் தன்னையறியும் கவன நிலை மட்டுமே!

சந்தர்ப்பம் வரும்பொழுது அது தன்னையறிந்து கொள்கிறது. அது தன்னையறிவதில் தனது பயணத்தை முடித்துக்கொள்கிறது.
இதை ஒரு தனி மனிதன் இன்னொரு தனி மனிதனின் அனுபவத்திற்காக பகிந்துகொள்வது. இதில் உள்ள விஷயங்களில் உங்களுக்கு உடன்பாடு இல்லாமலும் போகலாம். அது நீங்கள் மீண்டும் உண்மையை சுயமாக தேட காரணமாக அமையுமால், மீண்டும்கூட நமது கருத்துகள் ஒன்றைப்போலவே அமைய வாய்ப்புகள் உண்டு. எது எப்படியாயினும் நீங்கள் உண்மையை சுயமாக தேடுவதையே நான் விரும்புகிறேன். அதை சுயமாகத்தான் காண முடியும் உங்களிடம், உங்களிடம் மட்டுமே!.

அந்த ஆதிமூலத்தின் உயிர் அலகு செல்களாகும். ஒரு செல்லின் உள்ளிருக்கும் அந்த ஆதிமூலத்தின் தேடல் தன்னையறியும் கவனமேயாகும். பல செல்களின் புற அமைப்பு இணையும் பொழுது அது சரீரம் ஆகிறது. பல செல்கள் உள்ளிணைப்பு காணும்பொழுது தன்னையறியும் அநுபூதி நிலையாக மலர்கிறது. சில நூற்றுக்கணக்கான செல்களின் புற இணைப்பு சின்னஞ்சிறிய உயிரி சரீரமாகவும், அதுவே பல்லாயிர செல்களின் புற இணைப்பு எறும்பு போன்ற சிறு உயிரியாகவும் என இப்படி சரீர பரிணாமமுற்று,சரீரத்திற்கு சரீரம் புலனமைப்பு மாற்றம் கண்டு தற்காப்பு தகவமைப்பு விருத்தியாகிக்கொண்டே வருகிறது. இந்த தகவமைப்பு விருத்தி காரணமாக அறிவு, உணர்ச்சி முதலியன சரீரங்களுக்கு உண்டாகிறது. இந்த அறிவு, உணர்வு போன்றவை செல்களுக்கு கிடையாது. இந்த செல்களின் மூல நோக்கு ஒன்றுதான் அது தன்னை அறிவதற்கான ஏகத்தன்மை கவனம் மட்டுமே!

நீங்கள் உங்கள் சரீரத்தை ஒரு ஏகத்தன்மையான கவன நிலையில் நிறுத்துவீர்களானால் அந்த ஆதிமூல தேடலுக்கு ஒத்துக்கொடுப்பவராவீர்கள். இப்படி ஒத்து கொடுப்பதற்காகத்தான் அந்த ஆதிமூல உயிர் அலகான செல்கள் கூடி கூடி சரீரங்களை உருவாக்குகின்றன! தொடர் சரீர பரிணாமமும் அதற்காகத்தான்.

அந்த ஆதிநிலை உயிர் அலகான செல்கள் தங்கள் புற இணைப்பால் கட்டிவைத்திருக்கும் உங்கள் சரீரத்தில் அண்டிக்கொண்டு பிழைப்பது உங்கள் 'நான்' எனும் கருத்துரு ஆகும். உங்களின் கருத்துரு கற்பனைக்கு விடை கொடுங்கள். அதில் லவலேசமும் உண்மை இல்லை. அது வெறும் மாயா! இதுவே உங்களை பிணைத்துள்ள அறியாமையின் தளை. இதை தெளிவாக அறிந்து தளையை களைந்தெறியுங்கள்.

இந்நூலை படிக்கும் என் சகோதரமே ! அந்த ஆதிமூல உண்மைநிலை ஒன்றை நாம் பகிர்ந்து விட்டு விடை பெறுவோம். அந்த ஆதிமூல உண்மையின் உயிர் அலகு செல்களாக இருக்கிறது. ஒரு தாவரத்தில் உள்ள செல்லானாலும் ஒரு மனித உடலில் உள்ள செல்லானாலும் அதன் அடிப்படை தன்மையில் ஒன்றாகவே இருக்கிறது. ஒரு

தாவர செல்லை மனித உடலில் இணைக்கமுடியாது. ஒரு மனித சரீரத்தில் உள்ள செல்லை எடுத்து ஒரு தாவரத்தில் பொறுத்த முடியாது. இரு வேறு செல்களின் புறத்தன்மைகள் மாற்றம் கண்டிருந்தாலும் அனைத்து செல்களின் அகத்தன்மை ஒரேமாதிரியானது தான். அந்த செல்களில் சேரும் ஒரு வித அனுபவ அழுக்கே, செல்களின் புறத்தன்மையாக அமைகிறது. ஒரு செல் அது எங்கிருந்தாலும்(எந்த உயிரினத்திளிருந்தாலும்) அகத்தன்மையில் ஒரே தன்மை வாய்ந்தது தான். ஒரு உயிரி இறக்கும் தருவாயில் அந்த சரீரத்தை விட்டு செல்கள் வெளியில் காற்றில் கலந்து வேறு உயிர்களில் கலந்து விடுகிறது. அது கலக்கும் உயிர்களின் சரீரத்தன்மைக்கு தங்களை ஒப்புக்கொடுத்து விடுகின்றன! நன்றாக நாம் கவனிக்கும்பொழுது ஒன்று தெரிகிறது, இந்த செல்கலாளான ஒரு சரீரம்(அது எந்த உயிரனமாகட்டும்) தன் பசிக்கு ஏதாவது செல்கலாளான (தாவரம் உட்பட - அது எந்த உயிரனமாகட்டும்) ஒரு சரீர பகுதியைத்தான் உணவாக எடுத்துக்கொள்கிறது. இதிலிருந்தே தெரியவருவது இந்த உயிர் மண்டலத்தில் ஏதாவது ஒரு வகையில் செல்பரிமாற்றங்கள் நடந்து கொண்டேயிருக்கின்றன! ஆனால் அனைத்து செல்களின் (அனைத்து வித உயிரின) அடிப்படைத்தன்மை ஒரே மாதிரிதான் உள்ளது. வெவ்வேறு செல்லினுள் இருக்கும் R N A ,D N A வித்தியாசங்கள் அதன் புறத்தன்மையை மாற்றியமைக்கிறது, ஆனால் அனைத்து வித செல்களின் அகத்தன்மை ஒரே மாதிரிதான் உள்ளது. அதுவே தன்னையறியும் தேடல் ஆகும். இந்த புவி மீது படர்ந்திருக்கும் உயிர்மண்டலமே தன்னையறியும் தேடலில்தான் உள்ளது. அந்த ஆதிமூல உயிர் அலகான செல்லின் தேடலான தன்னையறியும் கவனம்தொடர, தொடர , பல்லாயிர சரீர புலனனுபவங்களாலும் கிடைக்கப்பெறாமல் தொடர்ந்து முயற்சித்து இந்த மானுட சரீரத்தில் அதற்கு வாய்ப்பிருப்பதை காணுகிறது. இருந்தாலும் அவைகளின் புறத்தன்மையான சரீர தன்மைகள் இவற்றுக்கு தடையாக அமைந்திருப்பதும் தெரியவருகிறது. இந்த சரீரத்தன்மையில் ஒரு வினோதமான பிரச்னை இருக்கிறது. வெறும் பழக்க தோஷத்தால் ஒரு கற்பனை அமைப்பு இந்த சரீரம் முழுவதும் தான் தான் என அந்த அமைப்பு வலுவாக நம்பிக்கொண்டிருக்கிறது. இந்த அமைப்பு அந்த செல்களின் தேடல் நிறைவுத்தன்மைக்கு உதவுமானானால் எல்லாம் இனிதே நிறைவேறும். அதற்கு அந்த மனம் எனும் அமைப்புக்கு உள்ள உண்மை நிலையை புரிய வைக்க வேண்டும். சரியான உண்மையை அறியும் மனம் பிடிவாதம் பிடிப்பதில்லை. தான் இந்த செல்களின் தேடலுக்கு எல்லாவகையிலும் உதவ வேண்டும் என எண்ணி அவற்றுக்கு உதவுகிறது. அப்படி ஒரு மானுட சரீரத்தில் அனைத்தும் நல்லவிதமாக நடைபெற அந்த மானுடனின் சரீரத்திலுள்ள அனைத்து செல்களும் உள் இணைப்பு கண்டு, தங்களின் புறத்தன்மையில் ஓட்டிக்கொண்டே வந்துள்ள சரீர அழுக்குகளை உதறிவிட்டு தனது மூல நிலையான தூய நிலையை அடைகிறது. அனைத்து செல்களும் அந்த தூயநிலையில் ஒன்றாக இணைந்துகொள்கின்றன! இதுவரை எவ்வளவு செல்கள் இந்த(தன்னையறிந்த) முதிர்வு நிலையை அடைந்தனவோ (பல மகான்களின் செல்கள்) அனைத்தும் ஒரு சூட்சும சரீரமாக இருக்கிறது. இதுவே திவ்ய சரீரம் என முன்பு கண்டோம். பல்லாண்டு காலமாக முக்திநிலையை அடைந்தோர்களின்சரீரவழியாக தன்னிறைவுபூரண நிலையை அடைந்த செல்கள னைத்தும் ஒன்றாக இணைந்து ஒரு சூட்சும சரீரமாக (அதாவது சரீரத்தன்மையிலான நமது கருத்துகளுக்கு அது சூட்சும நிலை அவ்வளவே - ஆனால் அதுவே அதன் ஸ்திதி) ஒரு சூட்சும நிலையில் நிலைகொள்கிறது. இப்போது உங்கள் சரீரத்தின் வழியாக,

உங்கள் சரீரத்திலுள்ள அனைத்து செல்களும் இந்த தன்னையறியும் பரிபூரண தன்மை நிலையை அடையும்பொழுது அவைகளும் அந்த ஒரே சூட்சும சரீரமான திவ்ய சரீரத்தை அடைகிறது.

ஒரு உயிர் (சரீரம்) இறக்கும் தருவாயில் அதன் சரீரத்திலுள்ள செல்கள் தங்களுக்கு பாதுகாப்பான சூழல் இந்த சரீரத்தில் இல்லை என்று தங்கள் புறத்தன்மையிலுள்ள அனுபவ அழுக்கு மூட்டைகளை (சரீரத்தன்மை) உதிர்த்து விட்டு அந்த சரீரத்தை விட்டு வெளியேறி (ஒவ்வொரு தனி செல்லும்) காற்றோடு காற்றாக கலந்து ஏதாவது உயிரினுள் சுவாச வழியாகவோ,உணவு வழியாகவோ மற்ற உயிர்களில் (சரீரங்களில்) கலந்து விடுகின்றன! - எந்த ஒரு செல்லும் சரீரத்தன்மையோடு அந்த சரீரத்தை விட்டு வெளியேற முடியாது. ஒருவன் செய்யும் கரும வினைகள் அவன் உடலுறவு கொண்டு அதன் மூலம் ஜனிக்கும் உயிர் வழியாக மட்டுமே தொடர முடியும். ஒருவன் இறந்த பின் அவனது கரும வினைகள் தொடர்வதில்லை. கரும வினைகள் 'பற்றி' இருப்பது சரீரங்களை மட்டுமே! அந்த ஆதிமூல உயிர் அலகான செல்களை பற்ற முடியாது. கரும வினை செல்களின் வழியாக தொடர்வதில்லை. ஆகவே ஒவ்வொரு மனிதனும் அவனது செல்நிலையில் மிக, மிக தூய்மையானவனே! என் அனைத்துயிருமே தாவரங்கள் உட்பட மிக மிக தூய்மையானவைகளே! அந்த தூய்மையை நாடுவோம். நித்தம் அந்த தூய்மை நிலையின் தோற்றமான ஒளித்தன்மையை தியானியுங்கள். அந்த ஒளிநிலையின் மீது மட்டும் கவனத்தை வையுங்கள். கவனமும் ஒளியும் மட்டுமே உங்களை கரை சேர்க்கும். எந்த வித யோகாசனமோ, தியானமோ கூட இல்லாது இந்நிலையில் லயித்து முக்தியடைந்தோர் பலராவார். இப்பிரபஞ்சத்தில் அது ஒளியாகவும், உயிரில் அது கவனமாகவும் இருக்கிறது. ஒளியே வழி.

ஓம் தத் சத்.

இந்நூல் உருவாக உதவிய நூல் பட்டியல்:-

1,அணு உயிர் அண்டம் : கலைக்கதிர் , கோவை.

2,தியானம் யோகா முழுமை நலவாழ்வு : பெண்ணிய பெட்சி நிறுவனம், மதுரை.

3,யோக வாசிஷ்டம். (இண்டர்நெட்டிலிருந்து எடுக்கப்பட்டது.)
இந்நூலை தமிழாக்கியவர் : எஸ். வி. கணபதி, அல்லயன்ஸ் கம்பெனி மயிலாப்பூர். 1948 ல் வெளியிடப்பட்டிருக்கிறது.
web address: http://www.scribd.com/doc/11815811/YOGA-VASISTAM-TAMIL-BOOK?secret_password=&autodown=pdf

4,உபநிஷத்துகள் : ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை.

5,தினமணி நாளிதழ்.

6,ஒரு யோகியின் சரிதம், பரமஹம்ஸ யோகானந்தரின் நூல். Yogoda satsanga society of India.RANGHI. 834 001.

7,அரசு, உயிரியல், மயில் மணி பதிப்பகம், தென்காசி, 1992

8,ஜீனோம், சுஜாதா, விசா பப்ளிகேசன், 2007

9,உயிரினங்கள் தோற்றமும் வளர்ச்சியும், தமிழாக்கம், எஸ்.எஸ். ராமசாமி, அறிவு நிலையம், ராயப்பேட்டை, 1960

அனைவருக்கும் நன்றி.